TAMIL HYMNS

Selected and Orginal

WORSHIP

1846

Digitized by Google

TAMIL HYMNS,

Selected and Original,

ADAPTED FOR

PUBLIC, PRIVATE, AND SOCIAL

WORSHIP.

INDIAN INSTITUTE
1 0 AUG. 1908
OXFORD

PUBLISHED BY THE JAFFNA RELIGIOUS
TRACT SOCIETY.

JAFFNA:
AMERICAN MISSION PRESS.
1846.

ஞானகீதசங்கிரகம்.

இதில்

தேவனைத் துதித்து வணங்கும்

பொருட்டு,

கிறிஸ்தவர்கள்

அந்தரங்கமாயும் வெளிரங்கமாயும்

பாடவேண்டிய பாட்டுக்கள்

அடங்கியிருக்கின்றன.

மானிப்பாய்:
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது
௲௮௱௪௯.

பாயிரம்.

உலகத்திலுள்ள பற்பல தேசத்தார், இகபரப்பிர யோசனங்களைச் சுட்டிய தங்கள் தங்கள் கருத்தை, அந்தந்தப் பாஷையிற் சாதாரண வாக்கியங்களினாலன்றி; செய்யுள்களினாலும், தெரிவித்துவருகிறார்கள். செய்யுளாவது, அடி தொடை முதலியவின்றிவேண்டிய வாறே செல்லும் வாக்கியம் போலாகாது; இலக்கண விதிப்படி பற்பல சொற்களால் அசை சீர் அடி தொடை முதலியன இசையும்படி, பொருட்கிடனாகக் கற்று வல்ல புலவரால் அணிபெறப் பாடப்படுவதாம். இவ்வழக்கம் மனோவிலாசத்துக்கேயன்றி; ஆன்ம லாபத்துக்கும் உபயோகமாயிருப்பதினால்; இதை வித்துவான்கள் தங்கள் வினோதத்துக்காகக் கற்பித்துக்கொண்ட ஓர் கற்பிதமென்று நாம் கருதலாகாது. சுகந்தாதிகள் நாசிக்கும், பற்பல பொருள்களின் அலங்காரங்கள் கண்ணுக்கும், சுவைகள் நாவுக்கும், இன்பந்தருதல்போலச்; செய்யுளாகிய கீதங்கள் செவிக்கின்பந் தருதல் பற்றியே, இவ்வழக்கம் எத்தேசத்தும் எவ்வேவர்களுக்குள்ளும் ஸ்தாபிக்கப்பட்டதென்பது, ஆராயுமிடத்தில், யாவருக்குந்தெளிவாய் விளங்கும். கீதமானது அதிலடங்கிய பொருள்களுக்கிசைய

மனுஷருக்கு நன்மை தீமைகளை விளைவிப்பதற்கு ஏதுவாயிருப்பதினால்; பரம பிதாவாகிய கடவுளானவர், உலகத்திலுள்ள நமது குடும்பத்தார் யாவரும் தங்கள் தங்கள் ஜன்மலாப நிமித்தம் ஞான கீதங்களைப் பாடித், தம்மை மத் துதிசெய்யவேண்டுமென்று, வேதத்தில் விதித்திருக்கிறார். அதற்குப் பிரமாணம்— ஏசயா. யஉ. அதி. ச—ரு. "கர்த்தரைத் துதியுங்கள். அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள். சனசதனங்களுக்குள்ளே அவர் செய்கைகளை அறிவியுங்கள். அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள். கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். ஏனெனில், மகத்துவமானதைச் செய்தார். இது பூமியெங்கும் அறியப்படக்கடவதென்பீர்கள்." மேற்படி, ஏசயா, ௩ரு. அதி.ய."கர்த்தரால்மீட்கப்பட்டவர்கள் திரும்பிக் கெம்பீரத்தோடே சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களைத் தொடர்ந்துபிடிக்கும். சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்." க. பேதுரு, உ. அதி. ௯. "நீங்கள் உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறியும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், இராசரிக்கமான ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்தவான்களாயும், அவருக்குச் சொந்தமான சனமாயுமிருக்கிறீர்கள்," க. கொரி. யச. அதி யரு. "நான் என்னசெய்யவேண்டும்? ஆவியாலே நான் விண்ணப்பம்பண்ணவேண்டும். அதின் கருத்தும் விளங்க விண்ணப்பம்பண்ணவேண்டும். நான் ஆவியாலே பாடவேண்டும் அதின் கருத்தும் விளங்கப்பாடவேண்டும்."

வெளி. ச. அதி யக. "ஆண்டவரே! தேவரீர் சகலத்தையுஞ் சிருட்டித்தீர். உம்முடைய சித்தத்தினலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருட்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கின்றன. ஆகையால் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும், பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரமாயிருக்கிறீரென்று புகழ்கிறார்கள்." மேற்படி ரு.அதி. கூ. "தேவரீர்அடிக்கப்பட்டு உம்முடையஇரத்தத்தினலேசகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், தேசத்தாரிலும், (மற்றச்) சனக்கூட்டங்களிலும், எங்களைப் பராபரனுக்காகவாங்கிக்கொண்டீரென்றுசொல்லி, மோட்சவாசர் புதிய பாட்டைப் பாடினர்கள்." இவ்வேத வாக்கியங்களையும், இன்னும் வேத சங்கீத முழுவதையும், நன்றய் ஆராய்ந்து பார்க்குமிடத்து; பராபரனைக் கீதத்தினலே துதிசெய்தல் யாவருக்கும் பிரதான கடமையென்று காண்கின்றது. கீதபாடகரிற் சிறந்த மகா நிபுணாரிக்கிய தாவீதுஇராசாவானவர் "நீதிமான்களுடைய அவாசங்களில் மகிழ்ச்சியும் இரட்சிப்புமுள்ள சத்தமுண்டாயிருக்கின்றது" என்று வேதசங்கீதத்திலே சொல்லியிருக்கிறர். பவுலப்போஸ்தலர் "எல்லாவற்றிலேயுந் தோத்திரம் செய்யுங்கள்" என்று தன் காலத்திருந்த சபையாருக்குக் கட்டளையிட்டிருக்கிறர். இன்னும், அனேக வேதவசனங்களினலே, தேவாலயத்திலும், குடும்பக் கூட்டத்திலும், ரகசிய வணக்கஸ்தலத்திலும், கீதம் பாடித் துதி செய்வதே பிரதான கடமையென்று தெரிவிக்கக்கூடும்.

மேற் சொல்லிய பிரகாரம், பராபரனைக் கீதத்தினலே துதிசெய்வது யாவருக்கும் பிரதான கடமையாயிருப்பதுமன்றி, ஆத்துமாக்களுக்குப்பரமானந்தத்தை வி

ளவிக்கும் முக்கிய சாதனமுமாயிருக்குமென்பது அதிலே கனிந்த பத்திமான்களுக்குத் தெளிவாய் விளங்கும். வேதத்திலுள்ள பற்பலபொருள்களடங்கிய கீதங்கள் அந்தந்தப் பொருள்களை எவரும் எளிதாய் ஞாபகப்படுத்துவதற்கு உபயோகமாயிருப்பதினால், அவைகள் பாடுவோருடைய மனசிலே ஞான சிந்தனைகளை வருவித்து, பத்தியை அதிகரிப்பித்து, ஆன்மாவைத் தேவனுடன் ஐக்கப்படுத்துமென்பதற்குச் சந்தேகமில்லை. இன்னிசையாகத்தொடுக்கப்பட்ட கீதங்களை வாய்ப்பாடமாகப் பாடிவருமவர்கள், எவ்விடத்தும் எக்காலத்தும் வேதப்பொருள்களை மிகவும் எளிதிலே சிந்தித்து வாலாம். இவ்வுலகத்திற் பாதேசிகளும் பிரயாணக்காரும் போன்றிருக்கும் பத்தர்கள் இப்படிச் செய்துவந்தால்,தங்களுக்குப் பலமுறையும் நேரிடும் சகிக்க முடியாத சோதனைகளும் துக்க கிலேச துயரங்களுமாகிய இவைகளைச் சகிப்பதற்கேதுவான மனோற்சாகத்தையும், தங்கள் ஆன்மாவைப் பிடித்தபாவக்களிம்பைநீக்குதற்குரிய தேவாவியால்வரும் ஞானக்கினியையும் அடைந்து, தாங்கள் நாடும் பேரின்ப ஸ்தலத்தை நோக்கி, அதிதீவிரத்தில் அதனைச் சமீபித்துவருவார்கள். இந்தப்பிரகாரம் கடவுளைக் கீதத்தினாலே துதிசெய்யும்பத்தர்கள் இவ்வுத்தம கருவியினாலே யாவராலும் வர்ணிக்க முடியாத மனக்களிப்பையடைந்து, தெய்வ நன்மையாகிய காந்தத்தினலிழுக்கப்பட்டு, தங்களைப்பந்தித்த பாச பந்தங்களை நீங்கிக், கழுகானது தனதிருசிறகினாலும் சூரியமண்டலத்திற் பறந்துசெல்வதுபோல,அன்பு விசுவாசமுமென்னுமிரு சிறகினாலும் பேரின்ப ஸ்தலத்திற் பறந்து சென்று, அங்குள்ள தெய்வ மகிமை

யைத் தங்கள் விசுவாசக் கண்ணினுற் கண்டு, வெயிலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருகச், சுத்தான்மாக்கள் பாடுங் கீதத்தைச் செவிக்கமுதென க்கேட்டு, ஆனந்த பாவசமாவார்கள். அப்படியே பூர்வீகத்திலிருந்த ஓர் மகாத்துமா "திருச்சபையிலே நான் அனேக முறை ஞானகீதங்களைக் கேட்டு, வர்ணிப்பதற்கரிய ஞான சிந்தனைகளை அடைந்து, பேரின்பத்தை அனுபவித்தேன். கீதசத்தம் என் செவிக்கேற ஏற அதின் பொருள் என் மனசிலுட்பட்டு மெய்த் தெய்வபத்தியை வளர்க்க, நான் மனம் பூரித்து ஆனந்த பாவசமானேன்" என்று சொல்லியிருக்கிறர். அப்படியே தாவீதிராசாவும் வேத சங்கீதத்தில், "நான் உயிரோடிருக்குமளவும் பராபரனை நோக்கிப் பாடுவேன். நான் இருக்கும் பரியந்தம் தேவனைக்கீர்த்தனம்பண்ணுவேன். அவர் மேலென் தியானம், இன்பம். நான் பராபரனைப்பற்றி மகிழுவேன்" என்றுசொல்லியிருக்கிறர்.

கர்த்தாவைத் துதித்து வணங்கும்படி கீதம்பாடுவது, பத்திமான்கள்எவர்களுக்கும் அவசியமாயுள்ள சிற்சில விசேஷித்த காரியங்களுக்குச் சாதனமாயிருக்குமென்பது, மேல்வரும் வேத வசனங்களினலே கண்டறியலாம். கீதத்தைப் பாடுவது மனுனந்தத்தை வெளிப்படுத்தும் ஓர் வழியென்பதற்கு, வேதப்பிரமாணம்.—வேதசங். ௩௩. க. "நீதிமான்களே! கர்த்தருக்குள்கெம்பீரியுங்கள். துதிக்கிறதுசெம்மையானவர்களுக்கடுக்கும்." உ. நாளாக. ரு. அதி. ௰௩. "அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளையூதி, ஒரு சத்தத்தோடே கர்த்தரைத் துதித்து, ஸதோதிரித்துப் பாடினர்கள். சம்பவித்ததேதென்றல், ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்தில

ருந்து புறப்படுகையிலும் பாடகர் பூரிகைகள் தாள
ங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொ
னிக்கப்பண்ணி, கர்த்தரை, அவர் நல்லவர் அவர் கி
ருபையென்றுமுள்ளதென்றுஸ்தோத்திரிக்கையிலும்,
கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் ஒருமேகத்தி
னால் நிறையப்பட்டது."

அப்படிச் செய்கிறவர்களுக்குப் பராபரன் தம்மை
வெளிப்படுத்துவார் என்பதற்கு வேதப்பிரமாணம்.—
வேதசங். உஉ. யங. "இஸ்ரவேலின் துதிகளுக்குள்
ளே வாசமாகிய தேவரீரோவென்றற் பரிசுத்தர்." யா
க்கோ. ரு. அதி. யங. "உங்களில் ஒருவன் துன்பப்ப
ட்டாற் செபம்பண்ணக்கடவன். ஒருவன் மகிழ்ச்சி
யாயிருந்தாற் சங்கீதங்களைப் பாடக்கடவன்."

மற்றுங்கிறிஸ்தவர்களுக்குஉணர்த்துங்கருவியென்
பதற்கு வேதப்பிரமாணம்—கோலோசர். ங. அதி.யசு.
"கிறிஸ்துவினுடைய வசனம் உங்களுக்குள்ளே பரி
பூரணமாக வாசமாயிருக்கக்கடவது. சகல ஞானத்
தோடும் சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும்,
மற்றும் ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர்
போதித்துப்புத்திசொல்லிக்கொண்டு,பராபரனையுங்க
ளிருதயங்களிலே இனிதாய்ப்பாடிக்கொள்ளுங்கள்."

அதினால் நாம் தேவனுடைய நாமத்தின் மகிமை
யைப் பிரகாசிப்பிக்கலாமென்பதற்கு வேதப்பிரமாண
ம்,—வேதசங்கீதம். ருய. உங. "தோத்திரமென்னும்
பலியிடுகிறவன் என்னைக் கனம்செய்து, தன் வழி
யைத் திட்டம்பண்ணுகிறன். அவனுக்குத் தேவ
னுடைய இரட்சிப்பைக் காண்பிப்பேன்."

சுத்தான்மாக்களோடும் அன்னியோன்னிய ஐக்க
த்தை அனுபவிப்பதற்குபயோகமாயிருக்குமென்பதற்

கு வேதப்பிரமாணம்.—எபே. ரு. அதி. யக. "சங்கீத ங்களாலும், கீர்த்தனங்களாலும், ஞானப்பாட்டுகளா லும், ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு உ ங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம்ப ண்ணுங்கள்."

தேவனைக் கீதத்தினாலே துதிசெய்யவேண்டுமெ ன்று இந்தப் பிரகாரம் வேதத்தில் விதித்தவிதியைத் தெய்வ தொண்டர்கள் யாவரும் எக்காலத்துங்கைக் கொண்டுவந்தார்களென்பதற்குச் சமுசயமில்லை. இ தற்குத் திஷ்டாந்தம் உலகாட்சகராகிய யேசுக்கிறிஸ் து இராப்போசன விதானத்தை ஸ்தாபித்த அவ்விரவி லோர் கீதத்தைப் பாடினாரென்று, சுவிசேஷத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. மத்தேயு. உக.அதி. ௩௰. "அவர் தோத்திரப் பாட்டைப்பாடின பின்பு, ஒலிவ ம லைக்குப் புறப்பட்டுப்போனார்." பவுலும், சீலாவும், சிறைச்சாலையிற் பந்திக்கப்பட்டபோழுதும் அத்தசா மத்திலுங் கீதங்களைப் பாடிக் கர்த்தரைத் துதிசெ ய்தார்கள். ௱௬௰ கிறிஸ்தவர்களுடையஆராதனை யைக் குறித்துப்பேசியிருக்கிற பிலினி என்னுந்துரை "அவர்கள் கூட்டங் கூடிக் கிறிஸ்துவே தேவனென் று சொல்லி, அவரைக் கீதங்களினாலேதுதிசெய்துவ ருகிறார்கள்" என்று திரோசனிராசாவுக்கு எழுதினான். யூசீபியசென்னும் ஓர் வித்துவான் "ஆதியிலே சகோ தரர் செய்த சங்கீதங்களும், கீதங்களும், கிறிஸ்துவு க்குரிய தோத்திரங்களாகும்" என்றுசொல்லியிருக்கிற ர். இன்னும் ஓர் வித்துவான் "மெய்க்கிறிஸ்தவர்க ளுடைய வாழ்நாள் முழுதும் ஒருற்சவம்போன்றிருக்கு ம். தேவனுக்கு அவனிடும் நைவேத்தியம் பிரார்த்த னையுந் தோத்திரமுமே. போசனத்துக்குமுன்னே வே

த்தை வாசித்தும் போசன காலத்தில் கீதங்களைப் பாடியும்வருவான்'' என்றுசொல்லியிருக்கிறர். இவை களையெல்லாம் ஆராயுமிடத்து, மெய்த்தேவபத்தர்கள் யாவரும் இவ் வழக்கத்தை மனப்பூர்வமாகக் கைக்கொண்டுவந்தார்களென்றே காணப்படுகின்றது. ஐரோப்பாக்கண்டத்திலிருக்கும் சபையார் தேவாலயங்களிலும், கிரகங்களிலும், மிகுந்த பத்திவிசுவாசத்தோடும் மனக்களிப்போடும் தேவாராதனைசெய்யும்பொருட்டு, அங்கங்கே ஞான கீதசங்கங்களை ஏற்படுத்திக் காலக்கிரமமாகக் கூடிக் கீதம்பாடப் பயின்று வருகிறர்கள். இதற்கு அவர்கள் வெகுவாய்ப் பிரயத்தனம்செய்து வருதலினல்,ஞானகீதமானது அவர்கள்செய்துவருந் தேவாராதனைக்கு மிகவும் உபயோகமும் அலங்காரமுமாகி, அவர்களுக்கு வர்ணிப்பதற்கரிய பாமானந்தத்தையும் விளைவிக்கின்றதே! இத்தேசங்களிலுள்ள சபையாரும் தங்கள் தேவாராதனைக்கு அலங்காரமாகவும், ஆன்மலாபத்துக்குபயோகமாகவும், இப்படிப்பிரயத்தனஞ்செய்யலாகாதா? எங்களால் இயலாதென்றுசொல்லவும் இடமில்லையே! ஏனெனில், விக்கிரகாராதனைக்காருக்குள்ளும் அனேகர் தங்கள் தேவர்களைத் துதிக்கும்படி கீதம் பாடப்பயிலவேண்டுமென்றுகருதிச், சூரியோதயத்துக்குமுன் எழுந்து பாடகரிடம்சென்று பணமுங்கொடுத்து வெகுகாலம் அதிலே பயின்றுவருகிறர்களே! இப்படியிருக்க, எங்கள் கிறிஸ்தவர்கள் இகபாப்பிரயோசனங்களைத்தெரிவிக்கும்சத்தியவேதத்தை அருளிய பிதா சுதன் ஆவியென்னுந் திரியேகவஸ்துவுக் கேற்ற துதிகளைச்செய்யத்தக்கதாகக் கீதம்பாடும்படி, அப்பியாசஞ்செய்யலாகாதா? பிரியமுண்டானுற் செய்ய

லாமே! இத்தேசத்துச் சபையாருக்குள்ளேயும் சில ர், ஐரோப்பா அமரிக்கா என்னும் தேசங்களிலுள்ள சபையார்போலக் கீதசங்கங்களைத் தாபித்துக் கால க்கிரமமாகக்கூடிக், கீதம்பாடப்பயின்று, அதிலே நன் றாகத்தேறியிருப்பார்களாகில்; அவர்கள் சபைகளிற் பி ரவேசிப்பவர்கள் இன்பகீதங்களை அவர்கள் பாடக் கேட்டு, மனமுருகித், தெய்வபத்திக்கு ஏதுவான பரம சாதனத்தையடைந்து, பரமானந்தத்தை அனுபவிப் பவர்களாகி, ''இதேதெய்வஸ்தலம், இதேவானத்தின் வாயில்'' என்றுசொல்லிக் களிப்படைவார்களே. ஆ னதன்மையினால், இத்தேசங்களிலுள்ளகிறிஸ்தவர் களுக்குபயோகமாக முன்னிருந்த புராதனகீதங்களோ டும் பல நூதனகீதங்கள் பாடிச்சேர்த்து ஞானகீத சங்கிரகமென்னும் இந்தப் புஸ்தகத்தைச் செய்தே னென்க.

இப் புத்தகத்தில் அடங்கிய வைதீகப் பொருள் யாவருக்கும் உபயோகமாகும் பொருட்டு, வேதோபதே சத்துக்கும் அவ்வுபதேசம் ஆத்மாவிலே பலிக்கும் அ னுக்கிரமத்துக்குமிசையக் கிரமப்படுத்தப்பட்டமை யால்; குருக்கள்மாரும் சபையாரும் தாங்கள்தாங்கள் நினைத்துவரும் பொருளை விளக்குங் கீதங்களை எ ளிதிலே தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். மேலும், அந்தந்தக்கீதத்தின் முதற்கவியின் முதலடியைக்காட் ட ஓர் சூசிபத்திரமும், மற்றைக் கவிகளின் முதலடி யைக்காட்ட ஓர் சூசிபத்திரமும், அந்தந்தக் கீதங்க ளால் விளக்கப்படும் வேதவசனங்களைக்காட்ட ஒ ர் சூசி பத்திரமும், அந்தந்தக் கீதத்திலடங்கிய விசே ஷித்த பொருள்களைக் காட்ட ஓர் சூசி பத்திரமுமாக இப்படி நான்கு சூசிபத்திரம்செய்யப்பட்டன.

தமிழ்ச் செய்யுட்கள்போல அடிதோறும் எதுகைத்தொடையமைத்துப்பாடுதல் மிகவுமருமையாதலால்; இப்பிரபந்தத்தில்வருங்கீதங்கள் பெரும்பாலும் இங்கில்சுச் செய்யுட்கள்போல இயைபுத்தொடை அமைத்துச்செய்யப்பட்டன. ஆயினும், வாசிப்போர் பாடுவோர் கேட்போராகிய யாவருக்கும் செவிக்கின்பந்தரும்பொருட்டுச், சிலகீதங்கள் எதுகைத்தொடை இயைப்புத்தொடை என்னும் இரண்டும் அமைத்துச் செய்திருக்கின்றேன். அவற்றுட் சிலவருமாறு.

காலை, துயில் விட்டுநீங்கி,
  மாலைமட்டும் துதிசெய்து,
மருள்தீர; வேதம்காட்டி,
  அருள்கூரும், துணைநின்று.
அன்பேன்னெஞ்சில் ஊறச்செய்யும்,
இன்பவாழ்விற் சேரப்பண்ணும்.

தாரும், யேசு! ஆசீர்வாதம்;
  வாரும், தங்கும், நம்மோடே:
தீர்த்திசெய்யும்மன்ன ஊட்டும்,
  விர்த்தியாக்கும் நேசமே.
தஞ்சம் நாடும் நம்மை நோக்கி,
  நெஞ்சம் சாந்தப்படுத்தும்:
மண்ணில் எதிர் பார்ப்போம் முத்தி,
  விண்ணில் நித்தம் வாழ்த்துவோம்.

இவற்றுள் காலை-மாலை எனவும், மருள்-அருள் எனவும், அன்பு-இன்பம் எனவும், அடிமுதலில் இரண்டாமெழுத்தொன்றிவருவது எதுகைத்தொடையென்றும்; நீங்கி-காட்டி எனவும், செய்து-நின்று என

வும், செய்யும்-பண்ணும் எனவும், அடிகளின் ஈற்றெழுத்தொன்றிவருவது இயைபுத்தொடையென்றும் சொல்லப்படுமென்றுணர்க. இந்தப்பிரகாரந் தொடுக்கப்பட்ட கீதங்களைத் தமிழர்மாத்திரமன்றித் தமிழ்ப்பாஷையைப் படிக்கும் அன்னியதேசத்தாரும் மிகவும் சிறப்பென்றங்கீகரித்துக்கொள்வார்களென எண்ணுகிறேன். கர்த்தாவுக்குச்சித்தமானால், இந்தப்பிரகாரம் இன்னும் சில கீதங்கள் பாடவுங்கூடும்.

எட்டாம்பிரிவிலுள்ள சில கீதங்கள் நூதனமான இராகங்களுக்கிசையப் பாடப்பட்டிருக்கின்றன. அவைகள் பாலருக்கு மிகவும் விநோதமாயிருக்கும். அவ்விராகங்களை அறிய விருப்புற்றவர்கள் அவைகள் பெறுமிடமறிந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதிலடங்குங் கீதங்களைக்,கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும் சாதாரணமாய் உபயோகப்படும்பொருட்டுப்,பெரும்பாலும் வெளிப்படையாகிய இயற்சொற்களாலே தொடுக்க முயன்றேன். ஆயினும், கீதங்களுக்கு அலங்காரம் சிறப்பிக்கவும், அந்தந்தப்பொருள்களை விளக்கவும்வேண்டிச், சிலவிடங்களில் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குவிளங்காததிரிசொற்கள் வடசொற்களுங் கூட்டப்பட்டன. வாசிப்பவர்கள் தமக்கு அவற்றின்பொருள் விளங்காதாயின்,அகராதியிற் பார்த்துணர்க்கடவர்கள்.

இந்த ஞானகீதசங்கிரகமென்னும் புத்தகம் தேவாலயங்களிலும் கூட்டங்களிலும் பாடுவதற்கு உபயோகமாகச் செய்யப்பட்டமையால்; அவ்விடங்களிலேயன்றி மற்றிடங்களில் உதவாதென்று கருதுவாருளர். அப்படியல்ல. இதிலடங்கிய கீதங்கள் அநேகம் தெய்வதொண்டர்கள் தனித்திருந்து தெய்வபத்தி

யை அதிகரிப்பிப்பதற்கு மிகவுமுபயோகமாயிருப்பதினு ல்; பாடவியலாதவர்களும் பாடமுடியாத இடங்களிலி ருப்பவர்களும் அவைகளை வாசித்தேனும் அவற்றின் பொருளைச் சிந்தித்துவருவார்களாகில்; வேதபோதகத் தையும் அதனல்வரும் ஆன்மலாபத்தையும் பெற்று க்கொள்வார்கள். இதுநிச்சயம். அந்தக்கீதங்களிலெ ல்லாம்வேதப்பொருளே அடங்கியிருப்பதினுல்; அவை கள் வேதத்துக்கொருரைபோலாமென்று கருதி, யாவ ரும் தங்கள் பத்தியை வளர்க்கும்பொருட்டுத், தங்க ள்தங்கள் அறைக்குட் பிரவேசித்துத், தனித்திருந்து அவைகளை வாசித்து, அவற்றின்பொருளைச் சிந்தித் துத் தெளியக்கடவர்கள். அவ்வித கீதங்களுட் சில வருமாறு.

பிராணநேச யேசுவே!
வெள்ளம் பாய்ந்து பெருகி
சூறைக்காற்று வீசவே;
நெஞ்சில் என்னைப் பேணி,
சீவப்புயல் அடிக்க,
புகலிடம் தாருமே.

நான் மோட்ச கரையேற,
அருள்செய்யும்,கர்த்தரே!
கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்கமாட்டாதே.
நீரே மீட்பீர், ஏகரே!
செந்நீர்பட்ட சிலுவை.
நான் சேர்ந்து சார்வேன் உம்மை.
என் தேவனுக்குத் தூரமாய்
இங்கும் அங்கும்பறந்தோடி,

மன விண்வேந்தும் நிரார்த்தமாய்
அலைந்தேனே, நிலையின்றி.
சலப்பிரவாகங்கண்டு,
தேவனிடஞ் செல்வேன் இன்று.

இவ்விதகீதங்களிலடங்கும் பொருளைச் சிந்திக்க ச் சிந்திக்க,மெய்ஞ்ஞானம் இருதயத்திற் சொலிக்கும். மனம்பொங்கும். இருதயம்உருகும். நெஞ்சம்ஆறும்.ஆனதன்மையினால், யாவரும் தேவாலயத்தில் மாத்திரமன்றித் தங்கள்தங்கள் வீடுகளிலும் இப் புத்தகத்தைக் கைக்கொண்டு, அதிலுள்ள கீதங்களை வாசித்து அவற்றின்பொருளைச் சிந்தித்துத் தெளிந்துகொண்டு,மெய்த்தேவபத்தியிலுறைத்துநின்று,வசனிக்கமுடியாத நித்தியபேரின்பத்தைப்பெற்றுவாழக்கடவர்கள்.

திருச்சபையார் வெளியரங்கமாய்ப் பாடும்பிரகாரமின்னதென்று காட்டும் நியதிகள்.

சபையார் தமக்கும் பிறர்க்கும் ஆத்மலாபமாகும் பொருட்டுக், கர்த்தர் விதித்தருளிய இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு,மேல்வரும் நியதிகள் மிகவுமுபயோகமாயிருக்கும்.

க. சகலரும்பாடவேண்டும். சுகஈனத்தினலாயினும், மனச்சோர்வினலாயினும், என்னலே பாடமுடியாது என்றுசொல்லாமல், யாவரும் தங்களால் இயன்றளவுமனசைத்தேற்றிக்கொண்டு,சபையார் எல்லாரோடுங்கூடப் பாடிக், கர்த்தனைத்துதித்து வணங்கமுயலவேண்டும். அப்படிச்செய்வது தொடக்கத்திலே தங்களுக்கு ஒரு பாரச்சுமைபோலக் காணப்பட்டாலும்;அச்சுமையைத்தரித்தபின், வாவரான்மையாய்முடியும்.

௨. மனோற்சாகத்துடன் பாடவேண்டும். சோம்பலோடும் தூக்கத்தோடும் பாடாதபடிக்கு, மனோற்சாகத்துடனே உச்சத்திலே பாடவேண்டும்.

௩. சபாவந்தனமாய்ப் பாடவேண்டும்.. ஒவ்வொருவரும், என் நால் எல்லாருடைய நாலிலும்பார்க்க வெகுதூரம் கேட்கவேண்டுமென்றெண்ணாமல், பிறருடைய நாலுக்கிசைய, எடுத்த சுதி தப்பாமற் பாடவேண்டும்.

௪. தாளத்துக்கிசையப் பாடவேண்டும். விளம்பம், மத்திமம், துரிதம், என்னுங் காலப்பிரமாணந்தப்பாமற் பாடுவது முறைமையாதலால்; பாடகர்கள் எந்தக்காலத்தில் எடுததார்களோ அந்தக் காலத்துக்கு முந்தாமலும் பிந்தாமலும்,"சரிவாப்பாடவேண்டும்.

௫. ஞான சிந்தனையுடன் பாடவேண்டும். கர்த்தாவைத் துதித்துவணங்கும்படி பாடும்பொழுது; தமக்கும் பிறர்க்கும் செவிக்கின்பந்தாப்பாடவேண்டுமென்பதிலே முழுதுஞ் சிந்தை வையாமல், கர்த்தாவையே முழுதுந் தியானித்துப் பாடவேண்டும். அப்படிப் பாடினாலொழிய, மற்றும்படி மனோவிலாசமாத்திரமாய் முடிவதன்றி ஆத்மலாபமாய் முடியாது. பவுல் அப்போஸதலரும் "நான் ஆவியினாலே பாடவேண்டும்,அதின்கருத்தும்விளங்கப்பாடவேண்டும்"என்கிறர். ஆதலால் நாம் பாடும்பொழுது, காதுக்கினிமையாய்ப் பாடவேண்டுமென்பதிலே முழுதுஞ் சிந்தைவையாமல், அந்தந்தக் கீதத்திலுள்ள பொருளை மனதிலுட்படுத்திச் சிந்தித்துத் தெளிந்து, அதினாலேபாவசமாகத்தக்கதாகப், பாடுவதே எல்லாவற்றிலும் பிரதானமென்றுணர்க.

௲௮௱௪௰ம் ௵.
ஐப்பசி௴ ௮௨.

CONTENTS.

Section	I.	Hymns of adoration - -	1
"	II.	On the Incarnation, Sufferings, Glory and Work of Christ -	59
"	III.	On the Divinity and Operations of the Holy Spirit - -	127
"	IV.	Penitential Hymns - -	146
"	V.	The Experience and Privileges of Believers - - -	184
"	VI.	On the Establishment and Extension of the Kingdom of Christ - - - -	302
"	VII.	Time, Death, Judgment and a future State - - -	322
"	VIII.	Miscellaneous Hymns - -	370

சூசிபத்திரம்.

		பக்கம்.
முதற் பிரிவு .	தெய்வஸ்துதி . .	௧
இரண்டாம்பிரிவு	கிறீஸதாவதாரம், பலி,மகி	
— —	மை, கீர்த்தியம் .	௫௬
மூன்றும் பிரிவு	பரிசுத்தாவியின் தெய்வத்	
— —	துவமும்,கீர்த்தியமும்	௱௨௭
நான்காம் பிரிவு	மனந்திரும்புதல் .	௱௪௬
ஐந்தாம் பிரிவு	விசுவாசிகளுக்குரிய ஆத்	
— —	ம பிரசாதங்கள் .	௱௮௪
ஆறும் பிரிவு .	கிறிஸ்துவின் ராசரிக்கஸ்	
— —	தாபனவிருத்தி .	௩௱௨
ஏழாம் பிரிவு .	கால மரண நியாயத்தீர்ப்	
— —	பு மோட்சானந்தம்	௩௱௨௨
எட்டாம் பிரிவு	கலம்பக கீதம் .	௩௱௭௰

ஞான கீத சங்கிரகம்.

முதற் பிரிவு.

தெய்வஸ்துதி.

கம் கீதம். L. M.

Psalm cxvii.

க. மண்ணோர் யாரும், தெய்வஸ்துதி
செய்வாராக, ஒழிவின்றி;
சர்வ தேசர், மீட்பர் நாமம்
போற்றக் கடவாரோ, எங்கும்.

உ. தேவனே! உன் தயை, நேசம்,
வேதசாரம், நிலை நிற்கும்;
சோம சூரியர் உள்ள மட்டும்,
லோகம், உம்மைத் துதி செய்யும்.

ங. தேவருள் பெற்று மகிழ்ந்து,
கெம்பீர சத்தமெடுத்து;

அவ்வருள், யாரும் பெறவே,
விளங்கப்பண்ணும், மண்ணோரே!

ச. சர்வ சீவ தயாபரர்
பிதா, சுதன், ஆவி, இவர்.
மண் விண் எங்கும், இவர் நாமம்,
போற்றக் கடவாரே, என்றும்.

உம் கீதம். 4—6's & 2—8's.

Psalm lxxxiv.

க. வானாதிபதியே!
உம்மன்பு விளங்கும்
ஸ்தலங்கள், இன்பமே
பூலோகத்தாருக்கும்.
எனதீசன்!—திவ்யபாதம்,
நான் எப்போதும்,—அபேட்சிப்பேன்.

உ. தேவை நோக்கி நம்பி
வேண்டினோரே வாழ்வர்;
தெய்வ தொண்டராகி,
என்றைக்கும் மகிழ்வர்;
உம்மைப் போற்றி,—வழிசென்று
சேர்வார் அன்று,—சீயோன் கிரி.

ந. கண்ணீர் விட்டழுதும்,
பெறுவாரோ சத்தி:

சத்ரு எதிர்த்தாலும்,
அடைவாரோ முத்தி.
இன்பஸதலம்,—மகா தேவர்!
ஏழைப் பத்தர்—பெறச், செய்யும்.

௪. தாமே சோதி, வல்லர்;
சூரியன், கேடகம்:
ஈவார், சம்பூரணர்,
ஆனந்த காரணம்.
தருவாராம்,—எவருக்கும்,
விசுவாசம்,—மோட்ச செல்வம்.

௫. தந்தயை தருவார்,
தாழ்ந்த தனைருக்கு;
பத்தரை நேசிப்பார்,
என்றும் தாங்கிக்கொண்டு.
சேனைப்தி!—உமதன்பர்
அங்கே வாழ்வர்,—அழிவின்றி.

௩ம் கீதர். L. M.

Psalm c.

௧. படைப்பளிப்பொழிப்பென்னும்
இவை செய்யும் எங்கள் ஈசர்
யெகோவாவுக்கமைந் தென்றும்
நீங்கள் போற்றும், சர்வ தேசர்!

உ. மண் விண் எங்கும் இனிதாளும்
தேவர், நம்மைச் சிட்டி செய்து
தப்பியலைந்தாட்டைப் போலும்
நம்மை மீட்டார், அன்புவைத்து.

ங. நாங்கள் கோவில் சென்று பாடி,
வானளாவும் துதிசெய்ய;
மண்ணோர் யாரும், தினங் கூடி,
எதிரொலி செய்வாராக.

ச. உமதாணை எங்கும் செல்லும்;
உமதன்பு தவறாது;
உமதுண்மை நிலை நிற்கும்,
மலைபோல அசையாது.

௨௰ கீதம். 6—8's.

Genesis xxviii. 16, 17.

க. தெய்வ சந்நிதானஞ் சேர்ந்து,
பயபக்தியோடே போற்றி,
அவர் வல்லரென்று கண்டு,
சொல்லுவோமே, அவர் கீர்த்தி.
அருள் திடம்பெற்ற சுத்தர்,
அஞ்சுவாரோ, தேவ நேசர்.

உ. விண்ணோர் எல்லாம் போற்றுந் தேவன்
இங்கேயல்லோ தோன்றி நிற்பர்?

சர்வலோகம் ஆளும் ராசன்
வானோர் செய்யுந் துதி கேட்பர்.
ஆயின், எங்கள் அற்ப கீதம்
கேட்பீரல்லோ, மகா தெய்வம்!

௩. விட்டோம் செல்வம், இன்பம், கீர்த்தி,
நீரோ செல்வம், நீரோ இன்பம்:
எங்கள் தேகம், பொருள், ஆவி,
உமதாக ஏற்றுக்கொள்ளும்.
எங்கும் ஆள வல்ல கத்தர்,
யாரும் போற்றத்தக்க செல்வர்.

௪. ஆதி மூலம்! எங்கள் துதி,
தூபமாக, ஏற்றுக்கொள்ளும்;
நாம் அமைந்துமக்கிணங்கி,
நடக்தும்படி, அருளும்.
எங்கள் நெஞ்சமென்னும்பலி
நோக்கிக்கொள்ளும், தயா நிதி!

௫. சிஷ்டி திதி இவை செய்யும்
நாசீவாதிகாரணா!
அருள்வாரி! உம்மில் என்றும்
மூழ்கச் செய்யும், தயாபரா!
மண்ணோர்க்கு மோட்ச காரணம்,
தேவன் கொண்ட மனுரூபம்.

௯. ஆதித்தன், கிரணம் போக்கி,
  புஷ்பத்தை அலரச் செய்யும்;
நம்மை, ஏவ உமதாவி,
  அத்தன்மைபோல், ஈந்தருளும்.
இருள் நீக்கும் பரஞ் சோதி!
நீரல்லோ என் சுடரொளி?

௩௰ கீதம்.   4—6's & 2—8's.

Psalm cxlviii.

௧. ஆதாமின் வம்சத்தீர்!
  விண்மண்ணுடன் கூடி,
கத்தருக்குச், சொல்வீர்
  மகா இன்பஸ் துதி.
தூதர் திவ்ய—சுத்த சங்கம்,
விண்ணினிடம்,—கூடும், போற்ற.

௨. நிசி பதி சோமன்!
  மின்னும் நட்சத்திரம்!
கதிர்விடுஞ் சூர்யன்!
  தெய்வஸ்துதி பாடும்.
வான வெளி—செல்லும் மேகம்!
நதி! காட்டும்—அவர் சத்தி.

௩. சோதி மண்டலங்கள்,
  தேவுக்கமைந்திடும்;

செல்லுங்கமனங்கள்
அணியாகநிற்கும்:
அவர் சொல்ல;—புவியெல்லாம்,
போற்றும்வண்ணம்,—உற்பவித்த.

ச. மண்ணோரின்வேந்தரே!
விண்ணோர்தேவைப்போற்றும்;
அமையும், நித்தமே;
திவ்யதுதிபாடும்:
கனப்போலும்—லோகவாழ்வில்
அமிழ்ந்தாமல்,—தேவைப்போற்றும்.

ரு. பாலர்! குமாரரே!
திவ்யதுதிசொல்லும்:
கூடி, முதிர்ந்தோரே!
கெம்பீரித்துப்பாடும்.
அவர்துதி,—உலகெங்கும்,
பரந்திடும்,—ஒழிவின்றி.

சா: விண்வாழ் ஆளுந்தேவை,
யாரும், போற்றும், அஞ்சி:
ஆள்வர், புவியோரை,
தஞ்சமீபமாக்கி;
விண், மண், போற்றி—மகிழ்ந்திடும்:
சுத்தர், நித்தம்,—செய்வார்துதி.

௬ம் கீதம், 7's.

The voice of many angels.—Rev. v. 11.

க. விண்ணோர்க்காதிதேவனே!
மண்ணோருக்குநேசனே!
தேவதேவே! அற்பர்நாம்,
உம்மை, நித்தம், போற்றுவோம்,

உ. சிரேஷ்டதூதர், தேவரை
போற்றிச், சொல்வார்கீதத்தை;
எதிரொலியாக, நாம்
முழங்கி, ஆராதிப்போம்.

௩. "நித்தம்வாழ்க, சுத்தரே!
மண் விண் யாவும் உம்மையே
போற்றும்" என்றுதுதித்து
சொல்வார், உள்ளம்மகிழ்ந்து.

எம் கீதம். 7's. & 6's.

The Holy Church throughout all the world doth acknowledge thee.

க. சத்யபெல தயாளர்
நம்மைமீட்குந்தேவை,
விண்ணோர், துதிபுரிவார்;
போற்றும், தெய்வசபை;
தேவ நகரத்திலே,
தெய்வஸ்துதிசெய்யும்;
சுத்தமலமீதிலே,
அவர்கீர்த்திசொல்லும்,

உ. தேவாருள் அடைய,
சந்நிதானம் சேர்ந்து;
அன்புயார்க்கும் விளங்க,
துதிசெய்வோம், நின்று.
தெய்வீகநாமம், கீர்த்தி,
திசையெங்கும், செல்லும்:
தேவரோ குணநிதி;
லோகம் உம்மைப் போற்றும்.

ந. கன்மீதில் மேவுஞ் சபை,
அசையாமல், நிற்கும்;
ஒழியாவேதக்கோட்டை,
யாவர், வெல்லக்கூடும்?
சந்தானருக்குச்சொல்ல,
இன்பஸ்தலம் எண்ணி;
மாதேவன் சபைதாங்க,
நிற்கும் ஒழிவின்றி.

ச. சீயோனின் தேவைநம்பி,
நாம், மன்னிப்படைந்தோம்;
"எந்தஞ்சம்" என்றுசொல்லி,
கிறிஸ்துழலம், வாழ்வோம்:
புதுஎருசலேமை
சேரும்படி செய்யும்:
தெய்வம் தஞ்சமென்பதை
எண்ணி, வாழ்வோம் நித்தம்.

அம் கீதம்.　　2—6's. & 4—7's.

The Lord's Prayer.

க. லோகபிதாஎன்னும்
நாமத்தைப்போற்றுவோம்.
வானம் பூமி, ஏகமாய்
தேவர்துணம்விளக்கி,
மகிழ்வாகும், நேசமாய்,
உமக்கஞ்சிவணங்கி.

உ. மனம்வசப்பண்ணும்
ஆவி, எப்போதாளும்?
வென்றசுதன்வாழ்கவே!
பிதாவே! நீர் வாழ்ந்திரும்;
மண்வண ஆளும்படிக்கே,
தேவதேவே! வந்திடும்.

ங. தெய்வசித்தம், லோகம்
எங்கும், நிறைவேற்றும்.
தேவநேசர்சேவிக்க;
வானோருடன் கூடநாம்
உம்மைப்போற்றித்துதிக்க,
எம்மையேவியருளும்.

ச. நாமின்றபேட்சிக்கும்
ஆகாரந்தந்திடும்:
ஆத்தும தே கநன்மை
தீர்த்தியாயுண்டாகவே,

தந்துவானமன்னவை,
நம்மைத்தாங்கிக்கொள்ளுமே.

ரு. சீவிக்கும்படிக்கு,
தந்திடும்மன்னிப்பு.
தேவே! உம்மைவிடாமல்,
நீர் காத்து, அருள் ஊற்றி;
நாம் மன்னிப்புக்கெடாமல்,
பேணும், சீலம் அருளி.

சு. தீயானநாளிலே,
தற்காத்துக்கொள்ளுமே;
சோதிக்கப்படும் என்னை
பேணும், தீமைசெயித்து;
உள்ளமட்டும், கிருபை
தாரும், திடம்புரிந்து.

எ. சுயாதீனராசா!
அரசாளும் பிதா!
வல்லதெய்வயேசுவே!
எல்லாம்வசப்பண்ணுவீர்.
தயாநிதி ஆவியே!
நித்தம்செயித்தாளுவீர்.

கூம் கீதம். S. M.

The Church the honour and safety of a nation.

க. சபைஇனிதாளும்
தேவன், மகோத்துங்கர்:

அவர், துதி எங்கும் செல்லும்
தெய்வசபைவாசர்.

௨. அருள்தோன்றும்கோவில்,
தேசத்துச்சிறப்பாம்;
எங்கள் ஊரைக்காக்குங்காவல்;
கரையேற்றுந்தெப்பம்.

௩. பிரலாபருக்கு,
சீயோன் தேவன், தஞ்சம்.
தோன்றிநிற்கும், ஆத்ம மீட்பு,
தெய்வஸ்தலந்தோறும்.

௪. படுந்தாழ்வுநீங்க,
தெய்வவீட்டிற்சென்று
அவர் நேசரோன்றுநம்ப,
அடைவோமே வாழ்வு.

௰ம் கீதம். C. M.

Blessed be thy glorious name.—Neh. ix. 4.

௧. தந்தை! தேவர் மகத்துவம்
காணப்படும், விண்ணில்:
எண்ணில்லாததெய்வற்புதம்
தோற்றப்படும், மண்ணில்..

௨. விண்ணில்தங்கும் மகாகோளம்,
உம்மைக்காட்டும், நன்று:
செல்லுங்காலம், சுட்டிச்சொல்லும்,
"தயாநிதி"என்று.

௩. சிட்டிதோறும், திருநாமம்
விளங்கும், பதிந்து:
அவையெல்லாம், சாட்சிசொல்லும்,
தேவர்செய்தீரென்று.

௪. பாபிஷடோரை மீட்கும் வழி
உற்றுப்பார்க்கு்ங் காலம்,
கோபம், நேசம், ஒன்றய்க்கூடி
காணப்படும் இடம்,

௫. இதில், நீதி நேசம் சேர்ந்து
தெய்வீகம் விளக்கும்:
ரண்டில் எது முக்யமென்று•
சொல்வதரிதாகும்.

௬. தெய்வ ஆட்டுக்குட்டி மேன்மை,
போற்றுவார்கள், முத்தர்:
இம்மானுவேலின்நாமத்தை
இனிதாராதிப்பர்.

௭. ஒழியாதபாட்டைப்பாட
பெற்றல், மகாநலம்:
வியந்துகந்தும்மைப்போற்ற,
அன்போ, நம்மை ஏவும்.

௰கம் கீதம். 4—8's. & 2—6's.

Psalm cxlviii.

௧. என்னெஞ்சமே! நீ மோட்சத்தை
விரும்பித்தேடிக், கத்தரை

வணக்கத்துடனே
துதித்துப்பாடி, நித்தமும்
புகழ்ச்சிசெய்து, வாழ்ந்திரும்,
பயபத்தியோடே.

உ. தேவைக்காணும்மோட்சவாசர்!
என்றும்வாழும் சுத்தசுரர்!
போற்றும், தேவதயை;
துதித்துப்பாடும், இனிதாய்;
வணங்கிக்கொள்ளும், நித்தமாய்,
வானதிபதியை.

ஈ. நட்சத்திரங்கள்! சந்திரன்!
வெயயிலெறிக்குஞ் சூரியன்!
ஆகாயசேனையே!
முழக்கம் மின் கிரணமும்
அப்ரமேயவானமும்,
செய்யுங்கள்துதியே.

ச. விஸ்தாரமானபூமியே!
நீ எழுந்துவாழ்த்துவாயே:
கத்தர் உன்னுண்டவர்;
உன்னிலிருக்கும்யாவையும்,
அவர்சொற்படி, நடக்கும்:
கர்த்தாவே காரணர்.

ரு. எல்லலயில்லாதகடலும்,
மெல்லெனெ ஓடுநதியும்,

இவைபெருகவே,
களிப்பாய்நீந்துமீன்களும்,
ஆழியில்வாழும் சர்வமும்,
கர்த்தாவைப்போற்றுமே.

௬. மண் விண்ணுள்ள நீங்கள் யாரும்,
உடல் பொருள் ஆவியோடும்,
வணங்க, வாருங்கள்.
யெகோவாதாமே காரணர்,
சர்வவேததயாபரர்;
அவரைப்போற்றுங்கள்.

௰உம் கீதம். 7's & 6's.

Holy, Holy, Holy, is the Lord, &c.—Isa. vi. 3.

க. மோட்ச வழி அருள
சித்தங்கொள்ளும் தெய்வம்
தன்னைத், துதி புரிய,
எங்கும் என்றுந் ததும்.
உள்ள கீர்த்தி சொல்லுமே
"சுத்தர்சுத்தர்"என்று;
ஏக சிந்தையுடனே,
துதி செய்யும், வந்து.

உ. ஒளி விளங்குஞ் சான்றோர்,
இனிதாகப் பாடி,
ஒழியாமல் துதிப்பார்
உம்மை, அழிவின்றி.

திரியேகரிடமாய்,
சுத்தசூரர், அஞ்சி
நின்று விழ்ந்து தாழ்வோராய்
வாழ்வார் என்றும், போற்றி.

௩. பேரின்ப கீதம் போற்றும்
வீடு செல்வோம் கூடி,
நேசம் பத்தி என்றிடும்
தூவிக் கழுகேறி.
அங்கே முடி சூடினோர்
பெலியானோர் இங்கே:
பொருள் கண்டு துதிப்போர்
தோத்திரஞ் செய்வாரே.

௪. சுதற்றந்த பிதாவே!
உம்மாற் களிகூர்ந்து,
தயை சத்ய யேசுவே!
சுத்தர், உம்மைச் சார்ந்து,
சாந்தஞ் செய்யும் ஆவியே!
உம்மையெல்லாம் பற்றி,
மோட்சஞ் சேருமட்டுமே
துதிப்பார் கொண்டாடி.

௰௩ம் கீதம். 2–6's, & 4–7's.

The Trinity in Unity.

௧. ரகசிய ஏகர்
வாழ்க, திரியேகர்.

மண் விண் போற்றுஞ் சர்வேசர்,
பிதா, சுதன், ஆவியே,
வாழ்க; அப்பிரமேயர்,
ஏகர், வல்லர், வாழ்கவே.

௨. தேவர் திரியேகர்;
சர்வம் ஆள வல்லர்;
பராஞ் சோதி சந்நிதி,
சுத்தர், நித்தம் வாழுவார்:
தூதர், உள்ளம் உருகி,
தேசுக் கடல் மூழ்குவார்.

௩. தெய்வ நேசம் பாடி,
முத்தரின்பம் கூடி,
தேவைச் சேர்ந்து வணங்கி,
தாழ்ந்து பாடி வியந்து,
"மாசுத்தர்" என்று சொல்லி,
முத்தி அடைவதென்று?

௪. சுதன் ஆவி தோற்றும்
பிதா! தாழ்ந்து வாரும்.
திரியேக மகா வல்லர்!
உம்மைக் காண அருளி,
நித்தம் வாழும் மா தேவர்!
நெஞ்சிற் சேரும், தழுவி.

௰௬௩ கீதம். 4—6's, 2—8's.

A song of Praise to the blessed Trinity.

க. இகம் மேவும் நன்மை
பாம் நீற்தும் செல்வம்
எண்ணித், தந்த கிர்பை,
துதிப்பேனே, என்றும்.
நார் செய்த பாவ மூலம்,
நித்ய சுதற்றந்தார், தெய்வம்.

உ. தெய்வ சுதனுக்கும்
ஆதும், நித்த ஸ்துதி.
விட்டார், அவர், ரத்தம்;
மீட்டார், பாவம் போக்கி;
இப்போ வாழ்ந்து ஆண்டு நிற்பர்,
தம்மால் வந்த பலன் காண்பர்.

ங. தேவாவிக்கு, ஸ்துதி,
நித்தம், சொல்லப்படும்:
அவர் செய்தாற் சீட்டி,
எல்லாம் நவமாகும்.
அவர் செய்கை, தரும் பூர்ணம்;
ஈவார் என்றும் மனோம்யம்.

ச. சர்வ வல்லர்! யாரும்
உம்மைத் துதி செய்வர்;
மனுதீதமாகும்
அபின்னுத்ரியேகர்!

யுத்தி செல்லா இடம் எங்கே,
பத்தி நேசம் செல்லும் அங்கே.

௰௫ம் கீதம். L. M.

The same.

௧. எல்லாம் படைத்த நமது
தயாபரா பிதாவுக்கு,
படைப்புச்செய்கைக்காகவே,
ஸ்தோத்திரம் உண்டாகவே.

௨. இவ்வினருக்கு மீட்பரும்
கத்தாவுமாஞ் சுதனுக்கும்,
ரட்சிப்புச் செய்கைக்காகவே,
ஸ்தோத்திரம் உண்டாகவே.

௩. சுதனிடத்தில் நெஞ்சத்தை
திருப்பி, அதில் நம்பிக்கை
உண்டாகச்செய்யும் ஆவிக்கே,
ஸ்தோத்திரம் உண்டாகவே.

௪. சிட்டி, ரட்சை, அருளாலே
செய்யும் மா திரியேகரே!
சிருட்டி யாவும், உமக்கு
புகழ் செலுத்தத்தக்கது.

௰௬ம் கீதம். P. M.

The same.

௧. தேவன்புக்காக உன்னத
கத்தாவுக்குப் புகழ்ச்சி;

என்பாவக்கேட்டை நீக்கின
அருள், மகா திரட்சி.
உலகில் சமாதானமும்
நரர்களுக்கு நன்மையும்
உண்டாகும்படி, செய்தீர்.

உ. ஆ, யேசு தேவமைந்தனே!
ஓர் பலியைச் செலுத்தி
கெட்டோரை மீட்ட மீட்பரே!
மாசற்ற ஆட்டுக்குட்டி!
மாகர்த்தரே! தயாபரா!
அடியார் செபங்கேட், டெல்லா
சபைக்கும், நீர் இரங்கும்.

௩. மெய்யாகத்தேற்றும் உன்னத
நல்லாவியே! இறங்கும்-
பூமியிற் கிறிஸ்து சகித்த
மாகஸ்தியின் நிமித்தம்,
மீட்டோரைச் சாத்தான் கண்ணியில்
விழாமற் காத்துத், துன்பத்தில்
களிக்கப்பண்ணும், என்றும்.

௰எ௩ கீதம். C. M.

The same.

க. வான பிதாவே! தொண்டரை
ரட்சித்தருள் செய்யும்;
முடியுமட்டும் எங்களை
காத்துத், தயை வையும்.

உ. நீர் அன்பாய்ச் சிட்டித்தோர்களை
கைதூக்கிக், காத்திடும்:
மோட்சத்திற் களிப்பாய் உம்மை
துதிக்கச், செய்திடும்.

௩. குமாரனே! நாங்கள் உம்மை
பார்த்தோமாகில், முத்தி:
பத்தர்களுக்குக், கிருபை
சம்பூரண சித்தி.

௪. தேவாவியே! பிதாவையும்
குமாரனையும், நீர்
வெளிப்படுத்தி, அன்பையும்
அருளக் கடவீர்.

௫. மனோவாக்கெட்டாக் களிப்பை
நிசப்படுத்துவீர்;
ஆனந்த சமாதானத்தை,
பரத்தில், தருவீர்.

௰அம் கீதம். P. M.

The same.

க. வாரும், மா தேவனே!
உம்மைத் துதிக்கவே,
எம்மை ஏவும்;
உமக்கே வல்லமை;
உமக்கே நன்றியை,

உமக்கே துதியை,
செலுத்துவோம்.

உ. ஆதியில் வார்த்தையே
நீர் தான், என் யேசுவே!
தயை தாரும்.
ஆசீர்வதிக்கவும்,
நம்மைப்போதிக்கவும்,
உம்மைப் போலாக்கவும்,
நம்மோடிரும்.

ந. ஆ! சுத்த ஆவியும்,
நாம் உமதாலயம்,
நெஞ்சந்தானே;
இங்கும் இருக்கிறீர்,
உள்ளத்தைப் பார்க்கிறீர்,
உண்மை விரும்புவீர்,
சுத்தாவியே!

ச. ஏக த்ரியேகரே!
அனந்த சீவனே,
உம்மாலேயாம்;
வானோர் பூவோர்களும்,
இகபரத்திலும்,
தோத்திரஞ் செய்வதும்,
மோட்சமேயாம்.

யகூம் கீதம். 7's.

Gloria Patri.

க. யாரும் அஞ்சும் பிதாவே!
தந்தைபோன்ற சுதனே!
நித்ய சுத்த ஆவி! நீர்
என்றும் வாழக்கடவீர்.

உ. ஏகத்வத்ரியேகரே!
வாழ்த்துவோம் நாம் உம்மையே:
மண் விண் யாவும், நித்தமும்,
ஸ்வாமி! உம்மைத் துதிக்கும்.

உயம் கீதம். L. M.

The Glory of God.

க. வல்ல மூவர் நித்ய ஏகர்
எனதாத்ம தேவின்நாமம்.
சிட்டி திதி இவை, "தேவர்
அப்ரமேயர்" என்று சொல்லும்.

உ. ஸ்வாமி! தேவர், வாக்கால், இந்த
மண் விண் கடல் பொருள் யாவும்
தோற்றுவித்தீர்; உம்மைப் போல
வல்ல கர்த்தர், இல்லையாதும்.

௩. தோற்றம் யாவும், சிதைந்திடும்;
மாறிப்போதும், நிலையின்றி:
தேவர் நிலை நிற்பீர் என்றும்;
திருவுள்ளம், அதும் சித்தி.

ச. தேவர்கிர்பா நோக்கம், சென்று,
மண் விண் ஆண்டு, சேட்டிப்பிக்கும்,
ஒளி துகில், சுவாலை தூது,
ஆகக், கொள்வீர், மகா தெய்வம்!

ரு. அருளேனும், சத்தியேனும்,
பாடுவாரோ, பாவ நீசர்?
அடி தாழ்ந்து, வேத தூரம்
பார்த்தோம், பிரதிவிம்பம், ஈசர்.

சா. யாவர் சேர்வார், சுடும் அக்னி?
யாவர் காண்பார், ஓங்கும் சுவாலை?
சுய ஞானம் காணும், சத்தி;
நாமம், சொல்லும் சுயவார்த்தை.

உசம் கீதம். L. M.

Sovereign Grace.

க. பராபரனுக்கிஸ்தோத்ரம்.
கல்லுக்களுக்குயிர்தந்தார்.
அவர் முன்பாக நிற்கவும்,
எங்களைப் பத்தராக்கினார்.

உ. பாவமென்றந்தகாரத்தில்
கிடந்த ஏழைச் சனங்கள்,
யேசுவின் தேவ முகத்தில்
பூரண ஙாவனைக் கண்டார்கள்,

௩. இச்செய்கை, ஸ்வாமி! உமது,
உம்முடைகையை நீட்டினீர்;
கெட்டவர்களை ரட்சித்து,
அன்னியரை ஏற்றுக்கொண்டீர்.

௪. சர்வ வல்லமையுள்ள நீர்
எங்கள் ஒன்றான ரட்சகர்.
வார்த்தையால் உலகைச் செய்தீர்;
வார்த்தை மனிதரின் மீட்பர்.

௫. ஓயாமல் உம்மைத் துதிக்க,
சுத்தர்கள், சத்தமிடுவார்.
பாக்யத்தில் அதிகரிக்க,
வானோரும் எங்களைப் பார்ப்பார்,

௬. நாங்களும், இருள் ஒழிய,
உம்முடை ஒளியைக் கண்டோம்;
உமக்கே பிழைத்துச்சாக,
எங்களைஒப்புக்கொடுத்தோம்.

உஉ௩ கீதம். C. M.

The same.

௧. அற்புதமான கீர்த்தியம்
செய்தகமதீசர்
அவரோ, என்னுத்தம தஞ்சம்;
அவர் பிராண நேசர்.

௨. அச்சம் துக்கம் வெட்கம் இவை
அன்பாக நீக்கினார்:

அளவில்லாத பாவத்தை
மன்னித்திரட்சித்தார்.

ங. ஊங்கொண்ட என் மனசை
நேசத்தாலுருக்கி;
நொருங்குண்ட என்னெஞ்சத்தை
ஆற்றித், தந்தார்திர்த்தி.

ச. மோகப்ராந்தி அவபத்தி
இவை நீங்கச் செய்து,
நெஞ்சின் கடுங் குணம் மாற்றி
அருள் செய்வார், காத்து.

ரு. இவ்வளவான மேன்மையை
தரும் எனதீசர்,
ஒழிவில்லாததுதியை
கேட்கத்தக்க செல்வர்.

சு. தயை பெற்ற எனதாத்மம்,
பதில் செய்யும்படி,
நன்றியாக என்றும், செய்யும்,
அதற்கேற்றதுதி.

உருடும் கீதம். 6—8's.

The God of all Grace.

க. கிருபையுள்ள பிதாவே!
உமது தயை தேடவே
வந்தோமென்றதாய்த் தோன்றிலும்,
உமக்கு மாத்ரங் தெரியும்.

வஞ்சகரையும், தேவரீர்,
நல்லவரையும், அறிவீர்.

உ. எங்களிலே பேதமானல்,
அதுமது கிருபையால்.
எங்களிற் சுத்த விருப்பம்
இருந்தால், தேவச்செய்கையாம்.
இப்போ, தெங்களெல்லாரையும்
கூப்பிட்டு, மனந்திருப்பும்.

ந. பாவிகள் தங்களைத்தாமே
அறிவதற்கு, இன்றைக்கே
பாவத்தின் பாரங் காண்பித்து
சேபிக்க எடுத்துவிட்டு,
கெட்ட சுபாவ நிமித்தம்
மனதைத்துக்கப்படுத்தும்.

ச. மேய்ப்பராய் ஆடுகளைநீர்
மீட்டிரட்சிக்கமரித்தீர்;
உம்மைத்தாம் இவர்களுக்கும்
இப்பொழுதும் அறிவியும்:
ஒருவன் ஒழியாமலும்
எல்லார்க்கும் ரட்சிப்பைக்கொடும்.

உசம் கீதம். S. M.

Divine Worship.

க. சர்வலோக ஆதி
சுயம்பே, கடவுள்:

அவர் மகா திவ்யகீர்த்தி
துதித்துப், பாடுங்கள்.

உ. ஆழி படைத்தனர்,
எல்லை நியமித்து;
கடல் தரையாவும், அவர்
காப்பார், வசம்செய்து.

ந. சுயவாக்கைக்கொண்டு
நம்மைச் சிருட்டித்த
தேவன் சந்நிதானம் சேர்ந்து,
வாரும், துதிசெய்ய.

ச. நிக்கிரகம் நீங்க
அனுக்ரகம் பெற்று;
வாரும், தெய்வ பத்தாக;
கேளும் அவர் வாக்கு.

உரும் கீதம். L. M.

The same.

க. இங்கே, சபையிடத்திலே
இரும்! அன்புள்ள யேசுவே!
மெய் வேதமும், சன்மார்க்கமும்,
இங்கே விளங்கச், செய்திடும்.

உ. இதே பிரிய காலமாம்:
கத்தாவே! வேத வாக்கியம்
தன் முத்திரைகளோடேயும்
தரிக்கக், கட்டளையிடும்.

உகூம் கீதம். S. M.

The same.

க. அன்புள்ள யேசுவே!
எங்களிடம் வாரும்;
உமது வாக்கின்படிக்கே,
விண்ணப்பத்தைக் கேளும்.

உ. இன்றிங்கே ஏகமாய்,
கூடியிருக்கிறோம்;
விண்ணப்பம் துதி, உண்மையாய்
செய்யத், துணிகிறோம்.

ஙா. இவ்வாலயத்திலே,
இங்குள்ள தேசத்தார்,
கூடிவந்தும்மைத் தேடியே,
வணங்கக் கடவார்.

சு. இத்தலமே, பெத்தேல்—
சாட்சியின் கூடாரம்;
சீயோன் நகருள்ள கோயில்
என்ற பேரிடலாம்.

ரு. எங்களெல்லாரையும்,
உமக்கே ஆலயம்
ஆக்கித்,தெய்வீக மேன்மையும்
விளங்கப்பண்ணிடும்.

சா. பிதா சுதன் ஆவி
என்னுந் த்ரியேகரே!

இன்றும் என்றும் எவராலும்
உமக்குத்துதியே.

௨எ௰. கீதம். L. M.

The same.

க. கத்தாவே! இங்கே எங்களை
அன்பாய்ச் சேர்த், துமதாவியை,
அதின் நல்லீவுகளையும்
அனுக்ராகித்திரட்சியும்.

௨. பாத்தில், நாங்கள், ஸ்வாமீயே!
"நீர் சுத்த சுத்த சுத்தரோ"
என்றேதி உம்மை என்றைக்கும்
துதிக்கும் வாழ்வை அருளும்.

௩. தினமும் உம்மைப்பற்றியே,
தேவன்பை நன்றயோசித்தே,
இருப்பதற்குப், புத்தியும்
நல்லாவியுங் கடாட்சியும்.

௪. ஒன்றக ஆண்டிருக்கிற
த்ரியேக தெய்வமாகிய
பிதாக் குமாரன் ஆவிக்கே,
இஸ்தோத்திரமுண்டாகவே.

௨௯ம் கீதம். L. M.

The same.

௧. சபையீர்! ஏக சித்தத்தை
அடைந்து பூரிப்பாகுங்கள்;
வணக்கமாகக் கத்தனை
எல்லாரும் வாழ்த்தல் செய்யுங்கள்.

௨. யெகோவாவே மெய்த்தேவனூர்;
எல்லாரையும் படைத்தாரோ;
அவர் அனுதி தந்தையார்;
எல்லாரையுமாட்சித்தாரோ.

௩. இவ்வண்ணமான நன்மையை
குறித்து, இவ்விடத்திலே
சந்தோஷப்பட்டு, நாயனை
துதித்தல் செய்யத்தக்கதே.

௪. தேவாவியே! இரக்கமாய்
நல்யோசனையைத் தந்திடும்;
எல்லாரும் அன்பு உண்மையாய்
நல்வார்த்தை கேட்கச் செய்திடும்.

௩௰ம் கீதம். L. M.

The Creator only worthy to be worshipped.

௧. அழிவில்லாததேவனே!
மண் விண் கடல்கள் யாவுக்கும்
காரணகத்தர்! உம்மையே
சிட்டிஎல்லாம் பணிந்திடும்.

௨. சராசாம் அனைத்தையும்
சிட்டித்தமாயேகோவா நீர்;
ராசாக்களுக்கிராசாவும்
என்றைக்தும் ஒன்றாய் ஆளுவீர்.

௩. உமக்கே நாங்கள் தொண்டர்கள்;
வேறொருதேவன் அறியோம்:
சுரூபம் ஓமம் பூசைகள்
எல்லாம், வெறுத்துத், தள்ளுவோம்.

௪. அஞ்ஞான இருள் பரந்து
மூடுஞ்சர்வதேசத்துள்ளும்,
பேய்மதம் நீங்க, உமது
மேன்மைவிளங்கச், செய்திடும்.

௫. பொறாமை கோபம் பெருமை
அகற்றி, அன்புண்டாகவே,
பூமியில், உமதாளுகை
பரம்பப்பண்ணும், கத்தரே?

௩௰ம் கீதம். L. M.

God so loved the world.

௧. பிதாவே! பாவிகளுக்காய்
ஏகசுதனைக்கொடுத்தீர்;
கிருபையோடவ்வளவாய்
எல்லாருக்குமிரங்கினீர்.

௨. உமது திவ்ய ஆக்கம்
அளவில்லாதிருக்குது.

நாங்கள் தரும் இஸ்தோத்திரம்
செலுத்திடவுங்கூடாது.

௩. எல்லார்பேரிலும் இரங்கி
ஒருவரையும்மறவீர்:
பாவமுழுதும்விலக்கி,
இரட்சிக்கச்சித்தமானீர்.

௪. யேசு, மரித்தோர்யாரையும்
மீட்க, வழியைத் திறந்தார்:
அவரை வெறுப்போரையும்
ரட்சிக்கச்சீவனைவிட்டார்.

௫. உம்முடைதயவடைய,
ஆரும் அஞ்சாமல் நம்பலாம்.
நாங்கள் நம்பாமலிருக்க,
நீரோ மாறாத இரக்கம்.

௬. எழும்பி, உலகத்தாரை
சுவிசேஷத்தாற் கூப்பிடும்:
யாரையும் மீட்டீரொன்பதை
எல்லாரும் நம்பவேசெய்யும்.

௩௪ம் கீதம். C. M.

Divine Goodness.

௧. கர்த்தாவாங் தேவரீரையே
துதிப்பேன் அடியேன்;
சகலர்முன்னும் உம்மையே
அறிக்கைபண்ணுவேன்.

௨. மிகுந்தபாக்கியங்களும்
உம்மாற்கிடைக்குமே;
உண்டான எந்தத் தீமையும்
உம்மாலே நீங்குமே.

௩. விசேஷமாகப்பாவத்தை
நிவிர்த்திசெய்கிறீர்;
சந்தோஷமுள்ள மோட்சத்தை
அனுக்ரகிக்கிறீர்.

௪. களிப்படைந்துபூரித்து
மகிழ், என்னெஞ்சமே!
பலத்தகர்த்தர், உனது
அனந்தசெல்வமே.

௯௨ம கீதம். 7's.

The same.

௧. ஆத்துமாவே! உன்னையும்,
தோன்றும் மற்றும் யாவையும்,
சிஷ்டி செய்த சாமிக்கு,
நன்றி சொல்லு நேசித்து.

௨. உன்னைப் பாவச் சேற்றிலே
நீங்கச் செய்த கர்த்தரோ
மேன்மையுள்ளோரொன்றுளை;
நாயனை அன்பாய் நினை.

௩. காலத்துக்குத் தக்கதாய்
உன்னைக் காத்துத், தயவாய்

தேவன் ஈயுங் கிருபை
பெற்றுப், போற்று அவனை.

௪. உன் பிதாவை நினைந்து,
பிள்ளைபோல அமைந்து,
அவர் சொல்லுக்கிணங்கி,
அநுதினம் தோத்திர்.

௩௩ம் கீதம். L. M.

Greatness of God.

௧. அநாதியான கத்தரே!
தெய்வீகவிண்ஸ்தலத்திலே,
ஆகாசத்துக்கு மேலாய், நீர்
மகிமையோடிருக்கிறீர்.

௨. முதற்சம்மனசு, உம்மை
தொழுகையில், தன் முகத்தை
சிறையால் மூடி அஞ்சுவார்;
சாஷ்டாங்கமாக விழுவார்.

௩. அப்படியானால் தூசியும்
சாம்பலுமான நாங்களும்,
உம்மை ஆராதிக்கும் போது,
என்னத்தைச் செய்யத்தக்கது.

௪. சுவாமி! உமதுன்னத
கீர்த்தியைக் கேட்டோமொழிய,
தெய்விக ஞானமானது
மனோவாக்கைக்கடக்குது.

ரு. ஸ்வாமீ உன்னதவானத்தில்,
நாங்களோ தாழ்ந்த பூமியில்,
இருப்பதால், வணங்குவோம்;
மவுனத்தோடாராதிப்போம்.

௩௭ம கீதம. C. M.

Holiness of God.

க. பரத்தில் தூதர், தினமும்
கத்தாவின் நாமமே,
மாசுத்தம் சுத்தம் சுத்தமும்
பாடிக்கொள்வார்களே.

உ. என்னாத்துமா! நீயும் துதி
மகா புகழ்ச்சியாய்;
சமுகத்தில் நீ கைகூப்பி,
வணங்கிப் பணிவாய்.

௩. மனோவாக்குக்கெட்டாதவர்,
பலியை யல்லவே,
யாவற்றிலும் விரும்புவார்
சுத்தாங்க நெஞ்சமே.

ச. களிம்பு குற்றம் அறவே
ரட்சியும் தேவரீர்:
என்னை, அன்புள்ள கத்தரே!
தரிசிப்பாரோன்றீர்.

௩௫ம் கீதம். C. M.

The same.

௧. என் தேவனே! என் ஆத்துமா,
நீர் தந்த நன்மையே;
சிந்தித்துப் பார்க்க, மாமகா
எண்ணடங்காததே.

௨. உற்பத்தியானது முதல்,
என்னை, நடத்தினீர்;
எனது ஆத்துமா உடல்
இரண்டும் தாங்கினீர்.

௩. மயக்கம் நீங்க, நெஞ்சத்தை
செம்மைப்படுத்தினீர்;
அநேக ஆறுதல்களை,
என்னிற் பிரயோகித்தீர்.

௪. என் சீவகாலம் யாவையும்
விசாரித்தீர்; அதே,
என் ஞாபகத்தில், என்றைக்கும்,
இருக்கவேண்டுமே.

௫. இடைவிடாதுபோற்றுவேன்,
கர்த்தாவே! ஏற்றிடும்.
உம்மை எப்போதும் பற்றுவேன்;
என்னை விடாதிரும்.

௩௧ம் கீதம். L. M.

The same.

க. இக்காலமட்டுஞ் சீவனை
தற்காத்துக்கொண்ட கர்த்தனை
சிந்தித்து வாழ்த்தல் செய்யவே,
நினைத்துக்கொள்ளும், மாந்தரே!

உ. அளவில்லாத வல்லமை
அகாதமான மாட்சிமை
பொருந்தியும், இழிந்த நாம்,
அவரிடத்திற் சேரலாம்.

ங. தளர்ச்சி நோவு சா இவை
உண்டானபோது; நெஞ்சத்தை,
திகைப்புறாது, காத்தனர்,
மகிழ்வினால் நிரப்பினர்.

ச. இத்தன்மையாகச் செய்தவர்,
எல்லார்க்கும் நல்ல ஆண்டவர்;
அவரிடத்தில், யாவரும்,
மிகுந்த அன்பு கூர்ந்திடும்.

ரு. அவருடைய சித்தத்தை
முடித்துத், தேவ நன்மையை
பிரசித்தஞ்செய்திணங்குவீர்;
புகழ்ச்சியைச் செலுத்துவீர்.

௬. கடன்பட்டோர்களாயினோம்;
சங்கீதம் பாடிப்போற்றுவோம்;

கர்த்தாவே! என்றும் உம்மையே
எல்லாரும் வாழ்த்த, ஞாயமே.

௬௭ம் கீதம். C. M.

Divine Goodness in preservation.

௧. கிடைத்த நன்மை யாவையும்
சிந்தித்து, அடியேன்,
களிப்புடன் துதியையும்
செலுத்திப், பாடுவேன்.

௨. குழந்தை முன் நான் வளர,
எனக்குத், தேவனே!
சகாயஞ் செய்து தந்திட்ட
தயை, மிகுந்ததே.

௩. சிறந்த வாலிபத்திலும்
தீமைக்குட்படுகில்;
தாங்கிக்கொண்டீர், துன்பத்திலும்,
உமது புயத்தில்.

௪. மா கோடாகோடி தீமைகள்
விலக்கி, ரட்சித்தீர்;
கைமாறில்லாத நன்மைகள்
கதிக்கப், பண்ணினீர்.

௫. இம்மையில் என்றும் தாழ்மையாய்
தேவன்பை நினைப்பேன்:
மறுமையில் வணக்கமாய்
உம்மைப் புகழுவேன்.

௬. புகழ்ச்சி கீர்த்தி தோத்திரம்,
ஒன்றான உமக்கே,
இகத்திலும் பரத்திலும்,
கொடுக்கத்தகுமே.

௩௮ம் கீதம். L. M.

Divine goodness in creation, preservation, and redemption.

௧. பிதாவே! என்னைத், தேவரீர்
தெய்விக ரூபாய்ச், சிட்டித்தீர்.
நீர்தான் என் சீவன்; உம்மையே
பற்றுதிருந்தால், அழிவே.

௨. நான் சாவுக்குச் சாண் தூரமாய்
இருந்த போதெல்லாம், அன்பாய்,
உண்டான மோசங்களையே
விலக்கிக், காத்து வந்தீரே.

௩. திவ்விய மைந்தரே! உம்மால்
நான் மீட்கப்பட்டேன்; அன்பினால்,
அடியேன் தப்பத், தேவரீர்
பலியாய்ச் சீவனை விட்டீர்.

௪. நீரே என் நல்லாசாரியர்,
என் ஆறுதல், என் ரட்சகர்;
நான் கதிபெறும் அருளே,
நீர் உத்தரித்த பலனே.

நடகூம் கீதம். L. M.

God the source of all good.

க. கர்த்தாவைத் துதி செய்யுங்கள்,
ஓசையோடாசை கூட்டுங்கள்:
அவர் சுபாவம் நல்லது,
அவரின் செய்கை அழகு.

உ. வான் மீன்களை உண்டாக்கினர்,
பேர்சொல்லிக் கணக்கறிவார்;
தன்ஞானம் கரையில்லது,
புத்தியையுங் கடந்தது.

ந. வானத்தில் மேகம் விரித்து,
செழிக்கும் மழை, பூமிக்கு
வருஷிப்பித்த உன்னதர்,—
துதிக்கப்படத்தக்கவர்.

ச. மண் புல்லால் அலங்கரித்து,
நிலத்தில் நெல்வல வளர்த்து,
விலங்குக் குணவீகிறர்;
பட்சிகளைப் போஷிக்கிறர்.

ரு. புலவர்களின் புத்தியும்
மிருகங்களின் சத்தியும்
எவ்வளவாகிலும், அவர்
எவற்றிற்கு மேலானவர்.

சு. சுத்தரோ அவர்க்கழகு;
பத்தர்மேல் அவரின் அன்பு;

பத்தரில் அவர் சாயலை
பார்ப்பது, அவர்க்கினிமை.

௬௰௩ கீதம். L. M.

The goodness and mercy of God.

௧. என்னெஞ்சமே! நீ கர்த்தரை
துதித்துப், பாடிக் கீதத்தை,
பஞ்சபுலன் அடக்கியே,
வணங்குவாய் மெய்யன்போடே.

௨. கிருபைக் கடலானவர்
புகழப்படத்தக்கவர்
சினேக அற்புதங்களை,
என்னாத்துமாவே! நீ நினை:

௩. உன் பாவப் பலியாகவே,
குமாரனைக் கொடுத்தாரே:
உன்னைச் சீராக்கும் ஆக்கினை
அவர் பட்டார்: அதே நினை.

௪. கர்த்தாவே! எந்த ஊரிலும்
ரட்சிப்பின் அருள் காணவும்;
பூலோகம் யாவும் ஏகமாய்
வணங்கச், செய்யும் களிப்பாய்.

௬௰௪ கீதம். 7's.

His kingdom ruleth over all.

௧. மோட்சலோகநாதரே!
நித்ய நேசமுள்ளோரே!

லோகச்செய்கைகளெல்லாம்
தேவரீருக்குள்ளேயாம்.

௨. நான் பிறக்கச்செய்தவர்,
சாவுமட்டுங்காப்பவர்;
எனக்கேற்றயாவையும்,
தெய்வஞானம், ஆண்டிடும்,

௩. லோககாலம், இன்பமும்,
ஏழைமை, நற்செல்வமும்,
துக்கமும், சந்தோஷமும்,
தேவகை, அளித்திடும்,

௪. மாவிவேகமுள்ளோரே!
எனக்குள்ள யாவுமே
உமக்கொப்புவிப்பேன்; நீர்
நன்றாக நடத்துவீர்.

௫. காலந்தோறும் உம்மையே
தோத்திரிக்கில், முத்தியே:
நீர், என் செல்வமானவர்,
என்றும் அன்புக்கேற்றவர்.

௬௨ம் கீதம். 8, 7, & 4.

Omnipresence of God.

௧. யாவரையும் யாவற்றையும்,
ஸ்வாமி! நன்றாய் அறிவீர்.
ஆழத்தையும் இருளையும்
தேவரீரே நோக்குவீர்;

மறைபொருள்
நன்றய்த் தோன்றப்பண்ணுவீர்.

உ. ஆத்துமாவின் சிந்தனைகள்
தூரத்தில் நீர் பார்க்கிறீர்:
நான் போகுஞ் சர்வ பாதைகள்
தெளிவாகக் காண்கிறீர்.
அந்தகாரம்
தேவரீருக்கில்லையே.

ங. நாங்கள் உம்மைச் சமீபித்து
வேண்டிக்கொள்ள முன்னமே,
எங்கள் மனதை அறிந்து,
நன்மையைக் கொடுப்பீரே;
ஆ! கர்த்தாவே!
அன்பாய்ப்பாரும், எங்களை.

ச. பாவி நெஞ்சில் வைத்த நோக்கம்
பார்த்தறிந்தளிக்கிறீர்:
நல்லோர்செய்யும் யாவற்றையும்
நன்றய்ச் சித்தியாக்குவீர்:
நீதி தீர்க்கும்
கர்த்தாவாயிருக்கிறீர்.

ரு. முன்னும் பின்னுமாகும் யாவும்
தெளிவாக அறிவீர்:
மாயை இருள் கறை பாவம்
நீங்க வழிகாட்டுவீர்.
மோட்சமார்க்கம்
எங்களுக்குத் தருவீர்.

௯௩ம் கீதம். L. M.

The same.

க. உன்னதமான ஸ்தலத்தில்,
மா ஆழமுள்ள இடத்தில்,
கர்த்தாவே! நீர் இருக்கிறீர்;
எல்லாவற்றையும் பார்க்கிறீர்.

உ. நான் சென்றுவரும் வழியை,
நான் போயிருக்கும் இடத்தை,
கர்த்தாவே! நீர் அறிகிறீர்;
சமீபமாயும் நிற்கிறீர்.

௩. வானத்துக் கேறித் தங்கியும்,
பாதாளத்தில் இறங்கியும்,
ஆ! அங்கேதானும், தேவரீர்
என்னை அறிந்திருக்கிறீர்.

ச. இருளிலே ஒளித்தாலும்,
கடலிலே நான் போயினும்,
எங்கே போனாலும், தேவரீர்
அங்கென்னைச் சுற்றியிருப்பீர்.

ரு. இதையறிந்து, தீமையை
வெறுத்துத்தள்ளித், தேவனை
பின் சென்று வழிபடவே,
கிருபைதாரும், கர்த்தரே.!

௯ச ம் கீதம். C. M.

Omniscience and Omnipresence of God.

க. குற்றம் நிறைந்த ஆத்துமா
உமக்கு மறைந்தே

விலகிக்கொள்ளக் கூடுமா?
அனாதிபரனே!

௨. நாவாச் சுவாலை பட்சிக்கும்
பாதாள அக்கினி;
பாத்தில் தோன்றும் மேன்மையும்
விளக்குமே நீதி.

௩. உமது முனிவுக்குச், சா
மறையக் கூடுமோ?
பூமி பாதாளம் காரிா
ஒத்தாசை செய்யுமோ?

௪. கர்த்தாவே! சொல்ல, மாணம்
உயிராகும் நிசமே;
காருள்ள சவக்குழியும்
திறந்திருக்குமே.

௫. வெளிச்சம் செல்லும் கதியாய்,
எத்திசைக்கப்பாலே
பறந்தும்; அங்கும் நிசமாய்
பிடித்துக்கொள்வீரோ.

௬. சா, சீவன், வானம், பூமியும்,
உமக்கு முன் சரி:
இவ்வல்ல தேவனைக் கோபம்
மூட்டுவதெப்படி?

௨௦ம் கீதம். L. M.

The same.

க. கர்த்தாவே! நான் படுக்கையில்,
எழுந்திருக்கும் வேளையில்,

நடப்பதின்னதென்று, நீர்
கண்கண்டதாக, அறிவீர்.

௨. என்னந்தாங்க எண்ணமும்,
உமக்கு நன்றய்த் தெரியும்;
என் சுக துக்கம், முன்னமே
நீர் அறிவீர், என் கர்த்தரோ!

௩. உம்மைச் சேவிக்க, மனசில்
விருப்பமற்றுப்போகையில்;
எங்கே நான் உமக்கொளித்தே
விலகுவேன், மாதேவனே!

௪. மேல் வானத்திற் பறக்கிலும்;
பாதாளத்தில் இறங்கிலும்;
என்னோடே கூடத், தேவரீர்,
ஞாயம் விளங்க, வருவீர்.

௫. காருள்ளிராவின் செட்டைக்குள்
ஒளித்தாலும், இருட்டுக்குள்
நீர் உற்றுப்பார்த்தால், உடனே
இராவும் பகலாகுமே.

௬. ஆ கர்த்தரோ! என் மனதில்
தீதானசிந்தை உண்டாகில்;
நான் வழிதப்பிப் போயினும்,
திருத்தி என்னை, ரட்சியும்.

சகூம் கீதம். L. M.

The same.

க. கர்த்தாவே! அடியேனை நீர்
ஆராய்ந்தறிந்திருக்கிறீர்:
என் தேகமும், இதயமும்,
உமக்கு, நன்றாய்த் தெரியும்.

உ. நினைக்கமுன் என்னெண்ணமே,
நடக்கமுன் என் வழியே,
வாய் திறக்க முன்னே சொல்லும்,
கர்த்தாவுக், கெல்லாந் தெரியும்.

ந. பின் முன்னுமாக நிற்கிறீர்:
எற்சூழ வந்திருக்கிறீர்:
உமக்குத் தப்பி, நான் எங்கே
பறந்துபோவேன், கர்த்தரே!

ச. உறங்கிக்கொண்டிருக்கையில்;
விழித்திருக்கும் வேளையில்;
வீட்டிலேனும், வெளியேனும்,
என்னைக்காண்பீர், அனுதினம்.

ரு. ஆ! தேவனே! இம்மெய்ஞ்ஞானம்
புத்திக்கெட்டாத உன்னதம்:
என் நெஞ்சம், எண்ணி எண்ணியே,
பாவசமாகின்றதே.

சா. எங்கே போனாலும், நான் எங்கே
இருந்தாலும், என் நெஞ்சிலே

இந்நினைவை இருத்திடும்;
பாவ நேசம் அகற்றிடும்.

சஎம் கீதம். C. M.

God our Shepherd.

க. சர்வமும் வல்ல ஆண்டவர்,
என் வழிகாட்டியாம்:
வேண்டியதை அளிப்பவர்,
என் நல்ல மேய்ப்பராம்.

உ. பசும்புல்லான மேய்ச்சலில்
ஆற்றி நடத்துவார்:
நதியோரத்தில், மரத்தில்
நிழலிற், போஷிப்பார்.

ந. அலைவுபடும் பாவியை
நிலை நிறுத்துறர்:
நீதியின் பாதையில், என்னை
நடக்கச், செய்கிறர்.

ச. யாதொரு பயம் நட்டமும்
இல்லாமற், சாவேனே:
நீர் நீட்டுங் கோலும், தண்டமும்,
ஆவியைத்தாங்குமே.

ரு. இவ்வருள் செய்யுந் தேவன்தான்
என்னுடன் நிற்பதால்;
அவருக்கென்றும் சேவிப்பேன்,
என் முழுப்பலத்தால்.

௬௰அம் கீதம். P. M.

The same.

க. கர்த்தர் என் மேய்ப்பரானவர்,
நன்றாகக் காக்கிறரோ:
அனைத்தையும், என்ரட்சகர்,
அன்பாக ஈகிறரோ.
யாவையும் பார்க்க உத்தம
தெய்வீக வார்த்தையாகிய
நன்மேய்ச்சல், எனக்குண்டு.

உ. சுகங் கொடுக்கும் ஆவியை
என்னெஞ்சத்துக்குக் காட்டி,
என்னுத்துமாவின் தாகத்தை
அவர் நன்றாக மாற்றி,
இயேசு அவராகையால்,
என்னை மிகுந்த நேசத்தால்
நடத்தி, ஆண்டுகொள்வார்.

௩. ஓர் வேளை சோதியின்றியே
மிகுந்த துக்கச் சாவின்
இருண்ட பள்ளத்தாக்கிலே
நடந்தும், அவ்விருட்டின்
பொல்லாங்குக்குப் பயப்படேன்;
நீர் நீட்டுங் கோலைப் பற்றுவேன்;
அதே என்னை நடத்தும்.

௪. மேலிந்தேனுக் கோர் பீடத்தை
பகைவர்க்கே முன்பாக

வைத் தேண்ணேய்யால்என்னுச்சியை,
மகாகடாட்சமாக,
சிறப்பித்தின்பஞ் செய்கிறீர்;
என் பக்கத்தில் இருக்கிறீர்;
என் பாத்திரம் நிரம்பும்.

ரு. என் சீவனுள்ளகாலத்தில்,
தேவன்புதான் கிடைக்கும்;
கடைசியான நோத்தில்,
அதே என்னை அழைக்கும்:
இங்கே கர்த்தாவின் வீட்டிலும்,
அங்கே மகா தலத்திலும்,
நிலைத்துக்கொண்டிருப்பேன்.

ஙகூ கீதம். 6—8's.

Captain of Israel's host.

க. மோட்சத்தைத் தேடுபவர்க்கு
சேனாபதி இயேசுவே!
உமதன்பின் நிழலுக்கு
கீழ்த்தங்குவோம்: கிருபையே
எங்கள் பேலம்; நூலே வேதம்;
உம்மை வாழ்த்தலே விருப்பம்.

உ. தப்பாத உமதாவியே,
வழிகாட்டியாயிருக்க;
செல்லாத மார்க்கங்களிலே
நாங்கள் நோாக நடக்க,

வல்லவர் அன்பாலே வாழ்வோம்;
மோசந் தூரத்தில் நீங்துவோம்.

௫௰ம் கீதம். L. M.

Joy in heaven over one sinner that repenteth.

க. கெட்ட சுதன் மீண்டுவர,
முத்திபெறுமாத்மந்தோன்ற,
மோட்சவாசரின்பம், யாவர்,
இன்னதென்று சொல்ல வல்லர்?

உ. நித்ய அன்பின் பலன் கண்டு,
தந்தை, உகப்பாரோ நன்று:
துக்கத்தால் உண்டான பலன்,
கண்டு மகிழ்வாரோ, சுதன்.

ங. துணைப்பட்ட துக்கப் பாவி
கண்டு, பூரிப்பாரோ, ஆவி:
வளர்ந்தோங்கும் தெய்வாச்சயம்
கண்டு, வானோரினம், போற்றும்.

௫௧ம் கீதம். 2–6's. & 4–7's.

The Prodigal's grateful acknowledgment.

க. பரம பிதாவே!
உம்மைத் துதிப்பேனே.
விண் மண்களின் துதியை
கேட்கப் பிரியமாயிரும்.

பாவத்திற் செத்த என்னை
நீர் உயிர்ப்பித்தருளும்.

௨. நான் உமது சொந்தம்:
கிறிஸ்தில் என்னைப் பாரும்.
அந்நிய திக்கற்றோனாய்
வெகு காலம் அலைந்தேன்:
இப்போதிரும்பினோனாய்
உம்மிடம் வருகிறேன்.

௩. தூரம் என்னைக் கண்டீர்!
எனக்கிரங்கினீர்:
நிர்ப்பந்த ஏழையனாய்
பாவச் சாவில் என்னை நீர்
கண்டு, பாதப்பாய்
ரட்சிக்கத் தீவரித்தீர்.

௪. என்னை முத்தமிட்டு,
பாவத்தை மன்னித்து,
வாசியான வஸ்திரம்
எனக்கு உடுப்பித்தீர்.
உமதன்பின் மோதிரம்
தந்து, அலங்கரித்தீர்.

௫௨ம் கீதம். P. M.

God our trust.

௧. நாங்கள் போற்றும் வல்ல தேவர்,
மாறில்லாத எங்கள் தஞ்சம்,
ஆதியந்தமற்ற நேசர்,
அருள் செய்வார், யாவருக்கும்.
இன்றும் என்றும் ஆவி கொண்டு
வழிகாட்டி வீட்டிற் சேர்க்கும்
எங்கள் யேசு நம்பிச், சார்ந்து,
நாங்கள் போற்றி, வாழ்வோம் என்றும்,

௫௩ம் கீதம். L. M.

The earthly and heavenly Sabbath.

௧. சென்ற வாரச் செய்கை விட்டு,
நாங்கள், ஓய்வுநாள் கைக்கொண்டு,
ஆத்ம பொருள் இன்று நாடி,
தேடுவோமே, இன்ப முத்தி.

௨. இன்று செய்யுந் தெய்வஸ்துதி,
வானஞ் செல்லும், பலியாகி;
அந்தரங்க சாந்த தெய்வம்,
தருவாரோ, மோட்சானந்தம்.

௩. முத்திநாடுத் தெய்வ மக்கள்,
துக்கந் துன்பம் நீங்குவார்கள்.
நாம் அப்பாக்யம் பெறும் வண்ணம்
தேற்றுவிக்கும், தெய்வசாந்தம்.

ரு. நாங்கள் சுத்தச் செய்கை, இன்று
செய்வோமாகில், நிலை நின்று;
என்றும் ஒய்ந்து வாழும்படி
சேர்வோம், மகா இன்ப முத்தி.

ருசா்ம் கீதம். S. M.

Sabbath morning.

க. ஸ்வாமி எழுந்திட்ட
இன்பநாளே! வந்து,
எங்கள் நெஞ்சம் மகிழ்ந்துய்ய
செய்வாய், நலந் தந்து.

உ. தெய்வபத்தர் வாழ
ராசாவாதும் நேசர்,
நாங்கள் கண்டு கெஞ்சிப்பாட;
நிற்பார், பிரசன்னர்.

ஙா. தெய்வ சந்நிதானம்,
தந்திடும், மகிழ்ச்சி:
லோக இன்பம் யாவிலும்
அத்யந்த மிகுதி.

ச. பூரிக்கும் என்னெஞ்சம்,
இதில் வசப்பட்டு,
பாடி மோட்சஞ் சேருமட்டும்
நிற்குமாகில், நன்று.

௫௫ம் கீதம். C—8's.

The same.

௧. மகா தேவே! ஓய்வு நாளில்
 ஆத்ம காணங்கள் கூடி
பயபத்திக்கேற்ற செயல்
 புரிந்திடத், தாரும் சித்தி:
உம்மைத் தேடத் ததும் பலம்
அபேட்சிக்க, அருள் செய்யும்.

௨. பொருள்! இன்பம்! நீங்கள் இனி
 தெய்வஸ்தலம் சோாதிரும்.
மருள் நீக்கும் சர்வதர்சி!
 நம்மைச் சோதிப்பீரோ என்றும்.
ஆத்மம், முத்திநாடும்படி,
வசப்பண்ணும் மனம் புத்தி.

௫௬ம் கீதம். P. M.

The same.

௧. வாழ்க சீயோன் பத்தர் யாரும்,
 கீதம்பாடி வாழ்கவே:
நித்ய மோட்சத்துக்குச் சாரும்
 களிப்பான நாள் இதே.
 துதியுங்கள்,
 நம்மை மீட்ட யேசுவை.

௨. லோக சோலி ஆசை வேலை
 அற, யாரும், சுத்தமாய்,

சூழநிற்கும் மோட்ச சேனை
துதிசெய்யுந் தன்மையாய்,
சொல்வோமாக
நம்மை மீட்ட யேசுவை.

௩. கோடாகோடி தூதரோடும்
பாடிப் பாடித் துதிப்போம்;
மோட்ச கதி சோதியோடும்
தோன்றும், தோன்றும், நம்புறேம்:
என்றென்றைக்கும்,
அவர் சாயல் ஆதுவோம்:

௪. லோகமெங்கும், தேசத்தார்கள்
வந்து, சுத்த ஆவியால்
ஸ்நானம் பெற்றுத், துதிப்பார்கள்.
வானம் பூமி, அவரால்
புதிதாகும்.
அல்லேலூயா மாந்தரால்.

௫௭ம் கீதம்: L. M.

The same.

௧. உன்னதமான கர்த்தரே!
இந்நாளை நியமித்தீரே.
அதற்காய் உம்மை நித்தமும்
போற்றிச் சேவித்துக் களிப்போம்:

௨. அடியார் உமதாளுகை,
ஊக்கம், ஞானம், வல்லமை,

பெலன், மகத்துவத்தையும்;
மேன்மேல் உணா, அருளும்.

௩. கேட்டோருக்கனுசாரமும்
ரட்சிப்பும் நித்தப் பூரிப்பும்
கிடைக்க, இன்று ரட்சகர்
குழியை விட்டெழுந்தனர்.

௪. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே!
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இருந்து, எந்த நன்மைக்கும்
அடியாரை உயிர்ப்பியும்.

௫. தேவாவியே! நல்லறிவும்,
மெய், விசுவாசம், நேசமும்,
சபையில் நீரே சொல்லிய
நல் வார்த்தையாலே, பெருக.

௬. வெளிச்சம் நின்னடியாரில்
அன்பாகத் தங்கும்: எங்களில்
எல்லாங் கர்த்தாவின் மேன்மைக்கு
பலிக்கவே கடவது.

இரண்டாம் பிரிவு,

கிறிஸ்தாவதாரம், பலி, மகிமை, கிர்த்தியம்.

௫௮ம் கீதம், 7's.

The incarnation of Christ.

௧. மண்ணிற் சாந்தம் க்ஷேமம்
தோன்றில், யார்க்கும் ரட்சிப்பாம்;
கேள், தூதர் பாடும் பாட்டை;
வாழ்த்துவார்கள், ராசாவை.

௨. வானோர் போற்றுங் கிறிஸ்து
நித்ய தேவன், உகந்து
இந்தக் காலந் தோன்றுவார்;
கன்னியிடம் பிறந்தார்,

௩. நரரூபந் தரித்தார்,
இம்மானுவேல் எம் மீட்பர்.
பாரும், மனுரூபியை;
வாழ்த்தும் அவதாரத்தை.

௪. வாழ்த்தும் சாந்த வேந்தனை;
வாழ்த்தும், ஞாயாதித்தனை:
வாய்க்கும் வண்ணம் ஆவியில்,
சொஸ்தம், கொண்டார் சிறையில்.

ரு. வானம்விட்டு நீங்கினூர்,
நம்மை மீட்கப் பிறந்தார்.
வந்தார் நம்மை ரட்சிக்க,
மறுசென்மம் அருள.

சு. மண்ணோர் நாடும் நேசரே!
வந்து நம்மில் வாழ்வீரே.
கன்னிதந்த சுதன் நீர்,
சர்ப்பசிரம் நசிப்பீர்.

எ. ஈண்டாம் தெய்வ ஆதாமே!
அன்பில் நம்மை ஏவுமே.
மனுரூபம் அழியும்;
தெய்வரூபம் பதியும்.

ருகூம் கீதம். C. M.

The same.

க. மண்ணோர்! தூதருடன் கூடி,
திவ்ய கீதம் பாடும்:
சேர்ந்து மகிழ், வன்பு, நன்றி,
சுபதினம், வாழ்த்தும்.

உ. விண்ணோர் வெற்றிக்கவிபாட;
ஒளியுள்ள சேனை,
மகா இன்ப கீதமாக,
தட்டிப்பாடும், வீணை.

௩. வானங்கொள்ளாப்பொருள்கவி
இன்பந் தோன்றுங் காலம்;
தொனித்தோங்கும்எதிரொலி,
நவமாகக், கேட்கும்.

௪. விண்ணின் வாயில் வெளிப்பட்டு
திவ்ய செய்தி சொல்ல,
தெய்வ தூதர் மகிழ்வோடு,
வந்தார், அதைச் சொல்ல.

௫. பலியாக வந்தார் யேசு;
மண்ணோர்க்காதும் சாந்தம்:
"தேவனுக்குத் துதி" என்று,
கூடிச், சொல்வோம் கீதம்.

௬. மீட்பர், பிராத்ரு, நண்பர், தெய்வம்,
வாழ்க, சிவப்பாபு:
லோகம் காலம் சீவன் போயும்,
துதி ஒழியாது.

கூயிம் கீதம்.   8's. & 7's.

Christ "The light of the Gentiles."

௧. சாவின் நிழற் பட்ட யார்க்கும்
விளங்கும் பாஞ்சோதி!
வந்து, காமயல் நீக்கும்,
அன்பு வெளிப்படுத்தி:

மண்விண்புதுக்கும் சீட்டிகர்!
அகோர இருள் போக்கும்:
மருள்நீக்குந்தமாநாசர்!
வந்து, நம்மை விளக்கும்.

௨, எளியேனின் நெஞ்சிற் பயம்
நீக்கித், தீர்த்திபுரிவீர்;
அனந்த சீவ கிரணம்
தந்து, வெளிப்படுவீர்;
தேவன் மீட்ட சனம் யார்க்கும்
ஆத்ம தயை விளக்க,
சர்வலோக மீட்பர்! வாரும்;
வாரும், ரட்சை அருள.

௩. சுசீல சாந்த ராசாவே!
தயை வைத்து ரட்சியும்:
பாவமன்னிப்பைத்தாருமே:
அதிலுணர்வருளும்;
சீலம் செய்யும் புண்யங்கொண்டு,
நெஞ்சின் துக்கம் விலக்கும்:
இளைத்தவலந்தோரா மீட்டு,
கரையேற்றி, நடத்தும்.

௯௩ம் கீதம். C. M.

The same.

௧. சிறையினிற் சோலதங்கொண்டு,
சூர்ய பாஞ்சோதி!
உதித் தாற்றும் என் தவிப்பு,
உய்ந்திட அருளி.

௨. விசுங் கிரணம் பரப்பி,
மருள் மேகம் நீக்கும்:
விஸ்வாசக் கண்ணையருளி,
என்னெஞ்சைவிளக்கும்.

௩ உயிர்ப்பிக்கும் அருள் தந்து,
ஆசையறப்பண்ணும்:
மனோ சிந்தை வசஞ்செய்து,
உம்மைச் சார்ச், செய்யும்.

௪. பிதா! கெட்ட சுதற் சேரும்:
என்னைப் பாரும், யேசு!
தேற்றும் ஆவி! முடி சூட்டும்,
பரானந்தம் தந்து.

௫. பேதமில்லா நித்ய தெய்வம்!
திரியேக வஸ்து!
கொள்வோம், உம்மில், விசுவாசம்;
வைப்போம், என்றும், அன்பு.

௬௨ம் கீதம். 7's.

Advent of Christ.

க. வாரும், லோகமீட்பரே!
கன்னிபெற்ற மைந்தரே!
நீர் பிதாவில் வந்தவர்,
லோகத்துக்கிரட்சகர்.

உ. தீபமாம் பிதாவுக்கு
சாயலாக, நமது

மேன்மையானரட்சகர்,
தாழ்மையாய்ப், பிறந்தனர்.

௩: பிரகாசித்தருளும்: •
என்றென்றைக்கும், ரட்சியும்.
நீரோ, வல்ல தேவனுர்,
எம்மைக் காக்கும் நாயனுர்.

௬௯ம் கீதம். L. M.

The same.

௧. இரக்கமுள்ள யேசுவே
நாரின் தன்மையாகவே
பிறந்ததால், துதிக்கிறேம்;
சாரும் பாடக் கேட்கிறேம்.

௨. அகாதமான வல்லவர்,
சமஸ்தத்தையும் செய்தவர்,
குழந்தையாய்ப் பிறந்தனர்;
எவர்க்கும் மோட்சகாரணர்.

௩. அனுதி சோதி, பூமிக்கு
ஒளிதந்து, இருளுக்கு
சுடர் கொடுக்க, நாவிலே
பிரவேசித்தார், சந்தோஷமே.

௪. அவற்றை, யாரும், சிந்தித்து
சந்தோஷத்தோடு பூரித்து,
தீபத்தைக் கண்டு வாழ்த்துங்கள்;
அதில் நடக்கப் பாருங்கள்.

௬சம் கீதம். L. M.

The same.

க. பாத்திலே இருந்துதான்,
அனுப்பப்பட்ட தூதன் நான்!
வந்தசெய்திசொல்வேன் கேளும்;
அச்சமின்றி நீங்கள் வாழும்.

உ. இன்றுங்கள் கர்த்தானவர்,
மேசியா, உங்கள் ரட்சகர்,
தாவீதின் ஊரில், ஏழையார்
ரட்சிப்புக்காகச், சனித்தார்.

௩. இச்செய்தி, லோகம் யாவுக்கும்,
ரட்சிக்கும் அருள் விளக்கும்.
நற்செய்தி, யார்க்கும், சொல்லுவேன்;
யேசுவின் தயை, காட்டுவேன்.

ச. பாத்திலே நாம் ஏகமாய்
இனி இருக்கத்தக்கதாய்,
இக்கட்டும் பாவமும் எல்லாம்
இம் மீட்பால் நிவிர்த்தியாம்.

சா௫ம் கீதம். 7's.

The same.

க. கத்தருக்குத் தோத்திரம்:
மீட்பரென்ற வாக்கியம்
தப்பில்லாமல், நாயனார்
மீட்பனை அனுப்பினார்.

௨. முற் பிதாக்கள் யாவரும்
மற்ற மேன்மையோர்களும்
சொல்லி ஆசைப்பட்டது,
வந்து நிறைவேறிற்று.

௩. வாழ்க! ஆதி தீபமே!
ஓசியன்ற சீவனே!
என்னுடைய நெஞ்சிலும்,
அன்புடன் பிரவேசியும்.

௪. சித்தாசனத்தேறுமே.
அதுமக்தச் சொந்தமே.
பாவமுள்ள யாவையும்
நீக்கி, என்னை ஆட்சியும்.

௬௩ம் கீதம். S. M.

Christ is our sacrifice.

௧. யூதர் பீடத்தண்டை
தரு விட்ட பலி,
நீக்கா தாத்துமத்தின் கறை;
செய்யா மனோசுத்தி.

௨. கிறிஸ்து தேவ பலி!
மகா மேன்மையாகும்.
அவர் சிந்தும்ரத்தசத்தி,
பாவமெல்லாம், போக்கும்.

௩. இதை நம்பிக்கொண்டு,
சாபம் விட்டு நீங்கி,

ஆட்டுக் குட்டியன்பைக் கண்டு,
செய்வோம், நாங்கள், துதி.

௬௭ம் கீதம். C. M.

Behold the Lamb of God.

க. மனிதரின் ரட்சகனை,
மரத்தில், நோக்குங்கள்:
எவ்வளவாய், உங்களை
நேசித்தார்; பாருங்கள்.

உ. பூமியிற் கல்லும் பிளந்து,
ஆலயத்தின் திரை
கிழித், தவர் பெரு மூச்சு,
அசைத்து, துலகை,

ங. முகிந்ததென்று தலையை
சாய்த்து, என்னுத்துமம்
ஏற்றுக்கொள்ளுமென் றுலகை
மீட்டார், சர்வாலயம்.

ச. மரணத்தீவிலங்கை
சீக்கிரத்தில் உடைத்தார்.
யேசுவே! உமது அன்பை,
சொல்லத்தக்கவன் ஆர்?

௬௮ம் கீதம். L. M.

The same.

க. வழிப்போக்கரே! யேசுவை,
துக்கித்தோராகவே பார்த்து,

பாவிக்காய்ச் செத்த அவரை
அழுகையோடே பின்சென்று,

உ. கெட்டவர் அவரைத் தூணில்
கட்டி அடித்த காயங்கள்
ஊறுமிரத்தம், பூமியில்
விழுகுதென்றும், பாருங்கள்.

௩. இதுவும் போதாதென்றெண்ணி,
சிலுவையில் அறையுங்கள்
என்றவர்களின் கோஷடத்தை,
பாதபித்துக்கேளுங்கள்.

௪. பரபாசை விடுவித்து,
யேசுவைச், சிலுவையிலே
அறைந்துபோடுங்களேன்று,
மா கூக்குரலிட்டார்களே.

௫. அவருடை தேவ உடல்,
திரு ரத்தத்தால் நனைந்து,
ஆணிகளாற் சிலுவையில்,
அறையப்பட்டிருக்குது.

௬. தலையின் மேல் முள்முடியும்,
காயப்பட்டவர் கரங்கள்
விலாவுங் கால்களும் ஊறும்
உதிர ஊற்றைப் பாருங்கள்.

எ. மோட்ச ராச்சியத்தின் ராசா
தேவ சுதன் எங்கே இப்போ?

சாகாதவரோ. சாவாரோ,
வல்லவர் இளைத்தாரல்லோ?

அ. என் பாரத்தால் இளைக்கிறர்,
பாவத்தால் அவரைக் கொன்றேன்.
மாணத்தால் என்னை மீட்டார்:
அம்மீட்பை ஏற்கக்கடவேன்.

சுசும் கீதர். L. M.

The Crucifixion.

க. மகா தெய்வாாசா மாய்ந்த
சிலுவையை நோக்குங் காலம்,
லோக செல்வம் விர்தாவென,
தள்ளுவேனே அகங்காாம்.

உ. கிறிஸ்து சிந்தும் ரத்தம் சார்ந்து,
பொருள் இன்பம் இவை நீங்கி,
எல்லாம் அவரொன்று கண்டு,
நாங்கள்பற்றச், செய்யும், ஸ்வாமீ!

உ அன்பு துக்கம் என்னும் இவை
. சர்வ தேகம் மூழ்கப், பாரும்!
இதுபோன்ற அன்பு, தயை,
முள்ளுமுடி, இல்லையாதும்.

ச. சர்வலோகம் ஆளும் வாம்
வேண்டுவாரோ தயா நீதி!
எல்லையில்லாத் தெய்வ நேசம்,
கேட்கும், தேகம், பொருள், ஆவி.

எ௰ம் கீதம். C. M.

"Alas and did my Saviour bleed."

க. மரித்தாரோ என்னாண்டவர்
சிலுவையில்தானோ?
மரித்தாரோ என் ரட்சகர்,
ஆ! எனக்காகவோ?

உ. மரத்தில் தூங்கிச், சீவனை
விட்டார் என் யேசுவே:
உனக்குத்தான், இப்பலியை
கொடுத்தார், பாவியே!

ங. நான் எண்ணி எண்ணி வருகில்,
என் நேசம், ஊக்கமாய்
கொழுந்துவிட்டு, நெஞ்சத்தில்
எரியும் பத்தியாய்.

ச. எனக்கு மீட்பு யேசுதாம்;
இவ்வருள் செய்தாரோ:
நான் என்ன பதில் தாலாம்;
ததுவதில்லையே.

ரு. என் தேகம், செல்வம், சுகமும்,
நெஞ்சும், சீவனோடே,
உயிருள்ள பலியாகவும்,
ஈவேன், என் யேசுவே!

எசம் கீதம். L. M.

Sufferings and death of Christ.

க. மரித்த கிறிஸ்தின் ஆவியும்,
வதைக்கப்பட்ட தேகமும்,—
என் ஆவியை உயிர்ப்பித்து,
என்றைக்கும் காக்கத்தக்கது.

உ. அவர் விலாவிற் காயமும்,
பொழிந்த நீரும், ரத்தமும்,—
என்ஸ்நானமாகிப், பாவமே
இராமற், போக்கத்தக்கதே.

ந. அன்புள்ள யேசுக்கிறிஸ்துவே!
ஒதுக்கம் உம்மிடத்திலே
விரும்பித்தேடும் என்னையும்,
மறைத்துக்கொண்டு, ரட்சியும்.

ச. என்னுவிபோதும் நோத்தில்,
அதை நீர் தேற்றி, மோட்சத்தில்
என்றைக்கும் உம்மைப்போற்றவே
அழைத்துக்கொள்ளும், கர்த்தரே!

எஉம் கீதம். 8, 7, 4.

The same.

க. எனக்காகும் சாவின் சாவே!
என்னுயிர்க்கும் சீவனே!

என்னை மீட்க, நீர், கர்த்தாவே!
தேவகோபத்தீயிலே
பாய்ந்ததாலே,
உமக்கே ஸ்தோத்திரம்.

௨. கேட்டுக்கான பாவத்துக்கு
என்னை நீங்கலாக்கவே,
உம்மைத், தீயோர் இஷ்டத்துக்கு,
நீரே ஒப்புவிக்கவே,
கள்ளன்போல
கட்டுப்பட்டுப்போனீரே.

௩. நான் உபத்திரப்படாமல்
பூரிப்பாய் மகிழவே,
சொந்த இன்பத்தைப்பாராமல்,
வாதிப்பாரின் இச்சைக்கே
நீர் இணங்கி
தூக்கப்பட்டுப்போனீரே.

௪, மீட்பரே! மகா அன்பாக
நீர் புறம்பும் உள்ளேயும்
சீவன்போகும் அளவாக
பட்டபாடனைத்துக்கும்
என்ன சொல்வேன்?
என்றென்றைக்கும்போற்றுவேன்.

ஏகம் கீதம். 7, & 6.

Sufferings and Death of Christ.

க. இரத்தம் காயம் குத்தும்
நிறைந்த நிந்தைக்கே
முண்முடியாலே சுற்றும்
குத்துண்ட சென்னியே.
முன் மாட்சிமையைக் கொண்ட
நீர் லச்சை காண்பதேன்?
அன்பாய் வருந்திநொந்த
உம்மைத் துதிக்கிறேன்.

உ. நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி நித்தமே
நீர் பட்ட கஸதிக்காக
துதிப்பேன், யேசுவே!
நான் உம்மில் ஊன்றி நிற்க,
சகாயமாயிரும்:
நான் உம்முடன் மரிக்க,
நீர் கட்டளையிடும்:

ஙு. என் மூச்சுப்போதும் அந்த
கடை இக்கட்டிலும்,
நீர் எனக்காய் இறந்த
உருவைக் காண்பியும்:
அப்போதே உம்மைப் பார்த்து
கண்ணேக்கி, நெஞ்சிலே
நிணக்க, ஒடிவந்து
ரட்சிப்பீர், யேசுவே!

௯௪ம் கீதம். P. M.

The same.

௧. அதோ மரத்திற் சாக,
உன் தேவன், உனக்காக
நின்றார், உலோகமே!
தூரமான நிந்தை
சகித்த மாகர்த்தாவை
கண்ணோக்குவீர்கள், நீங்களே!

௨. நானே கை கால் கட்டுண்டு,
சிறையிலே தள்ளுண்டு,
கிடக்க, ஞாயமே.
நானே இடைவிடாமல்
சந்தோஷத்தைக் காணாமல்
வாதை அடைய, நீதியே.

௩. அதற்கு நான் அகன்று
ஞாயாக்கினையை வென்று
இருக்கச் செய்ய, நீர்
துன்மார்க்கர் கைக்குள்ளாகி,
மரத்திற் சாபமாகி,
எத்தீமையையும் தாங்கினீர்.

௪. நீர் என்னை மீட்டதாலே,
யேசு! நான் உமதாளே.
என் முழு உள்ளமும்,
நீர் செய்த நன்மைக்காக,

துதிக்கும்படியாக,
தேவாவியைத் தந்தருளும்.

௫. நீர் சாந்தத்தோடும் பட்டு
தீயோர்மேற் கோபமற்று
அந்யாயம் யாவையும்
சகித்ததை நான் நோக்கி,
என் துர்க்குணத்தைப் போக்கி,
உமக்கொப்பாய் நடப்பியும்.

௬. கர்த்தாவே! நீர்வெறுக்கும்
பொல்லாங்கை என்றென்றைக்கும்
வெறுத்துத்தள்ளவும்;
என்னெஞ்சிலே பலத்தை,
நற்சிந்தையைத், திடத்தை,
அனுக்ரகித்து, ரட்சியும்.

௭௬ம் கீதம். L. M.

The Death of Christ.

௧. மாய்ந்தார், பாவிநேசர் மாய்ந்தார்!
மண் அதிர்ந்து விண் இருள.
சாலிம்மாதர், பிரலாபர்
ஆக, இதோ நின்றுர் சூழ:
வாரும், சுத்தர்! தேவைப்பார்த்து,
கண்ணீர்வாரத் துக்கங்கொள்ளும்.
ரத்தங் கண்ணீர் சோரநின்று,
சாவிற்றழ்ந்தார், உங்கள் மூலம்.

உ. பாரும், அவர் துக்கம் அன்பு:
எங்கள் மூலம், மாய்ந்தார், செல்வர்.
ஆனாற், பாரும் மாய்ந்த யேசு,
இதோ உயிர்த்திட்டார் அவர்;
எழுந் திப்போ கோரி நீங்கி,
செயங்கொண்டு, நித்தம் வாழ்வர்;
விண்ணோர் தூதர், சென்று கூடி
"வாழ்க" என்று துதிசெய்வர்.

௩. சுத்தர்! கண்ணீர் நீங்கி, வாரும்:
உங்கள் மீட்பர் செயம் சொல்லி,
"நாகனை வென்றார், சாவும்
செயித்தார்" என்று பாடும் வெற்றி.
மீட்டு ராட்சைசெய்யத் தோன்றும்
ராசஸ்துதி செய்வீர் இன்று:
"சாவே! கூர்மை எங்கே? ஈமம்
செயம் எங்கே?" என்பீர் அன்று.

௭௯ம் கீதம். P. M.

They came unto the sepulcher bringing the spices,

க. நற்போளத்தைக்கொண்டு வைகறையிலே
கற்பாறைக்கு வந்ததாய் முதலோரே!

உ. கற்பேர்க்கத் திராணியுடையவன் ஆர்?
உரைத்துக்கலங்கிக் கண்ணீரும் விட்டார்.

௩. என்றாலும் கற்பாறை திறபட்டதே;
யேசுவும் விட்டுக் காணாமற் போனாரே.

ச. மாதிகிலடைந்து சந்தேகப்பட,
இதோ கிறிஸது வந்து "நீர் வாழ்க" என்க.

ரு. ஆ யேசுவே! வந்து கடாட்சம்பண்ணும்;
என்னெஞ்சுமதாவியால் சுத்தஞ்செய்யும்.

சு. இக்கூட்டத்தார் யாரும் அக்களிப்போடும்
இஸ்நானம் பெற்றோர்கள் வணங்கச்செய்யும்.

எ. விண்ணோரைப்போல் நாமும் வெள்ளங்கிகொண்டே,
துதித்து வணங்கிப் பின் செல்லுவோமே.

அ. மெய்யாய் வருவேனென்ற கர்த்தாவைப் பார்!
எக்காளந்தொனிக்க இதோ வருவார்.

எஎம் கீதம். 7's.

Very early in the morning they came unto the sepulcher.

க. வைகறை இருக்கையில்
ஓடிவந்த மரியாள்,
சேமம் வைத்த இடத்தில்
நின்றுகொண்டு அழுதாள்.
"எங்கள் யேசு எங்கேயோ;
சீவன் விட்ட மீட்பரோ
காணவில்லையே, ஐயோ!
யாவனோ எடுத்தானோ."

உ. ஏங்கிச்சொல்ல, நேசமாய்,
"மரியாளே கேள்" என்றார்.

கேட்டுக்கொண்டு, ஆவலாய்
பார்த்தாள் தன்னுத்மநேசர்.
தேவ வாக்குச் சீவனும்,
தேவநேசம் மோட்சமே.
தாழ்ந்ததுணர் யாருக்கும்.
யேசு தோன்றுவார் அங்கே.

எஅம் கீதம். L. M.

The Resurrection of Christ.

க. எழுந்தாரோ எங்கள் தெய்வம்:
விண்ணிற் சென்றார் எங்கள் யேசு:
பாதலத்தார், பட்டார் வசம்:
விண்ணோர், கண்டார், துதிசெய்து:
அவர் ராதம் அங்கே நிற்கும்.
கீதம்பாடித், தேவதூதர்,
"விண்ணின் வாயில்! உயர்ந்திடும்,
நித்யதுவாரம்! விடும்" என்பர்.

உ. ஒளிப்பெந்தம் எல்லாம் நீங்க,
மண்டலங்கள், விரிந்திடும்:
மகத்துவ ராசாவா,
ஆண்மவை தந்துவிடும்.
மகத்துவராசா யாவர்?
லோகம், பாவம், சா, பாதாலம்
இவை செயித்த யேசுநாதர்,
பகைவென்ற மகாதெய்வம்.

ஙா. செயமுள்ளாதம் நீற்க,
   தூதர், பாடுவார்கள் கீதம்.
விண்ணின் வாயில், அவர்வா,
   நித்யதுவாரந் தந்துவிடும்.
மகத்துவாாசா யாவர்?
   எங்கும் ஆளத்தக்க தேவன்,
தூதர் சுத்தர் தொழும் வேந்தர்,
   நித்ய இன்ப பாாபான்.

எகூ௩ம் கீதம். 7's.

The same.

க. தேவமைந்தனவர்
யேசுவென்னும் ரட்சகர்,
தேவதத்துவத்தினல்
கல்லறையை விட்டதால்,

உ. சாபம் துன்பம் யாவையும்
நீக்கிப்போட்டு, வாழ்வையும்
மாந்தர்க்கீந்து ரட்சித்தார்;
பேயின்மேன்மை தாழ்த்தினர்.

ஙா. அதனலே மாந்தரோ!
கிறிஸ்துவின் ரட்சிப்பையே,
வாஞ்சையுடன், நாடுங்கள்;
அதை ஏற்றுப் பாடுங்கள்.

சு. தேவருக் கிஸதோத்திரம்!
அல்லேலூயா! கீர்த்தனம்!

மீட்கப்பட்ட கூட்டமே
உம்மைப் போற்றிக்கொள்ளுமே.

அ௰ம் கீதம். L. M.

The same.

க. இந்நாளிற், கிறிஸ்து, வெற்றியை
அடைந்து, வல்ல தீயனை
சிறைப்படுத்திப், போனவர்;
இஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

உ. பசாசு சாவு மயக்கம்
எத்துன்பமும், அன்றைத்தினம்,
எழுந்த கிறிஸ்தின் காலிலே
விழுந்து, கெட்டுப்போயிற்றே.

ஈ. அந்நாளிற், சீஷர் கத்தரின்
சரீரம் சேமம் செய்தபின்;
கிலேசத்தோரின் நெஞ்சுக்கு,
சந்தோஷ பூரிப்பாயிற்று.

ச. மிகுந்த தேற்றம் செய்யவே
எழுந்த யேசுக்கிறிஸ்துவே!
செய்ததற்காக, உமக்கு
துதியுண்டாகத்தக்கது.

அ௧ம் கீதம். 6. 7's.

Christ the Rock of ages.

க. உடைபட்ட மலையே!
புகலிடம் தாருமே:

டக்கம்பட்டகாயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவதோஷம் யாவையும்
நீக்கும்படி, அருளும்.

உ. கண்ணீர் நித்தம் சொரிந்தும்;
தொய்யாத் தவம் புரிந்தும்,
பாவம் நீங்கமாட்டாதே.
நீரே மீட்பீர், ஏகரே!
செந்நீர்பட்ட சிலுவை
நான் சேர்ந்து, சார்வேன் உம்மை:

௩. நிழல் நேரிவ்வாழ்விலே,
கண்மூடும் என்சாவிலே,
இகம்விட்டுப், பாத்தில்
நடுத்தீர்வைத் தினத்தில்;
உடைபட்ட மலையே!
புகலிடந் தாருமே.

அஉம் கீதம். 6. 8's.

Father forgive them for they know not what they do.

க. யேசு, பாவியின் கேடுதல்
விரும்பினால், ஏன் மரித்தார்?
சிலுவையில் தூக்குண்கையில்.
எங்களுக்காகச் செபித்தார்.
"தாங்கள் செய்ததை அறியார்;
பிதாவே! மன்னியும்" என்றார்.

உ, அவர் மோட்ச ராச்சியத்தை
விட்டுப் பூமிக்கிறங்கினர்:
நாங்கள் இழந்த பாக்யத்தை
திரும்பக் கொடுக்க வந்தார்.
உமதாவியால், எனக்கும்,
அதைக் கிருபையாய்க் கொடும்.

ஙா. உமது மாணுவஸதை,
ரத்தவேர்வை, துக்கம், வெட்கம்,
நீர் அறையுண்ட சிலுவை,
அதில் அடைந்த மாணம்,
இவையெல்லாம்,எண்ணிக்கொள்ளும்;
என் பாவங்கவள மன்னியும்.

ச. நான் உம்முடைய பாதத்தை
முத்தமிட்டு, என்கண்ணீரால்
ரத்தமறக்கழுவதை
வேண்டுகிறேன்; பின்பு, என்றல்,
தேவ நேசத்தின் விவாம்,
எல்லாருக்கும், அறிவியும்.

ரு. ஒவ்வொரு பாவியின் மேல் நீர்
வைத்த நேசத்தை உணர்ந்து
நானும் இரங்கித் தேவரீர்
செய்த ரட்சிப்பைக் காண்பித்து
என்னேடெல்லாரும் இாக்கம்
பெறுவது, என் விருப்பம்.

அருடம் கீதம். L. M.

The Lamb slain from the foundation of the World.

க. ஆ தேவ ஆட்டுக்குட்டியே!
நீர் சிந்தின ரத்தத்திலே
நான் கழுவி, உம்மிடத்தில்
தங்குவது, மெய்யாய் வாழ்தல்.

உ. என்னுள்ளத்துக்குட்புகுந்து,
மற்றேவைக்கும் அதடைத்து,
உம்முடை முத்திரையிடும்:
என்றென்றைக்கும், அதில் இரும்.

ங. உமது ரத்த விலாவில்
தரித்து, அதனிடத்தில்
சீவன் பெலம் அடைந்தவர்,—
மெய்யாய் என்றைக்கும் பாக்கியர்.

ச. தேவாவி இல்லாதமட்டும்,
நாங்கள் செய்வதெல்லாம் பாவம்,
ஞானபெலமோ, தேவரீர்,
நம்புவோருக்குத் தருவீர்.

ரு. ராசாதிராசா எங்களை
மோட்சத்திலேற்றிமகிமை
பொருந்த கிரீடம் ஈவது,—
ஆச்சர்யமாயிருக்குது.

சா. இதினால் மனதுருகி,
கண்ணீரோடழுது அஞ்சி,

என் கர்த்தர் சிலுவையிலே
மரித்தார் என்று சொல்வோமே,

ஏ. ஆ கர்த்தாவே! உமதன்பை
உணா, எங்கள் மனதை
திராணியாக்கி, வாயையும்,
உம்மைத் துதிக்கத் திறவும்.

அ. முதற்பேறன உம்மையே
நல்மனதாய்ச் சேவிப்போமே,
சீவநாளெல்லாஞ் சேவிப்போம்;
சாவிலும் உம்மை நோக்குவோம்,

அசம் கீதம்.   2,–6's. & 4,–7's.

The living way opened.

க. யேசு! நீரோ துணை:
சார்வோம், என்றும், உம்மை;
பிராபர்க்கு ஆதாம்!
உயிர்ப்பிப்பீர் சாவோரை:
மனுவச்சம் தீர்த்திடும்;
நீரோ, தஞ்சம், வேறில்லை,

உ. சீவ நெறி காட்டி,
தோற்றுவித்தீர் முத்தி.
பாபிஷ்டர், பேரின்பத்தில்,
சேர்வார், ஆத்மபலனை.
நன்றியுணர்ந்தேறிடில்,
காண்போம், மோட்சமகிமை,

௩. உம்மை நம்பி, மோட்சம்
இப்போது சேர்ந்திட்டோம்.
அன்புப் பொக்ஷம் அடைந்து,
சேர்வோம் சந்நிதானத்தில்,
மோட்சானந்தம் ருசித்து,
ஆண்டுகொள்வோம் வானத்தில்.

௪. திரைச்சீலையிடம்,
சேர்ந்ததே நங்கூரம்:
சந்நிதானம் சேர்ந்திடும்
தவறாத நம்பிக்கை,
ஏறித், தேவ தர்சனம்
கண்டு, சேர்வோம் மோட்சத்தை.

௫ விசுவாசமூலம்,
சேர்ந்தோம், மோட்சானந்தம்.
முன்சென்றோருங் கூடி
இப்போ வானஞ் சாருவோம்.
வாழ்வோம், இந்த மண்ணீங்கி,
தெய்வபந்தி சேர்ந்திட்டோம்.

௬. நீரோ மாம்சதேகி;
சேர்ந்திட்டீரோ முத்தி;
நாங்கள் பின்சென்றுய்யவே,
முன்னே வழிகாட்டினீர்;
செயித்தாளும்வீரோ!
ஸ்வாமி! தேவர் முந்தினீர்.

அரும் கீதம். C. M.

"Who loved us and gave himself for us."

க. எல்லாரையும்மீட்டவரே!
எங்கள் மேலிரங்கும்;
சுவிசேஷத்தைக் கூறவே,
கதவைத் திறவும்.

உ. கெட்டோரைச் சேர்த்துப், பாவத்தின்
வல்லமையைப் போக்கும்.
இப்போது பாவ மன்னிப்பின்
பாக்யத்தையருளும்.

ரு. மீட்பரே! நீர் ரத்தத்தினல்
மீட்டோரை எண்ணீரோ?
உம்மைத்தாம், உமதாவியால்,
அறிவியும், இப்போ.

ச. பூர்வீகத்திற் பாடுபட்ட
தேவ குமாரனும்
ரத்தஞ் சிந்தினவராக,
தரிசனைதாரும்.

ரு. உமது கைகால் விலாவும்
அன்பாகக் காண்பியும்.
எங்கள் மனதின் கடினம்
நீக்கியருள்செய்யும்.

சு. மரத்திலே பாவந்தாக்க,
கால் அறையுண்டது.

பகைஞரை ஏற்றுக்கொள்ள,
கை நீட்டப்பட்டது.

எ. திறந்தகிணறுகவே
உமது விலாவும்,
கழுவவேண்டுவோருக்கே
சுகத்தை உண்டாக்கும்.

அ, உமது வாக்கைநம்பிக்க,
ரத்தத்தால் என்னையும்,
கழுவி, நான் உம்மை நம்ப
உதவியைச் செய்யும்.

அகூம் கீதம்.   6—8's.

Christ a Prophet.

க. வேதார்த்தத்தைக் காட்டுங் குரு!
தெய்வதீர்க்கதர்சி! வாரும்.
திருவாக்கைத் தெரிவித்து,
ஸ்வாமி! நம்மை ஏவியாளும்.
நீரோ உம்மைக் காட்டக்கூடும்:
வேதந்தோன்ற, மூத்ரை நீக்கும்.

உ. இருதயமருள் போக்கி,
யேசு! திரோதானம் நீக்கும்:
தேவர், உமதறிவூட்டி,
அதிசய அன்பு காட்டும்.
உள்ளுணர்ந்து செவிசாய்த்து
கேட்கத், தேவே! பேசும்இன்று.

அஎம் கீதம். 2.–6's. & 4.–7's.

The fairest among ten thousand.

க. தேவ குமாரனே!
என்னைக்கேளும் இன்றே—
எனதாசை அறிவீர்.
எனக்காகமாணம்
ருசிபார்த்துத், தேவரீர்
என்னை முழுதும் வாங்கும்.

உ. நீர் சீவ விருட்சம்;
என் நித்ய உயிரும்,
கோடியான எனக்கு
தேவாசம் அருளும்:
திராட்சச்செடி உமக்கு,
சேர்வது என் சீவனம்.

ங. நீர் சீவனின் ஊற்றே;
அதை உணர்வேனே.
நீர் என்னில் இருக்கையில்,
இளைப்பென்றும் வாராது:
நித்ய சீவநீர், என்னில்,
உம்மாற் கொப்பளிக்குது.

ச. நீர் நல்ல மேய்ப்பனும்
உம்மைவிட்டேனென்றும்,
என்னைக் காத்து நடத்தி,
என்மேற் பிரியமாயிரும்.

மேதுவாய் அன்பால் ஏவி,
தோளிற் சுமந்தருளும்.

ரு. நீர் சீவ அப்பமே,
என் தலையும் நீரே.
புண்யம்பெலம்நன்றெல்லாம்,
உம்மில், எனக்குண்டாகும்.
என்னைக் காப்பவர் நீர்தாம்:
உம்மில் என்னை வளர்த்தும்.

சு. குருவே! எனக்கும்
தேவ சித்தங் காட்டும்:
மனிதன் பேசும் சத்தம்,
வீணும். உமது வாக்கு
உள்ளத்திற்கேட்கப்படும்.
நிகரில்லை உமக்கு.

எ. எனக்காய் மரித்தீர்;
என் பாவத்தைத் தீர்த்தீர்;
உமது காயங்களில்
பிதாமுன் தோன்றுகிறீர்;
உமது வேண்டுதலில்
என் வேண்டுதலைச்சொல்வீர்:

அ. என் ராசா யேசுவே!
பெலத்தவர் நீரே:
நான் உமது கையிலே
இருந்தால், ஆர் பறிப்பார்?

விசுவாசத்தைக்கொண்டே,
சர்வ வல்லவர், காப்பார்.

அஅம் கீதம். 4–6's. & 2–8's.

Jesus, harmonizing name!

க. நார் வானோர், ஒன்றாய்
ரட்சகரைப்போற்றி,
மகா மகிழ்ச்சியாய்
அவரைக்கொண்டாடி,
யேசுவின் பேர் பேரின்பமும்
தருதென்று சொல்லட்டும்.

உ. யேசு! ஆ இன்பச் சொல்!
எல்லார்க்கும் பாக்யமாம்.
ஆதரவில்லாமல்,
பாவத்திலான நாம்
யேசுவால் மோட்சம் பெறுவோம்,
என்றுங் கொண்டாடக்கடவோம்.

௩. யேசு இனியபேர்;
வானோர் அதைக் கேட்டு,
பாவசமாவார்,
மாசந்தோஷப்பட்டு.
அவரைப் பார்த்துப் பாடுவார்;
யேசுவில் முத்திபெறுவார்.

ச. பாவி, அதைக் கேட்டு,
தீமைக்கு நீங்குவான்:
புது உயிர் பெற்று,
எல்லாஞ் செயங்கொள்வான்.
தன் வாயிற் புதுச் சங்கீதம்
தன்னுள்ளில் மீது களிப்பாம்.

அகூம் கீதம். C. M.

Thou art worthy, O Lord, to receive glory and honor.

க. நான் ஆயிரநாக்கடைந்தும்;
மீட்பரைத்துதித்து,
அவர் தயவும் நேசமும்
வர்ணிப்ப, தரிது.

உ. நன்மைச் சுருபகத்தரே!
உம்முடைய நாமம்,
லோகத்துக்கறிவிக்கவே,
எனக்கருள் செய்யும்.

ங. யேசுவென்னும் பேரைக் கேட்டு,
பயம் விட்டு நீங்கி,
சுகசீவ மோட்சம் பெற்று
வாழ்வோம், அதைச் சொல்லி.

ச. பாவ விலங்கை முறித்து,
சிறையை விடுவார்:

பாவமறச் சுத்திசெய்து,
ரத்தத்தைத் தெளிப்பார்.

ரு. அவர் வாய் மலரும் போது,
செத்தோர் உயிர் வாழ்வார்:
ஏழைகளும் சந்தோஷித்து
அவரை நம்புவார்.

சு. செவிடர்களே! அவரை
அன்புடன் கேளுங்கள்.
ஊமைகளே! உங்கள் வாயை
திறந்து பாடுங்கள்.

எ. குருடரே! கண்திறந்து
கிறிஸதுவைப் பாருங்கள்.
நொண்டிகளே! கால் நடந்து
குதித்து வாருங்கள்.

அ. மண்ணோரே! அவரைப் பார்த்து,
தேவனென்றெண்ணுங்கள்;
அவரை விசுவாசித்து
ரட்சிப்பை நாடுங்கள்.

௯. சர்வலோக பாவதோஷம்
நீக்கும்படி வந்தார்:
என்னுத்துமத்துக்காகவும்
தம்முயிரைத் தந்தார்.

ய. நித்ரை விட்டுக், கிறிஸ்துவை,
பார்த்தாற், பிரகாசிப்பார்

அவனை அண்டும் பாவியை
ஆத்ம சுத்திசெய்வார்.

௰க. மீட்பர்மூலம், பாவம் நீங்கி,
என்றுங் களிகூரும்.
"தெய்வ நேசந்தானே முத்தி,"
என்று நம்பித், தேடும்.

கூ௰ம் கீதம். 2–6's & 4–7's.

God hath given him a name which is above every name.

PART I.

க. மனதே! எழும்பு:
ரட்சகனை நோக்கு.
அன்பின்பேர்களை எல்லாம்
அன்பின் ரூபங்களையும்
வாங்கினவர் யேசுதாம்.
நீ அவரின் விருப்பம்.

உ. உன்னத ஸ்வாமியார்
தம் மகிமை விட்டார்:
ஆதி கர்த்தர், உலகில்,
மனிதனாய்ப் பிறந்தார்.
அவர், சிட்டிப்புக்களில்
சிட்டிப்பாகத், தோன்றினர்.

ஙா. வாழும் ஆதி கர்த்தர்
தெய்வீக மனிதர்

என்னில் யாவுமும்மையே
என்றென்றைக்கும் வணங்கும்.
ரட்சகரின் பேரையே
மோட்சவாசரே! பாடும்.

ச. கன்னியின் கனியே
இறைவர் வந்தாரே.
பிதாக்களின் நம்பிக்கை,
ஸதிரீசந்ததி கிறிஸது
பழம் பாம்பின்றலையை
காலால் தகர்ப்போர் யேசு.

ரு. சாணம், யேசுவே!
நீர் பிதாவுக்கோப்பே;
ஏகசுதனாகிய
உம்மிலவர் பிரியம்:
நீர் மாத்திரம் எனக்காய்
தயை புண்யஞ் சத்தியம்.

அ௰௬ம் கீதம். 2–6's & 4–7's.

PART II.

க. சகலபேருக்கே
மேலான யேசுவே!
விண் மண் நாகம் யாவும்
யேசுவுக்குக் குனிந்து,
வானோர் நரர் பேய்களும்
நடுங்கக்கடவது.

உ. அன்பாலே நிறைந்து
நம்மகிமை விட்டு
வானம் அடங்காதவர்,
அவதாரம் எடுத்தார்:
பாலோக ஆண்டவர்,
ஏழையாகத் தோன்றினர்.

ங. சொந்தத்துக்கு வந்தார்.
வாங்கோஞ்சொந்தரோன்றூர்.
தூஷணித்து அவரை,
தள்ளிப் புறக்கணித்தார்.
மூடனாக யேசுவை,
எண்ணிக்கொள்ளத்துணிந்தார்.

ச. யூதரின் ராசாவே!
வாழும்தாழ்ந்தவரோ!
உம்மில் என்றும் மகிழ்வேன்.
பரியாசப்பட்டநீர்
எனக்கும் இரங்குமேன்:
எவரையும் நேசித்தீர்.

கூஉம் கீதம்.　　6.–8's

Riches of Redeeming grace.

க. நான் உம்மைத் துதிப்பதற்கு
என்னத்தைச் சொல்லத்துணிவேன்?
பாவநாகத்தில் நின்று
உம்மாலே ரட்சிக்கப்பட்டேன்.

தகும் ஸ்தோத்திரஞ்செலுத்தி
கொண்டாடுவதெப்படி?

உ. நீர் காட்டின் தயவெல்லாம்
நான் வர்ணிப்பது கூடாதே.
பசாசின் பிள்ளையான நான்
கர்த்தரின் பிள்ளையானேனே;
பாவமன்னிப்புணர்வது
மோட்சத்தின் துவக்கமிது.

ங. என் பிதாச் செய்த தயவை
எண்ணுமலுஞ் சொல்லாமலும்
இருப்பேனு? என் சிலுவை
பாாமானதாயிருந்தும்,
அதெடுக்சாமற் போவேனே?
அவர் நீதி மறைப்பேனே?

ச. இல்லையே, பழைய பாம்பும்
தன் சேனையும் எதிர் நின்று
பாவ மனிதரெல்லாரும்
கூடினலும், நான் துணிந்து
யேசு எல்லார்க்குங் காட்டுவேன்:
ரட்சகனை நான் துதிப்பேன்.

ரு. கெட்டோரிலுங் கெட்டவரே!
உங்களைக் கூப்பிடுகிறர்:
தங்களைத் தாழ்த்தினேர்களை
தயவாய் அங்கீகரிப்பார்:

நீதிமான்களை அல்லவே,
பாவியை மீட்க வந்தாரே.

௬. பாவத்தின் பாரஞ் சுமந்து
இளைத்தோரே! நீங்கள் வந்தால்;
அவர் அடைக்கலந்தந்து
காப்பாற்றுவாரே: ஆகையால்,
அவர் தயவைத் தேடுங்கள்:
அவரண்டைக்கு வாருங்கள்.

௭. அவர் விலாவால் உதிரம்
உங்களுக்காய்ச் சிந்தினது.
தேவ சுதனின் மரணம்
உங்கள் நிமித்தமானது;
பாவ மன்னிப்பும் மோட்சமும்
விசுவாசத்தாற் கிடைக்கும்.

௬௬ம் கீதம் 7's.

Christ our Intercessor.

க. யேசுவே! நீர் உம்மையே
எனக்காய்ப் படைத்தீரே:
என்னைக் குற்றமின்றியே
ஸ்வாமிக்குப் படைப்பீரே.

உ. மீட்பரே! நீர் ஒருவர்
உத்தம ஆசாரியர்.
உம்மைக்கொண்டாலன்றியே
பலி செல்ல மாட்டாதே.

ங. நீர் என் கெட்ட இச்சையை
நீக்கிப்போட்டு, மனதை
நோ அழக்கு யாவுக்கும்
தப்புவித்திரட்சியும்.

ச. என்னிலொன்றும் ஈயவே
இங்கிராமற் போகவே,
பீடத்தில் நான் முழுதும்
சுட்டெரிக்கப்படட்டும்.

ரு. அதினலே உமது
கையினற், பிதாவுக்கு
நீர் செலுத்தும் பலியே
ஏற்றப்படும் நிசமே.

கூசம் கீதம். L. M.

Christ's triumph the Christian's joy.

க. மகிழ், கர்த்தாவின் கூட்டமே!
மகா கெம்பீரமாகவே:
பாத்துக்குன் அதிபதி,
எழுந்துபோனதால்; துதி.

உ. பாத்தின் சேவை, ஒசையாய்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து யேசு ஸ்வாமிக்கு
வணக்கத்தைச் செய்கின்றது.

௩. நாரே! விண்ணோர்போல் நீங்கள்
சந்தோஷமாகப்பாடுங்கள்.
என்றைக்குமுள்ள வாழ்த்தலே
கர்த்தாவினுக்குண்டாகவே.

௪. உன்னதமான யேசுவே!
வெற்றி சிறந்த யேசுவே!
இடைவிடாமல் உமக்கே
இஸ்தோத்திரம் உண்டாகவே.

௯௫ம் கீதம். 7's.

Ascension and Reign of Christ the Church's joy.

௧. மீட்கப்பட்ட கூட்டமே!
உங்கள் மீட்பர் பேரிலே
பாடி, வாழ்த்தல் செய்யுங்கள்:
மீட்ட அன்பைச் சொல்லுங்கள்.

௨. பாவத்திலே கஸ்தியை
பட்டோரே! இரட்சிப்பை
ஏலுங்கள்; நல் யேசுவே
மீட்பதற்கிறந்தாரே.

௩. அந்தகாரப் பேயினை,
கிறிஸ்து, தாழ்த்தி, எங்களை
அதில் நின்றிரட்சித்தார்.
மீட்க யேசு தேவனார்.

ச. அதால் மகிழ்வுடனே
போற்றிப்பாட, மக்களே!
தூதரோடே கூடுங்கள்:
மீட்பையே உயர்த்துங்கள்.

கூகூம் கீதம். L. M.

Ascension, triumph, and reign of Christ.

க. மிகுந்த கஸ்தியுள்ளோரே!
விளங்கிடும் சந்தோஷமே
மகா விசேஷமானது,
அதை விரும்பத்தக்கது.

உ. தரையில் வைக்கப்பட்டவர்
சயித்துச் சீவனனவர்:
மகிழ்ச்சியோடே தோத்திரி,
என்னுள்ளமே! அன்பாய்த் துதி,

ரு. அவர் மரித்தபோது, பேய்
கூடிநின்று மகிழ்ந்ததே.
அவர் எழுந்தபொழுது,
அது மெலிவடைந்தது.

ச. எழுந்த மகா ரட்சகர்,
பகைஞரை ஒடுக்கினார்:
சயத்தைக்கொண்டு ஏறினார்,
எதிர்க்க வல்லவர்கள் யார்?

௫. உயர்ந்த மேன்மையாந்தலம்,
இப்போதவரின் ஆசனம்;
அவரைப் பற்றினோர், அங்கே
செல்வார்கள், மா சந்தோஷமே.

ஷெ கீதம்.   L. M.

The same.

௧. பரத்திற் போன யேசுவே!
நார்களுக்கும் விண்ணிலே
இடங்கொடுக்கும் உமக்கு
புகழ் செலுத்தத் தக்கது.

௨. பிதாவின் ஆசனத்திலே
இருந்து, தாழ்மையோரையே
கண்ணோக்கி ஆதரித்து, நீர்
இழிந்த எங்களை விடீர்.

௩. பசாசின் மூர்க்கம் எத்தனை
மிகுந்திருந்தும், எங்களை
கெடுத்துப்போடப், பலமே,
அதற்குச் சற்றும் இல்லையே.

௪. அதில் மகிழ்ந்து, மாந்தர்க்கு
சம்பந்தமான உமக்கு
இஸ்தோத்திரம் செலுத்துவோம்;
உம்மாற் சயங்கொண்டாடுவோம்.

கூஅும் கீதம். L. M.

The same.

க. இந்நாளில், யேசு தேவனார்,
மகத்துவத்தைக் காட்டினார்:
தாரதலம் விட்டேகினர்,
புகழை ஏற்கத் தக்கவர்.

உ. பசாசின் சத்தியை, அவர்,
அழித்துப்போட்டுப் போனவர்.
அனைவரும், அதற்குண்டாம்
துரூாத்துக்கு, நீங்கலாம்.

ங. சிறையுற்றோரின் மீட்பரோ!
செயித்த யேசுக் கிறிஸ்துவே!
பசாசின் கீழே நாங்களும்
இராமற்போக, ரட்சியும்.

ச. அதிற் சந்தோஷமாகிறோம்:
கர்த்தாவின் அன்பைப் போற்றுவோம்.
திரியேகரோ! எப்போதும் நீர்
துதிப்பை ஏற்கக் கடவீர்.

அஂகூம் கீதம். L. M.

"*The Author and Finisher of our Faith.*"

க. ஆதி வார்த்தை தேவரீரே,
விசுவாசத்தின் காரணர்.
உமதாவியால் அதையே
நீர் துவக்கி முடிப்பவர்.

௨. அப்பெரிய ஈவாகிய
விசுவாசம், எங்களுக்கும்
தந்து, முழுமையாய்த் தேற
பண்ணி நிறைவேற்றியிடும்.

௩. விசுவாசத்தினால் உம்மை
ரட்சகராக அறிவோம்.
நாங்கள் நம்பும் காரியங்களை
அத்தால் இப்போ பிடிக்கிறோம்.

௪. புத்தியுணராதவையும்
கண்ணால் காணப்படாதது.
விசுவாசத்தால் மாத்திரம்
தெளிவாய் வெளிப்பட்டது.

௫. விசுவாசமாம் ஒளியால்
மேக நிழலும் ஒழிந்து,
தேவத்துவம் மனிதனால்
கண்ணாலக்காணப்பட்டது.

௬. உம்மை விசுவாசிப்பவர்
நித்ய சீவனை வாங்கிறார்.
மன்னிப்புஞ் சுத்தமுமவர்
மோட்சத்தையும் பிடிக்கிறார்.

௱ம் கீதம். 10's & 11's.

Look unto me, and be ye saved.

௧. தேசாந்திரிகளே! இங்கேவாருங்கள்;
யேசுநாதர் சொல்வதைக் கேளுங்கள்:

உம்மை யேற்றுக்கொள்ளக் காத்திருக்கிறார்:
கிறிஸது சமீபிக்கக், கேளாதவர் ஆர்?

௨. நற்கதிதேடி, உன்பாவத்தினுல்
கிடையாதேன்றஞ்சி நீ மயங்கினுல்,
தம்மிடத்திற் சேர்ந்திருப்போரைத் தள்ளார்:
தம் ஆவியைத் தந்துனக்குதவுவார்.

௩. நிற்சீவ வாக்கை மெய்யென்றுகொண்டு
சுத்த ஆவியை விரும்பிக் கேட்டு
வேண்டும் யாவரிலுங் கடாட்சம் வைப்பார்:
பேரின்பத்தைச் சோத்தாம் நடத்துவார்.

௪. என்னாண்டவரே! உமக்கிணங்குவேன்;
நீர் சொன்னதுவே யாமென்றிருப்பேன்.
என்னாத்மாவைத் தேற்ற என்னேடேயிரும்;
ரட்சண்யத்தைத் தந்து, என் தாகந் தீரும்.

௫. வானத்தில் நின்று, சைதன்னிய பெலம்,
ஐக்கிய அன்பு, ஆத்ம சுகம்,
அச்சம், அறிவு, சுசீலம், நற்குணம்,
ஆராதவை, இவை ஆவியால் வரும்.

௬. உமதிரத்தத்தை நம்புந்திடம்
ஈயும்; ஆவியை எனக்குத் தாரும்:
அப்போதே நாம் பாவத்தை விட்டு வாழ்வோம்!
அசுத்தம் போகப் பரிசுத்தராவோம்.

ராகம் கீதம். L.

O every one that thirsteth, come ye to the waters

க. தாகமுடையவர்களே!
கர்த்தர் சொல்வதைக் கேளுங்கள்:
ஆத்துமத்தை ரட்சிக்கவே,
வேண்டியதுவண, தேடுங்கள்.

உ. தூரத்து நடந்ததினால்
இளைத்தோர்களே! வாருங்கள்:
துக்கந் தீர்க்கும் அவர் அன்பால்
ஈயும் பாலைக் குடியுங்கள்.

௩. விலைக்கிரயங் கொடுக்க
ஏலாதவர்க்கும், கிடைக்கும்.
கைமாறின்றிக் கரையேற்ற,
கர்த்தர், சித்தங் கொள்வாரென்றும்.

௪. சுத்த சலங் கல்லில் தோன்றி
நதியாக ஓடப், பாரும்.
ஆத்ம தாகம் நீங்கும்படி
திர்த்தி கொள்ளப், பானம் பண்ணும்.

௫. திர்த்தி செய்யா ஆகாரத்தை
ஏதுக்காகத் தேடுவீர்கள்?
சாம்பலுடன் பதர் இவை
ஏதுக்காகப் புசிப்பீர்கள்?

௬. லோக செல்வமடைந்தாலும்,
மனோதிர்த்தி யுண்டாகாது.

என்னாலன்றி, மனோசாந்தம்
எவ்விடத்தும் கிடையாது.

௭. வேதவாக்கை நீங்கள் கேட்டு
அதின் மேன்மை அறிந்திடும்:
உங்கள் மீட்பர் நேசரென்று,
ஐயமற, நம்பிக்கொள்ளும்.

௮. அன்பின் இன்பம், குறைவின்றி,
நாம் தருவோம் எல்லாருக்கும்.
பார்த்துக்கொள்ளும் அதின் ருசி;
நீங்கள் என்றும் களிகூரும்.

௯. செவி சாய்த்து வாஞ்சைகொண்டு,
வாக்கின் மூலம், பெறும் சீலம்,
பத்திமூலம், உயிர்த்திட்டு
பற்றிக்கொள்ளும், மோட்சானந்தம்.

௱௨ம் கீதம். L. M.

"Come, for all things are now ready."

௧. பாவாத்துமாக்களே! யேசு
உங்களை வா அழைத்து,
"சமஸ்த பாவ லோகத்தார்!
பந்திக்கு வாருங்கள்" என்றார்.

௨. அவரால் அனுப்பப்பட்டு
நான், எல்லாரையுங் கூப்பிட்டு,
பாவியே! நீ வாவென்கிறேன்;
நீ ரட்சிப்பை எண்ணாததேன்?

௩. பாவத்தின் பாரஞ் சுமந்து;
நன்மை பாராமல் அலைந்து,
நொந்த ஏழைக் குருடரே!
கிறிஸ்துங்களை ரட்சிப்பாரே.

௪. பாவத்தை எல்லாம் ஒழித்து,
ஞானகாரத்தைக் கொடுத்து,
ரத்தத்தைச் சிந்தின உங்கள்
யேசுவை நம்ப, வாருங்கள்.

௫. கைமாறில்லாமல், தயையால்,
உங்களை மன்னிப்பதினால்;
அவரின் சாவின் புண்ணியம்,
உங்கள் சீவனின் பாக்கியம்.

௬. கிறிஸதுவின் சுவிசேஷத்தை
கேட்டு, அவரின் நேசத்தை
மதித்து, ஒப்புக்கொள்ளுங்கள்:
நம்பிக்கைகொண்டு, வாழுங்கள்.

௭. அன்பே நம்மை வசஞ் செய்யும்;
அதை இன்று தேடிக்கொள்ளும்:
போர்செய்ய விட்டுவிடுங்கள்,
தெய்வீக அன்பைப் பாருங்கள்.

௮. தம் ரத்தம் சிந்தினதினால்
உங்களை மீட்ட நாதரால்
உண்டாந் தயவைக் கேளுங்கள்;
தயவாற் கரையேறுங்கள்.

௬. உங்களுக்காய் மரித்தவர்
இப்போவாருங்களேன்பவர்,
நன்னுளிதேன்று நம்புங்கள்;
தாமதியாமல் வாருங்கள்.

௱௩௰ம் கீதம். 7's.

"Come unto me all ye that travail and are heavy laden."

௧. பாவப் பாரஞ் சுமந்து
இளைத்தோரே! வாருங்கள்.
தூரம் போனேனை, யேசு,
சேர்ப்பாரோன்று பாருங்கள்.
மனஸ்தாபமுள்ளோரே!
கேளுங்கள் அவர் வாக்கு.
உங்களை ஏற்றுக்கொண்டே
ஆற்றுவேனே என்பது.

௨. தயவுள்ள யேசுவே!
நீர் சொல்வது சத்தியம்
என்று நம்பினோம்; நீரே
எங்கள் குற்றத்தை நீக்கும்:
எங்கள் பாவத்தைத் தீர்த்து
எங்களை மன்னிப்பீரே.
நாங்களுஞ் சந்தோஷித்து
பாக்யராவோம், அப்போதே.

௩. பாவ மனஸ்தாபமும்
நிறைந்த ஏழைகளாய்,

தேவ கோபாக்கினைக்கும்
பயப்பட்டவர்களாய்,
துக்கம் ஆற்றுவீரோன்று
விசுவாசித்து வந்தோம்:
உம்மிற், பாவ மன்னிப்பு
இப்போ வாங்கக், காக்கிறேம்.

ராசும் கீதம்.　　6—8's.

"God commendeth his love towards us."

க. தேய்வ அன்பே! என்ன செய்தாய்?
சாகாத கர்த்தர், எனக்கே
இரங்கி, என்பாவத்தீர்ப்பாய்,
சிலுவையில் மரித்தாரோ:
என் பாவத்தை எல்லாந் தீர்த்தார்,
மரத்தில் அறையப்பட்டார்.

உ. வழிப்போக்கரே! பாருங்கள்,
உயிர்களெல்லார்க்கும் ராசா
மரித்ததாக நோக்குங்கள்;
அவருக்கு நிகருண்டா?
உங்களையும் இரட்சிப்பார்,
சிலுவையிலே மரித்தார்.

ரு. கர்த்தரோடேதிரிகளை
ஒப்புரவாக்கமரித்தார்:
என்றும் நம்புங்கள்; உங்களை
ரத்தத்தின் மூலமாய் மீட்டார்.

உங்கள் பாவத்தை மன்னிப்பார்,
உங்களுக்காக மரித்தார்.

ச. அவர் சிலுவை அண்டைக்கு
தரித்து நம்பக் கடவோம்.
அவரை மாத்திரம் பார்த்து
இருதயத்தைத் தருவோம்.
நாங்கள் பேசும் ஒரே பேச்சு
கிறிஸ்து மரித்தாரென்பது.

௱௫ம் கீதம். L. M.

"*Ye shall indeed drink of my cup.*"

க. பாடுகள் பட்ட யேசுவே!
பாவிக்குமதன் பதிகம்.
உம்முடைய அன்பில், நானே
பங்கடையத், தயை செய்யும்.

உ. உமதவஸ்தையுணர்ந்து,
உம்முடைய பாத்திரத்தையும்
குடித்து, நானும் உம்மோடு
படுவது,என் விருப்பம்.

ஙு. கர்த்தர் மரித்த காலத்தில்
பூலோகம் நடுங்கினது:
நான் முழுமையும் உள்ளத்தில்
பாடுபடக் கடவது.

௪. நீர் பெருமூச்சு விட்டதால்
　பிரேதக்குழி திறந்து
செத்தோருயிரடைந்தாப்போல்,
　நான் உயிர்க்கக்கூடவது.

௫. கல்லு, உம்முடைய சாவை
　உணர்ந்ததால், பிளந்தது.
கல்லான எனதுள்ளத்தை
　தகர்த்துப்போடும் இப்போது.

௬. தேவ சத்தம் என்னுள்ளத்தை
　பிளந்து திரையை நீக்கும்.
தேவரீர் செய்த நேசத்தை
　நான் உணர்ந்தறியப், பண்ணும்.

௱௬ம் கீதம்.　　　C. M.

Justification through Christ alone.

௧. சிறையுற்றோரின் மீட்பரே!
　என் யேசுவே! நீர்தாம்
தயையால் என்னைத் தேற்றவே
　மகா இரக்கமாம்.

௨. ஆத்மாவைத் தாங்க வல்லவர்!
　காருண்ய தேவன் நீர்.
ரட்சிக்கும் மகா காரணர்!
　பாவத்தை நீக்குவீர்.

௩. நான் சோர்ந்த நீதியற்றவன்;
என் நீதி கந்தைதான்;
உம்மால் நான் நீதியுள்ளவன்,
மிகுந்த புண்யவான்.

௪. இம்மேன்மையை நினைக்கையில்,
உம்மை எந்நேரமும்
துதிக்க, நீர், என்னுள்ளத்தில்,
பலத்தை அளியும்.

௱௭ம் கீதம். 6–8's.

"Herein is Love."

௧. பாவிகளே! ரட்சகனை
சுவிசேஷங் காண்பிக்குது:
பூரணமான கிருபை
எல்லார்க்கும் அவரில் உண்டு.
கர்த்தர் நேசர்தானென்பது
அவரினால் விளங்குது.

௨. லோகத்தின் பாவஞ் சுமந்து
தீர்த்தவனைக் கண்ணோக்குங்கள்:
ஏழையாக இங்கே வந்து
பூண்டதாழ்மையைப் பாருங்கள்:
பிதாவோடொத்தவர் இவர்
மெய்யான மனிதனானர்.

௩. மனிதனான மெய்க்கர்த்தர்
நாடோறும் அவர் கை நீட்டி

கிருபையால் நிறைந்தவர்,
　வாருங்கள் உங்களைத் தேற்றி
ஆசீர்வதிப்பேனென்கிறார்:
நம்புவோரைக் காப்பாற்றுவார்.

ச. வேற்றுமையில்லை; கிருபை
　எவனுக்கும் நான் கொடுப்பேன்:
என்னிடம் வரும் பாவியை
　என்றுந் தள்ளிப்போட மாட்டேன்.
பாவிகள் கெட்டுப்போவதேன்?
ஆரையுந் தள்ளவேமாட்டேன்.

ளஅம் கீதம்.　　P. M.

Pardon through Faith in Christ.

க. தாழ்வில் இருந்து கூப்பிட்டும்,
　என் சத்தங் கேட்டன்பாக
என்னழுகை எல்லாத்துக்கும்
　செவிகொடுப்பீராக.
கர்த்தாவே! பாவமானதை
நீர் மன்னியாமல், நீதியை
　பார்த்தால் ஆர் நிற்கக்கூடும்?

உ. மன்னிப்பே, எவனுகிலும்,
　தன் புண்ணியங்களாலே
அடையான்: உம்மை யாவரும்
　யேசுவின் வழியாலே
தேடி நம்பிக்கையுடனே

வந்தால், மாதயவாகவே
மன்னிக்கிறீர், கர்த்தாவே!

௫. நான் யேசுவைக் கண்ணேக்கிறேன்:
என் புண்ணியம் அபத்தம்:
தேவன்பையே நான் நம்புவேன்:
அதற்கு வாக்குத்தத்தம்
மெய்யான தெய்வ வார்த்தையில்
உண்டாகுமே; என் மனதில்
அதற்குக் காத்திருப்பேன்.

௱௯௬ம் கீதம். 8, 7, & 4.

"The desire of all nations."

௧. லோகத்தாரின் வாஞ்சையான
கர்த்தர் யேசுக்கிறிஸதுவே!
தேவரீருக்கேற்றதான
சித்தத்தோடு போற்றவே,
என்னிடத்தில்
ஆவியூற்றியருளும்.

௨. நானும் மற்றமக்கள் யாரும்
மோட்சமற்றுப் போயினேம்.
மண்ணேர்யாருஞ் செய்தபாவம்,—
விளைவித்தது சாபம்.
அதை நீக்கி,
மோட்சம் ஈயத், தோன்றினீர்.

௩. பாவபந்தத் தகப்பட;
கட்டவிழ்க்க ஏற்பட்டீர்.
துன்பப் பாரச்சுமை தாங்க;
ஆற்றல்செய்து ரட்சித்தீர்.
எளியேனை
மகா செல்வனாக்கினீர்.

௪. மேலாம் செல்வம் யார்க்குந்தா,
எளியோனாய்த் தோன்றினீர்.
நீதிபதி! பாவம்போக்க,
அதின்சுமை தாங்கினீர்.
இந்த அன்பு
புத்திக்கு எட்டாதது.

௫. இவ்வன்பை என்றும் நினைந்து
வியந்தும்மை வணங்க,
அது என்னிலூறச் செய்து
வர்த்திக்கச் செய்வீராக.
ஆ! என்கர்த்தர்
போற்றப்படத் தக்கவர்.

ᏲᎩம் கீதம். L. M.

"The unsearchable riches of Christ."

க. அற்புதத் தெய்வ இரக்கம்,
பிதா, இரங்கி, உலகம்
சீர்கொள்ள ஏக மைந்தனை
கொடுத்ததே, மகா தயை!

௨. பாவிகள் யார்க்கும் ரட்சகர்
பலியானார், மகா நேசர்.
மரித்துப், பாவ நீக்குதல்
உண்டாக்கினார், இம்மானுவேல்.

௩. கர்த்தாவின் அன்பை, மீளவும்
மாளாத மோட்ச வாழ்வையும்,
எல்லாருக்கும் சம்பாதித்தார்:
கொடுப்போமென்றும் நிற்கிறார்.

௪. இவ்வாழ்வை நீ விரும்பினால்,
தேவாவி செய்யுந் துணையால்
உன் பாவத்தை விட்டழுது
மெய் மனஸ்தாபப்பட்டிரு.

௫. அத்தால் உன் பாவம் நீங்குமே.
குமாரன் நீதி உன்னதே:
பிதாவின் பிள்ளையாகுவாய்;
தேவாவியையும் பெறுவாய்.

௱௰௭ கீதம். L. M.

The same.

௧. ஒரே கர்த்தர் இருக்கிறார்:
பிதாக்குமாரன் ஆவியார்:
அவர் எல்லாம் படைத்தவர்:
எப்போதும் காத்துக்கொண்டவர்.

உ. படைப்பில் ஆதி மானிடர்
தெய்வீகச் சாயலானவர்.
அவர்களுக்குண்டானது
மெய்ஞ்ஞானம் சுத்தம் களிப்பு.

௩. பசாசின் தந்திரத்தினல்
அதையிழந்துபோனதால்;
சென்மப்படி, யாரும், தீயர்:
கன்மத்தாலும் பாவ தோஷர்.

௪. அதற்குத் தேவ கோபமே
உண்டாகப், பேயின் கையிலே
விழுந்துசாவுக்குட்பட்டோம்:
நாகத்தீக்குநோனோம்.

௫. நாகம் தப்பி மோட்சத்தை
அடையத்தக்க வகையை
நாம்கண்டோமில்லை: நாயனே!
ரட்சிப்புத்தாரும், நேசனே!

௱௰௨ம் கீதம்.　　　7's.

"He gave his life a ransom for all."

க. கத்தரான யேசுவே,
எங்கள் ரட்சகரானர்.
மாணத்தால், அவரோ,
எங்களுக்குயிர் தந்தார்.

உ. அவர் தந்த பாக்கியம்
நாக்குரைக்கக் கூடாது.

இராட்சிப்பின் சலாக்கியம்
பத்தர்க்கே விளங்குது.

௩. கிறிஸது எங்கள் சிநேகிதர்:
விண்ணில் வாழுமளவும்,
எங்களுக்கன்பை, அவர்
இங்கே காட்டுவார் என்றும்.

௪. வெள்ளங்கியைத் தரித்து
பாவ நீங்கக் கடவோம்.
அப்போ மோட்சமடைந்து,
அவரோடைக்கமாவோம்.

௱௰௩ம் கீதம். C. M.

'At the name of Jesus every knee should bow.'

௧. பாதாள மண் விண்களிலும்
மேலான யேசுவே!
தூதர் மனிதர் பேய்களும்
உமக்கஞ்சுவாரே.

௨. உமது நாமம், பாவிக்கு,
சந்தோஷமானது.
பயத்தை நீக்கி நன்மைக்கு
தீமையை மாற்றுது.

௩. யேசு சிறையின் விலங்கை
தகர்த்துடைக்கிறார்:

பெலகீனர்க்குப் பெலத்தை
அனுக்ரகஞ்செய்வார்.

ச. அவர் தயவைஸ்வர்யங்கள்
லோகத்துக்குப் போதும்:
என்னை ரட்சித்த காங்கள்
எல்லாரையுங் காக்கும்.

ரு. அவரை அறிவிப்பது
என்சீவனின்லெக்காம்.
அவரால், விசுவாசிக்கு,
நித்ய ரட்சிப்புண்டாம்.

சா. மாணத்தில் அவர் பேரை
நான் சொல்லி, எல்லார்முன்
அவரைத் துதிக்கத், தயை
பெற்றுக்கொண்டாற்; பாக்யன்.

ாயசம் கீதம். L. M

"Ambassadors for Christ."

க. கோபித்த தேவன், தூதரை
எங்களுக்கனுப்புகிறர்:
போதகாரற், பகைஞரை
ஒப்புரவாகக், கேட்கிறர்.

உ. குருமார்கள் கிறிஸ்தினிடம்
பாவம் விடச் சொல்வார் நன்று.
விட்டிருப்பார், அவர் மூலம்,
மன்னிப்படைவார்கள், அன்று.

௩. கிறிஸ்துவின் மூலம், தேவனே!
திவ்விய தூதை ஏற்கிறேம்.
எங்களை ஏற்கும் தயையே,
களிப்போடே, துதிக்கிறேம்.

௪. எங்கள் கடன் தீர்த்தார் ஸ்வாமி:
பாவம் நீங்கி வாழ்வோம் என்றும்.
நம்மைவிட்டார் நீதிபதி,
இனி நாடுவோமே மோட்சம்.

௱௰௫ம் கீதம். C. M.

"Call the lame, the halt, the blind."

௧. இயேசு உனக்காய் நொந்தார்,
உலகச் செல்வியே!
உனக்காய் ரத்தஞ் சிந்தினர்.
பொய்யாவணக்காரனே!

௨. உன் பாவத்தை மாணைத்தால்
போக்கினர், லோபியே!
நீ பாவம் நீக்கும்படியாய்
செத்தார், வெறியனே!

௩. மோட்சத்தில் ஏறுங்களென்று
பூமிக்கிறங்கினர்:
அவரின் மேல் நம்புவோர்க்கு
அனுக்ரகஞ் செய்வார்.

௪. உனக்காய் மரித்தவர் மேல்
நீ நம்பினல், மெய்யாய்

பாவமன்னிப்பை அவரால்
இப்போதே அடைவாய்.

ாயிகூம் கீதம். 6–8's.

The same.

க. பாவிகளே! தேவவாக்கை
நம்பி, உங்கள் ரட்சகராய்
பூமிக்கு வந்த யேசுவை
நோக்கினல், அவர் மூலமாய்
பாவமன்னிப்படையலாம்:
நீங்கள் ரட்சிக்கப்படலாம்.

உ. சப்பாணி நொண்டி குருடன்
செவிடன் ஊமையன் ஏழை
வியாதி ஸ்தன் மற்றேருடன்
யேசு அண்டைக்கு வந்ததை
பாருங்கள், ஆரையுந் தள்ளார்;
எவரையும் ஏற்றுக்கொண்டார்.

ஙூ. அவர் வார்த்தை, பேயையோட்டி,
குஷடத்தை நீக்கிச், செத்தோரை
உயிர் வாழ்ந்துகொள்ளப்பண்ணி,
எல்லார்க்கும் உபகாரத்தை
செய்ததில்லையோ? திக்கில்லார்
அவரில் துணை அடைந்தார்.

ச. சிதறப்பட்டுப் பசித்த
சனத்துக்கு இரங்கினர்

9 †

உதறிக்கொண்டு மீறின
சீயோனுக்காக அழுதார்:
கோத்தஞ் சிந்திரேருக்கே
கண்ணீரைவிட்டழுதாரோ.

௱௰எ கீதம். L. M.

"Now is the accepted time."

க. பாவிகளே! தேவவாக்கை
கேட்டுங்கள் நல்ல காலத்தை
அறிந்து, ஞானுகாரங்கள்
உள்ள பந்திக்கு வாருங்கள்.

உ. நீங்கள், இப்போ துணைப்பட்டால்;
பிதா, தெய்விக அன்பினுல்
உங்களை ஏற்றுக்கொள்ளுவார்:
கிறிஸ்துவும் வாருங்களென்பார்.

ந. தேவாவி, உங்கள் மனதில்
கடினம் நீக்கி, ரத்தத்தில்
கழுவக் காத்திருக்கிறர்:
புத்திராாகப்பண்ணுவார்.

ச. தூதர், உங்கள் பாக்கியத்தை
கண்டு மகிழ்ந்திட்டு; வீணை
தட்டித் தெய்வ கீதம் பாடி,
அடைவார்கள் இன்ப முத்தி.

ரு. பிதா, சுதன், சுத்த ஆவி
தூதர் யாரும் அன்றிராங்கி
செத்தோர் உயிர்த்திடுவார்கள்
என்று சொல்லி, மகிழ்வார்கள்.

சு. ரத்தத்தாற் கொண்ட மன்னிப்பு,
சமாதானம், தெய்வ அன்பு,
தெய்வ சிந்தை, ஞான திட்டி,
துக்கத்தினோடே, மகிழ்ச்சி,

எ. அத்யந்த மனோவிசனம்,
நைந்த மனோதுக்கம், வெட்கம்,
நெஞ்சையாற்றும்கண்ணீர்வெள்ளம்,
மோட்சகாந்தம் நாடும் மனம்,

அ. தோஷமில்லா நெஞ்ச நாணம்,
சொல்லற்கரும் மனோசாந்தம்,
வஞ்சமில்லா உண்மைத் தாழ்மை,
அபாத்ரனென்ற எண்ணிக்கை,

கூ. ஆத்மம் மீட்கும் தெய்வ பலம்,
தூதர் காணுத் தரிசனம்,
துதுதலிப்புள்ள நேசம்,
ஆத்மம் வசப்பண்ணும் பயம்,

ய. இதைப், பாவ நீசர் யாரும்,
கேட்டுக் கிறிஸதை நம்பிச்சேரும்:
அவர் மூலம் பெற்றுற் சுத்தி,
அப்போதல்லோ சேர்வீர் முத்தி.

௱௰அம் கீதம். 6—7's.

"Return unto me, for I have redeemed thee."

க. பாக்கியத்தை விட்டிட்டு
தூரம்போனவர்களே!
கிட்ட வாருங்கள்: கிறிஸது
உங்கள் ரட்சகர் தாமே:
ரத்தஞ்சிந்தின உங்கள்
கர்த்தரிற் பிழையுங்கள்.

உ. சமாதானங் கிறிஸதுவில்
தேடிக் கண்டடையலாம்.
அவர் நோவால் ஆறுதல்,
அவர் சாவால் உயிராம்.
தமது தாழ்வாற், கிறிஸது,
கனஞ் செய்வார் நமக்கு.

ங. தேவன் அவர், சுதனை
தந்தார், என்றும் நம்புங்கள்:
இப்போ மோட்ச பாக்யத்தை
பூமியில் அடையுங்கள்:
தேவநேசத்தின்பங்கள்
அடைந்து, பிழையுங்கள்.

ச. இது போதுப் பாக்கியம்:
ஆரும் அதை வாங்கலாம்.
தேவ ஆதி வாக்கியம்
நிறைவேறுதலுமாம்.
இப்போ அதை வாங்குங்கள்:
என்றும் பாக்யாதுங்கள்.

ராயிகூட் கீதம். 7's.

"Why will ye die."

க. உங்களைச் சிட்டித்தவர்
சர்வ பிதாவானவர்:
தம்மில் மூழ்கிச் சேவிக்க,
மோட்சானந்தம் பூரிக்க,
விரும்புவார், உங்களை
பார்த்து என் சிநேகத்தை
புறக்கணிப்பவன் ஆர்?
மனந் திரும்பும் என்றார்.

உ. உங்களை ரட்சித்தவர்
தேவ சுதனானவர்:
திருரத்தஞ் சிந்தினார்,
சிலுவையில் மரித்தார்:
ஆதலாற், "சாவீர்கள்: நான்
உங்களைச் சாவால் மீட்டேன்."
என்று கூறி நிற்கிறார்.
மனந்திரும்பும் என்றார்.

௩. உங்களை நேசிப்பவர்
சுத்த ஆவியானவர்:
நயம் பயங் காட்டினார்;
துணைப்பட ஏவினார்.
"கிருபை பெறீர்களோ?
பிழைக்கமாட்டீர்களோ?"

என்று ஏங்கிக் கேட்கிறர்:
"மனந்திரும்பும்" என்றர்.

௪. ஆத்துமாக்கள்! பாவத்தில்
மரித்தீர்கள்: பூமியில்
செத்து நாகத்திலோ
கதிதேடுவீர்களோ?
பாவத்துக்குச் சம்பளம்
சாவாகிய நாகம்.
பாவியே! நீ ஏதுக்காய்
என்றும் சாகவே சாவாய்.

௱௨௰ம் கீதம். 7's.

"Do ye thus requite the Lord."

௧. தெய்வம் அறியாமலும்,
தேவ உயிர் இன்றியும்,
இழிவான மிருகம்
கலங்காமற் சாகட்டும்.
கத்தரிடம் திரும்பில்,
வானோராக, மோட்சத்தில்
வாழலாமென்றறிந்தும்;
வேண்டுவீரோ நாகம்?

௨. புத்தி, சித்தம், ஞாபகம்,
சத்தி, ஞானம், ஆத்துமம்,
மகா தெய்வ சந்நிதி
ஒழியாத மகிழ்ச்சி,

முதலான தயவை,
பெற்ற நீங்கள், இழிவை
தேடி அலைவீர்களோ?
என்றைக்கும் சாவீர்களோ?

௩. உங்களைத் தஞ் சாயலில்
சிட்டித்தபின், பாவத்தில்
சாய்ந்து கெட்ட உங்களை
ரட்சிக்கத், தஞ் சீவனை
அருள்வர். இந்நாளிலும்
புதிதாகத் தேற்றவும்
காப்பார்; இதைப் பாருங்கள்:
என்றும் சாகாதிருங்கள்.

மூன்றாம் பிரிவு.

பரிசுத்தாவியின் தெய்வத்துவமும், கிர்த்தியமும்.

௱௨௯ம் கீதம். C. M.

Hymn to the Holy Spirit.

க. ஆவியேகோவாவே! வாழ்க:
மூவருள்ளே ஏகர்!
பிதா வார்த்தையினில் வந்த
சர்வாதிகாரணர்!

உ. ஆழியிடம் வியாபித்து
நின்ற சுத்த ஆவி!
சிட்டி எல்லாம், சிங்காரித்து
செய்தீர், இருள் நீக்கி.

௩. யாவர் நீங்கி நிற்பார் உம்மை,
சோர்க்க பாதலத்தும்?
தெய்வ ஆழியான தந்தை,
உம்மால் வெளிப்படும்.

௪. யேசு கன்னியிடந்தோன்றி
பேலியாக மாய்ந்து
உயிர்த்தீடத், தேவர் நீக்கி
விட்டீர் கோரிநின்று.

௫. பாவம் நீக்குந் தெய்வ சாயல்
தந்து, அருள் செய்யும்.
உண்மை, சுத்தம், இன்பம், உம்மில்
ஊற, வெளிப்படும்.

௬. ஆவியேகோவாவே! வாழ்க:
மூவருள்ளே ஏகர்!
பிதா வார்த்தையினில் வந்த
சர்வாதி காரணர்!

௱ உ உம் கீதம். 6-7's.

The same.

க. மேன்மையாக்குஞ் சுதனை
கேளும், அவர் விண்ணப்பம்:

தேற்றி ஏவும் ஆவியை,
　பிதா! தேவர் அனுப்பும்;
நம்பி நாங்கள் கேட்கிறோம்;
யேசுமூலம், அருளும்.

௨. ஆவி தேரும் ஆனந்தம்
　தோன்றும் விசுவாசத்தால்
வெளிப்படாதிருந்தும்,
　வாசஞ் செய்வார் எங்களில்!
அவர், ஈவார் அருளை;
தாங்கிக்கொள்வார் எங்களை.

௩. வாக்குத்தத்த முத்திரை
　தாரும், சத்ய தேவனே!
தேற்றும்படி ஆவியை
　ஈயும், என்றும் நிற்கவே.
செய்தீர் வாக்குத்தத்தத்தை;
அருள்வீரோ கிருபை.

௱௨௩ம் கீதம். C. M.

The Spirit of adoption.

௧. விண்ணோர்க்காதிதேவே! கேளும்
　அற்ப பிராத்தனை.
தந்தை! யோக்யன் அல்லனேனும்,
　கேளும், அடியேனை.

௨. தெய்வதந்தையென்னுஞ் சத்தம்,—
　எனதச்சம் நீக்கி,

வானோர் பாடுங் கீதத்திலும்
தரும், மகா தீர்த்தி.

௩. வாரும், ஆவி! அருள் ஊற்றும்
பூரிக்கும்மனசில்;
தாரும் புத்ர சுவிகாரம்;
சேரும், பிதா அன்பில்.

௪. தெய்வ சாட்சி பெற்று நம்பி,
மகிழ்வேனே, என்றும்:
"அப்பா, பிதா" என்று சொல்லி,
கொள்வேன் மகா திடம்.

௱௨௪ம் கீதம். C. M.

The same.

௧. ராசபுத்ரர் என்றுந் துக்கம்
கொண்டு நிற்பதென்ன?
ஆவி! நீர் வந்தருள் செய்யும்,
வியாதலம் நீங்க.

௨. சுத்தருள் நீர் வாசஞ் செய்வீர்,
மோட்ச முத்ரை தந்து,
எப்போ பாவ மன்னிப்பீவீர்?
துக்கம் நீங்கச் செய்து.

௩. மீட்பர் சிந்தும் ரத்தபலம்
நெஞ்சிற் பதிந்திட;
சாட்சிகாட்டும், தேவனிடம்
உற்பவித்தேனென.

௪. நீரோ, தெய்வ அன்பினீடு,
மோட்சத்துக்குறுதி.
வானப்புற! சிறைகொண்டு
சேர்ப்பீர் என்னை, முத்தி.

௱உடும் கீதம். 2–6's. & 4–7's.

The promised Comforter.

௧. நித்ய ஆவி! வாரும்:
ஏழையிடஞ் சேரும்.
மேலாஞ் சுத்த ஸதலத்தில்
என்றுமாளுந் தேவரீர்,
தாழ்ந்துவாரும்; உள்ளத்தில்
வந்திரும், காருண்ணியர்!

௨. தயைபெற எண்ணி,
நிற்போம் உம்மை வேண்டி:
பாரும், ஸவாமி! சாவோரை;
வாரும், நம்மைப் பேணவே:
அருள்செய்யும் நேசத்தை;
நம்மை ஆற்றும், ஆவியே!

௩. ஆத்ம சோஸ்தஞ் செய்யும்;
ஆத்மவாசம் பண்ணும்;
மனோ புஷபாலயத்தில்
தேவர் எழுந்தருளி,
இரும்: நித்த மனசில்
தாரும், தேவன்பு சத்தி.

௱௨௬ம் கீதம். C. M.

Breathing after the Holy Spirit.

க. வாரும், ஆவி! புறு! வாரும்,
நம்மை உயிர்ப்பிக்க:
ஏழை நெஞ்சில் அருள் ஊற்றும்,
அன்பு சுவாலிக்க.

உ. துதிபாடத்துணிந்தாலும்;
விரைந்தெழா, சிந்தை.
"வாழ்க," என்னும் நமஸகாரம்
நாவிலன்றி இல்லை.

௩. உமதன்பு மிகுத்தாலும்;
பதில் செலுத்தாமல்,
சாவோர்போன்றிருந்தோம் என்றும்,
உம்மை நேசிக்காமல்.

ச. வாரும், ஆவி! புறு! வாரும்,
நம்மை உயிர்ப்பிக்க.
வாரும், மீட்பானவை ஊற்றும்,
நெஞ்சில் நேசம்பற்ற.

௱௨௭ம் கீதம். C. M.

Prayer for Illumination.

க. எல்லோர்க்கும் பிதாவே! உம்மில்
பிழைத்தசைகிறேம்.
நீர் தேவசோதி எங்களில்
சுடாக் காக்கிறேம்

௨. நாங்கள் வேதம் ஆராய்ந்தும்மை
தேடும்போதஞ்சினும்;
வேத ஆச்சரியங்களை
பார்க்கக் கண்திறவும்.

௩. எங்களுக்குமது சோதி
பிரகாசிப்பியும்:
அறிவின் ஆவியனுப்பி,
வேதத்தைப் போதியும்.

௱௨அம் கீதம். C. M.

The same.

௧. தேவாவியே! இரக்கமாய்
என்னிற் பிரகாசியும்.
என்னெஞ்சின் இருளை அன்பாய்
விலக்கி, ரட்சியும்.

௨. யேசுவின் திருமுகத்தை
எனக்குக் காண்பியும்:
நான் உம்முடைய மனதை
உணரப், பண்ணிடும்.

௩. அனேக காலம் பாவத்தில்
நான் கேடாய்ப், போனேனே:
அதைக், கர்த்தாவே! நீக்கிடில்;
உம்மிற் களிப்பேனே.

௪. என் துக்கப்படும்மனதை
சந்தோஷிப்பித்திடும்:
என் நொருங்கிய உள்ளத்தை
சவுக்கியமாக்கும்.

ரு. தேவாவியே! இரக்கமாய்
என்னெஞ்சில் தங்கிடும்:
பசாசின் அதிகாரத்தை
விலக்கி, ஆண்டிடும்.

௱௨கூம் கீதம். 7's.

The same.

க. பரிசுத்த ஆவியே!
பாவ இருள் போக்கியே,
என் இருதயத்திலே
காலப்பண்ணுஞ் சோதியே.

உ. யேசுவின் நன் முகத்தை
தரிசனம்பண்ணவே
அருளி, நல்லுண்மையை
காட்டும், சுத்த ஆவியே!

ங. சாத்தான் என்னை ஆண்டது,
பாவம் என்னில் மிஞ்சிற்று;
என்னைச் சுத்தம்பண்ணியே
ஆண்டுகொள்ளும், ஆவியே!

௪. தேவ களிப்புடனே
என்னை நிறைவாக்கியே,
நொருங்குண்ட நெஞ்சையும்
ஆற்றித்தேற்றி, அருளும்.

௫. அடியேனின் நெஞ்சிலே
வாசம்பண்ணி, நீர்தாமே
என்றும்மேன்மையாகவே
ஆளும், தேவஆவியே!

௱௩௰ம் கீதம். C. M.

"And floods on the dry ground."

௧. நல்லாவியே! நான் பாழ்நிலம்;
என்னில் அருள் ஊற்றும்.
இயேசுவின் நிமித்தியம்,
என்னைச் செழிப்பாக்கும்.

௨. இருள் பகை விரோதமும்
உம்மாலே நீங்கவே,
நற்புத்தி அன்பு சாந்தமும்
உண்டாக்கும், ஆவியே!

௩. என் மனதை ஜோக்கமாய்
சுத்திகரித்திடும்;
அதை என் மீட்பர் சாயலாய்,
திருத்தி ஆண்டிடும்.

௪. சத்தியமுள்ள மார்க்கத்தில்
நிலைமையாகவும்,
நடக்கப்பண்ணி, மோட்சத்தில்
என் ஆவியை எடும்.

௱௯௩ம் கீதம். 8, 7, & 4.

"Thy Spirit is good; lead me into the land of uprightness."

௧. வாரும், தேவ ஆவி! வாரும்;
எங்கள் ஆத்துமாவிலே
தேவ சீவநன்மைதாரும்;
வாரும், சுத்தஆவியே!
ஞானதீபம்
உம்மாலேதான் ஆதமே.

௨. எங்கள் நெஞ்சில் சில புத்தி
தெய்வபக்தி தோன்றவே,
அதை நீர் நன்றய்த் திருத்தி;
தப்புச் சிந்தை நீங்கவே,
மாற்றவாரும்,
பரிசுத்த ஆவியே!

௩. மோட்சமார்க்கத்தைக் குறித்து
எவ்வகை விரோதமும்
நீங்க, என்னை நீர் பிடித்து
வல்லனாகச் செய்திடும்.

கால் முடங்கி
போகில், நீர் இரட்சியும்.

௪. நெஞ்சும் என்னிலே கலங்கி
நாயனே! இரட்சியும்
என்று கெஞ்சும்போதிரங்கி
என்னைத் தேற்றிக்கொண்டிரும்.
துன்பம்போக,
நீர் சகாயராயிரும்.

௱௩௪. கீர்த்தனம். L. M.

"He shall lead you into all truth."

௧. கர்த்தாவின் சுத்த ஆவியே!
நீர் எங்கள் ஆத்துமாவிலே
இறங்கிப், பரஞ்சோதியாய்
நம்மை நடத்தும், தயவாய்.

௨. உம்மாலே நாங்கள் சீர்ப்பட
கன்னெஞ்சு முற்றுந் தெளிய,
நற்குணம் நடையாவையும்
திருத்தமாய்ச் செய்தருளும்.

௩. நீர் தெளிவிக்கும் வார்த்தையே
எப்போதும் எங்கள் நெஞ்சிலே
கொழுந்தெரியப், பெலனும்
நற்கிருபையும் அளியும்.

௪. பிதாக்குமாரன் ஆவியே!
த்ரியேக தெய்வம் உம்மையே

பணிந்து போற்ற, எப்போதும்
நல்வாக்கை நமக்கருளும்.

ரகூநப். கீதம். 8's & 7's.

The same.

க. எங்களைப் பிதாவிடத்தில்
முழுப்பத்தியோடேயும்
சேரப்பண்ணி, ஆத்துமாவில்
ஆவியே! தரித்திடும்.
அதினாலே, திடன் அன்பும்
நம்பிக்கையும் பெருகும்.

உ. நாங்கள் வழுவாதிருக்க
பண்ணும், வல்ல ஆவியே!
லோக மாயத்துக்கு நீங்க,
அருளை அளிப்பீரோ.
நாங்கள் நித்தநித்தமும்
வெல்லக், கட்டளையிடும்.

ங. சாதுங்காலம் வா; நாங்கள்
நித்திய மகிழ்ச்சியாய்
வாழ்வோம்: நாங்கள்மோட்சவான்கள்
என்பதை விசேஷமாய்
எண்ணும்பலம் நெஞ்சிலே
தாரும், நல்ல ஆவியே!

௱௬௪ம் கீதம். L. M.

The same.

௧. தேவாவியே! என்னெஞ்சை நீர்
திருப்பிப் புதிதாக்கிறீர்.
என்னென்ன நன்மை என்னிலே
உண்டோ உம்மாலேதானுண்டே:

௨. உம்மால் கத்தாவை அறிவேன்;
உம்மால் பிதாவேயென்கிறேன்:
நீர் என்னைச் சத்தியத்திலே
முடியவுந் தற்காப்பீரோ.

௩. என்பாதகங்கள் யாவையும்
நீக்கி என்னெஞ்சைக் கழுவும்:
என்விசுவாசம் நேசமும்
மென்மேல் வளரச், செய்திடும்.

௪. இவ்வருள்செய்யும் உமது
அளவிறந்த அன்புக்கு,
இப்போதெப்போதும் உமக்கே
ஸ்தோத்திரம் உண்டாகவே.

௱௬௫ம் கீதம். 8, 7, 4.

The same.

௧. மானிடர் எல்லாருங் கூடி
தங்கள் சொந்தப் புத்தியால்

யோசித்தாலும், தேவ ஆவி
உண்மையைக் கொடாவிட்டால்;
ஒன்றும் நன்றய்
செய்ய ஏதுவில்லையே.

உ. ஆ! கத்தாவே! உம்முடைய
வார்த்தையை நான் சாலவும்
எங்குங்கூற, என்னுடைய
நெஞ்சிலே பிரகாசியும்.
அன்பின் தீபம்
என்னை ஏவச்செய்யுமே.

ந. இவ்விதம் நடந்துகொள்ள,
யேசுவே! தேவாவியை
என்னிடத்தில் நீர்கொடுக்க
வேண்டும். இவ்விருப்பத்தை
நீருங் கண்டு
கொள்ளும், நல்ல மீட்பரே!

ரகூசும் கீதம். L. M.

"Ye shall receive power from on high."

க. தேவாவியின் வரங்களால்
அப்போஸ்தலர் நிறைந்ததால்;
அனேகம் பாஷைகளிலே
ரட்சிப்பைக் கூறினர்களே.

உ. மெய்வேதவாக்கைச், சகல
புறத்திலும், பிரசங்கிக்க;

அன்புள்ள யேசுதேவனூர்
அவர்களை அனுப்பினூர்.

௩. தேய்விகஆவி என்கிற
வார்த்தைவாங்கச், சகல
நல்லறிவையுந் தருவார்:
திடன் அருள் உண்டாமென்றூர்.

௪. துரைகள் முன்னே உங்களை
நிறுத்தும்போது, ஞானத்தை
பகரும் வாயைத் தருவார்;
பகர்வர் ஆவிதானேன்றூர்.

௫. சுத்தாங்கத்தின் வாங்களை
கொடுக்குந் தேவஆவியை
எல்லா வணக்கத்துடனே
துதித்தல்செய்யும், மாந்தரே!

௱௩௭ம் கீதம். L. M.

"*The Spirit and the Bride say come.*"

௧. சபாகர்த்தர்! உமதாவி,
பத்தர் தம்மை ஏவிக்கொண்டு
அன்பினூேடும் ஐக்கமாக்கி
திடப்பண்ணும், சுத்தி செய்து.

௨. ஆவி "தேவே வாரும்" என்ன;
பீடத்தாத்மா ஓலமிடும்.

"நமதாத்மா! ஐக்கமாக
வாரும்" என்று கன்னி சொல்லும்.

௩. "வாரும்" என்று யாருஞ் சொல்லும்
செபங்கேட்டு, அருள் ஊற்றி,
சர்வதேசர் யூதர் சனம்
சபைசேரும் துணைமாக்கி.

௪. தேவே! உம்மைச்சேர்ந்து, தேசர்
வாக்கை நம்பி, மீட்பர்ாத்தம்
சார்ந்துநின்று, மோட்சவாசர்
ஆகும்படி, தயைசெய்யும்.

௫. வாக்குத்தயை நிறைவேற்றி,
இட்டபலி சித்திசெய்யும்:
மண்ணோர்தம்மை உமக்காக்கி,
அவர் யார்க்கும் ஒளிகாட்டும்.

௱௩அம் கீதம். L. M.

"*Come Holy Ghost.*"

௧. இறங்குந் தேவஆவியே!
தொழும்பர் ஆத்துமாவிலே
பரத்தின் நன்மையைக் கொடும்:
மிகுந்த அன்பை ஊற்றிடும்.

௨. உம்மாலேதோன்றுஞ் சோதியால்
எத்தேசத்தாரையும் அன்பால்
சம்பந்தமாக்கி, யாவர்க்கும்
நம்பிக்கையைக் கொடுத்திடும்.

௩. பாத்தின் துய்ய தீபமே!
உம்மாலே, யேசுக்கிறிஸ்துவே!
எல்லாரும் பற்றிக்கொள்ளவும்,
துதிக்கவும், செய்தருளும்.

௪. எல்லாரும் யேசுக்கிறிஸ்துவை
அல்லாமல், வேறுமீட்பனை
பற்றுமல்; நல்ல உண்மையும்
புகழுங்காட்டச் செய்திடும்.

௫. விழிப்புண்டாக்கி, மோட்சத்தை
குறித்த நல்ல புத்தியை
எல்லோர்க்கும் அன்பாய் அளியும்;
எளினை இரட்சியும்.

௬. களிப்பிலுந் தவிப்பிலும்
பிழைப்பிலும் இறப்பிலும்
எப்போதும், ஊக்கமாகவே
இருக்கச்செய்யும், ஆவியே!

௱௩௬ம் கீதம். C. M.

"*Holy men of old spake as they were moved by the Holy Ghost.*"

௧. தேவாவி! வாரும், எங்களை
பார்த்து ஏவிவிடும்.
சினேகஞ் சீவனும் உம்மை
கொண்டேங்களுக்காகும்.

௨. தேவாவி! வாரும், உம்மாலே
வேதியர் பேசினார்

வேதத்தைப் போதிக்க, நீரே
ஒன்றன திராணியார்.

௩. புறவே! எங்கள் மனதில்
அசைவாடியிரும்.
இருளை நீக்கி, எங்களில்
வெளிச்சங் கற்பியும்.

௪. நீர் பிரகாசிப்பதினால்,
கர்த்தனை அறிவோம்.
தேவன் பின் ஆழங்களினால்
பாவசமாவோம்.

ரசயிம் கீதம். 6–8's.

The same.

க. வேதத்தை எழுதினோரை
ஏவிப்போதித்த கர்த்தரே!
உம்மிலே மாறுதலில்லை.
ஆனதினால், எங்களுக்கே
வேதத்தின் ஆவியைக் கொடும்:
உயிரை எங்களில் ஊதும்.

உ. மிகச் செபித்து விரும்பி
வேதத்தை நாங்கள் வாசிக்க,
எங்கள் மனதையுயர்த்தி
பெலப்படுத்தி விளக்க,
உமதாவியை அனுப்பும்:
தேவசோதியாற் போதியும்.

௩. நாங்களலைந்து பாவத்தால்
வழிதப்பித் திரிகையில்;
உமது சுத்த வார்த்தையால்
நம்மை உதம்பி, மனதில்
ஆவியின் வாளாலே குத்தும்:
கிலியாட்டயிலத்தாலாற்றும்.

௪. தேவ உபதேசங்களை
வேதத்தைக்கொண்டு போதித்து,
உமதெல்லா மார்க்கங்களை
சித்தத்தையும் அறிவித்து,
எங்கள் ரட்சிப்பை முடியும்:
நாங்கள் உம்மில் தேறச்செய்யும்.

௫. எப்போதுந் தேறினவாய்
நின்று, நாங்கள் நீர்மீட்டோரை
உதவத் தேவையான தாய்
போதித்துணர்த்திச், சுத்தத்தை
காட்டித்தேற்றி எல்லாரையும்
பேலப்படுத்தி உதவும்.

நான்காம் பிரிவு.

மனந் திரும்புதல்.

ராசகம் கீதம். S. M.

"I abhor myself and repent in dust and ashes."

க. நான் மனந்திரும்பி,
சுய இச்சை விட்டு,
தாழ்ந்து மனஸ்தாபமாகி,
சந்நிதானம் நின்று,
தேவுக்கெதிர்செய்யும்
தீங்கை எண்ணிநைந்து,
திவ்ய ரத்தம் மூழ்கிச், சாந்தம்
பெறச், செய்யும், யேசு!

உ. யேசு! எனதுள்ளம்
துணைப்படச்செய்து,
உண்மையான மனஸதாபம்
நையும் நெஞ்சிற்றந்து,
கடாட்சமாய் நோக்கி,
வன்னெஞ்சை உருக்கும்.
கன்மனத்தை அன்பாற்றக்கி,
ரண்டாய்ப் பிளந்திடும்.

௱௬௨ம் கீதம். L. M.

Psalm li.

௧. பிரலாபர் செய்யும் செபம்
கேட்பீர்: பாவிசெய்த குற்றம்
திருவுள்ளத்தடையாது,
கோபம் நீங்கும், கடாட்சித்து.

௨. எனதுள்ளம் சுத்தமாக,
மாற்றும் பாவம் எல்லாம் நீங்க:
உமதாவியுடன் கூடி,
என்றும் அதில் வாழும், தங்கி.

௩. தேவரீரை நீங்கி, ஒளி
இன்றிவாழ்வதேலாதினி.
என்னைக்காக்கும் பெலன்தாரும்:
பாவம்செய்யாதென்னைப்பேணும்.

௪. ஆவிக்கு நான் துக்கம் செய்தும்;
இன்னும் துணைதந்து தேற்றும்.
சுதன் புண்யபலம்பெற
அருள்செய்யும், உம்மைச்சேர.

௫. மண்ணிற்றாழ்ந்த எனதாத்மம்
சொல்லும் தேவர்நீததண்டம்.
ஸ்வாமி! என்மேற்கடாட்சியும்
சாவுட்படும் ஆத்மம் பேணும்.

௬. அப்போ,யார்க்கும்சொல்வேன் ரட்சை:
தீயர்காண்பார் தெய்வதயை:
மீட்பர் சிந்தும் ரத்தம் சார்ந்து,
போற்றியடைவார்கள் மீட்பு.

௭. தேவன்பேவப்பட், டேன்றுக்கு
ரட்சைபற்றிச் சொல்லும்பாட்டு.
ஆத்மதத்வம் எல்லாங்கூடி,
போற்றும் தேவர் நீதி சத்தி.

௱௬௩ம். கீதம். 7's & 6's.

"*The Lord turned and looked upon Peter.*"

க. கடாட்சயேசு! பாரும்
நெறிதப்பும் ஆட்டை:
பேத்ருபோற் கண்ணீர்வெள்ளம்
பாயச், செய்யுந் தயை.
நீடியசாந்தம் காட்டி,
என்னைச் சீர்ப்படுத்தும்.
கர்த்தர்! என்னிற் கண்ணோக்கி,
கன்னெஞ்சாம்போக்கும்.

உ. உயர்ந்தோங்கும் பிரபு!
தாரும் மனஸதாபம்:
மகா அன்பு காண்பித்து,
மனத்தாழ்மைதாரும்.
என்னைத் துக்கப்படுத்தி,
தாரும், பிரலாபம்;

கர்த்தர்! என்னிற் கண்ணேக்கி,
கன்னெஞ்சாம்போக்கும்.

௩. சுயவிரக்கம் கொண்டு,
அருள் மேன்மை காட்டும்.
என்னைச் சுத்தம் புரிந்து,
பாவமெல்லாம் நீக்கும்.
என்னில் மனம் உருகி,
தாரும் மனஸதாபம்:
கர்த்தர்! என்னிற் கண்ணேக்கி,
கன்னெஞ்சாம் போக்கும்,

௪. கடாட்சம்வைத்து, யேசு!
சாவாதருள்செய்யும்.
அனந்தம் சீவன் அன்பு
தேவர்கண்ணிற்பாயும்.
மீட்குஞ்சொல்லால் உருக்கி,
தயைவெளிப்படுத்தும்:
கர்த்தர்! என்னிற் கண்ணேக்கி,
கன்னெஞ்சாம் போக்கும்.

௫. தேவர் முதற்பாவியை
ரத்தப்ராலாபத்தில்
கண்டு, விரைந்தவனை
எழுப்பினதுபோல;

தயை வெளிப்படுத்தி
பாதீசைத்தாரும்.
கர்த்தர்! என்னிற் கண்ணோக்கி,
கன்னெஞ்சாம்போக்கும்.

சு. அந்யதேசச்சிறையில்
அகப்பட்டோர் தம்மை
பார்த்தாற்போல; எகிப்தில்
சுதரூதும் என்வன
மீட்பான சொல்லைச் சொல்லி
சிறைநீக்கிவிடும்
கர்த்தர்! என்னிற் கண்ணோக்கி,
கன்னெஞ்சாம்போக்கும்.

எ. மக்தீலேன் ப்ரலாபத்தில்
கண்டு, மன்னிப்பீந்து,
கண்ணீர் நீக்கித், தயவில்
விட்டீர் சாந்தத்தோடு.
அவள்போல், நானும் கெஞ்சி
சொல்வேன் கண்ணீரோடும்;
கர்த்தர்! என்னிற் கண்ணோக்கி,
கன்னெஞ்சாம்போக்கும்.

அ. அன்புலாவுங் கண்ணினால்
சாவிற்கடாட்சித்தீர்.
அறையுண்ட மாத்தில்,

"தந்தைபோறும்" என்றீர்:
அவ்வண்ணமென்னைப் பார்த்து
பாவமெல்லாம் நீக்கும்.
கடாட்சமுள்ள யேசு!
கன்னெஞ்சாம்போக்கும்.

௱௪௯ம் கீதம். 6-7's.

"I will take away the stony heart out of your flesh."

௧. உயர்ந்தோங்கும் பிரபு!
இஸ்ரேலின் மீட்பர்! பாரும்:
சாந்தஞ் செய்யுந் தெய்வன்பு
தந்து, நீக்கும் நெஞ்சாம்.
தசையாக்கும் கல்லையும்:
நோக்கி, நெஞ்சை நொருக்கும்.

௨. ஆவி தந்து கடிந்து,
தேவே! பாவிக்குணர்த்தும்.
அறிவருள் இவைக்கு,
செய்தபாவம் காண்பியும்.
தேவரீரை அறைந்தேன்;
மேலும் ரத்தம் சிந்தினேன்.

௩. வழிதப்பியலைந்த
ஆட்டைத்தேடி, ரட்சியும்.
பேதுருபோற் கண்ணீர்பாய
உம்மை நோக்கக், கற்பியும்.

நேசிப்பேனென்றறிவீர்
என்று சொல்ல, அருள்வீர்.

௪. ஆயக்காரன் ஆலயம்
வந்தாற்போலத் துக்கித்து,
தூர நின்று தவித்தும்
அஞ்சி மார்பில் அடித்து,
என்பேரிற் றயைசெய்யும்
என்றுசொல்வேன் விண்ணப்பம்.

௫. நிழல்போலும் இவ்வாழ்வு;
என்னை நினைத்தருளும்.
மாய்ந்துபோகும்பொழுது,
காட்டும் தேவருதிரம்.
சோருமனம் தேவரை
காணச், செய்யும் தயவை.

௱௪௫ம் கீதம். L. M.

"Who ever liveth to make intercession for us."

௧. என் காரியகர்த்தர் யேசுவே!
கிருபாசனத்தின்முன்னே
எனக்காய் வேண்டிக்கொள்ளுறீர்:
இப்போ மேற்கொள்ளக்கடவீர்.
வேண்டுவதற்கு நீர் ஆசை
எனக்கிட்டால், என் செபத்தை

கேட்டருளி, நீர் என்னோடும்
பிதாவை வேண்டிக்கொண்டிரும்.

௨. என் சுபாவத்தின் கேட்டையும்
அறிவித், தென்னிருதயம்
சூழ்ந்தகருமேகங்களை
மனதின் அந்தகாரத்தை
சித்தத்தின் மூட்டாட்டத்தை
இச்சைகளின் தீர்தவல
எனக்கிப்போதுங் காண்பியும்.
என் மனந் துக்கப்படுத்தும்.

௩. நீர் எனக்காய் வேண்டிக்கொண்டு
தேவ வெளிச்சத்தைத் தந்து
என் கேட்டின் மீததியையும்
எனக்கன்பாகக் காண்பியும்.
நான் பாவத்தை வெறுப்பது
அதின் குற்றமுணர்வது.
உம்மில் உண்டான ரட்சிப்பை
விரும்புவது என்றாசை.

௪. நேசமே உம்மைக் கேட்கிறேன்;
உம்மையில்லாமற் சாதுவேன்:
உம்மையில்லாமை மரணம்
நரகமுமாயிருக்கும்.
நீர் என்னில்வந்துயிர்ப்பித்து
உமதன்பைத் தரும்போது,

என் மனமெல்லாம் மகிழும்.
ஆ! இப்போ ஆசீர்வதியும்.

௱௪௬ம் கீதம். L. M.

"My yoke is easy and my burden is light."

க. என் பாவங்களின் பாரத்தை
நீங்குவது என் விருப்பம்.
யேசுவே! என் ஆத்துமத்தை
தாழ்மையிற்பார்த்து ஓங்கும்.

உ. என் கர்த்தரோ! என் மீட்பரோ!
உம்மை எப்போ தரிசிப்பேன்?
தேடித் தவித்தும், உமக்கே
வாராமல், தூர நிற்கிறேன்.

௩. என் ஆத்துமத்துக்காறுதல்,
தேடுகிறேன், ரட்சகரோ!
சாந்தந் தாழ்மை தெய்வசாயல்,
எனக்குத் தாரும், யேசுவே!

௪. உட்கொண்ட பாவபாசத்தை
அறுத்தென்னை விடுவியும்:
நான் உம்மிற் சேர்ந்து சுத்தத்தை
அடையும்படி அருளும்.

௫. உமது லேசான சுமை
எடுத்தும்மிற் கற்றுக்கொள்வேன்:
ரத்தஞ் சிவந்த சிலுவை
பார்த்து, ரட்சிக்கப்படுவேன்.

௬. ஆசை எனக்குண்டு; நீரோ
பெலத்தைத் தந்து ரட்சியும்.
நிறைந்த பாக்யத்தால் இப்போ
என்னை நிரப்பவே, வாரும்.

௭. வாரும், கர்த்தரே! பாவியை
தேற்றத் தாமதிக்காதேயும்:
என் மனதில் உந்தயவை
வெளிப்படுத்தியருளும்.

௱௪௭ம் கீதம். L. M.

"*Wherewith shall I come before the Lord.*"

௧. எவ்விதமாகக், கர்த்தாவே!
உம்மை வணங்கத் துணிவேன்?
உமது கிர்பை பெறவே,
என்ன ஈட்டைச் செலுத்துவேன்?

௨. அநேக காணிக்கைகளை
உம்மாவி விரும்புவாரோ?
தகனங்களாற் கோபத்தை
மாற்றிக், கிருபை செய்வாரோ?

௩. ரத்தம் எண்ணெய் ஆறுகளாய்
ஓடினும், பாவந் தீராது.
தேவ கோபத்தினீங்கலாய்
என்னை ரட்சிக்கக்கூடாது.

௪. நியாயஞ் செய்திரக்கத்தை
நேசித்துத், தேவபத்தனாய்
எப்போதும் நடந்தால்; தயை
ஸ்வாமியிற்பெற்றுக்கொள்ளுவாய்.

௫. ஆனாலும் இனிப்பத்தனாய்
நான் நடந்தாலும், முன்னமே
செய்தபாவங்கள் பாரமாய்
போக்கப்படாமல் நிற்குமே.

௬. என்னத்தின் பேரில் நம்பலாம்?
ஒன்றுமில்லாதிருக்கிறேன்.
என் பெருமை என் வெட்கமாம்
என்னை ரட்சிக்கவேமாட்டேன்.

௭. நான் குற்றவாளி ஸ்வாமியே!
கோபம் என்பேரில் நிற்குது.
ஆக்கினையிடல் நீதியே:
ஆனாலும் பலி சாகுது.

௮. யேசு என் பாவஞ் சுமந்து,
மரத்தில் ரத்தஞ் சிந்தினார்.
சாபத்தால் தலைகுனிந்து,
முடிந்ததென்று மரித்தார்.

௯. உமது சந்நிதானத்தில்
எழுந்து வேண்டிக்கொள்ளுறார்,
காயங்களைத் தன் தேகத்தில்
காண்பித்து, என்னை நினைப்பார்.

௰. நான் தம்மோடாளும்படிக்கு
வேண்டுகிறார்; ஆமென் என்பேன்.
என் யேசு வேண்டிக்கொள்வது
வீணல்லவென்று நம்புவேன்.

௱௬௪ம் கீதம். 7's.

"*When I would do good evil is present with me.*"

௧. ஏழைப்பாவியான நான்
கேடு வன்மமுள்ளவன்.
நான் மகா தரித்திரன்;
பாழ்நிலத்தைப் போன்றவன்.

௨. என் சரீர இச்சையும்
ஆவியைக் கெடுக்குமே:
உலக துன்மார்க்கமும்
மனதை நெருக்குமே.

௩. ஆ! நான் உம்மை, யேசுவே!
நல்ல பத்தியுடனே
பற்றிக்கொள்ளும் நேசமே,
என் நெஞ்சில் உண்டாகவே.

௪. ஆ! இவ்வேழைக்கே உம்மால்
ஆதரிப்புண்டாகுமே.
என் இக்கட்டும், அதினால்,
மாறி நீங்கலாகுமே.

௱௪௯ம் கீதம். C. M.

"Renew a right spirit within me"

க. கற்போன்ற நெஞ்சத்தை நன்றய்
திருத்திச், சாலவும்
கண்ணீருடன் உருக்கமாய்
கரையச், செய்திடும்.

உ. அதால், அன்புள்ள யேசுவே!
எல்லாரின் மீட்புக்கும்
இறந்த தேவரீருக்கே
என் நெஞ்சு கீழ்ப்படும்.

௩. மன்னிப்புத்தந்து, உள்ளத்தை
நடத்தி ஆண்டிடும்;
கடைசியிற் சுகிர்தத்தை
அளித் திரட்சியும்.

௱௫௰ம் கீதம். 8's. & 7's.

"Blind Bartimeus"

க. ஆ! இரங்கும், யேசு ஸ்வாமி!
தாவீதின் குமாரனே!
கண் குருடன் துன்பவாளி
பர்த்திமியுகேட்டானே.

உ. ரத்நம், தங்கம், கல்வி, என்னும்
லோக ஆஸ்தி வேண்டாமே.
கண்திறந்து பார்வைதாரும்,
நேசமுள்ள யேசுவே!

௩. நெஞ்சே ஏங்கி இட்ட சத்தம்
சனங் கேட்டுக், கோபமாய்
அவனைக் கடிந்துகொண்டும்;
கூப்பிட்டான், விடாமையாய்.

௪. யேசு நின்று கண் கடாட்சம்
செய்யப்; பார்வைபெற்றேனாய்
சோதிகண்டு, நேசத்தோடும்
பின் சென்றானே களிப்பாய்.

௫. கண்ணில்லாத மாந்தர் யாரும்
சொஸ்த சீராடையவே,
நேசம் பத்தி ஆவலோடும்
சோரப்பண்ணும், யேசுவே!

௱௫௩ம் கீதம். L. M.

"*God be merciful to me a sinner.*"

௧. நிர்ப்பந்தமானபாவியாம்
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மாகலக்கமாம்
பயமாய் வந்தேன், கர்த்தரே!

௨. என் பாதகத்தை மன்னியும்:
என் சஞ்சலத்தை நீக்கிடும்:
இரங்கித்தயை அளியும்:
ஆ! கோபமாயிராதேயும்.

௩. என் குற்றத்துக்குத்தக்கதாய்
செய்யாமல்; தயவாயிரும்.
பிதாவே! என்னைப் பிள்ளையாய்
திரும்ப நோக்கியருளும்.

௪. என் நெஞ்சில் தீக்கில் தணியும்:
நீர் என்னைக் கேட்டுரட்சிப்பீர்:
யேசுவே! ஆற்றலளியும்:
ஓர்காலும் என்னைக் கைவிடீர்.

௱௫௨ம் கீதம். C. M.

"Enter not into judgment with thy servant."

௧. கர்த்தாவே! என்னைக் கோபமாய்
விசாரியாதிரும்.
நான்செய்த தீமைக்கேற்றதாய்,
சரிக்கட்டாதிரும்.

௨. நான் சாபத்தைக் காணமலும்
என்றென்றும் வாழவே;
என் பாவத்தைப் பாராமலும்
மன்னியும், கர்த்தரே!

௩. ஆரோக்கியத்தை அளியும்;
நோவாய்க்கிடக்கிறேன்:
என் நெஞ்சிற்புண்கள் எரியும்;
மனம் நருங்தண்டேன்.

௪. ஆத்துமமீட்பாகவே
   திரும்பிச்சேர்ந்திடும்.
ஆ! உமதன்புக்காகவே,
   கர்த்தாவே! ரட்சியும்.

௩௯௨ம் கீதம். 8, 7, & 4.

"*Heal my soul.*"

௧. தேவரீரோ தாழ்மையாக
   திருப்பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக
   வந்தேன், நல்ல யேசுவே!
      உம்மைத்தேடி,
   காணவேவிரும்புறேன்.

௨. தயவாக என்னைப்பாரும்:
   நின் சித்தத்தின்படியே,
என்தனை நடத்திக்கொள்ளும்:
   என்னைமீட்டவர் நீரோ.
      உம்மைத்தேடி,
   உம்மைச்சேர்ந்த ஆளாவேன்.

௩. உமது சற்பிரசாதம்
   மாத்திரம் வேண்டியது:
உம்முடைய தேவபாதம்
   முத்தஞ்செய்ய அரிது.
      உம்மைத்தேடி,
   எல்லாம் உம்மோடடைவேன்.

ச. வல்ல கர்த்தாவினுடைய
அத்த ஆட்டுக்குட்டியே!
கருத்தோடே, என்னுடைய
ஞானமணவாளனே!
உம்மைத்தேடி,
தரிசிக்கவே வந்தேன்.

ரு. என் பிரார்த்தனையைக் கேளும்;
அத்தியந்தபணிவாய்
கெஞ்சினேனைக் கேட்டுக்கொள்ளும்.
உம்முடைய பிள்ளையாய்,
உம்மைத்தேடி,
உம்மிடம்வருகிறேன்.

சு. லோகசெல்வம் ஆசாபாசம்
வேண்டாமென்று தள்ளினேன்;
இந்தமாயை, மனத்துக்கம்:
மெய்வாழ்வை விரும்புகிறேன்.
உம்மைத்தேடி,
மோட்சங்கூட அடைவேன்.

ாருசும் கீதம். P. M.

The same.

க. அருளின் ஊற்றும் யேசுவே!
வியாதுலமும்பாடும்
படுகின்ற என் நெஞ்சிலே
இருக்கும் நோவைப் பாரும்.

அனேக அம்பு தைத்ததாய்,
என் பாவங்கள் அகோரமாய்,
என் மனதை வதைக்கும்.

௨. நொருங்கின நெஞ்சுடனே
வந்தும்மைப் பற்றிக்கொள்ளும்
யார்மேலும் தாழ்ச்சியின்றியே
அருள் உண்டென்று சொல்லும்
அவ்வார்த்தை நிலையானதால்;
என் மனதைத் தன் இன்பத்தால்
முழுதுமுயிர்ப்பிக்கும்.

௩. மகிழ்ச்சியுள்ள ஆவியால்
இவ்வேழையைக் காப்பாற்றும்:
நீர் பாடுபட்டு மாண்டதால்,
என்சாவில் என்னையாற்றும்:
என்நெஞ்சில் விசுவாசத்தை
முடியக்காத்தடியேனை
உம்மண்டை சேர்த்துக்கொள்ளும்.

௱௩௩ கீதம். 7's &6's.

The same.

௧. தேவரீரைச் சார்ந்தோனாய்,
கர்த்தாவே! உண்மையில்
நிலைநிற்கத், தயவாய்
நீர் எனக்கறிவில்

வளர்த்திசெய்தன்பினால்
என்னை நோக்கிக்கொள்ளும்:
உம்முடைய வார்த்தையால்,
வழியைக் காண்பியும்.

௨. லோகத்தை நான் வெறுத்து,
என்னெஞ்சை உமக்கே
என்றென்றைக்குங் கொடுத்து,
பிழைக்கும்படிக்கே;
என் பொல்லாத இச்சையை
தயவாகப்பாரும்:
நருங்குண்ட மனதை
தேவரீரானே ஆற்றும்.

௱௯௫ம் கீதம். 7's & 6's.

The same.

௧. காருண்ணிய ஒளியாம்
அன்புள்ள யேசுவே!
நாசீவகோலமாம்
உம்மாலே, என்னிலே
சோதிதாழ்மைதண்மும்
உண்டானலன்றியே,
மாசந்தோஷம்திடனும்
உண்டாகமாட்டாதே.

௨. பாவம்யாவும் மன்னித்து
அகற்றியருளும்:

கடுங்கோபத்தை விட்டு
   என்மேல் அன்பாயிரும்:
வந்திரும் என்மனசில்;
   சாந்தத்தைத் தாருமே:
என்னுடைய நெஞ்சத்தில்
   நற்சீருண்டாக்குமே.

௩. அடியேனை மீட்டோரே!
   நானும்மைச்சேவிப்பேன்:
முழுப்பத்தியாகவே
   எப்போதும் நடப்பேன்.
அப்படியுண்டாகவே,
   பலம் கடாட்சியும்:
யாவும் புதிதாகவே
   படைத்துக்கொண்டிரும்.

௱௫௭ம் கீதம். L. M.

"O how great is thy goodness."

க. கர்த்தாவே! வாழ்க. பாவியை
நீர்கைவிடாமல் இத்தனை
தாழ்வாய் என்னண்டை வந்தது,—
அளவில்லாத தயவு.

உ. மகிமையான யேசுவே!
மெய் யாஸ்தியான உம்மையே
நான் பெற்றிருக்க, என்றைக்கும்
என் நெஞ்சில் தங்கியருளும்.

௩. ஞானதீப ஒளிகாட்டும்:
சூட்டுமன்பை நெஞ்சில்தாரும்:
என் மனப்பலவீனத்தில்
திடந்தந்து, தங்கும் அதில்.

௪. அதாலே என்றும் வாழுவேன்:
மோட்சந்தேடி ஒழுகுவேன்:
லோகசெல்வம் அற்பமென்று
நான் சொல்வேன், உம்மில் மகிழ்ந்து.

௱௫௮ம் கீதம். 6–8's.

"The Father of lights, with whom is no variableness nor shadow of turning."

௧. வெளிச்சங்களின் பிதாவே!
மாறாத கிருபையாலே,
சிருட்டித்த எல்லாருக்கும்
தேவையானதை, ஈகிறீர்.
நான் செபம்பண்ண உதவும்:
நான்பண்ணும் செபத்தைக்கேளும்.

௨. நான் உமதொளியால் என்னை
ஏழை நிர்வாணியாவதை
கண்டறிந்தால்; நீராராய்ந்து
என் குறைச்சல் எல்லாங் கண்டு,
அறிவீரே. ஆ! இப்போதும்
நிர்ப்பந்தன் என்மேலிரங்கும்.

௩. என் மனதின் பொல்லாங்கையும்
துருட்டாட்டறியாமையும்
தீமைக்கு ஆசை, நன்மைக்கு
துர்க்குணமான வெறுப்பு,
இதுமுதல் இன்மையை நீர்
என்னுள்ளத்திற் கண்டறிவீர்.

௪. நீர் என்னிற் காண்பவைகளை
நானுங்கண்டு, என் குறையை
உணர்ந்து, மெய்யாய்த்துக்கித்து,
வீண் பெருமையைப் பகைத்து,
என் கெட்டசுபாவ மூலம்
மிகவும் அழ உதவும்.

௫. என் கேடுகளை முழுதும்
எனக்கு வெளிப்படுத்தும்.
ஆ, கர்த்தாவே! நான் அழவும்
வேண்டவும் எனக்குதவும்.
என்விழுதல் என் உயிர்த்தல்
என் கவ்வையெல்லாஞ் செபித்தல்.

௱௫௬. கீதம். 8's & 6's.

"Thou triest me every moment."

௧. அந்தரங்க அருள் ஊற்றி,
சோதித்தென்னைத் தினம் ஏவி,
என்னைவசஞ்செய்து,
மீட்கக்காத்துநிற்பீர் என்றும்:

"மைந்தா! நெஞ்சைத்தா" என்றின்னும்
சொல்வீர், ஆவிதந்து.

உ. தெய்வவாக்குக் கேட்டமைந்து,
தொடர்ந்திடும் தீமைவிட்டு
நீங்கத்,தாரும் தயை.
இப்போ கேட்கும் நெஞ்சம் தந்து,
நேசத்தேவில் அன்புவைத்து,
வாழ என்னதடை?

ங. நேசத்தேவர்! நிற்குந்தடை
நீங்காதெதிர்த்தாலும், அதை
இன்னதென்று காட்டும்.
பாவம் செயித் தருள் ஊற்றி,
நெஞ்சை வசஞ்செய்து மாற்றி,
தாரும், நேசபலம்.

ச. அப்போ திருவுள்ளங்கண்டு,
இட்டம்நீங்க் வசப்பட்டு,
செய்வேன், தெய்வசித்தம்.
தாழ்மையோடே வழிப்பட்டு,
சுத்தம்பெற்று, மோட்சஞ் சேர்ந்து
கொள்ளும்படி, செய்யும்.

ரகூயிம் கீதம். 7's & 6's.

"*Return unto me for I have redeemed thee.*"

க. சாவில் எனதாத்துமம்
சீட்டிசெய்த கர்த்தர்

அதை ஓர் தேவாலயம்
ஆக்கிமீட்டார், நேசர்.
யேசுவே! இப்போ வந்து
நன்மை நீதி நேசம்
பெலம் எனக்குத் தந்து,
விலகாமலிரும்.

௨. தெய்வச்சாயல் என்னிலே
தோன்றப்பண்ணிச், சுத்தம்
நீதி ஞானம் இவையே
விர்த்தியாகச், செய்யும்,
நித்தம் ஆத்ம ஆனந்தம்
பெற்று வாழும்படி,
நீர்கொண்ட அபிப்ராயம்
என்னிலாக்கும் சித்தி.

௩. தெய்வீகசித்தம் என்னில்
நிறைவேறச், செய்யும்:
தெய்வநேசம் மனசில்
ஊர்ந்து ஓங்கப், பண்ணும்:
விண்ணிற் பிரசன்னராய்
உம்மைப்பார்க்கையிலும்;
எனதுள்ளம், பூரிப்பாய்,
உம்மாற் களிகூரும்.

௱௯௩-ம் கீதம். S. M.

"I have waited for thy salvation O Lord."

க. தேவரீடம் ரட்சை
பெறும்படிகாத்து,
வேதப்படி விநோந்த்தை
தேடினேனே நன்று.
விண்ணில்வாழும் செல்வர்!
வானோர்க்காதிதேவன்!
ரட்சைக்கர்த்தர்! தேவர்சேர்வீர்
என்று காத்திருந்தேன்.

உ. மீட்பனை அறிந்து
சாந்தத்தோடு செல்ல,
யேகோவாவின் சுதன் வந்து
நெஞ்சில் வாழ்வாராக.
மண்ணோர் நாடும் உம்மை
விஸ்வாசத்தாற் பெற்றும்;
முத்தருடன் தேவரீரை
நித்தங்காணச், செய்யும்.

௱௯௪-ம் கீதம். C. M.

"Prayer for Quickening grace."

க. தேவர்செய்த மீட்பின் வாக்கை
வேதகாலம் கேட்டும்;
விசுவாசம் அறிவிவை
மேலிவாக நிற்தும்.

உ. மீட்கும் தெய்வ காருண்ணியர்!
தேவர்செய்யும் நன்மை
தெண்டம் நினையோமே, தீயர்;
காணோம், தெய்வதயை.

ங. மெலிவாயிற்றெனதன்பு;
அச்சம் சற்றுமில்லை:
மந்தமாம், என்னேசத்தோடு
நித்ய மோட்சவாஞ்சை.

சு. மகா தெய்வம்! துணைதந்து,
வாக்குச் சித்திசெய்யும்:
ராட்சைநெஞ்சிற் பதித்திட்டு,
அருள்நாடப், பண்ணும்.

ரு. நித்த ஞானம் நேசம் மேவும்
மோட்சதலம் நன்று.
அதிற்சேர நெறிகாட்டும்,
அடியேனைக் காத்து.

ஈகஈடும் கீதம். C. M.

"O spare me that I may recover strength before I go hence."

க. தாழ்ந்து கர்த்தாவுக்கமைந்து,
தேவர் நீதிக்கஞ்சி,
உருகிய மனம்பெற்று,
வாழும்படி; ஏலி

மனஸதாப்பட்டுக் கண்ணீர்
வாரும்படிசெய்து,
தண்டிப்பீரோ: பிராபர்
ஆக்தும் நம்மைவிட்டு.

௨. யேசு! தாரும் மனஸதாபம்,
நம்மேல் அன்புவைத்து:
சாவிற் சேர்வாயென்றுசொல்லும்,
ஈடு வாங்கிக்கொண்டு.
அச்சநாளோ வாழன்பு,
தீமையை விலக்கும்:
சுத்தருடன் ஆத்மஞ்சேர்த்து,
தேகங் கோரிசேரும்.

௱௯௰௦ம் கீதம். C. M.

"Lord, I believe, help thou my unbelief."

௧. சென்மசுபாபம், மகாகேடு:
பாவக்கறைபேலன்.
சாத்தான், பாவதவளாயிட்டு
நம்மை ஆளுந் தீயன்.

௨. அருள்வேதவாக்யம், நம்மை
ஆற்றும்படி, "என்றும்
வாரும், பிராபர்! தேவை
நம்பும்" என்றுசொல்லும்.

௩. எனதாத்மம், தெய்வவாக்யம்
கேட்டு விரைந்தோட;

நம்புவேனே வாக்குத்தத்தம்,
அவிசுவாசம் நீங்க.

௪. மனுரூபசுதனிடம்
போனால், ரத்தம் நம்பி;
அவர், பாவக்கறை எல்லாம்
போக்கிச், செய்வார் சுத்தி.

௫. நானே கதியில்லாச்சேந்து:
நீரோ மீட்குஞ் செல்வர்:
நீதிபெலனாக வந்து
மீட்பீர், பிராணநேசர்.

௱௩௫ம் கீதம். L. M.

"They rebelled and vexed his Holy Spirit.'

௧. உம்மை அவமதித்தேனை
விடாதிரும், சுத்தாவியே!
பறவாமல் எளியேனை
தள்ளாது பேணிக்கொள்ளுமே.

௨. நான் கடுங்குணம் மீதுத்தேன்,
நெஞ்சின் தோஷம் சிந்தியாமல்;
நீர் போதும்படி நடந்தேன்,
பாவஞ்செய்து ஒழியாமல்.

௩. தேவருள்பெற, யாரினும்,
நானே மகா அயோக்கியன்.

கோடிதாந்தயைபெற்றும்;
சீவித்தேனே, நன்றியீனன்.

௪. ஆகிலும், ஐயன் நிமித்தம்,
காத்துக்கொள்ளும், அடியேனை.
பத்தர்வாழும் வீட்டைத்தாரும்:
அடக்கிக்கொள்ளும் கோபத்தை.

௫. இந்தவாம் அருள்செய்யும்,
ஞாயப்படி தண்டியாமல்:
சீர்கேட்டேனை நினைத்திடும்,
அன்பிலேனைச் சபிக்காமல்.

௬. தேவே! என்னைவிடுவித்து,
வல்ல கையால் என்னைத்தாங்கும்.
பூர்ணசமாதானந் தந்து,
மோட்சவாழ்விற் சோப்பண்ணும்.

௱௬௬ம் கீதம். 7's.

"A Refuge from the Storm."

௧. பிராணநேசயேசுவே!
வெள்ளம்பாய்ந்து பெருகி,
துறைக் காற்று விசவே,
நெஞ்சிலே என்னைப்பேணி,
சீவப்புயல் அடிக்க,
புகலிடந் தாருமே.
நான் மோட்சகரையேற,
அருள்செய்யும், கர்த்தரே!

௨. நின்றித் தஞ்சமில்லை:
உம்மைச் சேர்ந்தேன்றுத்மம்,
கைவிடாமற் காத்தென்னை
ஆற்றித் தாங்கிக்கொண்டிரும்.
நான் உம்மைச் சார்ந்து நம்பி
திடங்கொள்ளும்படிக்கு,
சிறகால் என்னை மூடி,
அருள் செய்யும் எனக்கு.

௩. தயாநிதி கிறிஸ்து! நீர்
என் குறை நிறைவேற்றி,
விழுந்தேனைத் தூக்குவீர்,
துன்பந் தீர்த்து விளக்கி;
நீரோ சுத்த நீதிமான்:
நானே மருளாளனே.
வஞ்சன், துஷ்டன், தீயன் நான்;
நீரோ அருளாளரே.

௪. பாவம் எல்லாம் ஒழிக்க,
உமதருள் போதுமே.
என்னைச் சுத்திகரிக்க,
அருள்நதி காட்டுமே.
நீரோ சீவ நதி: நாம்
உம்மில் என்றும் மூழ்கவே,
உள்ளத்திற் சம்பூரணம்
ஊறச்செய்யும், நித்தமே.

௱௬௭ம் கீதம். 4—8's & 2—6's

"Lead me in the way everlasting."

௧. மகா மறைந்ததேவனே!
ஆதிமுதலிம்மட்டுமே,
என்னைக் காப்பாற்றினீர்.
என்னுள்ளம் பார்த்துத், தயவை
பெற்றேனோ அல்லோ என்பதை
காண்பிக்கக் கடவீர்.

௨. நான் உமது ஏவல் செய்து
உமக்கன்போடே பயந்து
வந்தால், ஆ! இப்போ நீர்
நிறையப் பாவ மன்னிப்பு
தந்து, என் மனச்சாட்சிக்கு
ருபிக்கக்கடவீர்.

௩. என் பாவம், மன்னித்தீரென்று
சந்தோஷமான வுணர்வு
பெறுவதென்னசை.
உமது தேவ ஆவியால்
உண்டான சாட்சி அடைந்தால்,
அது மெய்ப் பேருமை.

௪. அச்சாட்சி எனக்கிருந்தால்,
நான் உம்மோடொப்புரவாதல்
காட்டுவார் இல்லையா!
நான் உம்மை யேசுவைக் கொண்டு

பிதாவேயென்று கூப்பிட்டு
நம்புவதில்லையா?

ரு. இதற்குத் தடையேதுவோ?
பாவமோ தன்னெண்ணிக்கையோ?
நீக்கிப் போட்டருளும்.
அவிசுவாசத்தைப் பேர்த்து,
பாவத்தைப் பரிகரித்து,
முழுதும் மன்னியும்.

சு. பிதாவே! என்னிற் சுதனை
வெளிப்படுத்தி, ரட்சிப்பை
அவரால் முடியும்.
உமது நேசங் காண்பித்து,
ஆவியால் என்னில் தரித்து,
இரும் என்றென்றைக்கும்.

௱கூஅம் கீதம். 4–8's & 2–6's.

"Who will have all men to be saved."

க. விசுவாசத்தின் கர்த்தரே!
நான் அழியாமல் வாழவே,
நீர் விரும்புகிறீர்.
என் கண் திறந்து, ரட்சிப்பை
அளித்து நித்ய சீவனை
கொடுக்கக் கடவீர்.

௨. நீர் இருளை நீக்காவிட்டால்,
உம்மை அவிசுவாசத்தால்
காணாமல், அஞ்சுவேன்.
உமதுபேர் என்மனதில்
வெளிப்படுத்தி எழுதில்;
அன்போடாராதிப்பேன்.

௩. தெய்வீக விசுவாசத்தை
அடைவது மகா கிர்பை
என்றறிகிறேன்: நீர்
நாங்கள் கேட்டால் எல்லார்க்குமாய்
மரித்துப் போனீரென்றதாய்
காண்பித்துணர்த்துவீர்.

௪. நாங்கள் தட்டாற் பிரவேசித்து
கிருபை கேட்டாலடைந்து
வாலாம் என்கிறீர்.
எல்லாரையும் என்னைக்கூட
இன்றும் என்றும் இரட்சிக்க
நீர் சித்தமாகிறீர்.

௫. உமது சித்தப்படிக்கு
இப்போ என் பாவ மன்னித்து,
நான் கேட்பதைத் தாரும்.
விசுவாசந் தேவ அன்பு
என்ற கதவைத் திறந்து,
என்னை ஏற்றுக்கொள்ளும்.

௱௯௯ம் கீதம்.　　6—8 s.

"The Dove found no rest for the sole of her foot, and she returned unto him into the ark."

க. இளைத்தோரை யாற்றும் யேசு!
பாவ தோஷம் நீக்கும் வைத்யன்!
நெஞ்சையாற்றிச் சாந்தம் செய்து,
தாங்கிக்கொள்ளும், ஏழைப்ராணன்.
சீவ கடல் உள்ளமட்டும்,
என்னுயிர்த் தெப்பமாயிரும்.

உ. என் தேவனுக்குத் தூரமாய்
இங்கும் அங்கும் பறந்தோடி,
மண் விண் எங்கும் நீரார்த்தமாய்
அலைந்தேனே, நிலையின்றி.
சலப்பிராவாகங் கண்டு,
தேவனிடம் செல்வேன் இன்று.

௩. லோக மாயம் சுய இச்சை
இவை விட்டேன்; நீரோன் செல்வம்.
நீட்டும், தயவுள்ள கையை;
ஏற்றும் அன்பின் பேழைக்குள்ளும்.
துள்ளும் ஏழையேனை ஆற்றும்,
மீட்பர் நெஞ்சில் என்னைப் பேணும்.

௪. சமாதான தீர்த்தி பெற்று,
இருதயந்தீடம்சுத்தம்

பிரியாமல் உம்மில் நின்று
கொள்ளும்படி, அருள்செய்யும்.
ஒழியாத அன்பில் மூழ்கி
பூரிப்பேனே, அழிவின்றி.

௱எ௰௰ கீதம். 6—7's.

"God shall help her and that right early."

க. மேலிந்த என் மனதை
திறம்பெறக் கற்பியும்.
தவிக்கும் என்னுள்ளத்தை
தேற்ற, ஆசீர்வதியும்.
கிருபை வருஷியும்.
வா விரைவாயிரும்.

உ. சூரியன் உதிக்கையில்,
இராவிருள் பறக்குது.
நீர் என்னிற்றேன்றமையில்,
விசனம் பிறக்குது.
கிருபையின் கிரணம்
ஆத்துமத்தின் ரம்மியம்.

ங. பாவமான இருளை
நீக்கிப் பிரகாசியும்.
தெய்வ சோதியால் என்னை
ரொப்பி மகிழச் செய்யும்.
பட்டப் பகல்வரைக்கும்
மிகுந்தொளியாயிரும்.

௱எகம் கீதம்.   C. M.

"We will come in and make our abode with him."

க. என் முழு நெஞ்சையும் அன்பாய்,
கர்த்தாவே! என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
படைத்துக்கொண்டிரும்.

உ. நீர் அதை ஆளுங் கர்த்தரே;
அதால் நான் பாக்கியன்,
நான் உலகத்தோன் அல்லவே;
நான் உம்முடையவன்.

ந. பசாசின் மணவாளியே!
ஓர்காலும் உன்னைநான்
சேரேன்; உன்பேச்சு மாயமே:
உன் செல்வம் குப்பைதான்.

ச. போ, லோகமே! போ, பாவமே!
என் மனம் உமக்கு
எக்காலத்துக்கும், யேசுவே!
கொடுக்கப்பட்டது.

௱எஉம் கீதம்.   L. M.

Crucified unto the world and the world unto me.

க. போ, அற்பமாஞ் சிற்றின்பமே!
போ, கெட்டலோக இச்சையே!

வா, தேவநேசமே! வாவேன்,
நான் உனதாலயமாவேன்.

உ. நான், தேவசுதன் சீவனை
கொடுத்த அந்த நேசத்தை
நினைத்து, இச்சையாவையும்
வெறுத்திருக்கச், செய்திடும்.

ங. ஓர் நிமிஷத்தின் இன்பமே
அனந்தநோ உண்டாக்குமே.
ஆ! என்னைச்சேர்த் தும்மண்டையே
சுத்தப்படுத்தும், யேசுவே!

ச. நான் மோட்சத்திற் பங்கற்றோனாய்
போகாதபடி, நேர்த்தியாய்
சீர்ப்பட உம்மை நேசிக்கும்
இதயத்தை ஈந்தருளும்.

ரு. நாருடைய இதயம்
அறிந்திராத ஆநந்தம்,
அங்கெனக்குப் பாத்திலே
கிடைக்கப்பண்ணும், கர்த்தரே!

ஙஎஙம் கீதம். S. M.

"I count all things but loss for the excellency of the knowledge of Christ Jesus."

க. சீர்கெட்டலோகமே!
உன்வாழ்வு எனக்கேன்?

என் மீட்பவர் என் கதியே.
நான் உன்னைச் சார்வதேன்?

உ. என் ஆஸ்தீ யேசுதான்:
என் செல்வம் அவரோ:
உன் மேன்மை அற்பதுப்பைதான்.
சீர்கெட்டலோகமே!

௩. என் யேசுவைச்சார்வேன்.
விண் நன்மை நிற்குமே.
உன்னில் யாதோன்றையும் நம்பேன்.
சீர்கெட்டலோகமே?

௪. ஓர் நிமிஷத்திலே,
உன் வாழ்வும் அழியும்.
என் சாவு வருகையிலே,
மகிழ்வும்முடியும்.

௫. ஆனாலும் வாழவேன்:
என் வாழ்வு யேசுவே.
உன் செல்வத்தை நான்வெறுப்பேன்,
சீர்கெட்டலோகமே!

ஐந்தாம் பிரிவு.

விசுவாசிகளுக்குரிய ஆத்மபிரசாதங்கள்.

ாஎசும் கீதம். P. M.

"Fear not, Abraham, I am thy shield and thy exceeding great reward.'

Part I.

க. மண் விண் எங்கும் ஆளும்
நித்ய வயோதீகர்,
ஆபிராகாமின் தேவர்ப்போற்றும்.
அவர் நேசர்;
பூமிவானம் ஏத்தும்
யெகோவா, சுயம்பே:
யாரும் துதிசெய்யும் நாமம்
துதிப்பேனே.

உ. தஞ்சமீபத்தின்பம்
தேடும்படி சொன்ன
ஆபிராகாமின் தேவர்ப்போற்றும்,
நேசமாக.
கல்வி கீர்த்தி பெலம்
இவைவிட்டேன்: உம்மை

நாடுவேனே; நீரோசெல்வம்,
தஞ்சம், கோட்டை.

௩. என்னுயுள் முற்றிலும்
அருள்செய்ய வல்ல
ஆபிரகாமின் தேவர்ப்போற்றும்,
அமைவாக.
தமதன்பனென்று
என்னைக் காக்குந் தெய்வம்,
யேசுசிந்தும் ரத்தங்கொண்டு,
சேர்ப்பார் மோட்சம்.

௪. தூவிக்கழுகேறி,
மோட்சத்திற் சேருவேன்.
தெய்வந்தந்த வாக்கை நம்பி,
பயப்படேன்.
சந்நிதானம் சென்று
தெய்வங்கண்டு, நாயேன்
அருட்செல்வந் துதிசெய்து,
உண்மகிழ்வேன்.

ரஎரும் கீதம். P. M.

Part II.

க. சுயபெலம் நீங்கி
சத்ரு எதிர்த்தாலும்;
நாடுவேனே, வேதப்படி,
கானான்தேசம்.

யேசு முன்னேநிற்க;
பாயும் வெள்ளம் நீங்கி,
காடிருந்தும், செல்வேனாக
மோட்சவழி.

உ. பூர்ணம் இன்பம் செல்வம்
மேவுந் தெய்வ பூமி
கண்டேன்;அங்கேவாழ்வோம்,என்றும்
இளைப்பாறி.
அங்கே பால் தேன் ஓடி
நெய் ரசம் சொரியும்.
சீவமாம் தரும்கனி,
சதாகாலம்.

ரு. எங்கள் நீதிபார்,
சீவதேவாசு,
லோகம் பாவம் வென்றுவாழ்வார்
சாந்தப்ராபு.
சீயோன் கிரியிடம்
என்றும் நிற்குங் கர்த்தா
சுத்தரோடே ஆளுவாராம்,
நித்யராசா.

சு: தஞ்சனம் பேணுவார்,
தஞ்சமீபமாக்கி:
வெள்ளங்கியாற் சிங்காரிப்பார்
சுத்தகன்னி.

அருள்நதிகாட்டி,
இன்பச்சோலையோடே
சீவகனிதந்தருளி,
ஆளுவாரே.

௩எகூம் கீதம். P. M.

Part III.

௧. திரியேகர் முன்னே
களிகூர்ந்துபோற்றி
அவர் தயை துதிப்பாரோ,
வேளிகாடி.
மண்டலத்தார் கேட்பர்
எதிரொலி பாடி,
திருநாமங் கொண்டாடுவார்;
ஒழிவின்றி.

௨. விண்வணையாளுந்தேவர்,
சிரேஷ்டதூதர்போற்றி
சொல்வார் "சுத்தர், நீரோ சுத்தர்,
பரஞ்சோதி.
ஆதியந்த எல்லை
அடங்காத தெய்வம்!
சுயம்பே! யெகோவா! உம்மை
ஆராதிப்போம்."

௩. மீட்பர் சந்நிதானம்,
மீட்டோர் யாரும், தாழ்ந்து

தோத்திரம் செய்வார்கள், என்றும்
தாம் வியந்து.
அன்பின் சின்னங்கண்டு,
விண்ணோர் வசமாகி,
"ஆட்டுக்குட்டி பாரும்" என்று
சொல்வார், போற்றி.

ச. பிதா சுதன் ஆவி
என்றென்றும் வாழ்கவே!
வெல்லும்சேனை, துதிபாடி
பூரிப்பாரோ.
நானும் உடன் கூடி,
"ஆபிரகாமின் தேவன்
எனதீசன்" என்றுபாடி,
துதிசெய்வேன்.

௱எஎ கீதம். 6—8s.

"I will not let thee go except thou bless me."

Part I.

க. நான் அறியாத நாதரே!
இன்னம் உம்மைப் பிடிக்கிறேன்.
என் கூட்டம் முன்போனார்களே:
உம்மோடே தரித்திருப்பேன்.
இராமுழுதும் உம்மோடே
போராடுவேன், ஆண்டவரே!

௨. என் பாவமும் நிர்ப்பாக்யமும்
  நீர் பார்த்து என்னை அறிவீர்.
என்பேரைச் சொல்லுகையிலும்,
  இரத்தத்தால் எழுதினீர்.
உமது தேவப்பேரையோ
எனக்கறிவியும், இப்போ.

௩. விண்லே போராடுகிறீர்:
  உம்மை என்றும்விடமாட்டேன்.
எனக்காய்ச் செத்தோரல்லோநீர்?
  உமது அன்பைக் காட்டுமேன்.
உமது நாமஞ் சுபாவம்
எனக்குத் தெரியப்பண்ணும்.

௪. ஆருஞ் சொல்லாத நாமத்தை
  இன்னம் எனக்குச் சொல்லீரோ?
இன்னமும் வேண்டுவேன் அதை:
  எனக்கறிவியும், இப்போ.
அறிவியாமற் போறதேன்?
உம்மை என்றும் விடமாட்டேன்.

௫. என் தேகமெல்லாம் இளைத்து
  இன்னம் போராடப் பயந்தும்,
என்பெலங் குறையும்போது,
  எனக்குப் பெலம் அதிகம்.
பெலமில்லாமல் தேவனை
மேற்கொள்வது என் நம்பிக்கை.

ாஎ௮ூ கீதம். 6—8's.

Part II.

௧. நான் பெலகீனன்: எனக்கு
இடங்கொடும்; விடமாட்டேன்,
ஓங்கி என்னுள்ளத்துக்கு
கடாட்சிக்க வேண்டுகிறேன்,
போகாமல் எனக்குச் சொல்லும்
அன்பல்லோ உமது நாமம்.

௨. அன்புதான் இப்போதெரியும்:
எனக்காகச் செத்தவர் நீர்,
சந்தேகம் இல்லை: சிநேகம்
போதுச் சிநேகமாகிறீர்.
உமது நாமம், சுபாவம்,
எல்லார்க்கும் அன்புந் தயவும்,

௩. செபத்திற் பெலங்கொண்டு நான்
சொல்லாத கிருபை பெற்றேன்.
விசுவாசத்தைக் கொண்டுதான்
உமது முகத்தைக் கண்டேன்.
உமது நாமம், சுபாவம்
அன்பென்று இப்போ தெரியும்.

௪. பாவியின் ரட்சகரே! நீர்
ஆரென்று இப்போ அறிவேன்?
யேசுவே! என்னைக் கைவிட்டீர்
என்று விசுவாசிக்கிறேன்,

உமது நாமம், சுபாவம்,
அன்பாக என்றைக்கும்நிற்கும்.

ரு. நீதியின் சூரியன் என்மேல்
உதித்தாரோக்யந் தந்தது.
என் பெலங் குறைந்தும்; உம்மில்
உயிர்த்துணையும் வந்தது.
உமது நாமஞ் சுபாவம்
என்னுதாவாயிருக்கும்.

சு. நான் நொந்தும்; பாவம் உலகம்
நாகத்தையும் வெல்லுவேன்.
மான்போலே சீக்கிரத்தோடேயும்
மோட்சத்தை நோக்கி ஓடுவேன்.
உமது நாமம், சுபாவம்,
அன்பென்றங்கே என்றுந் தோன்றும்.

௱எகூம் கீதம். P. M.

Who brought us up out of the land of Egypt.

க. இருள் சாவுசூழும்
எகிப்த்தை நீங்கி,
சாந்தந்தரும் நவதேசம்
நாடிப்போவோம், இனி;
அல்லேலூயா.
தேவைச் சோப்போகிறோம்.

உ. திவ்ய கானன் நாடி,
மகிழ்ந்து சொல்லுவோம்,

அங்கே இஷ்டம் சாந்தம் பற்றி,
பேரின்பமடைவோம்.
அல்லேலூயா,
தேவைச் சோப்போகிறேம்.

௩. காதில்விழுஞ் சத்தம்
கேள்! மிக இனிது.
தேவன் ஆளுங் கானன்தேசம்
ஆரம்பித்திட்டது.
அல்லேலூயா.
தேவைச் சோப்போகிறேம்.

௪. அங்கே கோடி கீதர்
வசமாவர், பாடி.
அன்பால் ஏவப்பட்டோர் வாழ்வர்.
ஆளுவார், தேவாதி,
அல்லேலூயா.
தேவைச் சோப்போகிறேம்.

௫. சீக்ராம் நாமும்பாடி,
அவரின்பம் பெற்று,
மீட்கப்பட்டோருடன் கூடி
வாழ்வோம், துதிசெய்து.
அல்லேலூயா.
தேவைச்சோப் போகிறேம்.

௱அயம் கீதம். 8's & 7's.

"*God forbid that I should glory save in the cross of our Lord Jesus Christ.*

க. சிலுவையினிடம் சேர்ந்து
போக்குங்காலம், இன்பமே.
சீவன் சொஸ்தம் சாந்தம்பெற்று,
பிராணநேசற் சார்வோமே.
அன்புலாவுங் கண்ணைக் கண்டு
சிலுவையில் வணங்க;
இன்பஸ்தலம் தரும் பாக்யம்
நெஞ்சையாற்றும், இன்பாக:

உ. அன்பு துக்கமேவும் உள்ளம்
கிறிஸ்தின் சாவால் உய்ந்திட,
அவர்பாதங் கண்ணீர்ழுந்தும்
தேவன்பைச் சார்வேனுக.
இவ்வுணர்வு தினம்வைத்து,
மீட்பரிடம் சேருவேன்.
சாவாற் சொஸ்தம் பெற்றுக்கொண்டு
நேசரோன்றே துதிப்பேன்.

௱அகம் கீதம். L. M.

"*O Lord God, I will give thanks unto thee for ever.*"

க. பிராணநேசமகாதேவன்!
நன்றுணர்ந்தும்மைத்துதிப்பேன்.
காலமாலை நான் எப்போதும்
போற்றும்படி அருள்செய்யும்.

௨. துயில்நீக்கும் மனோதுக்கம்
நெஞ்சம்பிளந்திடும் துன்பம்
நேரிட்டாலும்; துதிபாடி
மகிழ்வேனே முசிப்பாறி.

௩. கூதிர்கொண்டிருக்குஞ்சாவில்,
என்னுக்குவிழும்அந்தத்தில்,
வாய்பேசாத மனோ இன்பம்
மின்னுங்கண்ணிற் றேன்றப்பண்ணும்.

௪. மரித்தாலும்; செயங்கொண்டு
சேர்வேன் மோட்சம், இகம் விட்டு.
அங்கேநிற்குங் கீதரோடே
மகிழ்வேனே, இன்பத்தோடே.

௫. வானம் எங்கும் எதிரொலி
செல்லுங்கீத மகாதுதி
சங்கீதானரோடேபாடி,
சமீபிப்பேன், பரஞ்சோதி.

௬. அழியாத என்னுத்துமம்
தெய்வ ஸதுதிசெய்யும் நித்தம்,
சீவமுடிசூட்டுங்கீதம்
பாடுவேனே சதாகாலம்.

௱௮௨ம் கீதம். 6–8's.

"*These words which I command thee this day, shall be in thy heart, &c.*"

௧. வீட்டில் நின்றும் இளைப்பாறி
வேதநூலத்யானஞ்செய்து,

தெய்வவாக்கை யார்க்கும் சொல்லி
வியந்து மனமகிழ்ந்து,
ஆத்துமார்த்தம்பெறுமட்டும்
வேதம்சோதிப்பேனே என்றும்.

௨. அருள் ஊற்றுந் தெய்வவாக்கில்
அனுதினம்மனம்வைத்து,
தெய்வதொண்டனாகச் செல்லில்;
சேர்ப்பார் தேவன் என்னைக்காத்து.
அன்பு என்னிற் சுவாலிக்க;
அருள்வாரோ தயவாக.

௩. தேவர் என்னை மார்பிற்றங்க;
துயில்கொண்டு கனாக்கண்டு,
மோட்ச இன்பங் காட்சியாக
பார்க்கும்படி தயைசெய்து,
மீட்சிதரும் சுத்தவேதம்
நெஞ்சையாற்ற, அருள்பண்ணும்.

௪. காலை துயில்விட்டுநீங்கி
மாலைமட்டும் துதிசெய்து,
மருள்தீர வேதங்காட்டி
அருள்கூரும், துணைநின்று.
அன்பென்னெஞ்சிலூறச்செய்யும்;
இன்பவாழ்விற் சோப்புண்ணும்.

௱அ௲ம் கீதம். L. M.

"I must work the work of him that sent me while it is day."

க. தேவனே! நான்சார்வேன்உம்மை:
தெய்வதொண்டுநாளும்செய்து,
மனோவாக்குக்காயம் இவை
ஒப்புவித்தேன், உம்மைச்சேர்ந்து.

உ. தேவர் நியமித்த தொண்டை
பூர்ணமாக நிறைவேற்றி
கொள்ள, ரட்சித்தாளும் என்னை,
தெய்வ சித்தத்தை உணர்த்தி.

௩. அந்தாங்கந் தோற்றும் உம்மை
முன்பு நிற்பீரென்று போற்றி,
அமைந்தும்மைச் சேர்வேன், செய்கை
எல்லாம் உமக்கென்றேயாக்கி.

௪. தேவா! நுகந்தரித்தென்றும்
விழித்தும்மை வேண்டும்படி,
மோட்ச செல்வம் நாடித்தினம்
விரைந்திடச்; செய்யும் ஏவி.

௫. தே! உதாரதயை செய்து
என்னை ரட்சித்தருள் தாரும்;
மோட்சவழிக்கும்மைச் சார்ந்து
விரைந்தோடும்படி, செய்யும்

௱அசும் கீதம். 8's & 7's.

"Hitherto hath the Lord helped us."

க. வாரும், சீவ தயாபரர்!
உம்மைப் போற்ற அருளும்.
பெருகின தயை தேவர்
தந்தால், மனம் பூரிக்கும்.
ஒளியுள்ளோர் பாடுங் கீதம்
நானும் பாடப் போதித்து;
நீங்கா நேசம் தெய்வதஞ்சம்
சாரச் செய்யும், நேசித்து.

உ. தினந்தோறும் அருள் பெற்று
கடனாளியானேனே.
உமதருள், எனதன்பு
உம்மிற் பற்றச் செய்யுமே.
தேவைவிட மனம் நாடும்:
நேசித்தாலுந் தப்புமே.
நெஞ்சைச் சேர்ந்து முத்திரை போடும்
மோட்சஞ் சேரப்பண்ணுமே.

௩. தெய்வதுணை பெற்றுவாழ்ந்து
செயத் தம்பம் நிறுத்தில்;
தெய்வ தயைகொண்டு சென்று
சேர்வேன் இன்ப ஸ்தலத்தில்.
தெய்வ பட்டி கலந்தோட,
யேசு என்னைத் தேடினர்.
மோசம் நீங்கிக் கரையேற்ற,
திவ்ய ரத்தம் சிந்தினர்.

௨௮௰௫ கீதம். C. M.

Psalm xxiii.

க. என் மேய்ப்பரேயேகோவாதாம்:
என்னைத் திர்த்தியாக்கி
செழிப்பிடஞ் சுத்த சலம்
ஈவார், என்னைப் பேணி.

உ. வழிதப்பிக் கலங்கோடில்;
ஆத்துமாவை மீட்டு
நீதி நெறிகாட்டி, அதில்
காப்பார் துணை நின்று.

௩. சாவினிழல் என்னைமூட;
நீரோ என்னைத் தாங்கும்,
உயிர்ப்பிக்கும் ஆவி வா;
பயம் எல்லாம் நீங்கும்.

௪. சத்ரு முன்பு காத்திருந்து
பூர்ணபீடந்தந்து,
வைத்தீர் குறைவில்லாப்பாத்திரம்,
தைலம் தலைக்கிட்டு.

௫. என்னுயுள் நாட்கள் யாவிலும்
தெய்வஅருள்பெற்று,
தெய்வஸதுதி செய்வேன், என்றும்
சந்நிதானம் நின்று.

௨௮௯ம் கீதம். P. M.

The same.

௧. என் மேய்ப்பராயிருக்கிறீர்;
  என் மேய்ச்சலும் நீர்தாமே.
சிறையிற்போன என்னைநீர்
  அன்பாக மீட்டோராமே.
இவ்வாறு மீண்டும் என்றைக்கும்
அலையவே விடாதிரும்.
  உமக்குள்ளானேன் நானே.

௨. இராவில் நீர் நட்சத்திரம்,
  இருட்டிலே என்னொளி.
குறைவில் நீர் என் பொக்கிஷம்.
  என் தாழ்விலே உயர்ச்சி.
கசப்பிலே மகா ரசம்.
இளைத்துப்போம் என்மனமும்
  பெலக்க, நீர் என் சத்தி.

௩. உயிர்தரும் விருட்சம் நீர்.
  என் ஆத்துமா பிழைக்கும்
மகிழ்ச்சிக்கேற்ற சோலைநீர்.
  அமிழ்தமே கிடைக்கும்.
வருத்தமுள்ளபள்ளத்தில்,
என்யேசுவால் என் நெஞ்சத்தில்
  சம்பூரணம் தழைக்கும்.

௪. நிகரில்லாத சோதியே!
  எப்போது பேசினாலும்,

பொருளடங்க வில்லையே
விரும்பிக்கொள்ளும்யாவும்,
உம்மால் உண்டாகும்,யேசுவே!
மா தயவுள்ள நேசரே!
என்றைக்கும் என்னை ஆளும்.

௱அ௰எம் கீதம். C. M.

"Lord, not my feet only, but also my hands and my head."

க. உமதிரத்த விலாவில்
என்நம்பிக்கையுண்டாம்.
என் உறுதி என் இறுதல்
யேசுவின் மரணம்.

உ. குற்றங்களறக்கழுவ
ஊற்றயிருக்கிறீர்.
உமதிரத்தத்தாலென்னை
தெளிக்கக்கடவீர்.

௩. நான் என்றும் உய்யும்படிக்கு
என்னைச்சுத்தமாக்கும்.
என் கால் கை உள்ளம் உணர்வு
கழுவியருளும்.

ச. பூமியை விட்டு மோட்சத்தை
நான் சேருமளவும்,
நீர் பாவந் தீர்த்த ரத்தத்தை
என்னில் தரிப்பியும்.

ராஅஅம் கீதம். 6—8's.

"O the depths of the riches, &c."

க. ரட்சகரின் ரத்தத்தால் நான்
ரட்சிப்படைவ தெப்படி?
அவரைக் கொன்றேருக்காய்த்தான்
மரித்தாரோ? இதெப்படி?
நீர் எனக்காய் மரித்தது
சகல அன்பிலு மன்பு.

உ. இது பரம ரகசியம்:
இதை ஆராய்பவர்கள் ஆர்?
உன்னத ஞானவானேரும்
தேவன்பை அளவறுக்கார்.
பரமஇரக்கம் இதே!
வணங்குங்கள்,லோகங்களே!

௩. மோட்ச ஆசனத்தை விட்டு
அன்பே அதற்குக் காரணம்
மற்றெல்லாத்தையும் மறந்து
அகோரமானமரணம்
பரித்ததால்,எல்லாரையும்
மீட்டார். இதல்லோ இரக்கம்!

௪. என்சுபாவம், பாவம். அதால்
கட்டப்பட்டுநான் கிடந்தேன்.
நீர்பிரகாசித்ததினல்,
என்சிறையில் ஒளிகண்டேன்.

விலங்கைவிட்டு நீங்கினேன்.
எழுந்தும்மைப் பின்தொடர்ந்தேன்:

ரு. இப்போ ஒன்றுக்கஞ்சமாட்டேன்;
யேசுவோடெல்லாம்எனது
அவருக்குள்ளேபிழைப்பேன்,
அவர்நீதியைத்தரித்து.
கத்தர் ஆசனம் நாடுவேன்:
சீவகிரீடத்தை வாங்குவேன்.

௱அகூம் கீதம். 6–8's.

"*Which hope we have as an anchor of the soul sure and steadfast.*"

க. இப்போதேன் ஆத்மாநிலையாய்
தரிக்கும்நிலத்தைக் கண்டேன்,
யேசு என் பாவங்களுக்காய்
காயப்பட்டாரோன்றறிவேன்.
வானம் பூமியும் ஒழிந்தும்,
அவரின் இரக்கம் நிற்கும்.

உ. பிதாவே! உமதிரக்கம்
மனோவாக்கைக் கடக்குது.
உமது சுபாவம் உருக்கம்.
மனந்திரும்பினோருக்கு
அனுக்கிரகஞ் செய்யநீர்
தயவாய்க்கைநீட்டுகிறீர்.

ங. அன்பே உமது ஆழங்கள்:
என் பாவம் விழுங்கினது;

உமதிரத்தப் புண்யங்கள்
   என்குற்றத்தை மூடினது.
யேசுவின் ரத்தத்தாலெங்கும்
எல்லார்க்குந் தயைகிடைக்கும்.

௪. விசுவாசத்தினுல் அதில்
   சுகக்களிப்படைகிறேன்.
பேய் பயமுறுத்துகையில்,
   ரட்சகர்மார்பில்நோக்குவேன்.
அவர் நெஞ்சு ஊக்கந்தான்:
அவரின் பத்தன் பாக்யவான்.

௫. துன்பஅலைகள் ஓங்கினும்,
   சவுக்யம் நேசங் களிப்பு
எல்லாம் ஒழிந்துபோயினும்,
   நான் உம்மில்விசுவாசித்து
தேவன்புஒழியாதென்றே
நிச்சயிப்பேன், என்பிதாவே!

௬. என்மனந்தளர்ந்துதேகம்
   சாகப்போகினும், என்றைக்கும்
உமதன்பில் என்னுத்தமம்
   தன் நங்கூரம் போட்டிருக்கும்.
நான்மோட்சத்திற்புகும்போதும்
உமதன்பெல்லாந்தெரியும்.

௱௬௰ம் கீதம். 6-8's.

Psalm cxlvi.

௧. நான் உயிர் உள்ளவரைக்கும்
   சாவால் என்னுயிர் போயினும்

கர்த்தனை என்றுந் துதிப்பேன்.
சீவன் நினைவும் உள்ளமும்
மோட்சமும் நிற்குமளவும்,
துதிசெய்து விடமாட்டேன்.

உ. விண் மண் பாதாளங்களையும்
உண்டாக்கினவர் மெய்த்தெய்வம்.
நம்பிக்கொள்பவன் பாக்கியன்.
அவர் உண்மை ஒழியாதே;
அவர் வார்த்தைவீணல்லவே.
ஏழை அவர்க்குப் பிரியன்.

ஈ. குருடருக்குக் கண்பார்வை
இளைத்தோருக்குப் பெலத்தை
துக்கித்தோர்க்கின்பத்தைச் சொல்வார்.
அந்யனுக்கவர் உதவி.
திக்கற்றோரையுங் காப்பாற்றி,
சிறையையும் விடுவிப்பார்.

ச. நான் உயிர் உள்ள வரைக்கும்
சாவால் என்னுயிர்போயினும்,
கர்த்தனை என்றுந்துதிப்பேன்.
சீவன் நினைவும் உள்ளமும்
மோட்சமும் நிற்குமளவும்,
துதிசெய்து விடமாட்டேன்.

ாகூகம் கீதம். C. M.

"The bright and Morning Star."

க. என் களிப்புக்குக் காரணம்
என் செல்வச் சீவனே.
பகலிலே என் மகிமை,
ராவில் என் சோதியே.

உ. இருளிலே நீர் தோன்றினால்,
என் மனம் மகிழும்
ஆத்தும நட்சத்திரரே!
என்னிற் ப்ரகாசியும்.

ஙு. யேசு தயையைக் காண்பித்து
"நீ என் சொந்தம்" என்றால்;
என் ஆத்துமஞ் சந்தோஷித்து,
நிறையும் பாக்யத்தால்.

ச. அதடைந்தால், நான் பூமியை
விடக்காத்திருப்பேன்.
கர்த்தரைக்கண்டு துதிக்க,
நான் விரும்புகிறேன்.

ரு. நாகத்துக்குஞ் சாவுக்கும்
அஞ்சாமலிருப்பேன்.
தேவன்பும் விசுவாசமும்
சிறையாக்கிப் பறப்பேன்.

௱௯௨ம் கீதம். 4.-8's. & 2-6's,

"Love is stronger than death."

௧, தேவ அன்பே! நீர் இன்மை.
உமக்கேன் முழுமனதை
கொடுக்கக் காக்கிறேன்.
கிறிஸ்துவின் அன்பின் அளவை
அறிவதே எனதாசை.
நான் அறியாமலேன்?

௨. அவரின் நேசஞ் சாவிலும்
நாகத்திலும் பெலமும்
ஆழமுமானது.
அதை ஆராயுந் தூதர்கள்
சோதித்தாலும் அறியார்கள்:
ரகசியம் அது.

௩. தேவன்பை அறிபவர் நீர்,
என்மேல் இரங்கக்கடவீர்,
அதை என்னில் ஊற்றும்.
நான் ஏங்கிக் கேட்கும் அன்பினுல்
என்னை நிரப்பி ஆவியால்
என்னில் தரிப்பியும்.

௪. உம்முடைய பாதத்திலே
நான் என்றைக்கும் இருப்பதே
என் ஒரே விருப்பம்.
உமது சத்தங்கேட்பது

எனக்கு இன்பங் களிப்பு,
என் மோட்ச பாக்கியம்.

ராகஂநம் கீதம். C. M.

"O Lord, I will praise thee."

க. என் தேவனைப் புகழவும்
அவரின் ரத்தத்தை
என்றும் உணரும் இதயம்,
என் முதற் கோரிக்கை.

உ. என் இதயத்திற் பொறுமை
தாழ்மையுஞ் சாந்தமும்
கிறிஸதுவின் தேவ ஆளுகை
தரிக்கவே செய்யும்.

௩. சீவனுஞ் சாவுங் கிறிஸதுவை
நீக்காதபடிக்கு,
சத்தியஞ் சுத்த நம்பிக்கை
அருளும் எனக்கு.

௪. உமது இருதயத்தில்
மாசில்லை. என்றும்
அத் தேவநேசச் சாயலில்
நின்றேங்க உதவும்.

ரு. நீர் மனிதரின் துக்கத்தைத்
உணர்ந்திரங்குவீர்.

என் துக்கந்தீர்க்கத் தேவன்பை
உணர்த்தக்கடவீர்.

௬. நீர் தயைசெய்யாதிருந்தால்
இளைப்பாறேன், அன்பே
நான் பாவத்தைவிட்டொழிந்தால்
உம்மில் தரிப்பேனே.

௱௬௩ம் கீதம். 8's. & 6's.

"*The fear of the Lord that is wisdom, and to depart from evil is understanding.*"

௧. இங்கே கர்த்தாவுக்கமைந்து,
நான் பிள்ளைபோற் கீழ்ப்படிந்து,
நாடுவேனே ஞானம்.
துன்னெறிவிட்டுப் பயந்து,
நன்னெறிப்பட்டு நடந்து,
தேடுவேனே மோட்சம்.

௨. பாவம்விட்டு நீங்கும் புத்தி
மோட்சம் நோக்குந் தெய்வப்பத்தி
தந்திடும், யேசுவே!
என் தெய்வத்தை நான் வணங்க
தேசாந்திரியாய் நடக்க
தேற்றுவீர், ஆவியே!

௱௬௪ம் கீதம். C. M.

"*The greatest of these is Charity.*"

௧. சீலந்தங்கும் நெஞ்சு, வாழும்
அன்பால் ஏவப்பட்டு.

துணாத்நம் யாவினுள்ளும்
மகா சிரேட்டம் அன்பு.

உ. வித்தை மிகுத்தாலும் என்ன?
பயம் யாதுசெய்யும்?
சற்றே அன்பில்லாதிருக்க,
கடும் பாவம் ஆளும்.

௩. அன்பு நம்மை வசஞ்செய்யும்,
பண்ணைத் தெய்வதொண்டை:
பேயும் அறிந்தஞ்சுமேனும்,
அன்போ அதற்கில்லை.

௪. ஆசை விசுவாசம் நீங்க,
அன்பே நிலைநிற்கும்.
இன்ப நாம்பிசைபாட,
இதே நம்மை ஏவும்.

௫. காராகாரம்போன்ற தேகம்
ஆத்மம் விட முன்னே,
அன்பின் சிறைகொண்டு செல்லும்
பேரின்ப வீட்டிலே.

௱௬௯ம் கீதம். 8's & 6's.

The Beatitudes.

க. அபேட்சாபாவமன்னிப்பும்
பேறலன்றி, அவ்வுணர்வும்

தாம்ருசித்து வாழ்வர்.
நானும் ராச்யம்பெற்றுவாழ
சுதனாகக்களிகூா
செய்யும், ரட்சாகத்தர்!

உ. நவபூமிதரும் பலம்
நூறுபங்குசுதந்திரம்,
சாந்த கர்த்தரோடே
என்றும் பெற்று வாழும்படி,
சாந்தம்செய்யும், என்னைப் பேணி,
தேய்வாட்டுக்குட்டியே!

௩. நீங்காத் தாகந்தந்து ஏவி,
சுத்த வாஞ்சை உண்டுபண்ணி,
நெஞ்சைத் திர்த்திசெய்து,
நீர் என் மனந்தங்கிப், பூர்ணம்
தந்தாலன்றி; எனதுள்ளம்
சற்றும் நிறையாது.

௪. தயாளர்தயை பெறுவர்
அருள்செய்யுந் தயாபரர்
என்னைச் சீலனுக்கும்;
அப்போதே தயையடைவேன்.
சாதமட்டும் கைக்கொள்ளுவேன்,
என்தீசன் நேசம்.

௫. யேசு! உம்மை இப்போ கண்டு
மோட்சம் அடைந் தும்மில் வாழ்ந்து,

தேவைக்காணும்படி
முடிசூட்டுந் தயைதாரும்,
இருதய சுத்தஞ்செய்யும்,
தாரும் இன்பமுத்தீ.

௬. மதபேதன்மைத்யனுக
துற்றம் பிராந்தி அதற்கல்ல,
பரிசுத்தமுலம்
என்னை வைது நிந்தித்தாலும்,
காக்தும் ஸ்வாமி திருநாமம்
சொல்வேன் சாதுமட்டும்.

௭. நற்சிலுவை நான் தரித்தும்
வேதமுலம் துன்பப்பட்டும்
ஆசீர்வதித்தென்னை
நித்தமோட்ச இன்பமுழ்கி
வாழும்படி, தீவ்ய ஆவி
தந்திடும் முத்திரை.

௩௯௭ம் கீதம்.

7's. & 6's.

"Blessed are the pure in heart."

௧. தேவைக்காணுஞ் சுத்தரோ
சேர்வார் மகா பாக்யம்.
ஆத்மநேச யேசுவே!
அருள்செய்யும் சுத்தம்.
பாவம் எல்லாம் நீங்கவே
ஸ்வாமி! நெஞ்சில் அருளூற்றும்.

நித்யானந்தமுடனே
சுத்த நேசந் தாரும்.

௨. தேவை மாத்ராம் நேசிக்க,
பாவக்கறை நீக்கும்,
மறைபொருள் விளங்க
ஆவி போதிக்கட்டும்,
அருள்புரிந் தன்புக்கு
நீளம்சேஜேடாழம் உச்சம்
காட்டித் தேவைக்காண்பித்து
மறை நீங்கச் செய்யும்.

௱௯அம் கீதம். 7's. & 6's.

"He that saith he abideth in him ought himself also so to walk even as he walked."

௧. பாத்துக்குரித்தான
ஒழுங்காய் நடந்து,
நற்சீருக்கேற்றதான
கனியைக்கொடுத்து,
எந்நாளும் பிறருக்கும்
நான் நன்மைசெய்யவே;
எனக்கொத்தாசை பண்ணும்
அன்புள்ளயேசுவே!

௨. இக்கட்டில் தேவரீரை
விடாமற்பற்றியே
உமதுதிருவாக்கை
எவர்க்குஞ்சொல்லவே;

எனக்குத்திடனையும்
அருளிச்செய்திடும்.
மெய்விசுவாசத்தையும்,
என்னெஞ்சிற்கொளுத்தும்.

௩. சிநேகமென்றபோர்வை
எனக்குத்தரியும்,
இடும்பைநீக்கித்தாழ்மை
மனசுக்களியும்,
சந்தோஷம்சமாதானம்
இருக்கும்படிக்கே,
பசாசினாலேவரும்
தீங்கெல்லாம்நீங்கவே.

௱௬௬ம் கீதம். 7's.

"Except ye be converted and become as little children, ye cannot enter into the kingdom Heaven."

க. தேவகல்வி எனக்கு
உம்மாலாகும்படிக்கு,
குணம்ஆசைதாழ்மையும்
எனக்குத்தந்தருளும்.

உ. தன்மேல்நம்பும்நம்பிக்கை
ஞானியென்ற பெருமை
இவைவிட்டுமுழுதும்
உமக்கிணங்கச்செய்யும்.

௩. சுபாவஞானத்தைவிட்டு
பிள்ளைபோற்கீழ்ப்படிந்து,

நான்உம்மாலேபார்க்கவும்
பெலங்கொள்ளவுஞ்செய்யும்,

௪. அப்போஸ்தலஆவியே,
கல்விதேவஞானமே
நித்தியசீவன்இவையும்
எனக்குத்தந்தருளும்.

உ௱௰ம் கீதம். S. M,

"The love of Christ constraineth us."

௧. யேசுவே! தேவனை
மனிதனையும்நீர்
நேசித்தஅன்பினால்என்னை
உடுத்தக்கடவீர்.

௨. உமது ஆவியே
என்னில்தங்கச்செய்யும்:
அத்தால்என்வைராக்கியமே
நேசமாயிருக்கும்.

உ௱௰௧ம் கீதம். S. M,

"The time past of our life may suffice."

௧. பாவமயக்கத்தை,
விட்டேப்போவிழிப்பேன்?
இனித்தூங்காமல்மனதை
எழுப்பக்கடவேன்.
எப்போதுஞ் சேபத்தால்
கர்த்தர் என்றுத்துமம்

காப்பாற்ற வேண்டுவதினால்,
மாறாத சௌக்கியம்.

உ. கருத்தாய்ச் செபத்தில்
நிற்கிற மனதால்,
சகல கறை குறைச்சல்
நான் கர்த்தர் முன்வைத்தால்;
நான் கேட்பதற்கு மேல்
அதிகங் கொடுப்பார்.
என்றும் வாடாப் பாக்கியத்தில்
என்னை நிறுத்துவார்.

௩. பாவ உலகத்தை
ரட்சிக்கக் காக்கிறீர்;
பூரண பாவமன்னிப்பை
நம்புவார்க்கீகிறீர்.
என்னைப்போல் எல்லாரும்
மன்றாடும்படிக்கு,
உமது கிருபாசனம்
ஸ்தாபிக்கப்பட்டது.

௪. இங்கேதானிருந்து
என் பாவத்தை நீக்கி,
என் கர்த்தரின் சாயலுக்கு
என்னைப் புதிதாக்கி,
முடியுமட்டுக்கும்
ஓயாமல் வேண்டுவேன்.

உாயச் விசுவாசிகளுக்குரிய

பிதாவே என்றேன் விண்ணப்பம்
விடாமற் சொல்லுவேன்!

௫. பாவத்தை ஒழித்து
நித்தியநீதியை
என்னுத்துமத்தில்ஸதாபித்து
பூரணகிருபை
கேட்கிற எவர்க்கும்
தாரும், என்யேசுவே!
மீட்புஞ்சுத்திகரிப்பையும்
தருபவர்நீரோ.

௬. விசுவாசத்தினுல்
உண்டாஞ் சௌக்கியத்தைத்
நாங்கள்மெய்யாய்விரும்பினல்;
வேண்டியபொறுமை
உமது ஆவியால்
எங்களுக்குத் தாரும்,
உமது தேவவார்த்தையால்
கிரியைமுடியும்.

௨௱௨ம் கீதம். C. M.

"But rather fear Him."

௧. உள்ளான தேவபயமும்,
தீமையை வெறுத்து
விரோதிக்கிறதுணமும்,
என்னுசையானது.

ஆங்காரமுந்துர்ஆசையும்
எழும்புகையில்; நான்
அவை அடக்குங் காரணம்
தேவபயமேதான்.

உ. இனி நான்உம்மை அகற்றி
விடாதபடிக்கு;
பிள்ளைக்குத்ததும்பயத்தை
எனக்குக்கொடுத்து,
என்கண்மணிதீண்டலுக்கு
பின்னிடும்போலேயும்
பாவந்தீண்டல்நான்பயந்து
விழிக்கவுஞ்செய்யும்.

௩. நான் உம்மைவிடும்நோத்தில்,
ஆ! என்னையுதம்பும்.
மெய்த்துக்கத்தை என்மனதில்
எழுப்பியருளும்.
எந்தக்குற்றமும் மனதை
நோகப்பண்ணச்செய்யும்:
கிறிஸதின் ரத்தத்தாற்சுகத்தை
தேடஏவிவிடும்.

உ௱௬௰ம் கீதம். 8. 7. 4.

"Create in me a clean heart."

க. யேசுவே! நீர் பிதாவோடும்
என்னை வந்திராட்சியும்.

பரிசுத்த ஆவியோடும்
என்னில்வந்து, என்றைக்கும்
வாசம்பண்ணும்.
நற்சீரைத் தந்தருளும்.

௨. ஆத்துமாவுக் கின்பமான
உம்முடைய வார்த்தையே
நம்ப, நீர் உறுதியான
நல்விசுவாசத்தையே
எனக்கீயும்.
தயவுள்ள யேசுவே!

௩. மோட்சபாதை இன்னதென்று
உம்முடைய வார்த்தையால்
கேட்ட நானே அதிற்சென்று
போவதற்கு; நீரன்பால்
என்னை நோக்கி,
ஆவி பொழிந்தருளும்.

௪. என்னில் நெடிதாய் உணர
அவர் என்னைப் போதித்தே,
என்னை ஏவிறலொழிய;
மனத்திருள் நீங்காதே.
நல்ல ஆவி!
ஒளியை யீந்தருளும்.

௨௱௪௰ கீதம். L. M.

"Renew in me a right spirit."

௧. நான் வாஞ்சையாய் என் மனதை
உயரப்பண்ணிப், பாவத்தை

வெறுக்கச்; சுத்தநேஞ்சை நீர்
என்னிற் சிஷ்டிக்கக்கடவீர்.

உ. மனக்கலக்கமற்றேனாய்
நான் உமக்கேற்ற பத்தியாய்
நடக்க; என்னை நித்தமும்
சன்மார்க்கனுக்கியருளும்.

உ௱ரும் கீதம். 6.—8's.

"O Lord I will praise thee."

க. யேசுவே! என்னை எழுப்பி,
என்னுதட்டைச் சுத்தமாக்கி,
துழந்தை நாக்கை யவிழ்த்து,
என்னை ஆயத்தப்படுத்தும்.
துதியின் வஸ்திரம்போடும்.
அப்போதேன் பாட்டேதயவு.

உ. யேசுவைக்கொண்டு தயவு
தேவனை யறியாதோர்க்கு
எல்லார்க்கும் நிறைதயவாம்.
அதின் நீளம் அகலமும்
ஆழம் உயரம் நிறைவும்
வானோர்மயங்கச் செய்யுதாம்.

௩. தயவின் சாட்சியாகவே
நான் பேறுபெற்று உமக்கே

ஊழியஞ்செய்ய நாடுவேன்.
நீர் தரும்வேலை முடித்து,
நீதியின் கிரீடம் பிடித்து,
பலனடையக்கடவேன்.

ச. பின்னும் என்னை அழைப்பித்து,
நன்றுச்சுதென்றுச்சரித்து,
உம்மிடத்துக்கேர்த்தருளும்.
என் கத்தரின் சந்தோஷத்தை
நான் பார்த்து, அன்பின் துதியை
ஓயாமற்பாட, உதவும்.

உ௱௬ம் கீதம்.   C. M.

"*Without me ye can do nothing.*"

க. என் ஆத்துமத்தைத் தாங்கிய
பரமபிதாவே!
நல்லீவு, உம்மாலொழிய,
கிடைக்கமாட்டாதே.

உ. கிருபை பெலம் ஞானமும்
உம்மிலிருக்குது.
உமதாவியல்லாமலும்,
நன்றென்றுமீராது.

௩. செபிக்கும் யேசுவைக் கேட்டு
சுத்தநினைவையும்,
நினைத்துப் பேசுவதற்கு
எங்களுக்கருளும்.

௪. அவர் ரத்தஞ் சிந்தினதால்
வாங்கின கிருபை,
அவர் பூமிக்கூற்றுவதால்;
அதுவே என்துணை.

௫. நன்னினைவு சொல் செய்கையும்
எங்களிலானல், நீர்
காரணமாய் அவையிலும்
எங்களை ஏவினீர்.

௬. யேசுவைக்கொண்டு செபிக்க
உம்மாற் பெலங் கொண்டோம்.
எங்களில் என்றுமிருக்க
உம்மைவேண்டுகிறேம்.

உ௱எம் கீதம். C. M.

"*The way, the truth and the life.*"

௧. மனதைப் புதிதாக்கிற
யேசுவே! அடியேன்
தேவமுதக்கொப்பாகிய
சாயல் எப்போதாவேன்?

௨. வழியுஞ் சத்யமுமாய் நீர்
சீவனுமாய்,என்னை
உயிர்த்துணர்த்தக்கடவீர்.
நடத்தும், என்பாதை.

௩. மண் விண்ணிலெல்லாம் இதொன்றை
எனக்கு அளியும்.

ஒரே ரட்சகராயும்மை
அறிவதைத் தாரும்.

௪. அன்பின் சீவனை எனக்கு
தந்தேன்னை உமக்கும்
தேவ ஐக்கத்தாலடுத்து,
என்றைக்கும் நேசியும்.

௫. இப்போ அங்நேசங் துவக்கி
உமக்கு நான் என்றும்
பிரிந்து விடாதபடி,
காப்பாற்றியருளும்.

௨௱அம் கீதம். C. M.

The same.

க. மெய்வழிநீரோ, யேசுவே!
நீர் பாவநாசராம்.
பிதாவிடத்திற் சேர்வதே,
உமதிரக்கமாம்.

௨. சுத்தபிதாவிடத்திலே
செல்பவர் யாவரும்
உமது வழியாகவே
அன்பாய்ச் சோவேண்டும்.

௩. சத்தியம் நீரோ சொல்லிய
வார்த்தை மெய்ஞ் ஞானமும்
நெஞ்சில் உண்டாக்கிச், சகல
கறை அகற்றிடும்.

௪. சீவனும் நீர். அன்பால் உம்மை
நம்புந்தேவபத்தர்,
மாணம் நாகம் இவை
அடையாது,வாழ்வர்.

௫. நீர்வழி சத்தியம் சீவன்:
வழியைக் காட்டிடும்:
சத்தியத்தைப் போதித்தென்றும்
சாகாச் சீவன் தாரும்.

உ௱௬௰௭ கீதம். P. M.

The same.

க. கடாட்சமுள்ள யேசுவே!
என் நெஞ்சை நீர் நன்றாக
சந்தோஷிப்பித்து, என்னிலே
மிகுந்த ஊக்கமாக
தெய்விக அன்பை ஊற்றிய
தயையினலே; உத்தம
புகழ்ச்சி சொல்வேனக.

உ. கதிக்குப்போகும் மார்க்கம் நீர்:
அதற்குள்ளான யாரும்
தப்பார்கள்: கைகொடுக்கிறீர்.
பிரிந்துள்ளோர் எல்லாரும்
அழிந்துபோகிறவர்களே.
நடத்தும் சுவாமி! உம்மிலே
நிலைக்க, என்னை ஆளும்.

௩. யதார்த்தம் நீர்: நான் உம்மையே
தெரிந்து கொண்டிருப்பேன்.
பொருளும் சாரமும் நீரே:
பொய்யானதை வெறுப்பேன்.
உம்மாலே பாக்கியம் வரும்.
மெய்யே என்நெஞ்சை என்றைக்கும்
உமக்கு நான் கொடுப்பேன்.

உ௱யங் கீதம், 8, 7, & 4.

"*Guide me, O thou great Jehovah.*"

௧. பாதைகாட்டும் மாயேகோவா!
பாதேசியான நான்
மாபெலகீனன் அல்லவா?
இவ்வுலோகங் காடுதான்:
வானகாரம்
தந்து, என்னைப் போஷியும்.

௨. சீவதண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்துதாருமே.
விளக்கும் மேகதம்பத்தை
வழியில் நடத்துமே.
வல்லமீட்பர்!
என்னைத்தாங்கும், யேசுவே!

௩. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்,
சாவின்மேலும் வெற்றிதந்து
என்னைச் சேர்க்கும் மோட்சத்தில்

கீதவாழ்த்தல்
உமக்கேன்றும் பாடுவேன்.

உ௱௰௰கம் கீதம். 7's.

"He will feed his flock like a shepherd."

க. மேய்ப்பர்கையில் ஏந்தினன்
தீயில் நீக்கப்பட்டவன்.
அவன் ஆத்துமத்தை ஆர்
துக்கமாக்கத் துணிவார்?
யேசு மனந்தாங்குவார்.
யேசு பயம்நீக்குவார்.
காணு ஆட்டைக் கண்டவர்,
இன்னங் காத்திருப்பவர்.

உ. என்றும் அவர்க்கிணங்கி,
வழிச்சென்று விரும்பி,
அவரைச் சிநேகித்து,
எதிர்த்தோரை நகைத்து,
பாவம் பயந் தூரத்தில்
யேசுவை யென்பக்கத்தில்
கண்டு, அவர் கிருபை
தேடத், தாரும் அபேட்சை.

௩. காணுப்போன ஆட்டை நீர்
தேடிக்காணக்கடவீர்.
துக்கம் ஆற்றித்தோளிலும்
சுமந்தேற்றி அருளும்.

மேய்ப்பர் சத்தம் அறிந்து,
அத்தால் என்றும் மகிழ்ந்து,
என்றும் உம்மில் வாழுவேன்:
ஆவியாலே பிழைப்பேன்.

௪. உம்மிலே நான் பிழைத்து
பாவம் நீங்கும்பொழுது,
நான் கெடாதபடிக்கும்
மோட்சானந்தம் சேர்த்திடும்:
ஆட்டைப்போலும் பத்தரில்,
நானுந் தெய்வ மந்தையில்
திவ்விய சுதந்திரம்
பெறும்படி அருளும்.

௨௱௰௨ம் கீதம், L. M.

"If any one look wisdom let him ask of God."

க. ஆ! என் பிதாவே! என்னிலே
இருக்கும் அறிவின்மையை
அகற்றிப், புது நெஞ்சையும்
குணத்தையுந் தந்தருளும்.

௨. என்றைக்குமுள்ள மாதயை
இருக்குந் தேவ ஞானத்தை
என் ஆத்துமாவுக்கருளும்:
இவ்வேண்டுதலைக் கேட்டிடும்:

௩. அதும்மிலே பிறந்தது:
அதினுடைய மேன்மைக்கு

ஒப்பில்லை. புண்ணியமெல்லாம்
அதின் வரங்களால் உண்டாம்.

ச. பிழைக்கவுஞ் சுகிக்கவும்
அதே வழியைக்காண்பிக்கும்:
அதின் சொற்கேட்கும் மனிதன்
செத்தும், பிழைத்திருப்பவன்.

ரு. ஆ! எனக்கு நீர் தயவை
செய்தும்முடைய ஞானத்தை
என் ஏழை ஆத்துமாவிலே
இருக்கச்செய்யும், பிதாவே!

உ௱௰கம் கீதம்,   L. M.

"Thou hast delivered my soul from death, my eyes from tears and my feet from falling."

க. என் மீட்பரால் என்னாத்துமம்
ரட்சிக்கப்பட்டிருக்குது:
அத்தால், அழாத விழியும்
வழுவாக் காலுமாகுது.

உ. அவருக்கே என்கால் ஓடி,
என் கண் தம்மழகைப் பார்த்து,
என் உள்ளம் அவரைப்போற்றி
துதிக்க, என்றுந் தேடுதே.

உ௱௰௪ம் கீதம். P. M.

"Christ all in all."

க. யேசுநாதரே!
என் சுகிர்தமே!
நீர் என்பூரிப்பு: என்றைக்கும்:
உம்மிற் பாக்கியந் தழைக்கும்.
உம்மை நோக்குவேன்.
என்னைச் சேருமேன்.

உ. மறைவின் கீழே
ஓடுவேன். நீரோ
என்னைக் காத்துக்கோள்வீராக.
சாத்தானை அழிப்பீராக.
அப்போ தேழையேன்
தப்பி மீளுவேன்.

௩. தேவரீருக்கு
மேன்மை தக்கது.
உம்முடைய சோதியாலே
நான் பிரகாசமானதாலே,
என்றுந் தாழ்மையேன்
உம்மைப் பற்றுவேன்.

உ௱௰௫ம் கீதம். 7 & 6.

"The light of the world."

க. அருளின் சோதியான
அன்புள்ள யேசுவே!

நாரின் சீவனுன
உயர்ந்த நாயனே!
என் பாவத்தை மன்னித்து,
சந்தோஷத்தைக் கொடும்.
சினத்தை நீக்கிவிட்டு,
என்மேல் இரங்கிடும்.

உ. நீர் தேவ ஆவியாலே
மகிழ்வும் வன்மையும்
தந்தென்னிலே அன்பாலே
எல்லாம் நட்ப்பியும்.
என் நெஞ்சினுலே கெட்டேன்,
என் சென்ம பாவத்தால்.
நன்மை நீதி நீங்கினேன்,
நான் செய்த தீமையால்.

௩. தயாபரா! ரட்சித்து,
துர்ச்செய்கை யாவையும்
என் ஆத்துமாவை விட்டு
விலக்கிப் போக்கிடும்.
என் நெஞ்சு சுத்தமாக
நல் வார்த்தைக் கேற்கவே
நடக்கத்தக்கதாக
இரங்கும், கர்த்தரே!

உ௱ய௯ம் கீதம். C. M.

"No other name given under Heaven.'

௧. எங்கள் முயற்சிப் பலனுல்
நாம் சயங்கொள்ளோமே.

நீர் சிந்தின இரத்தத்தால்,
வெல்வோம், நல்மீட்பரே!

௨. நாம் மீறி விட்ட கற்பனை,
இடி முழக்கமாய்
நாசப்படுத்தும் எங்களை,
கர்த்தாவின் முனிவாய்.

௩. என்றாலும், நமக்காகவே,
நீர் வந்து மரித்தீர்.
பாவத்தைப் போக்கும் பலியே!
என்றைக்கும் வாழுவீர்.

௪. கர்த்தாவே! நீர் மரித்ததால்,
வாழ்ந்து பிழைக்கிறோம்.
நீர் அருளிய பலியால்,
ரட்சிப்பை அடைவோம்.

௫. இவ்வாழ்வு, சீவன் முத்தியும்,
கிடைக்குங் காரணம்.
நீர்பட்ட பாடு மரணம்:
உமக்கே வந்தனம்.

உ௱௰௭ம் கீதம். C. M.

"Out of the mire and clay."

௧. மிகுந்த பாவச்சேற்றிலே,
விழுந்தவனானேன்,

விஸ்தார பூதலத்திலே
சகாயத்தைக் காணேன்.

உ. ஆ கர்த்தரே! என் நோவிலே
சகாயாயிரும்.
தெய்வீக அன்பை நெஞ்சிலே
நிறுத்தி ரட்சியும்.

ரு. அதே, அன்புள்ள யேசுவே!
என் ஆவியிற் பயம்
நில்லாமல் விட்டுப்போகவே,
பலத்த எத்தனம்.

ச. என் தேகமும் என் ஆவியும்,
பிரியும்பொழுதே;
உம்மைக்கண்டு, சதாகாலம்
சந்தோஷங்கொள்வேனே.

உருயிஅம் கீதம். 8's & 7's.

"Treasure in earthen vessels."

க. தேவரீரை விசுவாச
பத்தியோடே தொழுவேன்;
தாழ்மையாக நேசமாக
உம்மையே நான் அண்டினேன்.
நீர் மண்ணான பாண்டமான
என்னை நோக்கக் கேட்கிறேன்.

உ. என்னைச் சுத்த சீர்ப்படுத்த
தயை பண்ணும், கர்த்தரே!

என்னைச் சொந்த ஆடாய்க்கொண்ட
  மெய்ப்பரான உம்மையே
சேர்வேனுக. நீர் அன்பாக
  என்னைப் பாரும், யேசுவே!

ங. நேசத்துடன் நீர் உம்மோடே
  ஐக்கமாக்கி எல்லோர்க்கும்
ஈயும் ரட்சை அடையவே,
  தயை என்மேல் அருளும்.
யாவும் நீரோ: தேவரீரோ
  என்னைப் பார்த்து ரட்சியும்.

ச. ஆ! என் ஞான ஒளியாகும்
  தெய்வ ஆட்டுக்குட்டியே!
எனதாவி உம்மைச் சேரும்:
  அதின் மணவாளனே!
பட்சத்தோடும் தயவோடும்
  என்னைப்பாரும், மீட்பரோ!

உாயகூம் கீதம். P. M.

"The living bread."

க. தெய்விக அன்னமாகும் நீர்,
  உம்மாலே ஆசை ஆறும்.
வனாந்தரமான லோகத்தில்
  என்னெஞ்சும் உம்மை நாடும்.
பிதாவின் ஈவாம் மன்னுவே!
என்னைப் பொல்லாத இச்சைக்கே
  விலக்கிக், காத்துக்கொள்ளும்.

உ. உயிர்பொருந்தும் ஊற்றுநீர்!
என் தாகம் உம்மால் தீரும்.
நிறைந்த ஈவுண்டாக்கினீர்:
அது எப்போதும் ஊறும்.
என்னையும் ஆற்றிப் போஷித்து,
நற்சீரைத்தந்து, மோட்சத்து
சுகிர்தத்தை உண்டாக்கும்.

உ௱உயிம் கீதம். L. M.

"The true light."

க. ஆ! உலகத்தின் ஒளியாய்
உதித்த யேசுக்கிறிஸதுவே!
இருள் அடைந்த மாந்தர்க்காய்
பிறந்த சீவசோதியே!
எங்களிற் பிரவேசியும்:
பிரகாசமாக்கி அருளும்.

உ. சொல்லுக்கெட்டாத அன்பினல்
தேவ சொரூபமானவர்
இப் பூமியிற் பிறந்ததால்;
நிர்ப்பந்தமுள்ள மனிதர்
மகிழ்ச்சியாகப் பாடவே
இடமுண்டாக்கப்பட்டதே.

௩. கத்தர் இவ்வளவன்பினல்
காண்பித்த நல்ல யோசனை

நம்மிற் பலிக்க; அதினால்
  குழந்தைக்கேற்ற சிந்தனை
நமக்குண்டாகும்படிக்கே,
ஓங்கும், தேவசுதனே!

௨௱௨கம் கீதம். P. S. M.

The same.

௧. கர்த்தாவாம் யேசுவே!
அடியார் நெஞ்சிலே
  புதிய சீரைச் சிட்டியும்.
பெரு வெளிச்சமாய்,
விளங்கி நித்தமாய்,
  அதிலே பிரகாசியும்.

௨. உம்மாலே ஈவெல்லாம்
பூரணமாய் உண்டாம்.
  பிதாவின் சாயலாய், நீரே
எல்லாம் சீராக்கிறீர்.
முற்றுமே மாற்றுவீர்.
  எந் நன்மையும் அளிப்பீரே.

௩. பெரு வெளிச்சமே!
அனுதிபொழுதே!
  நாங்கள் உம்மாலே மிகவும்
சீர்ப்படக்கூடுமே.
நீர் எங்கள் நெஞ்சிலே
  தினமும் ஒளி அருளும்.

௪. அடியார் பத்தியாய்
உமக்கு மேன்மையாய்
வெளிச்சத்தில் நடக்கவே,
நீர் உமக்கேற்கவும்,
புதுக்குணத்தையும்,
மேன்மேலும் கொடுப்பீராக.

௨௱௨௰ம் கீதம். L. M.

"This one thing I do."

௧. ரட்சகரான யேசுவே!
இரங்கி எனக்குதவும்.
பூலோகம் பற்றும் ஆசையே
அகற்றி, என்னில் வந்திடும்.

௨. உம்மை எப்போதும் நேசிப்பேன்.
வேண்டுதல்கேட் டிரங்குவீர்.
உம்மால் திருத்தியாகுவேன்.
சுத்தாங்கந் தாரும், தேவரீர்.

௩. பூமியில் தங்கும் நாளெல்லாம்
உலக வாழ்வை வெறுப்பேன்.
யேசுதானே என் விருப்பம்:
அவரை நாடிப் பற்றுவேன்.

௪. அவர் காலடிகளை நான்
பற்றிப் பின்றொடர்ந்தோடுவேன்.
மேலான அவர் அன்பைத்தான்
தினமும் எண்ணிக்கொள்ளுவேன்,

௨௱௨௫ம் கீதம். 6—8's.

The same.

க. என்னாத்துமத்தின் நேசரே!
உம்மையறிவது பாக்யம்.
நம்பாமைநீக்கி நன்மையே
உம்முடன் நன்மைகாண்பியும்.
யேசுவே! உம்மை எனக்கும்
பேர் சுபாவம் எல்லாம் உரையும்.

௨. நீர் என்னோடிருக்க, உம்மை
நான் அறியாததெப்படி?
குளறும் பேச்சாய்ச் செபத்தை
நான் பண்ணியும்; நீர் இரங்கி
உமதுநாமத்தைச் சொல்லும்:
உம்மைத்தாம் வெளிப்படுத்தும்.

௩. மண்பூச்சியான என்னோடு
நீர் தயவாகப் பேசினால்;
திறந்த ஞானக்கண்ணோடு
நான் பார்ப்பதற்கு, ஆவியால்
வேதார்த்தத்தைத் தெரிவியும்.
உம்மைத் தாம் வெளிப்படுத்தும்.

௨௱௨௬ம் கீதம். L. M.

"The mind that was in Christ."

க. கர்த்தாவே! உம்மைப்போல நான்
மிகுந்த அன்பு சுத்தவான்

ஊர்க்கமுள்ளோனாகவே
இருக்கச் செய்யும், யேசுவே!

௨. இங்கே இருக்கும் அளவும்
நம்பிக்கையுடன் வாழவும்,
என் சித்தந் தேவரீருக்கும்
அடங்கவுஞ் செய்தருளும்.

௩. இறந்துபோகும் நேரத்தில்;
சிறந்து நானும் மோட்சத்தில்
உம்மோடிருந்து வாழவே,
கடாட்சியும், நன் மீட்பரே!

௩௱உ௰ம் கீதம். 7's.

"Follow the Lamb."

௧. உம்மை, ஆட்டுக்குட்டியே!
எனதாவி தேடுமே.
எப்போதும தடியேன்
உமக்கேற்றேனாகுவேன்!

௨. நான் ஓர் ஆட்டுக்குட்டியாய்,
சாந்தமுள்ள விதமாய்,
என் உள்ளத்தை உமக்கே
படைப்பேன், என் கர்த்தரே!

௩. எனக்கு என் நோவிலும்,
வருத்த இக்கட்டிலும்,
யேசு! திடன்தாரும்: நான்
அதால், உம்மைப் பற்றுவேன்:

௪. பாவத்துக்குத் தூரமாய்
தேவரீரை உண்மையாய்
என்றென்றைக்கும் யாவிலும்
நான் பின்பற்ற அருளும்.

௫. மோட்சத்தில் உம்மண்டைதான்
மாசில்லாதோனாக, நான்
நிற்கவும் என்றென்றைக்கும்
உமக்கே ஸ்தோத்திரம்.

௨௱௨௮ம் கீதம். L. M.

"*Thou knowest that I love thee.*"

௧. நான் உம்மை நித்தமுள்ளத்தால்
சிநேகிப்பேன், என் யேசுவே!
நான் உம்மை நித்தம் வாஞ்சையால்
பின்பற்றுவேன், என்மீட்பரே!

௨. என்நேசரே! ரட்சிப்புக்கு
உதித்த தேவமைந்தனே!
முன் உம்மைச் சேர்ந்திராதது
எனக்குத் துன்பமாயிற்றே.

௩. உம்மைப்பற்றாமல் வீணாய்
பொல்லாங்கைச்செய்துசுற்றினேன்,
பாத்தை விட்டுத் தூரமாய்
நிலக்கையன்பாய்ப் பற்றினேன்.

ச. இப்போது நான் வணக்கமாய்
நடப்பதற்குத், தேவரீர்
என்னைத் திருப்பி மாஅன்பாய்
பிதாவிடத்திழுக்கிறீர்.

ரு. இதே இரக்கம்மாதயை.
அன்புள்ள உம்மைப் போற்றுவேன்.
ஆயேசுவே! என் நெஞ்சத்தை
உமக்கன்பாய்ப் படைக்கிறேன்.

உ௱உகூ௯ம் கீதம்.   7 & 6.

The same.

க. எவற்றிலும் உயர்ந்த
அன்பான யேசுவே!
பாத்திலே சிறந்த
பத்தாவே! உமக்கே
என் நெஞ்சை வாஞ்சையாலே
கொடுத்திருக்கிறேன்.
நீர்பட்ட நோவினாலே
சுகமடைகிறேன்.

உ. என் சோர்வை நீரேமாற்றி,
என்நெஞ்சின் துக்கத்தை
கடாட்சத்துடன் ஆற்றி;
புலம்பும் ஏழையை
ரட்சிக்கத்தக்கதான
இம்மானுவேலானீர்.

கர்த்தாவே! நீர்மெய்யான
அப்பங்கொடுக்கிறீர்.

௩. ஆ யேசுவே! மலர்ந்த
முகத்தைக் காண்பியும்.
என் உள்ளத்தில் உயர்ந்த
அன்பாய்ப் பிரகாசியும்.
என்னில் நீரோதரித்தால்,
களிப்பன். யேசுவே!
என் உள்ளத்தை நீர் விட்டால்;
சலிப்பன், மீட்பரே!

௨௱௯௰ம் கீதம்: C. M.

The same.

௧. அடியேனுக்கு, யேசுவே!
நீர் செய்த கிருபை,
நான் உம்மை நம்பும்படிக்கே
எனக்கு நற்கொடை.

௨. மிக உயர்ந்தவிதமாய்
நீர் எனக்கும்மையே
அளவில்லாத நேசமாய்
அருளிச் செய்தீரோ.

௩. ஆ என்னிலுள்ள நெஞ்சையே
உண்மையாய் அடியேன்
எனதென்றெண்ணமாட்டேனே
உமக்குத்தருவேன்.

௪. உம்மிலேநானும், மீட்பரே!
இனி என்றென்றைக்கும்
தரித்திருக்க, என்னிலே
நீருந் தரித்திடும்.

௫. அப்பொழுது நான் வாழுவேன்:
என்றும் உம்முடனே
குறைவில்லாமல் அடைவேன்
நித்திய களிப்பே.

௨௱௩௰௧ம் கீதம். P. M.

The same.

௧. என்னை, யேசுவே!
உம்மிடத்திலே
சேர்ச்சொல்லும்: ஏற்றுக்கொள்ளும்.
யேசுநாதரே!

௨. தேவவாக்கியம்
என் நட்சத்திரம்.
ஈட்சைகாட்டி, ஆக்கும்சித்தி
தேவவாக்கியம்.

௩. உம்மைப்பற்றுவேன்.
காட்சி நாடுவேன்:
ஆவலோடும் பத்தியோடும்
உம்மைப்பற்றுவேன்.

௪. தேவமைந்தனே!
நல்ல மீட்பரே!

உம்மை நாடும் நெஞ்சுவாழும்.
தேவமைந்தனே!

உ௱௩௰உம் கீதம். 8. 7. 4.

"In Christ a new creature."

க. என்னைத் தேவசாயலான
சிஷ்டியாக்கிப், பின்பு நான்
கெட்டபோதென் மீட்பான
கத்தரோ! நீர் நேசவான்.
என்னை என்றும்
உம்மில்நிற்கச் செய்திடும்.

உ. மானிடர்க்கு மார்க்கத்தையும்
மெய்ம்மையையும் நித்திய
சீவனையும் மோட்சத்தையும்
ஈந்த மீட்பாகிய
நீரோ என்றும்
என்னிற்றங்கி ரட்சியும்.

௩. எனக்காகப் பாடுபட்டும்
நிந்தையுள்ளதாகிய
முடிபெற்றுச் சாதுமட்டும்
கஸதிப்பட்டு ஏறின
யேசு சுவாமி!
என்னைக் காத்துரட்சியும்.

உ௱௬௩ம் கீதம். C. M.

"To live is Christ and to die is gain."

க. லோகத்தைமீட்டுக்கொண்டென்னை
மோட்சத்திலேறவும்
தாமாய் மரித்த கர்த்தனை
நான் அறிந்தால், பாக்யம்.

உ. அவனை நான் உள்ளளவும்
சிநேகித்த பின்னை;
அவருக்காய் மரிப்பதும்
என் மனதின் ஆசை.

௩. பாவஞ் செய்யாமல் உமக்கு
நான் பிரியனாகவும்,
என் பாவமெல்லாம் மன்னித்து
ஞான பெலந் தாரும்.

௪. இப்போ என் பாவத்தை நீக்கி,
அன்பால் என்னை வெல்லும்
சித்தத்தின்படி நடத்தி,
காப்பாற்றும் என்றைக்கும்.

௫. பாவத்தை மன்னிப்பவரே!
செபங் கேட்டிறங்கும்.
என் பாவத் துக்கம் நீங்கவே
இரட்சித்தருளும்.

௬. நான் ரட்சிக்கப்பட்டுமக்கும்
சீவிக்கக் கடவேன்.

மண் விண்களில் வேறென்றையும்
நான் விரும்ப மாட்டேன்.

௨௱௮௪ம் கீதம். C. M.

"I will come in unto you."

க. நொருக்கப்பட்ட நெஞ்சிலே
பிரவேசிப்பேனென்றீர்.
அவ்வாக்குக் கேற்றதாகவே,
என்னிற் பிரவேசிப்பீர்.

உ. இதில் உமது கோபத்தை
அகற்றிப்போடுமே.
உம்மோடு சேரும் நெஞ்சத்தை
அன்பாய் நடத்துமே.

௩. பாவியேனைச் சதாகாலம்
அன்பாக நோக்குவீர்.
நீர் கிறிஸ்துவின்நிமித்தம்,
என்குற்ற மன்னிப்பீர்.

௪. என்னுத்மலாப யேசுவே!
அழிந்தேனை நோக்கும்.
நானும்மிலென்றும் வாழவே,
என்னைச் சேர்த்துக்கொள்ளும்.

௫. அன்பாக என்னை நோக்கினல்,
என்னுவி வாழுமே.
அதற்குநீர் தேவாவியால்
என்னை நிரப்புமே.

உ௱௯௩ம் கீதம். L. M.

The same.

௧. ஆ! யேசுவே! நான் வானத்தில்
உயர்த்தப்பட்டிருக்கையில்;
எல்லாரையும் என்பக்கமே
இழுத்துக்கொள்வேனென்றீரே.

௨. என் மனசை இழுக்கையில்;
அது கெட்ட உலகத்தில்
உள்ளானதை அரோசிக்கும்:
அனந்த நன்மையிற்படும்.

௩. தாரதலத்தில் உம்முடன்
உபத்திரப்படாதவன்,
உம்மோடு விண்ணில் வாழ்ந்திரான்.
சகிப்பவன் சந்தோஷிப்பான்.

௪. மகாதலத்தில் தேவரீர்
இருப்பிடம் உண்டாக்கினீர்:
அங்கே வசிக்கும் நீதியர்,
இக்கட்டும் நோவும் அற்றவர்.

உ௱௯௪ம் கீதம். 6 & 7.

"Let him take up his cross."

௧. சிலுவை சுமந்தோனாக
உம்மைப் பற்றி வருவேன்.
ஏழைப் பரதேசியாக,
மோட்ச ஸ்தலந் தேடுவேன்.

உற்றார் மேன்மை ஆஸ்தி கல்வி
  முன்னோர் சொல்லும் ஞானமும்
அற்ப குப்பையென்று சொல்லி
  வா, என்னையே இழும்.

௨. உமக்கேற்ற பாடுபட்டோன்
  நஷ்டப்பட மாட்டானே.
உமக்கென்று சீவன்விட்டோன்
  சாகாச் சீவன் பெற்றனே.
உம்மை அப்பா பிதாவென்று
  சொல்லி, என்றும் வாழுவேன்.
கஸ்திப்பட்டுஞ் சாவும்வென்று
  விண்கிரீடம் அடைவேன்.

௩. நெஞ்சமே! உன் மேன்மை எண்ணு:
  வருஞ் செல்வம் நோக்கிப்பார்.
மோட்சசாயல் இங்கேகொண்டு
  உன் சுதந்தீரத்தைக் கார்.
கொஞ்சவேளைக்குட் பறந்து
  யேசுவண்டை சேருவேன்.
தேவதூதரோடே நின்று,
  என்றென்றைக்குந் துதிப்பேன்.

௨௱௯௭ம் கீதம். 4-8's & 2-6's.

"Strangers and Pilgrims."

௧. துன்பமுள்ள தேகர்! வாரும்.
  வாரும் பிரலாபர் யாரும்,
    பிரயாணக்காரர்!

துக்கம் அச்சம் மறந்திட்டு,
கண்ணீர் பாய வனம்விட்டு,
நோக்கும், திவ்யநகர்.

உ. லோகம் காலம் விட்டுநீங்கும்:
நோக்கும் அந்தத் திவ்யஸதலம்:
அது சுத்தர் வீடு.
விசுவாசக் கழுகேறி
விண்ணிற்சென்று, தெய்வகிரி
சேரும், இன்பம் பெற்று.

ந சுத்தருடன் துக்கப்பட்டு,
இகம்விட்டு முத்திபெற்று,
சேர்வோம் பாானந்தம்.
கிலைப்படும் விசுவாசர்
சிலுவைதரிக்கும் நேசர்,
பெறுவாரோ கிரீடம்.

ச. இதோ நெஞ்சை ஏவுமின்பம்;
சோருமனந் திடமாக்கும்:
செத்தோர்க்குயிர்தரும்.
இங்கேபடுந் துன்பம் விட்டு,
அங்கே ஏறிச் செயம்பெற்று,
மகிழ்ந்திட்டு வாழ்வோம்,

ரு. மனுதீதமானதேவை
கண்டுசெய்வோம் தரிசனை.
விளங்கும் அக்காட்சி,

வானளாவும் இன்பகீதம்
பாடச்செய்து, பாப்பிடும்
நித்ய ஞான ஒளி.

௬. ஆசனத்திற் பிதாவுடன்
நித்ய மேன்மை யுள்ளசுதன்
ஏகசப்த ஆவி,
மனந் திர்த்திசெய்யும் வண்ணம்,
நாம் வணங்கித் தாழ்ந்து நித்தம்
துதிசெய்வோம் கூடி.

௭. அந்தரங்க சீவன் காட்டி,
தீர்த்தியாக்கி, நம்மை ஏவி,
சந்நிதானம் வந்து,
சேர அருள்செய்யுமட்டும்;
நாம் சிலுவைதரித்தென்றும்,
சார்வோம், உம்மை, யேசு!

உ௱௩௮ம் கீதம். 7's. & 6's

"Deliverance in dauger!"

௧. தரணியேலின் தேவனே!
கேளீர் என்பிரார்த்தனை:
வந்தாட்சைசெய்யுமே:
பூட்டுந் சிங்கவாயை.
ஆத்ம நாசம்புரிய,
லோகம் பாவம் பேயும்,

எதிர்த்து நெருங்கின:
  புகலிடந் தாரும்.

உ. யாரும் போற்றுந் தேவனே!
  எனக்கருள் செய்யும்.
சிங்கத்துக்குத் தூரமே
  என்னைக் காத்துப் பேணும்.
உடன்பாட்டின் தூதனே!
  வந்து என்னைக் காத்து
மீட்கவல்ல யேசுவே;
  உம்மைச்சார்வேன் நன்று.

ஙு. தானியேலின் தேவனே!
  உம்மையாரும் போற்ற,
கையைத் தந்து இப்போதே
  என்னை மீட்பீராக.
வல்லதேவை யாவரும்
  என்றுந்துதிசெய்க.
நேசரொன்று நம்பியும்,
  அஞ்சுவார்களாக.

ச. அவர் எங்கும் ஆளுவார்
  எல்லை அடங்காமல்:
அவர் நித்தம் வாழுவார்
  மாறுபாடில்லாமல்:
ஊழிகாலம் பேரினும்;
  வயோதிகராகி
நிற்பர், ஒழியாமலும்
  நித்ய கிர்பா மூர்த்தி.

உ௱௬௯ம் கீதம். 8's &

"Winds and waves."

க. கொந்தளிக்குங் கடலேறும்
சப்பல்ஆடிஆடிப்போம்.
காற்றுச் சீறிவீசிடும்.
பாய்கிழிந்து போயினும்,
யேசு சுவாமி! நீரோ வந்து
கப்பலோட்டியாயிரும்.
காற்றமைத்து வழிதந்து,
கரையேறச் செய்திடும்.

உ. கப்பலேறிப் போவோருக்கு
வரும் மோசம் பயமும்
மின்முழக்கம் சூறைகல்லு
உமக்கெல்லாந் தெரியும்.
காரிராவிற் பிரகாசமே
உட்டணத்தில் மேசமே
யாவையும் நடத்தும் ராசன்
சாவிலும் என்சீவனே.

௩. நெஞ்சம் உம்மைஎண்ணியெண்ணும்,
இன்பந்துன்பம் வருகில்.
சீவன் உம்மில் வாசம்பண்ணும்,
லோக மோட்சவேளையில்.
யேசு சுவாமி! நீரோ வந்து
கப்பலோட்டியாயிரும்.
காற்றை ஆளும் வழிதந்து,
கரையேறச் செய்திடும்.

௪. வாசம்பண்ணும் உலகத்தில்
அங்கும் எங்கும் அலைவேன்.
கலதிப்பட்டு உம்மிடத்தில்
தஞ்சமென்று ஓடுவேன்.
தேகக்கப்பல் மோதிப்போகில்,
சேதமின்றிச் சேருவேன்.
மோட்சம்பெற்று, உம்மிடத்தில்
அக்களிப்பாய்த் துதிப்பேன்.

உபாசயம் கீதம். 6–8's.

"Fightings without and fears within."

க. சேனை யெதிரிகள் சூழ்ந்து,
உள்ளத்திற் சத்துருக்களும்
என் ஆத்துமத்தைக் கெடுத்து
அழிக்கவகைதேடினும்;
நான் தனித்தும் அஞ்சமாட்டேன்:
யேசுவை நம்பத் துணிவேன்.

உ. ஆயிரஞ் சேனை யெதிர்த்து
ஆயிரம் லோகம் பகையாய்
போராடினும்; எதிர் நின்று
விசுவாசங் கேடகமாய்
பிடித்து, எல்லாம் வெல்லுவேன்
யேசுவை நம்பத் துணிவேன்.

௩. என்னைப் பசாசின் கையிலும்
லோகத்திலும் விடுவித்து

என் பாவந்தீர்த்து, முழுதும்
தமக்காய்ச் சுத்திகரித்து,
ரட்சிக்கவந்தார்: அடியேன்
யேசுவை நம்பத் துணிவேன்.

௪. அவர் நாமத்தினற் பாவம்
மரணம் நாகம் நீன்று,
ரட்சிப்புண்டாம். மோட்ச செல்வம்
அத்தால் என்றுங் கிடைக்குது.
அவரைப் பற்றிக்கொள்ளுவேன்.
யேசுவை நம்பத் துணிவேன்.

௨௱௪௰௯ கீதம். 6–8's.

The same.

௧. அமர்ந்திரு, என் மனதே!
உன்னைச் சிட்டித்தவர் உன்னை
கூப்பிட்டு, "நீ கலங்காதே"
என்கிறர்: அவர் ரத்தத்தை
சிந்தலால் உன்னை மீட்டவர்:
என்றும் விட்டுவிடார் அவர்.

௨. ஆதலால், நான் ஆழங்களில்
செல்லவேண்டியபோழுது;
விசுவாசத்தால் அவரில்
நன்நம்பிக்கையாயிருந்து,
அலைகளுக்கஞ்சமாட்டேன்:
கர்த்தரை என்றும் பிடிப்பேன்.

ங. நான் நெருப்பான துன்பத்தில்
நடக்தும்போது, அவரை
விசுவாசத்தால் நோக்கையில்,
சேதப்படாதாக என்னை
காப்பாற்றுகிறார்: அடியேன்
ரட்சகர் எனது என்பேன்.

ச. இன்னமுஞ் சாமியே! என்னை
மோசத்தினின்று ரட்சித்து,
உமது தேவ பெலத்தை
என்னிடமாகக் காண்பித்து,
பூமிக்கும் நாகத்திற்கும்
நான் தப்பிப்போக, ரட்சியும்.

ரு. நீர் என்னை வாவழைத்தீர்:
சீவகடலில் நடந்து,
நான் அலைக்கஞ்சுகையில், நீர்
பேசுவதால்; நான் துணிந்து
கடல் கல்லெல்லாங் கடப்பேன்:
ஆழத்திலமிழ்ந்தமாட்டேன்.

சா. வானங் காாலே இருண்டு
துக்க அலைகளும் என்னை
சூழக் கடலும் எழுந்து
என்னை அழிக்கப்போவதை
நான் கண்டாலும்; "கலங்காதே"
என்றொரு சத்தங் கேட்பேனே.

எ. உபத்ராமென்ற சூளையில்
நான் போடப்பட்டு எரிந்தும்;
நாகமும் என் தலையில்
அக்கினி மழைபொழிந்தும்;
மோசேயின் செடிபோலாவேன்:
அக்கினியில் வெந்தழியேன்.

உ௱௪௰உ௰ கீதம். L. M.

The same.

க. ரட்சகரான யேசுவே!
இரங்கி எனக்குதவும்.
லோகத்தின் ஆசைகளையே
தள்ளி, நீரே என்னில் வாரும்.

உ. உமக்குமேல் மனம் வைப்பேன்.
உம்மாலே திருத்தியாகும்.
என் செபங் கேட்டிரங்குமேன்.
தேவாவியால் என்னை ரொப்பும்.

௩. பூமியில் தங்கும்நாளெல்லாம்
லௌகீகங்களை வெறுப்பேன்.
யேசு என் ஒரே விருப்பம்.
அவரை நாடித் தேடுவேன்.

௪. அவர் காலடிகளை நான்
பற்றிப் பின் தொடர்ந்தோடுவேன்.
உமது தேவ அன்பைத்தான்,
அன்பாக, எண்ணிக்கொள்ளுவேன்.

௫. சிற்றின்ப ஆசையினிமேல்
என்னிலிராதபடிக்கும்,
என் மனங் குணமெல்லாம்மேல்
ஆளுமேசமாயிரும்.

௬. பேரொளி ஆஸ்தியின்பமும்
பூலோகமும் அநித்யமாம்.
இவைவிட்டேன். என்சீவனும்
என் உள்ளபங்குங் கிறிஸ்துதாம்.

௭. பேரின்பம் உள்ள பாக்யமும்
உமதன்பால் உண்டாகுது:
நான் உமதென்றறிவதும்
அளவில்லாத களிப்பு.

௮. நான் உமதன்னைத் தவிர
பூமியிலொன்றும் விரும்பேன்.
அதுவே எனக்கிருக்க;
மற்றெவையும் நான் விடுவேன்.

உ௱௫௮ம் கீதம். L. M.

The same.

௧. என் சீவ பராபரனே!
உமது வல்லமையால் நீர்
வெவ்வேறே சாவுகளாயே
நீக்கியென்னை யெழுப்பினீர்.

௨. என் எல்லா வழிகளிலும்
உமது செய்கை காண்கிறேன்.

ஆ! இன்னம் என்னை நடத்தும்,
இன்னம் உம்மைப் பின்தொடர்வேன்.

௩. உமது பெலம் அறிந்து
கடல் என்னைக் கொடுத்தது.
உமது கையிலிருந்து
என்னைப் பறிக்கக் கூடாது.

௪. பிரேதக் குழியோரத்தில்
என் தலையை யெழுப்பினீர்.
சாம் நீங்கினதேதெனில்,
அதற்குக் கட்டளையிட்டீர்.

௫. ரட்சகர் மார்பு ஒழிய
பின்னும் எவ்விடமோடலாம்?
உமது கையில் தரிக்க
சுகமாயிளைப்பாறலாம்.

௬. கண்ணிக்கு நீங்கும்படிக்கு
எனக்குப் புத்தியில்லையே.
உம்மாலோ எனக்கறிவு
பெலமுண்டு, கிறிஸ்துவே!

உ௱௬௪ம் கீதம். 8, 7, 4.

"Glory in Tribulation."

௧. வாழ்க, சிலுவையே! வாழ்க.
பாரமற்ற பாரமே!

நீவந்தால், இணக்கமாக
உன்னை ஏற்றுக்கொள்வேனே.
கர்த்தாலே
நீ அனுப்பப் பட்டது:

உ. இந்த நிந்தை,லச்சையல்ல:
இது வெட்கமல்லவே:
சோதனை பொல்லாங்குக்கல்ல
நீதிக்காக வந்ததே:
யேசுநாதர்
நிந்தைப்பாடு பட்டாரோ.

௩. சிலுவையின் கீழ்த்தவிக்கும்
தம்முடையவர்களை
யேசுநாதர் ஆதரிக்கும்
அன்பிரக்கம் எத்தனை?
துன்பகாலம்
நீதிமானுக் கின்பமாம்.

௪. கர்த்தனைப்பின்செல்வோமாக,
சிலுவையின்தோழரே!
கர்த்தனைமகிழ்ச்சியாக
தோத்திரிப்போம்நாங்களே:
கத்தர்தாமே
அன்புடன் மரித்தாரோ.

௫. லோகம் நம்மை மா இகழ்ச்சி
பண்ணிச் சங்கரிக்கவே,

கர்த்தாலேமாமகிழ்ச்சி
  ஆறுதல் கிடைக்குமே.
 அதற்காக
  நாயனுக்கே தோத்திரம்.

௨௱௪௰௫ கீதம். 8. 7.

The same.

க. மனமே! உன் தீய இச்சை
  மேற்கொள்ளாமற் பார்த்துக்கொள்.
 அது நரகத்துக்குன்னை
  கொண்டுபோம்: விழித்துக்கொள்.
 இன்பமாகப் பேசினாலும்,
  அதின் சத்தங் கேளாதே.
 கேட்டாயானால் பெருமோசம்
  நிசமாக வருமே.

உ. அல்லதென்று அதெழும்பி
  பகைக்கில்; எதிர்த்துக்கொள்.
 வென்றுவிட்டேனே யென்றெண்ணி,
  சோம்பலற்று வீரங்கொள்.
 சிலநாளாயமர்ந்தாலும்,
  அது இன்னம் உள்ளதே.
 பின்னும் உன்னுடனெதிர்க்கும்:
  சற்றுந் தூங்கிக்கொள்ளாதே.

௩. ஆவிக்கு விரோதமாகும்
  உனது சரீரத்தை

வெல்வதற்கு ஏற்றதாகும்
தேவ ஆயுதங்களை
வாங்கிநின்று, திடமாக
போர்செய்யாமல் விடாதே.
அப்போதே நீ பூரிப்பாக
வெற்றிகொண்டு வாழ்வாயே.

உ௱௪௬௰௧ கீதம். C. M.

"The days are evil.",

க. திவ்ய மேய்ப்பர்! பாலர்
விழித்தும்மை வேண்ட
துணைசெய்து, தாங்கிக்கொள்வீர்,
தீமை எல்லாம் நீங்க.

உ. தீபோற் சோதிப்புள்ளமட்டும்,
நாம் சிலுவை தாங்க,
வேண்டி முயன்றிடுங்காலம்
உம்மைச் சார்வோமாக.

௩. வேண்டும்படி நம்மை ஏவி
விசுவாசம் ஈயும்.
திருநாமம் உள்ளுணர்த்தி,
மோட்சந்தந்து, பேணும்.

௪. நிறையன்பு தேவர்தாமே
தந்தருளுமட்டும்,
உம்மை விடேனென்று நானே
சொல்லும்படி செய்யும்.

ரு. திருநாமம் சொல்லி, ரட்சை
தந்து, சுத்தம் செய்யும்.
இல்லாவிடிற், கெஞ்சி உம்மை
நான் விடேனே என்றும்.

௬, அருள்பெற்று மலையுச்சி
ஏறி, உம்மைக் காண்போம்,
விசுவாசமாகும், காட்சி:
செபமாகும், செயம்.

உ௱௯ எம் கீதம். L. M.

"If the salt have lost its savour."

௧. உப்புச்சாரங் கெடல்போன்று
தயைபெற்ற எந்தன் ஆத்மா
கெடக் கூடுமென்று கண்டு;
அஞ்சுவேனே, நேசகர்த்தா!

உ. நானே அறியாதபடி,
உம்மிற் சேர்த்துக்கொள்ளும்என்னை.
பத்தர் மலைசேரும்வழி
காட்டித், தாரும் மனத்தாழ்மை.

உ௱௯அும் கீதம். S. M.

"Faithful unto death."

௧. சாவாதென்றுத்துமம்
மோட்சத்திற் சேரவே,

உண்மையாகத் தெய்வசித்தம்
  கைக்கொள்ள வேண்டுமே.
யார்க்கும்நன்மைசெய்து,
  அன்புடன் அடியேன்
ஈசனை நேசித்தமைந்து,
  நாள்விடக் கடவேன்.

உ. நான் ஞாயத்தீர்ப்பிலே
  அச்சமின்றி நிற்க,
அருள்செய்யும், என் சுவாமியே!
  விழித்து நடக்க.
உம்மைச் சார்ந்து நம்பி
  வேண்டும்படி, ஏவும்.
இல்லாவிடில், அலைந்தஞ்சி
  கெடுவேனே நித்தம்.

உ௱௮௪. கீதம். 6.-8's.

"Marvel not if the world hate you."

க. நிறைவான பகைக்கண்ணர்
  குற்றம்சாற்ற வகைதேட;
நாம் மெய்யான தெய்வ தொண்டர்
  என்ன வாழ்வோம், விழிப்பாக.
நீதி நேச பயபத்தி
உடன்செல்வோம், நடந்தேறி.

உ. இகழ்ந்தோரை வெல்லும்படி
  கிறிஸ்தோர்காட்டும் அன்புதந்து,

தீமை எல்லாம் விடும்புத்தி
தாரும், தேவே! நம்மைக்காத்து
மனோவாக்குக் காயம் மூன்றும்
சுத்தமாக, அருள்செய்யும்.

உ௱௫ம் கீதம். L. M.

"Lead me in the way everlasting."

க. எல்லாங்கண்ட சர்வஞானி!
மருள்நீக்கும் பரஞ்சோதி!
தவித்தும்மைத் தேடும் மனம்
தவறு நீங்க, அருள் செய்யும்.

உ. கறைகளிம்பிவை நீக்கி,
மனச் சிந்தை வசப்பண்ணி,
சுத்தி செய்யில்; எனதீசன்!
உம்மைப்போல், நானுவேன் சுத்தன்.

௩. இருளான காட்டிற் செல்ல
நீரோன்றுளி, வழிகாட்ட.
சத்ருசேதம் வஞ்சம் நீங்கும்;
எங்கும் காப்பார் தெய்வமென்றும்.

௪. ஆன்மா மூடும் பிரவாகம்
மனோற்சாகம் செயிக்கும் வெள்ளம்
பார்த்துத்தூக்கி அருள் செய்து,
தேற்றிக்கொள்ளும், வல்லயேசு!

௫. மீட்பரே! உம்பாதங்கண்டு,
பின்செல்வேனே, திடங்கொண்டு.

கையில் ஏந்திக்கொள்ளும் என்னை;
சேர்ப்பண்ணும் சுத்தமலை.

௩. வழிசென்றுண்டாகுந்துக்கம்
கிலேசம் நீக்கிப், பெலன் செய்யும்.
துக்கம், தொய்வு, நோயும்மாற்றி;
இன்பந்தரும் குறைவின்றி.

௨௱௬௯ம் கீதம். L. M.

Psalm xlvi.

௧. குறைவிசும் இடந்தோறும்,
காண்போம் தேவன் பிரசன்னர்.
நாங்கள் வேண்டிக்கொள்ளமுன்னும்
காக்கும்படி தோன்றி நிற்பர்.

௨. பூலோக பிண்டம் அதிர்ந்தும்,
பர்வதங்கள் பேர்க்கப்பட்டும்,
ஆழியிலே விழுந்தாலும்,
விசுவாசம் அசையாது.

௩. கடல் ஒலமிட்டு மோத,
சர்வதேசர்வெள்ளம் பார்த்து,
திகைத்தஞ்சி யலைந்தோட,
சாந்தமாகும் எங்கள் நெஞ்சு.

௪. மெல்லெனறேடும் சீயோன்நதி
தரும், அன்பு சீவன் இன்பம்.
திர்த்திசெய்யும் திவ்யபுரி
தெய்வஸ்தலம் செழிப்பாக்கும்.

௫. சுத்தநதி போன்றவேதம்
பயம் அச்சம் எல்லாம் நீக்கி,
இன்பவாக்குத்தத்தஞ் செய்யும்;
இளைத்தோர்க்குத்தரும் சத்தி.

௬. மோசத்துக்கு நீங்கும் சீயோன்
தனதாசன்பு பெற்று
காக்கும் வேந்தன் உண்மை நேசன்,
அதன் நிலை அசையாது.

௨௱௫௨ம் கீதம். S. M.

"He will teach you all things."

௧. தேவாவி! இறங்கி
கர்த்தரைக் காண்பியும்.
தெய்வத்தை வெளிப்படுத்தி
ரத்தத்தால் நூபியும்.
ரத்தத்தால் தெளித்து
யேசுவின் தயவில்
என் பங்கையே காட்டுவது
உம்மால் உண்டாஞ்செயல்.

௨. யேசு கர்த்தரென்று
ஆருந் தானாய்ச் சொல்லார்.
இருளை நீக்கிப் பத்தீக்கு
நீர் ஆதிகாரணர்.
யேசுவின் ரத்தத்தை
நாங்கள் உம்மாலேயே

உணர்ந்தேன் கர்த்தரென்பதை
சொல்லிக் களிப்போமே.

௩. அவரை யெல்லாரும்
அறியும்படிக்கே,
அவர்பேர் புண்ணியத்தையும்
காட்ட ஓங்குமே.
எல்லார்க்கும் பொதுவாய்
தயை ரட்சிப்பையும்
தந்து, திட அத்தாட்சியாய்
பேசித் தேற்றியிடும்.

௪. விசுவாசிப்பவன்
சாட்சி வாங்குகிறன்.
அதற்குமுன்னே பகைஞன்
எதிர்நிற்கமாட்டான்.
அன்பின் தேறுதலை
தந்து, மலையையும்,
அசைக்கும் விசுவாசத்தை
அடியார்க்குக் கொடும்.

௨௱௫௨ம் கீதம். L. M.

"Ways of Pleasantness."

௧. தெய்வநேசம் விசுவாசம்
இவை தரும்தெய்வ ஞானம்
அருள் மூலம் அடைந்தவன்,
எல்லாரிலும் மாபாக்கியன்.

௨. கிறிஸ்து தரும் ஆத்ம மீட்பை
நாடுவேனேயென்னுமிதை
தெரிந்தவன், மெய்யாய் வாழ்ந்து
சேர்வான் மோட்சம், களிகூர்ந்து.

௩. தெய்வீகஞானம் அருமை.
யாவன்சொல்வான் அதின்மேன்மை?
பொன்னைப்பார்க்கிலும், புத்திமான்,
அதிகமாக எண்ணுவான்.

௪. அதினாலே தீர்க்காயுசும்
மெய் ஆஸ்தி போம்பொருளும்
அழியாக் கனமானது
கிறிஸ்துவைக்கொண்டுண்டாகுது.

௫. மெய்ஞ்ஞானமுள்ள எவர்க்கும்
தீரா மனோரம்யமாகும்.
அதின் வழிகள் மெய்வாழ்க்கை,
பாதைகடோறுமினிமை.

௬. அதை அறிந்தடைந்தவன்
பாக்கியரிலும் பாக்கியன்.
ஞானமுங் கிறிஸ்தும்மோட்சமும்
ஒன்றாக எண்ணுவான் என்றும்.

௨௱௫௪ம் கீதம், 8, 7, 4.

"At the cross."

௧. கிறிஸ்துநாதர்பட்ட காயம்
தோன்றும் நோம், அருமை.

சுத்தம் செல்வம் சற்சகாயம்
சீவன்காட்டும் சிலுவை.
என்றும் பார்ப்பேன்,
என்னைமீட்ட யேசுவை!

உ. அன்புபாயும் ஊற்றைக்கண்டு,
ஐந்துகாயம் சிந்திப்பேன்.
பிதாவோடே சமாதானம்
எனக்கித்தாலாதுமே,
என்றும் பார்ப்பேன்,
என்னைமீட்ட யேசுவை.

௩. அவர் கண்ணுற்றேன்றும் நேசம்
என்க்கேற்ற செல்வமே.
பாடுபட்டகாயம் துக்கம்,
ஈயும் அருள் மோட்சமே!
என்றும் பார்ப்பேன்,
என்னைமீட்ட யேசுவை.

௪. நேசந் துக்கம் களிப்புடன்
நெஞ்சிற் பலன்கொள்ளுமே.
கறை குற்றம் பாவக்கடன்
தீருமென்றிருக்கிறேன்.
அல்லேலூயா!
உம்மால் முத்தி, யேசுவே!

உ௱௯௯. இளைப்பாறுதல். 8 & 6's.

"*Rest.*"

க. லோகசஞ்சாா ஏழைக்கே
மா ஆறுதலுண்டாம்.

இக்கட்டை நீக்குந் தஞ்சமே
இருக்கும், யேசுக்கிறிஸ்துவே!
அருளும் மோட்சமாம்.

உ. பாவத்தின் துறைக்காலினால்
அடிக்கப்பட்டோர்க்கே
சுகிர்தவீடிருக்கையால்,
அஞ்சாமல் யுத்தஞ்செய்வதால்,
கிடைக்கும் மோட்சமே.

௩. பூலோக ஆசாபாசத்தால்
உண்டாகும் மாயையே
மெய்விசுவாச நேசத்தால்
தெளிந்துபோம், என் யேசுவால்
கிடைக்கும் மோட்சமே.

௪. மீன் சதி கேடு வாதையும்
வதைக்கும் யாவுமாய்
மோதியடிக்கும் நாளிலும்
சுத்தாங்க பத்தர் யாருக்கும்
கிடைக்கும் மோட்சமாய்.

௫. ஆ! யேசுவே! என் சோதியே!
என்சீவன் மீட்சியாம்.
உம்மில் அன்பாயிருக்கவே,
என்னெஞ்சில் வாசம்பண்ணுமே.
இதே என் மோட்சமாம்.

௬. ஆனந்த அன்பாய் வாழுவேன்.
சஞ்சாரியாத்திரையில்,
பின்வந்து உம்மைக்காணுவேன்.
கிரீடஞ் செங்கோல் பெறுவேன்,
என்றைக்கும் மோட்சத்தில்.

உ௱௫௬ம் கீதம். L. M.

"The Beatitudes"

௧. குறைகண்ட தரித்திரர்
அருட்செல்வம் அபேட்சிப்பர்:
சீவழுடி சூடுவார்கள்,
எளியோரே பாக்யவான்கள்.

௨. பாவ தோஷப் பிரலாபர்
ஆற, ரத்தம் யேசுநாதர்
சிந்தித்தீர்த்தார், பாதகங்கள்:
மனஸதாபர், பாக்யவான்கள்,

௩. நீதிப் பசிதாகமுள்ளார்,
சீவாகாரம் உண்டு வாழ்வார்:
சுத்தசலம் பானிப்பார்கள்;
கிர்பாபேட்சர், பாக்யவான்கள்.

௪. பாவம்நீங்கும் மனோசுத்தர்,
கரையேறும் மோட்சானந்தர்,
தெய்வகாட்சி யடைவார்கள்,
இதசுத்தர், பாக்யவான்கள்.

௫. யேசுநாதர்மூலம், துன்பம்
வெட்கமுள்ளோர் யாரும் நித்தம்
வெற்றிவாழ்வு பெறுவார்கள்:
துன்பப்பட்டோர், பாக்யவான்கள்.

௬. இதோவிரர் சுத்தவம்சர்
யாக்கோப்பீசற்றேடுஞ்சார்,
வீட்டிற்சேரும் பரானந்தர்
பரஞ்சோதியிடம் வாழ்வர்.

௨௱௫௭ம் கீதம். 8's & 7's.

"Love divine all loves excelling."

௧. தேவ அன்பே! மோட்சபாக்யம்
தரப் பூமிக்குவாரும்.
உமது மெய்யான வாக்யம்
நம்பும் எங்களில் இரும்.
யேசுவே! நீர் பரதாபம்
அன்புமாயிருக்கிறீர்.
வந்து எங்கள் மனஸ்தாபம்
நீக்கிப், போடக்கடவீர்.

௨. உமது அன்புள்ள ஆவி,
துக்கித்தோருக்குத், தாரும்.
பரிசுத்தத்தையும், பாவி
உம்மால் அடையச், செய்யும்.
பாவ ஆசை எல்லாம் நீக்கி,
எங்களை ஆட்சியும்.

விசுவாசத்தைத் துவக்கி
 முடிப்பவராயிரும்.

ங. சர்வவல்லவரே! வாரும்.
 நாங்கள் உமதாலயம்.
எவர்க்குங் கிருபைதாரும்.
 என்றும் விலகாதேயும்.
என்றும் உம்மை ஸதோத்திரித்து,
 வானோர்போலே சேவிப்போம்.
குறையில்லா அன்பைப்பெற்று,
 ஒழியாமல் துதிப்போம்.

ச. கறை குற்றம் அற்று நாங்கள்
 சுத்தராகும்படிக்கு;
புதுச்சிட்டிப்பின் வரங்கள்
 எங்களுக்குக் கொடுத்து,
நாங்கள் மோட்சக் கரையேறி
 வானோராகும் வரைக்கும்,
தேவசாயலுக்குமாறி
 தேறும்படி, அருளும்.

உ௱௫அம் கீதம். P. M.

"*Tell me, O thou whom my soul loveth, &c.*"

என் சீவன் கிரீடம் புகழ்ச்சியுமே
 உமதாடுகள் மேயும்மைதானம்
எனக்கும் நீர்காட்டி, மா அன்புடனே
 அடியேனுக்குத்தாரும் மெய்ஞ்ஞானம்.

௨. மின்காற்றும் முழக்கமும் மாகோடிதாய்
அடிக்க, நான் ஏங்கிக்கலங்க
அன்பாம் செட்டைக்கீழே புகலிடமாய்
ஓடுவேன், ஆ! என் மேய்ப்பன் இரங்க.

௩. அலைந்து கலங்கிக் கண்ணீரும்விட்டேன்.
என்பாவம் மிகுந்த மாபாரம்.
ஆபாதைவிட்டோடில், நான் மாண்டுபோவேன்.
என் சீவன் ரட்சிக்கவே, வாரும்.

௪. "மாபாரஞ் சுமந்தோர்! வாருங்கள்" என்றார்.
போவேன் அவரண்டை இந்நேரம்.
என்மேய்ப்பர்கைதூக்கிஅணைத்துக்கொள்வார்
சந்தோஷமாய் மாறும், கிலேசம்.

௫. நோபட்டும், சாவந்தும், நான் பயப்படேன்.
என் மேய்ப்பனின் தண்டம் நடத்தும்,
அக்கரையிற்சேர்ந்து களிப்படைவேன்.
என்யேசுவால் மோட்சங் கிடைக்கும்.

உ௱௯௫ம் கீதம். C. M.

"*The family in heaven and earth.*"

௧. மெய்க்கிறிஸ்தோர்கள் யேசுவுக்கு
இணைக்கப்படுவார்கள்.
அவர் வழியில் நடந்து,
பாக்கியர்களாவார்கள்.

௨. மோட்சத்தில் ஏறிப்போனோரும்
உம்மீற் கெம்பீரிப்பார்.

பூமியில் தங்கும் பத்தரும்
உம்மைக் கொண்டாடுவார்.

௩. மோட்சம் பூமி உம்முடைய
ஒன்றான ராச்சியம்.
ரண்டிலும் உம்மைத்துதிப்ப
மெய்யான பாக்கியம்:

௪. இங்கே உமக்கிணங்குவர்
அங்கே உம்மைப் பார்ப்பார்.
சுவாமி! எங்களைச் சேர்க்கவும்
இரங்கக்கடவார்.

உ௱௬௰௫ கீதம். S. M.

"He is worthy to be praised."

௧. கர்த்தாவின் நேசரே!
உங்கள் ஆத்மானந்தம்
எல்லார்க்கும் அறிவிக்கவே,
ஒன்றய்க் கூடிப்பாடும்.

௨. கர்த்தாவை அறியார்
பாடாமற் போயினும்,
அவரை அண்டுஞ் சேவகர்
துதிப்பார்கள் என்றும்.

௩. விண்ணணை ஆளுந் தெய்வம்
மண்ணணையும் தாங்குவார்.
காற்றுங் கடற்கொந்தளிப்பும்
இவை அமர்த்துவார்.

௪. சர்வவல்லர் இவர்:
எங்கள்நேச தந்தை
தாமேவிடுந் தேவதூதர்,
மோட்சஞ்சேர்ப்பார் நம்மை.

௫. தேவமுகம் நோக்கி
பாவமின்றி வாழ்வர்.
மோட்சானந்த நதிமூழ்கி.
மகிழ்வாரோ முத்தி

௬. அங்கே தோற்றும் இன்பம்
ஆத்மம் பெறமுன்பு;
அதை நாடித் தினந்தோறும்
மகிழ்வதே நன்று.

௭. கிருபை பெற்றவர்
பூமியிலே மோட்சம்
ஆரம்பித்ததென்றறிவர்,
விசுவாசமூலம்.

௮. தேவைநம்பிப்பாடி
கண்ணீரைத்துடைப்போம்
கத்தர் அருள்செய்தவழி
சென்றுசேர்வோம் மோட்சம்.

உ௱௬௧ம் கீதம், L. M.

"The excellent of the Earth."

௧. ஆதியில் விசுவாசித்து,
பிறரையுஞ் சிநேகித்து,

தேவாபிஷேகம் பெற்றவர்
மற்றெல்லாரிலும் பாக்கியர்.

௨. யேசுவைப் பின்சென்றோர்களாய்
பிழைத்து நடந்து ஒன்றாய்
கிறிஸதுக் கோயாத ஸ்தோத்திரம்
ஈவ தவர்கள் காரியம்.

௩. சுத்தமும் விசுவாசமும்
சம்பூரணக்கிருபையும்
அடைந்த சபை யவர்கள்,
மெய் ஒருமையுடையோர்கள்.

௪. அப்பாக்யமான யுகத்தில்
கிறிஸதுவின் சுத்த ரத்தத்தில்
கழுவப்பட்டோர், கடவுள்
நேசித்தாசாசாரியர்கள்.

௫. இவர்கள் சாயலானோரை
கண்டறிவது என்றைசை.
சத்ய விசுவாசிகளோர
பூமியிற் குறைச்சல் இப்போ.

௬, வெவ்வேறுஞ் சபையார்களே!
கிறிஸது இங்கே கிறிஸ்து அங்கே
என்றுமற், சுத்தகுணங்கள்
உடையோரைக் காண்பியுங்கள்.

௭. சிநேகம் என்ற முத்திரை
இல்லாதோரான உங்களை

தேவபுத்திரராகவே
அங்கீகரிக்கக் கூடாதே.

அ பூமியிலுமது சபை
என்றைக்கும் நிற்குமென்பதை
நம்பினஎன்னை அத்தோடே
சேர்த்தருளும், என் கத்தரே!

௯. அவர்கள் லோகத்தில் எங்கும்
சிதறுண்டுபோயிருந்தும்;
அவர்களை அறியும் நீர்
ஒன்றாகச் சேர்க்கக்கடவீர்.

௰. ஈவுகளிலும் பேரீவு
என்னுந் தேவேற்றின அன்பு
தேவாவியால் எல்லாருக்கும்
கொடுத்தொன்றாக்கியருளும்.

௰௧. உம்மை நோக்குஞ் சகலரை
நேசத்தாற் கட்டிக் கிருபை
உமது சபைமேலூற்றும்
எல்லாருக்குள்ளும் வீற்றிரும்.

உ௱௯௨ம் கீதம். C. M

"Praise is comely."

௧. பத்தரே! கிறிஸ்தைத் துதிக்க
ஒன்றாகப் பாடுங்கள்.
அவர் கிருபைகாண்பிக்க,
மகிழ்ந்து சொல்லுங்கள்.

உ. பாவியின் மனக்கதவை
தட்டுவர் அவர்தாம்,
ஆரும் அவரால் ரட்சிப்பை
அடைந்து கொள்ளலாம்.

௩. உமது சத்தத்தைக் கேட்டு
பாவத்தில் நீங்குவோம்,
உட்பிரவேசியுமென்று
உம்மை வேண்டுகிறோம்.

௪. சீக்கிரம் உட்பிரவேசித்து,
என்றும் நீங்காதிரும்.
எங்களில் அன்பை மிகுத்து
திருத்தியாய்த்தாரும்.

உ௱௯௭ம் கீதம், 10's & 11's.

The same.

௧. வானோரோடேன்றும் மகிழ்ந்துபாடி,
இயேசுவின்பெலம் நேசமும்பற்றி,
கொண்டாடித்துதித்துச் சத்தமிடுங்கள்.
ரட்சிப்புங்களுக்குத்தந்தாரோன்னுங்கள்.

உ. துன்பங் துக்கமு நன்றாய் நீக்கினீர்.
தேவாறுதலும் எங்களுக்குத்தந்தீர்.
நீர் ஆவியாற்பெலஞ் சந்தோஷத்தையும்
இட்டீர் ஆதலாலும் சம்பூரணமும்.

௩. தேவமைச்சலும் மகிழ்ச்சியென்றும்
அசையாமல் நிற்கும் ஞானபாக்கியமும்

எங்கள் யேசுவினால் இப்பூமியிலும்
மோட்சத்தின் வாழ்துதல் துவக்கப்படும்.

௪. லோக சேற்றிலே பன்றிகளைப்போல்
தீயோர் புரண்டே எங்களை அழைத்தால்
சோரமலிருப்போம்: அவர்கள்செல்வம்
சந்தோஷம்நகைப்பும் எல்லாம் வியர்த்தம்

௫. நாங்கள் மனதாய் அதெல்லாம்விட்டு
புதுச் சிருட்டிகளாய்த் திருப்பப்பட்டு
யேசுவின்மேல் நம்பி அன்பினினிது
அதிகமாய் வாங்கி வாழக்கடவது.

உ௱சுஅம் கீதம். 7's.

"One as we are one."

௧. மேய்ப்பரே! நீர் கிருபை
செய்து, சிதறுண்டதை
மந்தையாக்கி, யாவையும்
சேர்த்தணைத்துக்கொண்டிரும்.

௨. எங்கள் நெஞ்சிற் சகல
நற்குணங்கள் பெருக,
தேவ அன்பையதிலே
ஊற்றும், யேசுக்கிறிஸதுவே!

௩. நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி, நேசத்தின் பெலன்

எங்கும் எந்நாளிலும்
தோன்றக், கட்டளையிடும்.

ச. மூன்றேன்றுகிய பிதா
சுதன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல, இம்மந்தையாக்கீடும்.

உ௱கூரும் கீதம். 7's.

The same.

க ஆ! சகோதரர் ஒன்றய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தால், எத்தனை
நேர்த்தியான இனிமை.

உ. அதை ஆரோன் சிரசில்
ஊற்றுண்டோடும் எண்ணெய்யில்
வீசுஞ் சுகந்தத்துக்கு
ஒத்ததாயிருப்பது.

௩. அது எர்மோன் மேலேயும்
சீயோன் உச்சிகளிலும்
பெய்கிற ஆகாயத்து
நற்பனிக்கும் ஒப்பது.

ச. அங்கேதான் தயாபரர்
ஆசீர்வாதந்தருவார்.
அங்கேப்போதும் என்றைக்கும்
வாழ்வுண்டாகிப் பெருகும்.

௨௱௯௯. கீதம். C. M.

"I will come unto you."

௧. கர்த்தாவே! நாங்கள் பூமியில்
சஞ்சரிக்கையில்; நீர்
நேசத்தைக்காட்டி, எங்களில்
தரிக்கக்கடவீர்.

௨. உம்மோடேபேசிக் காலத்தை
நோவையும் மறப்போம்.
நீர் இங்கே ஆனால் துன்பத்தை
இன்பமென்றெண்ணுவோம்.

௩. கத்தாவே!என்னோடேதங்கி,
சந்தோஷப்படுத்தும்.
என்னுள்ளமுமக்கிணங்கி
அன்பாய்க்கீழ்ப்படியும்.

௪. உம்மண்டைக்கென்னைஅழைத்தீர்,
கேட்டும்மை நாடுவேன்.
என்னுள்ளத்திலே பேசுவீர்.
ஆனாற் கவனிப்பேன்.

௫. உள்ளளவும் நானிப்படி
உம்மைக் கேட்டாற் பாக்கியம்
பூமியில் நீரோ என்கதி.
மோட்சத்தில் என்மோட்சம்.

உாகூஎம் கீதம். 1.. M.

"I send fire on the earth, would that it were already kindled."

க. அன்பின் அக்கினி மனதில்
கொளுத்த வந்த யேசுவே!
எரியுஞ்சுவாலையென்னில்
பற்றுவிக்க இரங்குமே.

உ. தேவமகிமை காண்பிக்க,
அதவியாமல் ஓங்கியும்;
உம்மைத் துதித்துமிருக்க,
மோட்சத்தையெட்டவேசெய்யும்.

ங. என்செய்கை வாக்குநினைவு
உமதாக என்விருப்பம்.
உள்ளேரியுஞ் சுத்தஅன்பு
அதற்கொன்றுன காரணம்.

ச. நம்பிக்கை அன்புமுதலாய்
உமதுசித்தம் என்னிலே
மாணமட்டும் நிறைவாய்
செய்யப்படட்டும், யேசுவே!

உாகூஅம் கீதம். S. M.

"Teach us to pray."

க. செபத்தின் ஆவியை
என்னுள்ளத்திலூதும்.
லோகத்தின் கெட்ட பாசத்தை
என்மனதிலே எடும்.

௨. லோகக் கவலையால்
நான் கலங்குவதேன்?
உம்மை உமதுதவியால்
நான் தேடக்கடவேன்

௩. துணையாயெனக்கு
சீக்கிரத்தோடே வாரும்.
நான் அலையாதபடிக்கு,
நிலைக்கக் காப்பாற்றும்.

௪. தேவன்பின் பாசத்தால்
கட்டப்பட்டு, என்றும்
உம்மை என் முழுமனதால்
பின்தொடரச் செய்யும்.

௨௱௬௯ம் கீதம். C M.

The same.

௧. நன்மைச்சுருபயேசுவே!
சபைகட்டினசுவாமியே!
ஆவியின் ஏவலாற்செபம்
நான் பண்ணினால், கேட்டருளும்.

௨. கர்த்தாராக உம்மை நம்பி,
பரிசுத்தத்தை விரும்பி,
உம்மைமெய்ப்பத்தாகவும்
பற்றினோர்களை ஒன்றாக்கும்.

௩. உமது சித்தத்தைக் காட்டி
உமது சாட்சிகளாகி
ஈட்சிக்குமுமது பெலம்
காண்பிக்கும்படியாய்ச்செய்யும்.

௪. ஆதிகிறிஸ்தோர்கள் மாதிரி
லோகத்தாருக்கெல்லாங்காட்டி
இகழப்பட்டோராயினும்
சிநேகமுள்ளோராகவும்.

௫. தேவவெளிச்சத்தைக் கண்டு
வெள்ளை வஸ்திரந்தரித்து
உம்மைநேசிப்பவரையும்
விளங்கப்பண்ணியருளும்.

௬. கறையில்லாதவர்களாய்
தீமைநீக்கப்பட்டோர்களாய்
அவர்களுக்கென்னையும்,
கடாட்சித்துச், சேர்த்தருளும்.

௭. அவர்களில் நான் ஒருவன்
யேசுவுக்கூழியக்காரன்.
கர்த்தரின் சீஷர் கால்களை
கழுவுவது என்றாசை.

௮. இலவசம் நான் பெற்றதை
கொடுத்து உமது சபை
வாழும்படிக்கென்றாசையே
வாய்க்கப்பண்ணும், என்கர்த்தரே!

௬. உம்மையே பின்செல்பவனும்
சுத்தர்களது தொண்டனும்
வானோர்போற் சபையைநானும்
சேவிக்க அருள்புரியும்.

௰. ஆவி ஏவலுக்கோத்ததாய்
தேவ சித்தத்தின்படியாய்
நான்சேவித்தால்; என் விண்ணப்பம்
நிறைவேறச், செய்தருளும்.

௰௧. உன் செபங்கேட்கப்பட்டது
என்றுசொல்லுந் தேவத்தாவு
பெற்றேன்: சபையிலேநானும்
வாழ்வதுஞ்சாவதும் நிச்சயம்.

உ௱எ௰ய் கீதம். 8. 7. 4.

The same.

௧. யேசுகத்தரே! பசாசை
எங்கள் கால்களின் கீழாய்
நீர் நசுக்கி, உம்முடைய
ஆட்டுக்கூட்டத்துக்கன்பாய்
ஊக்கந்தந்து,
ஆறுதலைச் செய்திடுமே.

௨. நல்ல பாதையில் நடந்து
போக, எங்களை நீரே
கைகொடுத்தணைத்துக்கொண்டு,
ஆதரிக்கவேண்டுமே.

எந்தமோசம்
தோன்றினாலும், ரட்சியும்!

ங. அன்பினாலே ஏவப்பட்டு
உம்மைப்பற்றிக்கொள்ளவே,
உமதாவியின் பலத்தை
தாரும், நேசயேசுவே!
எங்கள் நெஞ்சை
செம்மையாக்கிக்கொண்டிரும்.

ச. அதினாலே எங்கள் நெஞ்சும்
எங்கள் சுத்தவாய்நித்தமே
உமக்கேற்ற வாழ்த்தல் சொல்லும்
உண்மைப்பாடும், யேசுவே!
அதே, எங்கும்
தோன்றவேண்டும் கீர்த்தனம்.

உ௱எ௩ம் கீர்த். 8. 7. 4.

The same.

க. ஈனருக்கு மாபெலனும்
துக்கப்பட்டிருக்கிற
பாதகர்க்கு மாதிடனும்
அன்புள்ளோரு மாகிய
எசமானே!
எனக்கூக்கம் அளியும்.

உ. என்னிதயஞ், சென்மபாவம்
ஊறும் ஊற்றேயானது.

என்னுடைய முழுச்சுபாவம்
தீமையால் நிறைந்தது.
பாவத்தோடு
நான் பிறந்தேன், யேசுவே!

௩. உம்முடைய ரத்தத்தாலே
குற்றம்நீங்கப், புரியும்.
என்னை உமதாவியிலே
சுத்திகரித்தருளும்.
ஆ! கத்தாவே!
என்னைத் தேற்றி ஆண்டிடும்.

௪. என்னுடைய நெஞ்சில்வந்து
தங்கும், என் சகாயனே!
அதால்,துக்கத்தை மறந்து,
வெற்றியை அடைவேனே.
உமக்கேற்ற
வாழ்த்தலை நான் சொல்லுவேன்.

௨௱௭௰௨ கீதம். 6—8's.

The same.

௧. என்றும் மாறாத யேசுவே!
எங்கள் வேண்டுதலைக் கேளும்.
பெலமற்ற எங்களுக்கே
உம்மைச் சேவிக்க உணர்த்தும்.
செபத்தின் ஆவியை யூற்றும்:
எங்களைத் திடப்படுத்தும்.

உ. சிருட்டிகாரம் உமது
உதவியைப் பெறவிட்டால்,
நற்குணங்கள் நன்னினைவு
எங்களுக்கிராதாகையால்;
இப்போதெங்களுக்குதவும்.
செபிக்கவும், ஏவிவிடும்.

௩. சோதிக்கப்பட்ட உமது
சீஷரைப்பாரும். யேசுவே!
எம்மைத் திடமாக்கவந்து,
ஆவியைத் தாரும். சுவாமியே!
எங்களை ஆவியாலேயும்
என்றுஞ் செபிக்க, உணர்த்தும்.

௪. பாவவியாதியாலான
நோவைப் பெலவீனத்தையும்
நீக்கி, நெஞ்சைத் தகுமான
செப ஆலயமாக்கவும்,
தேற்றாவரை யளியும்.
உம்மையும் வெளிப்படுத்தும்.

ரு. உமக்குக் காத்திருக்கிற
எங்களுக் காவியால் வரும்
செபத்தை நடப்பிக்கிற
ஆவியை மாத்திரந் தாரும்.
இவ்விண்ணப்பத்தைக் கேளும்.
அப்போ மற்றெல்லாங் கிடைக்கும்.

உாளகம் கீதம். S. M.

"Lo I am with you always."

க. நாங்கள் நோக்கும் யேசு!
சொன்னபடி, வாரும்.
இங்கே வந்தோம் உம்மைச் சேர்ந்து.
பிரசன்னப்படும்.
எங்களுக்குச் செய்யும்,
உம்மாலாகும் ரட்சை.
தாரும், சீவன் சொஸ்தம் சாந்தம்
நித்தியநேசம் இவை.

உ. இட்டம் அகங்காரம்,
சேரோம் நாங்கள் இனி.
லோகமாயை நீங்கிவிட்டோம்,
பாவசமாகி.
தேவர் தந்த அருள்
மோட்சசெல்வம் இவை
பெறும்படி வந்தோம்: நாங்கள்
நாடுவோமே உம்மை.

ங. பிரசன்ன தெய்வம்!
தெரிவியும் உம்மை.
பூரித்திடும் நெஞ்சில் வாரும்:
தாரும் தெய்வசிந்தை.
உயிர்ப்பிக்கும் சத்தம்!
பாவச்சாவை நீக்கி,
நிறை யன்பு நாடும், உள்ளம்
பூர்ணமாக்கும் ஒலி.

உ௱௭௯ம் கீதம். 4-6's & 2-8's.

"They shall be one."

௧. சத்ய கிர்பாமூர்த்தி!
நாம் உம்மை நாடுவோம்,
விசுவாசராகி.
செய்வோம் தெய்வசித்தம்.
திருவுள்ளம் நிறைவேற்றி
கொள்ள, நம்மைஏவும். ஸ்வாமி!

௨. ஒரேயிடம், காலம்,
வாழும்படி செய்து,
நமக்கல்லோ நேசம்
அருள்செய்தீர் நன்று.
அன்னியோன்ய ஐக்கந் தந்து,
ஈயும், ஒருமித்த அன்பு.

௩. நாங்கள் துன்பங்கூட
ஒருப்பட்டுத் தாங்கி,
பிரயாணமாக,
மோட்ச கரை ஏறி
கொள்ளும்படி யல்லோ, தெய்வம்!
நம்மை ஐக்கம்செய்தீர் நித்தம்.

௪. நாங்கள் கரை ஏறி,
உம்மில் என்றும் வாழ்ந்து,
அங்கே ஆட்டுக்குட்டி
தரும் இன்பம் பெற்று,

தெய்வநேசம் போற்றும்படி;
நம்மைச் சேர்த்தீர் ஐக்கமாக்கி.

௫. தேவர் அபிப்பிராயம்
நாங்கள் என்றும்பார்த்து,
சத்ரு எதிர்த்தாலும்
வெல்வோம், உம்மைச் சார்ந்து.
சுடர்போன்ற முடிசூடி
கொள்ளுமட்டும், செல்வோம் தேறி.

௬. அந்தவாழ்வுக்காவி
முத்தா நமக்கீந்து,
நேச பயபத்தி
பூரணமாகத் தந்து;
இளைப்பாற, மோட்சவீட்டில்
சேர்ப்பார், நம்மை மீட்பர் நெஞ்சில்.

௨௱௭௫ம் கீதம். 8's & 7's.

John xvii. 1

௧. கிறிஸ்தின் சனம், ஏகமாய்
நட்சத்திரங், கைக்கொண்டு,
சுடரொளியுள்ளோராய்,
ஐக்கமாவார் மகிழ்ந்து:
துணைத்நர் அல்லோரோ,
முடிசேரா, வெறுங்கல்:
ஆயின், ரத்நம் இவையே
பதிப்பார், இம்மானுவேல்.

உ. பலவர்ண வானவில்,
திரையுள்ள கடலும்,
கட்குத் தோன்றுமளவில்;
ஏகமாக, விளங்கும்.
மீட்டசபை, அவைபோல்,
பலவர்ணமாயினும்;
ஒரே நேச பந்தத்தில்
மோட்சம் நோக்கி, நடக்கும்.

௩. புண்ய பூமி நாடினோர்,
யாத்திரை செய்யுங் காலத்தில்;
ஐக்கமில்லாப் பகைவர்
நடப்பாரோ வனத்தில்:
கிறிஸ்தின் விதிக்கெதிராய்,
வேறுபடும் அன்பில்லார்,
என்னத்திற்குப் பேதமாய்,
வழிச்செல்வார் சபையார்?

உ௱௭௬ம் கீதம். 8 & 7's.

"One Lord, One Faith, One Baptism."

க. பிதா சுதன் ஆவியே!
திடச்செபங் கேளுமே.
கேளீர் எங்கள் பிரார்த்தனை:
திரமாக்கும் உணர்வை.
தாரும் மனோசாந்தத்தை,
அன்னியோன்ய ஐக்கத்தை.

மறு சென்ம ஆத்துமம்
ஒருப்பட, அருளும்.

உ. ஒன்றே நாடுஞ் சபை நீர்!
ஒரேஅங்கமாக்குவீர்,
ஒன்றாய் மேவும் ஆவியே!
ஒன்றும் ஞான சுடரே!
ஒன்றே தெய்வம், விஸ்வாசம்.
ஏகபிதா! யாவையும்
ஆண்டுகொள்ளும், மாதேவர்!
மனம் வாக்குக் கதீதர்!

௩. நம்பினோம், மோட்சசெல்வர்!
அன்னியோன்ய காரணர்!
பிராணாத்மதயாபரர்!
கதிர்சொரிந்தருள்வீர்.
பிதா சுதன் ஆவியே!
ஆத்ம பரானந்தமே!
ஆதாம் இழந்த இன்பம்
தந்து, நமக்கருளும்.

உ௱௭௰௫ கீதம். S. M.

"Trust in God."

க. மீட்குந் தெய்வராசர்
சர்வஞ்ஞத்வ தெய்வம்
தம்மை, நித்தம், சர்வசுத்தர்!
யாரும் துதிசெய்யும்.

உ. கிர்பா ஞான வல்லர்,
நம்மைக் காப்பார் நித்தம்.
சாவு பாவம் மோசம், அவர்
நீக்கிக், காத்தார் என்றும்.

௩. சந்நிதானம்சேர்ந்து,
மகிழ்ந்திட்டு வாழ,
மோட்சம் சேர்ப்பார் சிலந்தந்து,
ஆத்ம இஷ்டம் நீங்க.

௪. அப்போ சிரேஷ்டவம்சர்
சந்நிதானம்சேர்ந்து,
அவாருள் போற்றிநிற்பர்:
மகிழ்வார் புகழ்ந்து.

௫. மீட்துங் தேவர் வல்லர்,
ஞானதயாநிதி,
இனிதாளும் மகாசெல்வர்,
கேட்பார், நித்தஸதுதி.

உ௱௭௬ கீதம். C. M.

"*Where two or three are gathered together in my name, there am I in the midst.*"

க. யேசு! சிஷரோம்மைப்பாரும்,
ஆசீர்வாதம் தந்து.
உம்மை நோக்கி நம்பிவந்தோம்;
பேணும், அருள்செய்து.

௨. சத்யதேவே! உம்மை நம்பி,
"வந்தருள்வீர்" என்று,
தேவர் சொன்ன வாக்கின்படி,
நிற்போம், உம்மைக் காத்து.

௩. கூடிவந்தீர்: எங்களிடம்
தோன்றும், பேணி நம்மை.
தெய்வசுதன்! நம்மில் வாரும்:
நெஞ்சு பற்றும் உம்மை.

௪. தேவே! காய்ந்த எலும்புய்ய,
நம்மிற் சுவாசமிடும்.
"ஆவி ஏற்றுக்கொள்வீர்" என்ன
சொல்லிச், சாந்தம் செய்யும்.

௫. அறைபட்ட யேசு! உம்மை
தேடிக் காணச், செய்யும்.
மாய்ந்து, ரட்சைசெய்தீர் எம்மை.
கைகால்ரத்தம், காட்டும்.

௬. "உங்கள்மூலம் மாய்ந்தேன்" என்னும்
வாக்கை நாங்கள் நம்பி,
உம்மைச் சார்ந்துகொள்ளச், செய்யும்:
யேசும் சின்னங்காட்டி.

உ௱௭௬ம் கீதம். C. M.

"Let us join ourselves to the Lord in a perpetual covenant."

௧. கத்தரான கிறிஸ்துவிடம்
நம்மை ஒப்புவித்து,

அருள்பெற்று, நாங்கள் செய்வோம்
  நித்ய உடன்பாடு.

உ. யேசுதரும் பெலன் வாங்கி,
  சாது மட்டும், நம்மை
ஒப்புவித்துத், தேவைப்போற்றி,
  செய்வோம் உடன்பாட்டை.

௩. இப்போசெய்த உடன்பாட்டில்
  என்றும் மனம் வைத்து,
இனித்தேவை விலக்காமல்,
  நிற்போம் நிலைகொண்டு.

௪. சங்கற்பங் கேட்பவர்க்கஞ்சி,
  நிற்போம் எந்த நாளும்.
கேட்கச் சித்தமானல்; இனி,
  வந்து நம்மை நோக்கும்.

௫. பிதா சுதன் ஆவி! உம்மை
  மனந் தியானிக்கும்.
விண்ணோர்க்காதி தேவே! தயை
  தந்து, சாந்தஞ் செய்யும்,

௬. பாவம் நீக்கும்ரத்தங் காட்டி,
  எல்லாருக்கும் வாய்க்க,
மேலே எங்கள் நாமந் தீட்டி,
  பேணும் நித்தமாக.

உ௱அமுயம் கீதம். P. M.

"Baptismal engagements."

க. திரியேகரே! தயாபரா!
தெய்வீக ஞானஸ்நான
முழுக்கால், எங்களை மகா
உயர்ந்த நிறைவான
அன்போடு சுத்தமாக்கின
இரத்தத்துக்கும், உன்னத
அருளுக்கும், புகழ்ச்சி.

உ. கர்த்தாவே! தேவரீரோடே
நான் இவ்விடத்திற் செய்த,
உடன்படிக்கை எனக்கே
எப்போதும் மேன்மையாக
இருப்பதற்கு, ஆவியை
கொடுத்துத், தேவ நன்மையை
என் ஞாபகத்தில் வையும்.

ஈ. உம்மோடு ஐக்கமாகவே,
இஸ்நானம் பெற்றேனென்று,
என்மேலே பாயுந் தீமையை
அகற்றிப், பேயைவென்று,
என் ஆவி, தேகம் யாவையும்,
கர்த்தாவே! உமக்கென்றைக்கும்
மெய்யாய்ப் படைப்பேனு?

ச. மிகுந்த ஈனத்தாலே நான்
விழுந்தால், நீர் நிறுத்தும்.

மேன்மேலும், உம்மைப்போலத்தான்
நான் சுத்தனாகச்செய்யும்.
கர்த்தாவே! மோட்சகதியில்
நான் சேருமட்டும், நெஞ்சில்
இரக்கமாகத் தங்கும்.

உ௱அ௧ம் கீதம். P. M.

The same.

க. திரியேகரான உம்மையே
நான் முழுப்பக்தியாக
பணிந்து, உமக்கேற்கவே
நடப்பேனென்பதாக.
இஸ்நானத்திலே அடியேன்
உடன்படிக்கை பண்ணினேன்:
இதை நினைப்பேனாக.

உ. பசாசை நான் தீர்மானமாய்,
என் மனசால் வெறுத்தேன்
என்றப்போதுமக்குமுன்பாய்,
நான் வார்த்தையைக் கொடுத்தேன்.
ஆ! அதின் தந்திரங்களை
நான் வெல்ல, என் இதயத்தை
உமக்கே ஒப்புவிப்பேன்.

௩. பிதாக் குமாரன் ஆவியே!
நான் உம்மைப் பற்றிக்கொண்டு,
நான் அன்று தந்த வார்த்தைக்கே

இசைவாயே நடந்து,
முடியப், பாவத்துக்கேன்னில்
இடங்கோடாமல், மோட்சத்தில்
உம்மண்டை சேருவேனாக.

உ௱அ௨ம் கீதம். C. M.

"*Prayer is the Christian's vital breath.*"

க. அடங்கியும் வெளிப்பட்டும்
நெஞ்சிற்றேற்றும் வாஞ்சை,
அந்தாங்க அக்னிகம்பம்,
செபமாதும் இவை.

உ. தனித்தேறிட்டு வேண்டலும்,
கண்ணீர் சோரிந்திட்டு,
நெட்டுயிர்த்துத், துக்கிப்பதும்,
செபமாதும் நன்று.

ங. பாலர்மொழிபோலுமேனும்;
செபமாவதன்றி,
தேவிற்பறந்து திவ்யகீதம்
செபம்: அதேசித்தி.

ச. கிறிஸ்தவனின் சுவாசம் செபம்:
செபம் அவன் வாயு:
சாவிற் செபம்சோல்லி, மோட்சம்
சேர்வேன், செபத்தோடு.

ரு. பாவி, பாவவழிவிட்டு
பிரலாபித்தால், செபம்.

இதோ செபஞ்செய்வானேன்று,
தூதர், சொல்வார் கீதம்.

௬. செபஞ்செய்யுஞ் சுத்தர், நெஞ்சும்
வாக்கும், ஒன்றிநிற்பர்.
பிதாசுதனோடே, என்றும்,
ஐக்கம்பெற்று, வாழ்வர்.

௭. இவர் செபஞ்செய்வதன்றி,
சுத்தாவியும் வேண்டும்.
பாவிக்காக, யேசுவேண்டி,
நிற்பார் சந்நிதானம்.

௮. தேவரீடம் நம்மைச்சேர்க்கும்
சீவன் சத்யம் வழி
செபஞ்செய்த நீரோ ஏவும்,
செபஞ்செய்யும்படி.

உ௱அ௩ம் கீதம். L. M.

"*Renewal of self dedication.*"

௧. மீட்பரே! என்ஸ்வாமி! உம்மை
கண்டநாளே, சுபதினம்.
நெஞ்சம்பூரித் தானந்தத்தை
யார்க்கும் சொல்ல, ஞாயமாகும்.

௨. தெய்வ தொண்டனுவேனேன்று,
சங்கற்பித்த நாளே, இன்பம்.
சந்நிதானம் சேர்ந்து நின்று,
துதிபாடுவேனே, என்றும்.

௩. ஆயிற்றே நான் நிலைகொள்ள;
தெய்வம் அவர். நானேதொண்டு.
அவர் என்னை அழைத்திட;
அமைந்தேனே, வசப்பட்டு.

௪. அமைந்திட்ட ஆத்மா, இன்று,
திடம்பெற்றுச், சாந்தமாகும்.
தேவே செல்வம் என்றுகொண்டு,
நீங்காதென்றும் நிலைநிற்கும்.

௫. அன்றுசெய்த என் சங்கற்பம்
தினந்தோறும் அனுட்டித்து,
நாயேன் மாய்ந்துபோகுமட்டும்;
மெய்ச்சுவேனே, செயங்கொண்டு.

ஆறும் பிரிவு.

கிறிஸ்துவின் ராசரிக்க ஸ்தாபனவிருத்தி.

உ௱அசம் கீதம். L. M.

Psalm lxxii.

க. சூர்யன் தோன்றும் லோகம் எங்கும்,
யேசு, ஆண்டுகொள்வார் என்றும்.
அவர் ராச்யம் பாங்தோங்கி,
நிலைநிற்கும், ஒழிவின்றி.

உ. சபைஎல்லாம், அவர் மூலம்
செபம்பண்ணி, முடிசூட்டும்.

அவர் நாமம் என்னுந் தூபம்,
காலை மாலை எழுந்திடும்.

௩. அன்புபெற்ற சர்வ தேசர்,
போற்றுவார்கள் தெய்வ நேசர்.
பாலர்தாமும் "வாழ்க்" என்னும்
நமஸகாரம் செய்வார், என்றும்.

௪. அவர் ஆள, நிற்கும் இன்பம்.
சிறைப்பட்டோர்தளை நீங்கும்.
இளைத்தோர்க் குண்டாகும் சாந்தம்.
குறைநீங்க, நிறைவாகும்.

௫. அவர் சொஸ்தஞ் செய்யும் இடம்
எங்கும், சாபம் சாவு நீங்கும்.
ஆதி தந்தை விட்ட இன்பம்,
அவர் மூலம் மீண்டு தோன்றும்.

௬. எங்கள் ராசனை துதிபாட,
யாரும், வாரும் நேசமாக.
போற்ற வாரும், தூதர் யாரும்!
மாந்தருடன்பாட, வாரும்.

௨௱௮௫ம் கீதம். P. M.

"He must reign."

௧. பூலோகத்தின் மீட்பர், சிங்காசனமேறி,
செங்கோலுஞ் செலுத்த, மெய்யாய் வருவார்.
இச்செய்தி இப்போதும் எங்கெங்குமாய்த்தேறி,
பூவெங்கும் வர்த்திக்கச், செய்வார்.

௨. தேசாதேசமாக அந்தந்தச் சனங்கள்,
இராசாக்கள், மா சந்தோஷமாய்,
ஒரே கூட்டமாகப் பணிந்துகொள்வார்கள்,
என் யேசுவிடத்தில் அன்பாய்.

௩. பூலோகத்தார் யாரும் விண்ணோர்களைப்போலே
சுத்தாங்க வணக்கஞ் செலுத்திருப்பார்.
சங்கீதங்கள் பாடி, மகாகளிப்போடே,
மோட்சானந்தச் சாயல் கோள்வார்.

௪. பூலோகத்தின் மீட்பர், சிங்காசனம் ஏறி,
செங்கோலுஞ் செலுத்த, மெய்யாய் வருவார்.
விண்மண் தலத்தோறுங் கெம்பீரமாய்த் தேறி,
முன்பின் சேவையாய்ப் பணிவார்.

௨௱அகூ௰ கீதம், 8, 7, 4.

"The morning cometh."

௧. ஆம், விடிந்து பகலாதும்:
சுபகாலந் தோன்றுமே.
தேவன் திருவாக்கை, எங்கும்,
பிரசித்தம் செய்வாரே.
கதி யாரும்
ஒளிகண்டிருள் ஓடுமே

௨. சத்ரு துணிந்தெதிர்த்திட;
வெள்ளம் போலப் பாந்து,
ரட்சா கர்த்தர், வாக்கைச் சொல்ல,
வருவார், சித்தி செய்து.

சர்வ தேசர்,
வாழ்த்துவார்கள், தேவன்பு.

௩. யாக்கோப்பீசன்! மகா தெய்வம்!
நின்காம், சனம்கண்டு,
தேசம் எங்கும் சுவிசேஷம்
கேட்கச் செய்யும், செயித்து.
மருள் நீக்கும்,
யெகோவா தோன்றும் அன்பு.

உ௱அ௰ம் கீதம். 8, 7, 4.

"Loose thyself from the bands of thy neck, O captive daughter of Zion."

க. மலைமீது தோன்றுந் தூதன்
வந்துவிட்டார்; பார்த்துக்கொள்.
சத்ரு பெந்தஞ் செய்த சீயோன்
பெறுஞ் செய்தி கேட்டுக்கொள்.
துக்கச் சிறை,
தெய்வம் நீக்கும் தளைகள்.

உ. நீண்டாா நீபட்டாய் துக்கம்.
மித்ரர் கைவிட்டார்களே.
சத்ருநிந்தித்திட்ட காலம்
கண்ணீர் மாற்றவில்லையே.
துக்கம் நீங்கும்.
தெய்வன்புள்ள சீயோனே!

௩. சூர்ய உதயமாயிற்று,
தேவனே! உன் மித்திரர்.

தெவ்வர்செல்வார் பயங்கொண்டு:
சேயம்வீம்பு நீங்கினர்.
மகா மீட்சி,
சீயோன் ராசா அருள்வார்.

௪. தெவ்வர் எதிரார்கள் இனி.
யுத்தம் விட்டு நீங்கினுய்.
பூரிப்பாய் வெட்கம் நீங்கி,
இனி வாழ்வுபெறுவாய்.
உன் போராட்டம்
நீங்கி, வீட்டிற் சேருவாய்.

௨௱அஅம் கீதம். 8. 7. 4.

"O'er the gloomy hills of darkness."

௧. காரிருளால் மூடப்பட்ட
பர்வதங்கள் மேலே பார்!
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
சோதிதோன்றச் செய்கிறர்.
அதற்காக,
சாலவும் மகிழ்ச்சிகொள்.

௨. ஆ! கத்தாவே! இந்து தேசர்
கல்வியற்ற காப்ரிகள்
பிர்மர், சீனர், யூதர், க்ரோக்கர்
தீவார், துஷ்டர், ஏழைகள்,
மற்றெல்லாரும்
உம்மைப் போற்றச், செய்திடும்.

௩. கோல்கத்தாவில் பட்ட பாட்டை
கொண்டு, மானிடர்களில்
அன்புவைத்து, மாட்சிப்பை
செய்து, மோட்ச மார்க்கத்தில்
முன்நடந்து,
மோட்சத்தைச் சம்பாதிக்கிறீர்.

௪. அதைத் தேசத்தார் எல்லாரும்
காணச்செய்யும், கத்தரே!
அந்தகாரமுள்ள யாரும்
அதால் சீர்கொள்வார்களே.
நீர் சகித்த
சாவுக்கே, அதேபலன்.

௫. இந்தக் காலம் லட்சணமான
பேர்கள் நன்மை சேர்ந்தது.
உம்முடைய உண்மையான
அன்பினாலே ஆயிற்று.
அதற்காக,
உமக்கே ஸ்தோத்திரம்.

௨௱௮௩ம் கீதம். 7's.

"A little cloud like a man's hand."

௧. கிருபையின் பொறியால்,
சுவாலையெழுந்தோங்குது.
லோகங் கிறிஸதுவின் அன்பால்,
அனல் பற்றிவேகுது.

அக்கினிபோட வந்தார்.
சிலர் அதின் வெப்பத்தை,
நெஞ்சில் இப்போ உணர்வார்:
இது ஆவியின் செய்கை.

உ. அவிசேஷம் ஆதியில்,
கொஞ்சமாய்த் தோன்றினது.
இப்போதே விஸ்தாரத்தில்
மிகுத்தோடி வெல்லுது.
பாவத்தின் அரண்களை
செயமாய், இடிக்குது.
நாகவாயில்களை
நடுங்க, அசைக்குது.

௩. இதைப்பார்த்து, யேசுவை
மகிழ்ச்சியாய்த்தொழுங்கள்.
அவர் தேவவார்த்தையை
தந்தாரேயென்றெண்ணுங்கள்.
உலகத்தின் சிருட்டிகர்
சர்வவல்லவராவார்.
யேசுவே எங்கள் மீட்பர்!
யேசுசெயங்கொள்ளுவார்.

௪. மேகம் எழும்புகையில்,
கைபோற் சிறிதானது.
இப்போ நீண்ட வானத்தில்,
பரந்தெங்குங் காணுது.
பெருமழை பூமியில்,
கர்த்தர் வருஷிக்கிறர்.

பூரணமாய்ச் சீக்கிரத்தில்
அன்பின் ஆவியூற்றுவார்.

உ௱௬௰ம் கீதம். 6.—8's.

Psalm xiv.

௧. கிறிஸ்து என்னை ஆண்டு நிற்க;
மனம், பொங்கிக் கீர்த்தி சொல்லும்.
"அவர் நேசசெல்வர்" என்று
துதிபாடுவேனே என்றும்.
தேவதேவர்க்கேற்ற கீதம்
பாட, நாக்குவினாங்தெழும்.

௨. பூலோக மக்கள்யாரிலும்,
நீரோ மகா சௌந்தரியர்!
அருள், வாயாற் பொழிந்திடும்,
நாசீவதயாபார்!
யாரும் போற்றத்தக்க தெய்வம்!
உம்மைத் துதிசெய்வோம், நித்தம்.

௩. ஆவிதருங் கட்கம்பெற்று,
இடைகட்டுங் தயாநிதி!
பெலன் யார்க்கும் தெரிவித்து,
யுத்தம்செய்யும் சேனாபதி!
லோகமீட்டஸ்வாமி! வாரும்.
கனம், மேன்மை, இவை தாரும்.

௪. வாரும் எங்கும் ஆண்டுகொண்டு,
மனஎண்ணம் நிறைவேற்றி,

சென்று, செயம்பெற்று, வாழ்ந்து,
புண்யபலன் காட்டும்படி,
செல்லும்; ஆளும் பூமி எங்கும்:
மண்ணோர் எல்லாம் வசப்பண்ணும்.

௨௱௯௰௩ம் கீதம். S. M.

"How beautiful upon the mountains are the feet of him that bringeth good tidings, &c.

௧. சீயோன் கிரியிடம்
நிற்போர்பதம் மேன்மை.
அவர் நாக்கு, ரட்சைதரும்;
சொல்லும் சாந்த வாக்கை.

௨. சத்தம் மனம் மேவும்
செய்தியோ இனிது,
சீயோன்! பார்ப்பாய மீட்குந் தெய்வம்:
ஆள்வார், வெற்றிகொண்டு.

௩. ராசா தீர்க்கதர்சி
கேட்கத் தேடினாலும்;
கேளாச்சத்தம் எங்கள் செவி
கேட்டால், மகா பாக்யம்.

௪. ராசா தீர்க்கதர்சி
காண நாடினாலும்,
காலைவண்ணம் செத்துசோதி
கண்டு, பெற்றோம் இன்பம்.

ரு. காவலாளர் கூடி,
துதிப்பார்கள் அன்று.
நகர்நாடு போற்றும், பாடி.
தொனித்திடும், காடு.

சு. மண்ணோர் காண்பதற்கு,
தேவன் காங்காட்ட,
யாரும், மீட்குந் தேவைக் கண்டு,
துதி செய்வாராக.

உ௱கூஉம் கீதம். 4-5's&2-9's

"*The Lord reigneth.*"

க. யெகோவா தாமே
சிறந்தவரே.
செங்கோலுஞ் செலுத்திருக்கிறர்.
தேசாதேசமாய்,
மகா நீதியாய்,
பூயாவையும் ஆண்டுகொள்வார்.

உ. பாரோன், மாந்தரே!
சீயோன் சபையே.
கிருபை விளங்கச் செய்வார்,
தென்வடவழியாய்,
கீழ்மேலுந் திசையாய்,
அறிந்தோரையே அழைப்பார்.

ஙு. பூலோகத்தாரே!
வானோர்களுமே!

மாபூரிப்பா யக்களியுங்கள்.
லோகாலோகமாய்,
ஞாயாதிபதியாய்,
ஆள்வார், யேசுவைப் பாருங்கள்.

௨௱௩௰ம் கீதம். 7's & 6's.

"*Thy kingdom come.*"

௧. மகா நேச பிதாவே!
தந்தவாக்குத்தத்தம்.
மனுருபியாகி, இதே!
செய்தீர் நிறைவேற்றம்.
அப்போ சிலதேசர்
சாலேம் நகர் கூடி,
அக்னி நாக்கு செய்கை கண்டார்,
வியந்தும்மைப் போற்றி.

௨. வாக்கை நிறைவேற்ற,
தோன்றும், எங்கள் தெய்வம்.
காத்து நிற்போம், இதற்காக,
தெய்வ சந்நிதானம்.
இன்னுந் தோன்றுந் தயை
பெறும், வேத தேசம்.
என்றும் நவமாதும் வாக்கை
நம்பி, நிதம் போற்றும்.

௩. யேசுநாதர் மூலம்,
யாரும் மீட்கப்பட்டு.

தேவசபை சேர்ந்து, நித்தம்
 வாழ்க, துதிசெய்து.
உம்மாற் கூடிச் சேர்ந்து,
 ஐக்கங்கொண்டு நிற்க;
சுதன்றேற்றுந் தயை கண்டு,
 வாழ்வார், ஏகமாக.

உ௱௯௪ம் கீதம். C. M.

"Praise to Christ."

க. பேரின்பத்தில் மூழ்குந் தூதர்!
 என்றும் வாழ்ந்திருக்கும்
கோடாகோடி மோட்சவாசர்!
 கூடிப், பாடவாரும்.

உ. மீட்பருக்கு முடிசூட்டி,
 போற்றுவார்கள் அங்கே:
யேசு என்னும் பாவப்பலி,
 மீட்கும் நம்மை, இங்கே.

௩. கனம் பெலம் செயம் கீர்த்தி
 உள்ள தெய்வ யேசு!
மண் விண் எல்லாம் செய்யும் துதீ
 கேட்பீர், தயைசெய்து.

௪. விண்ணவையாளும் ஆட்டுக்குட்டி
 தன்னைத் துதிசெய்ய,
லோகம் எங்கும் கூடிப்பாடி,
 கீர்த்தி சொல்வதாக.

உ௱கூ௩ம் கீதம். L. M.

"The excellency of Christ's religion."

க. வேதமுத்தி தயாநிதி!
என்னைக் காக்குந் தெய்வமீட்பர்!
நீரோ முடிசூட்டுந் துதி,
நித்தம் ஏற்கத்தகும் செல்வர்!

உ. தேவரீரை நாடுமட்டும்,
சோர்ந்துபோகும் எமதாவி:
பாவஞ்செய்ய நெஞ்சுதுள்ளும்:
அலைந்திடும், நிலையின்றி.

௩. பிராந்தி இல்லா வேதம் உண்மை:
தெய்வவாக்கோ மகாதிடம்:
தெய்வவிதி எல்லாம் மேன்மை.
ஆத்மதஞ்சம் நிலைநிற்கும்.

௪. கள்ள நெஞ்சவஞ்சர்கூடி,
நிலைபேர்க்க, எதிர்த்தாலும்;
தள்ளுவேனே அவர்பிராந்தி:
வைப்பேன் நெஞ்சிற்சுவிசேஷம்.

உ௱கூ௪ம் கீதம். L. M.

"Scattered abroad as sheep having no shepherd."

க. ஆத்துமங்களின் மேய்ப்பரே!
சனத்தைப் பார்த்து, இரங்கும்.
நாங்கள் அடைந்த இரட்சிப்பை
எல்லார்க்குங் கிடைக்கச், செய்யும்.

உ. வனாந்தரங்களில் அலைந்து,
தோழமும் மேய்ச்சல்மேய்ப்பரும்
இல்லாத ஆடாய்த் திரிந்து,
சிதறப்பட்டோரைப் பாரும்.

ஙூ. கிறிஸ்தோர்களும் அஞ்ஞானமாய்,
ஒன்றறியாதிருக்கிறர்:
கர்த்தருக்குப் பகைஞராய்,
ரட்சிப்பைப் புறக்கணிக்கிறர்.

ச. மீட்பரை அறியாமலும்,
நீர் மீட்டவர்கள் அழிந்து,
நீர்மீட்ட ஆத்துமங்களும்
அறியாமையாற் சாகுது.

ரு. நாகந் தன்வாய்திறந்து,
அப்பேதைகளை விழுங்கும்.
அவர்கள் பாவத்தைத்தீர்த்து,
மரித்தவரே! இரங்கும்.

சா. இரையாக, இவர்களை
பசாசு பிடிப்பது ஏன்?
இரட்சிக்க நீர்மரித்ததை
நினைத்துக்கொண்டிரங்குமேன்.

எ. பாவமன்னிப்பு, ரட்சிப்பு,
முதலாய்க் கொடுத்தருளும்.
உம்முட சபைக்குச் சேர்ந்து,
இரத்தத்திலுங் தெளியும்.

௮. தேவகிருபை காண்பித்து,
பாவிகளை வருவியும்.
மன்னிப்புக் கிடைத்ததென்று,
சுவிசேஷத்தாலுரையும்.

௨௱௯௰௭ம் கீதம். P. M.

"Ride on."

௧. பலத்த தேவ வார்த்தையே
எல்லா இடமுமாக,
ரட்சிப்பின் மாவிசேஷமே
எல்லாருக்குள்ளுமாக,
சிந்திக்கப்பண்ணும். யேசுவே!
எல்லாரையும் ரட்சிக்கவே
இவ்வுலகிற் பிறந்தீர்.

௨. கர்த்தாவே! பொய்மதங்களை
ஊக்கமாய் அழித்து,
நாருக்கு மெய்ஞானத்தை
அன்பாகவே கொடுத்து,
எல்லாவகைத் துன்மார்க்கமும்
ஒழிந்துபோகச் செய்திடும்:
அதற்குப்பாடுபட்டீர்.

௩. கர்த்தாவே! எந்தத் தேசமும்
உமக்குள்ளாவதாக.
எல்லாவகைச்சனங்களும்
துதித்தல் செய்வதாக.
நீர்மாத்திரம் மெய்த்தேவனே!

புகழ்ச்சி உமக்கேற்றதே.
அதைநீர் வாங்கிக்கொள்க.

உ௱௬அய் கீதம். L. M.

"*The Jews.*"

௧. மெய்விசுவாசமுள்ளோரே,
மெய்வேதம் பெற்றுக்கொண்டோரே,
பூர்வீகத்தில் யெகோவாதாம்
தெரிந்துகொண்ட சனமாம்.

௨. என்றாலும், வந்த யேசுவை
வெறுத்துக்கொண்ட பாவத்தை
செய்ததினால், எத்திக்கிலும்
சிதறிப்போனார் யாவரும்.

௩. போனாலும், கத்தர் மீளவும்,
உடன்படிக்கைப்படியும்,
யாக்கோப்பின் வமிசத்தாரோ
திரும்புவார்கள் என்றோ!

௪. திரண்டகூட்டம் கூட்டமாய்,
பற்பல தேசவழியாய்,
சீயோனில் வந்து சேருவார்,
கத்தாவின் பத்தாராதுவார்.

௫. முன் அறையுண்ட யேசுதாம்
மேசியாவென்று, கண்டோமாம்.
மகாகழிப்பாய்ச் சொல்லுவார்:
நம்பிக்கையோடும் பணிவார்.

௬. பற்பல தேசத்தார்களும்
இச்செய்திகண்டு கூடவும்,
ஒன்றாகி, வருவார்களே!
மாகோடாகோடி சனமே.

௭. விழ்! விழ்! சீயோனைப்பார்,
விழுந்த மதில் கட்டுவார்:
கிரேக்கர், யூதர், ஏகமாய்
செய்வார்களே விவேகமாய்.

௮. கர்த்தாவின் மேன்மை, சோதியும்,
லோகத்தை முற்றும் நிறைக்கும்.
எங்கெங்குமுள்ள தேசத்தார்,
தேவாபிஷேகம் பெறுவார்.

௯. ஆ! களிகூர்ந்து, பாடுங்கள்.
சீயோனில் வாழ, வாருங்கள்.
பூலோகம் வானம் புதிதாய்
சிஷ்டிக்கப்படுஞ், சுத்தமாய்.

௨௱௯௰ம் கீதம். L. M.

"Idolaters."

௧. கர்த்தாவே! பூதலத்திலே
உண்டான கேட்டைப் பாருமே.
அனேகம்பேர் இருளிலே
இருந்து நீங்க, வாருமே.

௨. நீரோ மெய்த்தேவன்! மானிடர்
பொல்லாத இஷ்டமாகவே

பொன், வெள்ளி, மண், கல்,வீரர்கள்,
தேவர்களென்கிறார்களே.

௩. சிலர் மிகுந்த ஈனத்தால்,
தெய்வீக சொற்புரட்டியும்,
பாப்பென்பவனைத் தேவனால்
நிறைந்தோனென்று சொல்லியும்,

௪. இருந்து பொய்யைப் போதித்து,
இலக்கமற்ற பேர்களே
கெடுக்கும்படி யோசித்து,
தப்பாயிருக்கிறார்களே.

௫. பலத்த யேசுவே! நீர்
அப்பொய்களை அகற்றுமேன்.
தெய்வீக வார்த்தையால், நீரே
துன்மார்க்கரை அதட்டுமேன்.

௬. எல்லாரும் ஏகசித்தமாய்,
மெய்த்தேவனை உம்மையே,
அறிந்து, கிறிஸ்தின்மேல் அன்பாய்,
இருக்கச் செய்யும். கர்த்தரே!

௩௱ம் கீதம். 7's.

"*All the world.*"

௧. எங்கும் மாந்தர்,தேவனே!
தங்கள் கேட்டைக் காணவே,
புத்தியைக் கடாட்சியும்:
கேட்டை நீக்கி, ரட்சியும்.

௨. உமது விசேஷத்தை,
அதினல் ஊாக்கத்தை,
மாந்தர் யாரும் பார்க்கவே,
செய்யும். நல்ல மீட்பரோ!

ருாகம் கீதம். L. M.

The same.

௧. ஆ! எங்கும் வேதபேர்களும்
இந்நேரமாம் வரையிலும்,
தேவன்பின் பாக்யமற்றோராய்,
நடக்கிறர்கள், ஆவலாய்.

௨. ஆதாம் கத்தாவின் பார்வைக்கே
முன்னின்று, தள்ளப்பட்டதே:
அநேககாலமாகியும்,
அலைகிறர்கள் யாவரும்.

௩. கர்த்தாவே! ஏழைமானிடர்
அலைந்திராமல்; பாக்யர்
ஙிகர்க்கவே, எப்போதும் நீர்
அவர்களுக்கிரங்குவீர்.

௪. இரங்குவேனென்றே, சொன்னீர்.
அதற்குச் சீவனும் விட்டீர்.
விட்டும் அநேகம் மாந்தரோ
அதை அணைக்கவில்லையே.

௫. கொடுத்தவாக்குத் தத்தத்தை
முடித்து, நீர் விசேஷத்தை

உலோகத்தார் எல்லாருக்கும்
அனுக்கிரகிக்குமட்டுக்கும்,

௩, நாம் உம்மை நோக்கி, விண்ணப்பம்
இடைவிடாது, பண்ணுவோம்.
நன் மீட்பரே! எல்லாரையும்
நேரிப்படுத்தி, ரட்சியும்.

௩௱௨ம் கீதம். L. M.

"All nations shall call him blessed."

௧. வெற்றிசிறந்த சபையும்
மெய்விசுவாசமுள்ளோரும்
எல்லாரும், கொண்டு களிப்பைத்
துதியுங்கள் தமரானை!

௨. இராசாக்கட்கிராசாவே!
பூலோக பாவப்பலியே!
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி, ஆளுவீர்.

௩. பூமியிலுள்ள தேசத்தார்
அந்தந்தப் பாஷைபேசுவார்:
எல்லாரையும் ஒன்றாகவே,
இழுத்துக்கொள்வோமென்றீரே.

௪. கிரேக்கர், யூதர், தீவார்கள்,
இராயர், குடிசனங்கள்,
படித்தோர், மூடர், யாவரும்
வந்தும்மைப் போற்றச், செய்திடும்.

௫. பொன், வெள்ளி, முத்து, மாணிக்கம்,
பூமியின் மேன்மை யாவையும்
காணிக்கையாக, உமக்கே,
செலுத்தப்படும். யேசுவே!

௬. சிட்டிக்கப்பட்ட உலகம்
கர்த்தாவின் சுத்த ஆலயம்.
எங்கெங்குமுள்ள தேசத்தார்
குமாரனை வணங்குவார்.

௭. வானங்களே! பூலோகமே!
சுத்தாங்கக் களிப்புடனே,
பிதாக்குமாரன் ஆவிக்கும்
துதிசெய்யுங்கள், என்றைக்கும்.

ஏழாம் பிரிவு.

கால மாண நியாயத்தீர்ப்பு மோட்சானர்த்தம்.

௨௱௩ம் கீதம். L. M.

"For New year's day."

௧. ஆண்டினுக்கு, முடிசூட்டி!
இன்பந்தந்த தயாநிதி!
தெய்வசந்நிதானம் சேர்ந்து,
மகிழ்வோமே, துதிசெய்து.

௨. தெய்வவிதிப்படி, கோடை
எங்கும் வீசும், சுகந்தத்தை.
செழித்தோங்குந்தான்யம், த்ராட்சம்,
கதிர்பட, விளைந்திடும்.

௩. பருவகாலம் சொரிந்திடும்
எல்லை எங்கும், திரவியம்.
மாரி கூதிர்கொண்டிருந்தும்;
உமதன்பர்வாழ்வர், எங்கும்.

௪. மாசவார தினந்தோறும்,
உம்மைத் துதிசெய்யத்தகும்.
அந்திசந்தி உமக்கெங்கும்,
யாரும் பணிசெய்க, என்றும்.

௫. ஓய்வுநாளில் உம்மை நோக்கி,
செபமென்னுந் தூபங்காட்டி,
கோவில்சென்று வீட்டில் நின்றும்,
என்றும் துதிசெய்வோம், எங்கும்.

௬. இகம்விட்டுப், பரஞ்சென்று,
தெய்வசந்நிதானம் நன்று,
நித்தம் பாடத்தக்கதாக;
தேவன் அருள்செய்வாராக.

நூ.ாசம் கீதம். S. M.

The same.

௧. தினமும் புதிதாய்
அனுக்ரகத்துக்கே,

இன்றைக்கும் மாவணக்கமாய்,
துதீ உண்டாவதே.

௨. தப்பாமல், எங்களை
நேரிட்டு, ரட்சியும்.
எல்லா இக்கட்டு, பாவத்தை,
விலகச் செய்திடும்.

௩. துன்னுளிற்றீவினை
திரட்சி வந்தாலும்;
நிலைத்திருக்க எங்களை
பெலப்படுத்திடும்.

௪. பாத்துக்கோட்டமாய்,
மா வாஞ்சையுடனே
அடியார் ஓடத், தயவாய்
ஆளும் தேவாவியே!

௩௱ரும் கீதம். 7'8.

The same.

௧. சீவன் தந்த கர்த்தரோ!
அத்தியந்தமாகவே,
உண்மையாகப்பணிவாய்,
தோத்திரிப்போம், களிப்பாய்.

௨. நாட்கள் சொற்போற்கழியும்;
தண்ணீர்போலவடியும்:
போயினும், இவ்வரைக்கே
சீவனோடிருப்போமே.

௩. வலுசர்ப்பஞ்செய்வினை,
நெஞ்சிலாதுந் துர்ச்சை,
மற்றும் யாவுக்குந் தப்பினேம்;
தேவமீட்சியைக் கண்டோம்.

௪. வல்லகத்தர்! நீட்டும் கையை:
பட்டபாடு சிலுவை
நோக்கி, நம்பும் எவனும்
துதிசெய்வான் என்றைக்கும்

௫. வழி, சீவன், சத்தியம்
ஆயிருக்கும் மெய்த்தெய்வம்
பெலன்தந்தால்; ஆகுமே.
செய்யாவிட்டால், வீணேமே.

௩௱௪௰௰ம் கீதம். 8. 7.

The same.

௧. வருஷப்பிறப்புண்டென்று,
புதுப்பத்தியுடனே
தேவரீரை நான் பின்சென்று,
தொண்டுசெய்ய, யேசுவே!
உமதாவியை எனக்கு
பூரிப்பாக அளியும்.
அடியேனை ஆதரித்து,
வழிகாட்டியாயிரும்.

௨. இது கிருபைபொழியும்
வருஷமாகட்டுமேன்.

என்னில் ஒளிதோன்றச் செய்யும்.
   என் அழுக்கை அடியேன்
மனச் சஞ்சலத்தைக்கொண்டு
   பார்த்து அருவருக்கும்
நல்லகுணத்தை அளித்து,
   பாவம் யாவும் மன்னியும்.

௩. நீர், என் அழுகையைக்கண்டு,
   துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றிக்கொண்டு,
   திடன் அளித்தருளும்.
இந்தப் புதுவருஷத்தில்
   பாவத்துக்குங் கேட்டுக்கும்
தப்புவித்தே, என்னிடத்தில்
   தயவை ஈந்தருளும்.

௪. பூரிப்பாய் இவ்வருஷத்தை
   நான் முடிக்க, என்னை நீர்
தாங்கி, உமது காத்தை
   என்மேல் வைக்கக் கடவீர்.
வருத்தம்வந்தாலும் உம்மை,
   நம்பிப் பற்றிக்கொள்வேனே.
மரித்தாலும் பேரின்பத்தை
   அடைவேன் மோட்சத்திலே.

௨௱௭ம் கீதம். C. M.

Barren Fig tree.

௧. சுயபுண்யங் காட்டி உம்மை
   வேண்டும் யேசுநலம்,

பட்டமாம்போன்ற என்னை
காத்தீர், இந்நாள்மட்டும்
கிருபாசனத்தினண்டை
பட்சவாதியாதும்
சுதன் மூலம், பேணும் என்னை,
இன்னும் ஓர் வற்சாம்.

௨. மனஸ்தாபப்படுங்காலம்
அருள்செய்வதன்றி,
கண்ணீர் சொரிந்திடப்பண்ணும்,
நெஞ்சிலாம் நீக்கி.
இன்று சாவகாசமாக,
தடையெல்லாம் நீக்கும்.
அப்போ துமதன்புபெற,
பண்ணுவேனே செபம்.

௩. பாவம் நீக்குந் தேவை நோக்கி,
பாவம் எல்லாம் விட்டு,
அறைந்தேனேஎன்றுசொல்லி,
ரத்தபலன்பெற்று,
மீட்பர்பட்ட சிலுவையில்
என் பாவம் அறைவேன்.
லோகம்தள்ளி, யேசுநெஞ்சில்
மேன்மைபாராட்டுவேன்.

௪. மனஸ்தாபம் தருந்தேவன்
ரத்தங்காட்டும்படி,

சிலுவையிற் சேர்ந்திருப்பேன்
துக்கத்தைக் கொண்டாடி.
மன்னிப்பை என் நெஞ்சில் தந்து,
இளைப்பாறச்செய்யும்.
சுத்த அன்பு சொரிந்திட்டு,
மோட்சானந்தம் தாரும்.

௩௱அம் கீதம். 4-6's & 2 8's

"Spare it yet another year."

க. மண்விண் எங்கும் ஆளும்
நித்யவயோதிகர்,
வம்சபரியந்தம்
நிற்கும் மோட்சவாசர்,
காருண்ணிய தேவைப்போற்றும்!
காத்தார், பின்னும் ஓர்வருசம்.

உ. உதிர்ந்தமரம்போல்,
மண்வணையுங் கெடுத்தோம்.
கனியில்லாமையால்,
நாங்கள் பட்டுப்போனேம்.
ஆயினும், தேவதன்பின்னும்
காத்தார் நம்மை, ஓர்வருசம்.

௩. நீதி கட்கம் ஓங்கி
வெட்டும்போ தீர்க்கம்
அன்பினேடு நோக்கி,
நீக்கிற்றதன்கோபம்.

தந்தை செவிசாய்த்தார்: பின்னும்
நம்மைக்காத்தார் ஓர்வற்சாம்.

ச. யேசு சிந்தும் ரத்தம்,
தேவன், கண்டிரங்கி,
தெய்வ காருண்ணியம்
தந்தார், நம்மைப் பேணி.
நாங்கள் யேசுவின் நிமித்தம்,
கண்டோம், பின்னும் ஓர் வற்சாம்.

ரு. வேளைச் சூழக் கோத்தி
வெட்டும், சாட்டி நிலம்.
உம்மைப் போற்றும்படி
நம்மைச் செழிப்பாக்கும்.
உம்மைத் துதிசெய்யப்பண்ணும்:
கனிந்திட அருள்செய்யும்.

௩௱௪௰ கீதம். C. M.

Christian vigils.

க. அருள் மீட்ட மக்களெல்லாம்!
பூரித்தாராதித்து,
மீட்பர் நாமந் துதிசெய்யும்,
சாமத்தில் மகிழ்ந்து.

உ. இருள் நீக்கி, ஒளி தந்து,
நாகம் மோட்சமாய்
மாற்றும்: எங்கள் துதி யேசு
கேட்பாராம் நித்தமாய்.

௩. விசுவாசர் மோட்சம் நாடி
வாரும் என்று சொல்ல,
உடன் கூட முடி சூடி,
விண்ணிற் செல்வோமாக.

௩௱௰ம் கீதம். **P. M.**

"*The day is far spent.*"

க. நவமாய்ச்சென்று, பயணம் செய்து,
வருஷத்தோடே,
வீட்டிலேசோ நாம் விரைத்திருப்போமே.

உ. அவர்திருவுள்ளம் உட்கொள்வோமேஇட்டம்:
யார்க்கும்நன்மைசெய்து, [அன்பு.
நிலைகொண்டு தேறிச், செய்வோம் யார்க்கும்

௩. சீவன் கனவாம்: காலம் ஓடையாம்:
கத்தோடுமே.
விரைந்திடும் நிமிஷம். தாமதிக்காதே!

ச. அம்பு பாய்ந்தது: காலம் சென்றது:
பூர்ண வருஷம்,
கத்துவருமே! நித்தம் சமீபமாம்.

ரு. அவர் வருந்தினம் வந்து நின்று, யாரும்
செயித்தேன் பொருது [நன்று.
செய்யும் செய்கைதீர்த்துவிட்டேனென்றல்

௯. யாரும் "கத்தரின்முன்நீயே மெய்யுத்தமன்:
சந்தோஷம் அடைந்தே, [ட்பாரே.
ஆசனத்தில் வாழ்வாய்" என்னுஞ் சொற்கே

௩௱௰௩கம் கீதம். L. M.

"*The grass withereth, the flower fadeth.*"

௧. பிராதக்காலந் தோற்றும் புஷ்பம்
வாகாய் விரிந்தலர்ந்தோங்கி,
மத்யானவெப்பம் மாலைச்சீதம்
கண்டும்; வாழும் அச்சமின்றி.

௨. ஆயிற், சோரும், காற்றுவீச:
கதிர்பட, வாடிப்போம்.
புஷ்பம்போன்ற வாழ்வு போக;
அதின் மேன்மை சிதைந்திடும்.

௩. தெய்வீக முக அழகு
இளமையில் இத்தன்மையாம்.
வேனிற் பூவினும் வடிவு,
இனிய பார்வை காட்டுமாம்.

௪. ஆயுள் சென்று சாவார் சிலர்,
நிலையில்லா மேன்மைவிட்டு.
இடையூறுப் போவார் பலர்,
நிழல் நேர்வ்வாழ்வுகெட்டு.

௫. ஆயின், இவர் மீர்த்து நீங்கி,
ஒளியுள்ளோராகவந்தும்;

வாடா அலங்காரம் தாங்கி,
துன்பமின்றிவாழ்வார், என்றும்.

௬. துன்பம்மீர்த்துவந்தால், என்ன?
அப்பாலல்லோ மோட்சானந்தம்.
இவ்வாழ்வுபோம் பூவைப்போல:
தேவவாக்கோ நிலைநிற்கும்.

௩௱௰உ௰ம் கீதம். P. M.

"It is appointed unto men once to die."

க. ஓரம் இல்லாச் சமுத்திரம்
முன்பின் இருக்கச்சாகும்: நான்
ஓர் கணப்பொழுதில்,
முத்தியடைந்திருப்பேனோ?
பாதாளத்தீ கிடைக்குமோ?
ஆ! மிஞ்சுமே திகில்!

உ. தயாபரா! என் நெஞ்சிலே
நித்தியமுள்ள இவையே
பதியச் செய்திடும்.
கெட்டுண்டழிந்து போதமுன்
தேவன்பைப் பெற்றேனாகவும்,
என்னைக் காத்தருளும்.

௩. சுத்தாங்கத்தூத சேனையும்
ஆரம்பம், சோதி, துதியும்
தோன்றும், அப்பொழுது.
மரித்தோர் உயிரோர் கூடவும்,

எழுப்பித் தீர்க்கப்படவும்,
நான் கூட நிற்பேனே.

௪. இங்குள்ள நாட்கள் யாவிலும்,
நம்பிக்கை பத்தி அன்பிலும்.
கதிக்கும் நோக்கமே
என் நெஞ்சில் தாங்கும்படிக்கு,
தேவாபிஷேகம் எனக்கு
அருளும், யேசுவே!

௫. சாவா நான் களிப்புடன்
பாத்திற் சேர்ந்து, உம்மைத்தான்
என்றென்றைக்கும் போற்றுவேன்.
நம்பிக்கை காட்சியாய் வரும்
மெய்ஞ்ஞானஞ் சுத்தம் அன்பிலும்
பூரணம் அடைவேன்.

நடாயிநடம் கீதம். 8, 7, 4.

The same.

௧. மனமே! உன் சீவன் இங்கே
எப்போதும் நிலைக்குமா?
தோன்றிப்போதும் புகைபோலே
அதிருக்கும் அல்லவா?
அதினாலே
சீவகாலம் மீட்டுக்கொள்!

௨. இந்தப் பூமியுள்ள பொருள்
போன நாளைப் போலாமே!

மேலிருக்கும் பொக்கிஷங்கள்
என்றென்றைக்கும் நிற்குமே.
திடங்கொண்டு,
இவையே நீ தேடிக்கொள்.

௩. மனிதரின் அலங்காரம்,
பூவைப்போல, உதிர்ந்துபோம்.
என்றும் நிற்கும் அஸ்திவாரம்,
கர்த்தர் சொன்ன வார்த்தையாம்.
அதினாலே,
தோன்றும் மா சிறப்பைப் பார்!

௪. மனிதரின் மகிமைகள்
புல்லைப் போல உலர்ந்துபோம்.
லோகக் கல்வி யோசனைகள்
சீக்காம் ஒழிந்து போம்.
பெலவானும்
பெலனற்றவனாவான்.

௫. தேக சொஸ்தமுள்ளவர்கள்,
நினையாத நேரத்தில்
நம்மைவிட்டுப் போகிறார்கள்,
மறைவுள்ள லோகத்தில்.
அதை எண்ணி,
சாவுவாக், காத்திரு.

௬. மரணத்தைச் சயங்கொண்ட
ஆண்டவரைப் பற்றிக்கொள்:

அப்போதென்றுஞ் சீவனுள்ள
யேசுவினுடைய சொல்
நீயுங் கேட்டு,
மோட்சத்துக்கு ஏறுவாய்.

௩௦௰௪ம் கீதம். 8's.

"*Here have we no continuing city.*"

௧. மோட்சத்தை நோக்கி நடந்து,
போவோருக்கு வழிகாட்டி,
வாரும். நாங்கள் பின்தொடர்ந்து,
உமதுபேரிலே நம்பி,
உமது மேல் நாங்கள் சாய்வோம்.
துக்கம் பயமும் நீங்கிப் போம்.

௨. பூமி துன்பத்தின் பள்ளமாம்:
அதிற் பாதேசிகளானோம்:
பூமி விட்டுமது முகம்
பார்க்கத் துரிதமாகிறோம்.
நித்திய பாம ராச்சியம்
எங்கள் வாடாச் சுதந்தாம்.

௩. தங்குழர் இங்கேயில்லையே!
காணாத ஊரைத் தேடுவோம்.
சோதி தேசத்தை நோக்கவே,
கால் தவறுமல் நடப்போம்.
சுத்தர் தங்குஞ் சீயோன் நகர்
கர்த்தர் அதைக் கட்டினவர்.

ச. இவ்வீனுலகத்தை விட்டு,
நியமித்த வழி ஓடுவோம்.
பெலத்தில் அதிகரித்து,
புது எருசலேஞ் சேர்வோம்.
புது சீயோனைச் சேர்வது
எங்கள் ஒரே நோக்கானது.

ரு. எங்கள் பாவங்களைத் தீர்த்த
உம்மாற் பரிகாரமானோம்.
பிறகந்தமோட்சங் கிட்ட,
பாடிக்கொண்டு வழிசெல்வோம்.
அம்மோட்சங் கிட்டுதென்பது
பாடும்போதெங்களுணர்வு.

சா. தேவஅன்பால் தீடப்பட்டு,
பெலத்துடன் வழிச்செல்வோம்.
முதற் பிறந்தோரைக்கிட்ட
கர்த்தர் மலைக்குப் போகிறோம்.
சந்தோஷத்தோடேகிறோம்.
வானத்திற் கர்த்தரைப் பார்ப்போம்.

௩௭௰௯ம் கீதம். C. M.

"*Thou turnest man to destruction.*"

க. ஆதிபராபரா! உம்மை
தாழ்வாய்ப் பணிகிறோம்.
சாவுக்குரிய தேகத்தை
உடையோராகிறோம்

௨. நாள்வா, எங்கள் சீவன்கள்
குறுகிப் போகுது.
நாங்கள் வாங்கிற சுவாசங்கள்
நிறைந்தொழியுது.

௩. வருஷந்தோறுஞ் சாவுக்கு
கிட்டியிருக்கிறோம்.
எங்கும் எதாலுங் குழக்கு
பயணமாகிறோம்.

௪. எங்களை அதில் தள்ளற்கு,
ஏதுக்கள் அநேகம்.
கொடிய நோய்களைதீர்த்து
சீக்ரத்தோடடிக்கும்.

௫. மா சுவாமியே! மறுமைக்கு
அணுகி நிற்கிறோம்.
சணத்திற் கணக்கிடற்கு
அழைக்கப்படுவோம்.

௬. அளவில்லாத களிப்பு,
அளவில்லாத நோய்,
மரணம் அடைபவர்க்கு,
அப்பொழுதாகுமோ?

௭. மோசங்கள் நீக்கும்படிக்கு,
எங்களை எழுப்பும்.
மரணம், விழிப்போருக்கு,
மோட்சத்தைத் திறக்கும்.

௩௱௰௯ கீதம். C. M.

"Lord thou hast been our dwelling place in all generations."

௧. கர்த்தாவே! என்றைக்குமெங்கள்
அடைக்கலமானீர்.
என்றும் உம்மை நம்புவோர்கள்
காப்பாற்றக்கடவீர்.

௨. நாங்கள் உமது நிழலில்
சுகமாயிருப்போம்.
நீர் உம்து கையை நீட்டில்,
ஒன்றும் அஞ்சமாட்டோம்.

௩. மலைகள் தோன்றுமுன், பூமி
இராத காலமும்
பராபரனாயிருந்தீர்.
இருப்பீர் என்றைக்கும்.

௪. உமக்காயிரம் வருஷம்
ஒரு நாளுக்கொப்பே.
ஓர்யுகமும் ராச்சாமமும்
பராபரனுக்கொன்றே.

௫. சாவுக்குரிய மனிதர்
நிலைநிற்க மாட்டார்.
காலப் பிரளயத்தில் அவர்
அமிழ்ந்திப்போகிறர்,

௬. காலம் ஓாற்றைப்போலோடி
எங்களை இழுக்கும்,
சீக்காம் மறந்த கனவாய்
எங்கள் சீவனும்போம்.

௭. கத்தாவே! என்றைக்குமேங்கள்
அடைக்கலமானீர்.
முடிவுமட்டுங் காத்தேங்கள்
வீடாகக்கடவீர்.

நாயீஎம் கீதம். C. M.

The same.

௧. கத்தாவே! வருஷாந்தாம்
உம்மாற் பிழைக்கிறோம்.
உம்மாலே நாங்கள், விக்கினம்
வந்தாலும், தப்பினோம்.

௨. பாவிகளான எங்களை
சீக்கிரம் தண்டியீர்.
அடியார் செய்த பாவத்தை
அன்பாய் மன்னிக்கிறீர்.

௩. இக்கட்டில் நாங்கள் கூப்பிட்டால்,
நீர் கேட்டிரங்குவீர்.
எங்களை நீர் மா தயவால்,
அணுகித் தாங்குவீர்.

௪. அடியார் அழுகைக்கெல்லாம்
செவிகொடுத்து, நீர்

எங்கள் கண்ணீர்களை எல்லாம்
எண்ணியிருக்கிறீர்.

ரு. இனியனந்த வாழ்வையே
பரத்தில் அடைவோம்.
அநந்த நித்தநித்தமே
உம்மைப் புகழுவோம்.

௩௱௪௰௮ம் கீதம். L. M.

"Return ye children of men."

௧. சாதல்கொள்ளும்மிர்த்துக்கண்டு,
திடுக்கிட்டுப் பயந்தஞ்சி.
பெருமூச்சுவிட்டு மாய்ந்து,
சேர்வேன், உம்மை. தேவனுதி!

௨. சபை சேர்ந்தாலும், உம்மை
காணும்படி, அருள் செய்யும்.
பாவந்தீர்த்த யேசு! என்னை
சாவில் எண்ணித் தாங்கிக்கொள்ளும்.

௩. என்னை வாச்சொல்லுஞ் செய்தி
கேட்கப், பின்னிடாமற் போகில்;
தேகம்விட்டானந்தமாகி
கருமம் நீங்கிச் சேர்வேன், வீட்டில்.

௩௱௪௰௯ம் கீதம். C. P. M.

"Death is yours."

௧. நீர் என் மகிழ்ச்சி, கர்த்தரே!
மிகுந்த தயவுடனே,

என்னோடே தரியும்.
விண் மண்ணிலும் ஏதேதுண்டோ?
அதும்மையின்றித், தோற்றுமோ?
தேற்றாவளியும்.

௨. என் தேகம் மாண்டுபோகியும்,
நீரோ என் செல்வஞ் சீவனும்,
ஆனுமானவர்.
நீர் என்னை மீட்ட ரட்சகர்.
ஆ! யேசுவே! தயாபரா!
நீர் என் தேற்றரவர்.

௩. என் ஆத்துமாவை உம்மண்டை
எடுத்துவரத், தூதரை
அப்பொழுது அனுப்பும்.
பாவத்தினலே அழியும்
தேகத்தை, வரும்பொழுது
சிறப்பாய் நபியும்.

௪. அப்பொழுது உம்மைக், கத்தரே!
மகா சந்தோஷத்துடனே,
கண்ணுற் கண்டென்றைக்கும்
பிழைக்கக் கட்டளையிடும்.
இம் மீட்பை யாரும் பெறவும்,
கிருபை அளியும்.

௩௱௨௰யம் கீதம். L. M.

The same.

௧. ஆவியைக் கத்தர் தமது
வசத்திற் சேர்த்த பிறகு,

என் தேகம், தீர்ப்பு மட்டுக்கும்
குழியில் இளைப்பாறிடும்.

௨. நான் பூரிப்பாய் அந்நாளிலே
எழுந்திருக்கக், கர்த்தரே!
நீர் சாபத்தீர்ப்பனைத்துக்கும்
இவ் வேளை என்னை விலக்கும்.

௩. என் தயவுள்ள யேசுவே!
உமது வேத வாக்கிலே
ஆர் என்னைப் பற்றிக்கொண்டானோ?
என் வார்த்தையைக்கைக்கொள்வானோ

௪. அவன் மோட்சிப்படைவான்;
தன் ஆக்கினைக்குத் தப்பினான்:
மெய்யாக மரணத்தையும்
ருசிப்பதில்லை என்றைக்கும்.

௫. சாவவனைக் கொல்லாதேபோம்:
நாம் அவனை எழுப்புவோம்.
என் மோட்ச ராச்சியத்திலே
என்னோடே வாழ்வானென்றீரே.

௩௱௪௩ கீதம். L. M.

The same.

௧. என் யேசுவே! தயாபரா!
என் மீட்புக்காகச், சகல
உபாதியோடுஞ் சாவையே
அனுபவித்த கர்த்தரே!

௨. ஆரோக்கியமில்லாதோனாய்
கிடக்கிற இப் பாவிக்காய்,
நீர் பட்ட வாதை நோவையும்
நினைத்திரங்கியருளும்.

௩. என் பார்வையும் என் கேள்வியும்
என் வாயிலான சத்தமும்
எல்லாம் இல்லாமற் போகையில்,
என் மூச்சொடுங்குங் காலத்தில்,

௪. அறிவில்லாமற் போவதால்,
நார் துணை வினைகையால்,
நீர் வந்து என் இக்கட்டிலே
சகாயராகும். யேசுவே!

௫. என்னாத்துமாவை உமது
கையேற்றுக்கொண்டால், நல்லது.
மண் பாண்டம், முடிவாகிய
நாள் மட்டும், இளைப்பாறுக.

௬. தலையுடன் இணைந்தவன்
என்றைக்கும் பிரியாதவன்.
நீர் எனக்காக மரித்ததே
முத்திரையாகுந் திட்டமே.

௩௱௨௨ம் கீதம். L. M.

The same.

௧. எப்போதழைப்பீர், யேசுவே!
நான் உம்மை நித்தமும்

களிப்பாய்த் தரிசிக்கவே,
தயை ஈந்ருளும்.

௨. ஆ! பரிசுத்த ஆவியே!
நான் என்றுந் தப்பியே
போகாதபடி, என்னிலே
தரித்திருப்பீரோ.

௩. வழியைக் காட்டி, எனது
மாற்றனோடே, நீர்தாம்
போர் செய்யும். அப்போதெனக்கு
உம்மாற் சயமுண்டாம்.

௪. கத்தாவே! உன்னத்திலே
நின்று கடாட்சியும்.
நற் சாவைத்தாரும், யேசுவே!
வாழுவேன் உம்மோடும்.

௩௭௨. ம் கீதம். 7 & 6.

"This is not your rest."

௧. அகல், துன் மார்க்கமான
பொல்லாத லோகமே!
என் ஆத்துமாவுக்கான
தலம் நீயல்லவே.
கத்தாவின் மோட்சத்துக்கு
எதிர்கொண்டேகிறேன்.
என் நேச யேசுவுக்கு
முன்பாக வாழுவேன்.

௨. என் நெஞ்சில் உம்முடைய
சுகிர்த நாமமே
தீயில் எல்லாமறைய,
விளங்கும். யேசுவே!
அவஸ்தையில் நீர் கிட்ட
இருந்தெந்நேரமும்
மார்த்திலே மரித்த
உருவைக் காண்பியும்.

௩. என் ஆவியை அன்பாக
எல்லாப் பயத்துக்கும்
விலக்கி, நேசமாக
கையேந்தி, ரட்சியும்.
இவ்வண்ணமாய் இறந்தால்,
இக்கட்டைத் தாங்குவேன்.
மோட்சானந்தத்தில் வந்தால்,
என்றுஞ் சந்தோஷிப்பேன்.

௪. பரத்தின் புத்தகத்தில்
என் பேரை வைத்திடும்.
உம்மாலுயர்ந்த வீட்டில்
நிறைந்த வாழ்வோடும்,
இருக்குங் கூட்டத்தோடே
என்னைச் சேரும், அடியேன்
அந்தும்மை நல்லோரோடே
என்றைக்கும் போற்றுவேன்.

௩௱௨௪ம் கீதம். S. M

"To die is gain."

க. என் சீவன் கிறிஸ்துவே.
அதாலே, எனக்கு
மரணம் நயமாகுமே.
நெஞ்சே! மகிழ்ந்திரு.

உ. நான் யேசு வசமாய்
சேர்ந்தென்றும் வாழவே,
மிகவும் மகிழ்ந்தவனாய்,
பிரிந்துபோவேனே.

௩. நான் மரணிக்கும் நாள்
என் நோவின் முடிவு.
என் பாவமே, என் யேசுவால்,
நிவிர்த்தியாயிற்று.

௪. அப்பொழுதமைந்து,
கலக்கமின்றியே,
நான் நித்திரையே அடைந்து,
தூங்கட்டும். யேசுவே!

௫. நான் உம்மைக் கெட்டியாய்
பிடித்தும்முடனே
நித்தம் அனந்த பூரிப்பாய்,
வாழ்வேன். என் யேசுவே!

௩௱௨௫ம் கீதம். 8,7 4.

The same.

க. கொஞ்சநாளாய்ப் பாடுபட்ட
பின்பு, மோட்சவாழ்விலே

துன்பம் நோவும் யாவும் அற்ற
மேன்மையோடிருப்பேனே.
நெல்விளைந்த
பின் அறுப்புண்டாகுமே.

௨. மோட்சவாழ்வு இங்கிராது.
அங்கேதானிருக்குமே.
இங்கே துன்பம் நீங்கிடாது.
அங்கேவரும் இன்பமே.
அங்கே என்றும்
கர்த்தரைத் தரிசிப்பேன்.

௩. ஆதலால், வருத்தத்தையும்
நான் சகிப்பேனாகவே.
கிறிஸ்துவும் இடுக்கண்ணையும்
அன்பினால் சகித்தாரே.
அங்கென்றைக்கும்
கிறிஸ்துவுடன் தங்குவேன்.

௩௱௨௰௯ம் கீதம்.		7's.

The same.

௧. தோழனே! உன் சீவன்போம்.
நாம் எல்லாரும் மாளுவோம்.
சீவன்கொண்டு சாவுக்கே
யாவருந் தப்பார்களே.

௨. ஆதலால், உன் சாவிலே
உன் நடக்கை நெஞ்சிலே

பாடில்லாமல் நன்மையை
காட்டத்தக்கதை நீனை.

௩. கிறிஸ்துநாதர் மாத்திரம்
நோவை நீக்கும் பாத்திரம்.
கிறிஸ்துநாதர் நீதிமான்:
தப்பில்லாத மீட்பாராம்.

௪. உன்னுடைய நீதியே
எவ்விதமும் அற்பமே.
கிறிஸ்தின் நீதி பூரணம்:
அதுவே உன் வஸ்திரம்.

௫. பாவஞ்சாபந் துஷ்டபே
கிறிஸ்தின்கீழ் விழுந்ததே.
யேசுவாலே மாத்திரம்
தோன்றுமே, மகாசயம்.

௬. இப்படி நீ சாவையே
நோக்கி, ஆ! உன்கூர் எங்கே?
என்றுரைத்துச், சாந்தமாய்
சாவை வென்று, ஏறுவாய்.

௩௱௨௰ம் கீதம். L. M.

The same.

௧. மாணத்தாலே செல்வமும்
அளவில்லாத மேன்மையும்
எனக்குண்டாம்: அதாலே நான்
மரிக்கும்போதே, மோட்சவான்.

உ. அப்போது சேர்ந்த ஆத்துமம்,
தூதர்களோடே பாக்கியம்
நிறைந்த பாதீசிலே
களிக்கும், என்றும். சுத்தரே!

௩. அதால் நல்லாறுதல் உண்டே.
அச்சணமேனதாவிக்கே
கர்த்தாவைக் காணும் மேன்மையும்
இன்பமும்பெற, அருளும்.

௪. என் ஆவியில் அப்பாம
இஸ்தோத்திரத்தைக் கேட்கிற
நான், இந்த லோகத்தை இனி
இச்சித்துக்கொள்வதெப்படி?

௫. அங்கேசேர்ந்தோரின் பாக்கியம்
மா உறுதி, மாபத்திரம்.
பாத்தின் நன்மை என்றைக்கும்
இருக்கும் இன்பந் தந்திடும்.

௬. விரும்பப்பட்ட சீவனே!
என் ஆவி நாடுஞ் செல்வமே!
உம்மால் எப்போதும் பூரிப்பேன்.
எப்போதும் அங்கே சேருவேன்.

௩௱உ௮ம் கீதம். 8. 7. 4.

"I have a desire to depart."

க. மனமே சந்தோஷப்பட்டு,
உன் உபாதியை மற.

இங்கே நோவையே சகித்து
கஸ்தியால் மயங்கின
உன்னை, யேசு,
மோட்சத்துக்கழைக்கிறார்.

௨. எனது கர்த்தாவை நோக்கி,
நித்தம் நித்தம் கூப்பிட்டேன்.
நாயன் என் இக்கட்டைப்போக்கி
ஆதரிக்கக் கெஞ்சினேன்.
நான் என் சாவை
காணவும் விரும்பினேன்.

௩. யேசுவைப் பின்செல்லும் யாரும்
மா உபாதியுள்ளோராய்,
தீயில் இட்ட பொன்னைப்போலும்
புடமிடப்பட்டோராய்,
நிலைநிற்பார்,
உம்மில் விசுவாசமாய்.

௪. ஆதலால், அன்பாய் விளங்கும்
சோதியே! பிரகாசியும்:
யேசுவே! என்மேல் இரங்கும்:
தூரத்திற் செல்லாதிரும்.
நான் உவப்ப,
என்னைக்காத்துக்கொண்டிரும்.

௩௱௨௬ம் கீதம்.   C. M

"*Pleasures at his right hand.*"

க. பரத்திலே சுதந்திரம்
எனக்குண்டாமென்றே
அறிந்திருக்கையாற், பயம்
இல்லாமற் போயிற்றே.

உ. என்னில் பசாசு மூர்க்கமாய்
வந்தாலும், பாடுவேன்.
உலோகம்யாவுங் கோஷடமாய்
எழும்பினும், நிற்பேன்.

௩. விசாரம்யாவுங் கூட்டமாய்
என்னைப் பிடிக்கிலும்;
அம்மோட்சத்திற் சந்தோஷமாய்,
சென்றால் எல்லாம் விழும்.

௪. இளைப்படைந்த ஆத்துமா
அங்குள்ள வாவியிலே
நீராடி, நித்தமும் மகா
மகிழ்ச்சிகொள்ளுமே.

௩௱௨௰ம் கீதம்.   P. M

"*The dying Christian encouraged.*"

க. துக்கநாட்கள் ஒழிந்திட்டு
முத்திநாடும் ஆன்மாவே!
நீபோ, வந்ததூதரோடு
யேசுவிடம் சேரவே.

௨. உன்வன ஏற்றுக்கொள்ளும்படி,
யேசு காத்திருக்கிறார்.
சுய புண்ய பலன் காட்டி,
சீவமுடி சூட்டுவார்.

௩. நித்யசாந்தம் பெறும்படி,
சம்பூர்ண ரட்சை பெற்று,
மீட்பர் மார்பில் இளைப்பாறி,
வாழ்வாய், சாவைச் செயித்து.

௪. என்றும் நிற்கும் முத்திக்காக,
இன்று துன்பம் சகிப்பாய்:
சாவாய் வாழத்தக்கதாக,
நித்தம் ஆளப்படுவாய்.

௩௱௩௰௯ கீதம். P. M.

"Blessed are the dead which die in the Lord."

௧. செத்த சுத்தர் வாழ்வின் மேன்மை,
சொல்லும் சத்தம் கேளும்.
அவர் சாகுமிடம் மேன்மை:
நாமம் இனிதாகும்.

௨. சாவார் யேசு அருள்பெற்று,
சாந்தத் துயில்கொள்வர்.
துன்பம் பிரலாபம் விட்டு
நீங்கி, முத்தராவர்.

௩. சுத்தர் எழுந்திடுங்காலை,
அவர் யாரும் தோன்றி,

நித்யகோலம் அடைந்தும்மை
சேர்ந்து, சார்வார் முத்தி.

௩. உயிர் பெற்று, அவர் நாக்கு,
வாழ்த்தும் சீவ வேந்தர்
தேவர் சாவால் வென்றேம் என்று
சொல்வார், சர்வமுத்தர்.

௩௱௫௪ம் கீதம். 7's.

The same.

௧. கேளும் தேவ வாக்கியம்
வானத்தில் உண்டாவதாய்,
"என்றுமுள்ள பாக்கியம்
கர்த்தரின் பத்தர்களாய்
செத்தவர்களடைவார்:
தங்கள் வேலையை விட்டு
என்றும் இளைப்பாறுவார்."
என்று ஆவி சொல்லுது.

௨. யேசு போன இடத்தை
சேர்ந்தவர்கள், பூமியில்
யேசுவின் கிருபையை
அடைந்தார்கள் மனதில்.
நீதி பாவ மன்னிப்பு
பரிசுத்தம் அவர்கள்
இங்கே தயவாற் பெற்று,
வானோராக வாழ்ந்தார்கள்.

௯௱௫௪ காலமரணநியாயத்தீர்ப்பு

௯. கர்த்தருக்குள் மரித்து
இறந்தோர்கள் நிமித்தம்,
துக்கிப்பதேன்ன உலகு?
அறியாதெங்கள் பாக்கியம்.
ஆவி தேகத்தைவிட
பூமியோர் செத்தான் என்பார்:
பிள்ளை பிறந்தானென்க,
வானவர்கள் பாடுவார்.

௪. விண்ணிற் புகுந்தவனை
வானோர் வாழ்த்தி, ரட்சகர்
மேவும் ஆசனத்தண்டை
நடத்திக்கொண்டு வைப்பார்.
இயேசு வாய் மலர்ந்து
சொல்லுவார், "நன்றாய்ச் செய்தாய்.
வாடாக்கிரீடம் அணிந்து,
நம்மோடென்றும் ஆளுவாய்."

௫. வானோர் கேட்டு, அவனை
வாழச் சொல்லிப், பாடுவார்.
அவன் கிரீடம் மகிமை:
அவன் சோதி சுவாமியார்:
செத்தோரோ எழுமென்று,
காளந் தொனித்துத் தூதன்
வரும் போது மகிழ்ந்து,
நிறை பாக்கியம் அடைவான்.

௩௭௩ கீதம். S. M.

"*We must all stand before the judgment seat of Christ.*"

௧. மகா நீதிபார்!
நாயத்தீர்வை சேர்ந்து,
வென்றசுத்தர் அஞ்சுந்தீயர்
யாரும்நிற்பார் அன்று.
நாம் எச்சரிப்பினுடன்,
அச்சநாவளப் பார்த்து,
விழிப்போடு வேண்டும்பலன்
தாரும், நம்மைக்காத்து.

௨. தந்தையது தூதர்
சூழ, உடன்கூடி,
மகத்துவமான சிரேஷடர்!
வாரும், வானம் நீங்கி.
நித்ய மனுநபி!
நாயம் தீர்க்க வாரும்.
தினம் காத்துநிற்கும் பத்தி
தந்து, அருள்செய்யும்.

௩. நீதிபதிவந்தார்!
செத்தோர்! எழுந்திடும்.
விண்ணிற்சென்று தீர்ப்புக்கேளீர்!
என்னும் சாமசத்தம்.
சிற்றின்பம் அடக்கி
பயபத்தி ஏவ,
தூதரின் எக்காளத்தொனி
தொனிக்கட்டும், கேட்க.

௪. வேதத்துக்கிணங்கி,
காளத்தொனிகேட்டு,
தேவுவரும் என்றுநம்பி,
நிற்போம் களிகூர்ந்து.
மோட்சருடன் கூட
வாழ்வதற்கு, நித்தம்
சணமேனும் விழித்திட,
நாம் தேடக்கடவோம்.

௩௭௬ம் கீதம். 7's & .6's

"And at mid-night there was a cry made."

௧. திகைத்தஞ்சி நடுங்க,
கேளீர் சாமச்சத்தம்.
மணவாளனைக் காத்த
ஆத்துமாக்கள்! பாரும்.
ஒளி இன்பம் விளங்க,
வந்தார் வாக்கின்படி.
போம், தேவை எதிர்கொள்ள,
நெஞ்சில் ஒளிபற்றி.

௨. பாவச்சுமைதரித்தீர்.
அதை விட்டுவாரும்.
மனஸ்தாபர்! ரட்சகர்
வந்துவிட்டார்: பாரும்.
நடுச்சாமத் துக்கத்தில்
தோன்றுவாரோ, யேசு.

சார்ந்துகொள்ளும் அவரில்:
சேர்வார் ரட்சைசெய்து.

௩. அரைக்கட்டுக்கட்டி, நீர்
வாரும், தீபம்பற்றி.
மீட்பர்மூலம், பாத்திரர்,
தரியும் வெள்ளங்கி.
யேசு, சுத்தமாக்குவார்,
வாக்கை நிறைவேற்றி.
பூர்ணநேசம் தருவார்,
பாவம் எல்லாம் நீக்கி.

௪. நாம் காத்திருக்கும் கிறிஸ்து!
நீதிபதி! வாரும்.
அவர்தீர்ப்பு நமக்கு
செய்வார், எந்நாளும்.
நாம்நினையாத காலம்
சோரர் வரல்போல,
வருவார் கிறிஸ்து நிசம்,
ஒளியுள்ளோர் சூழ.

௫. கிறிஸ்து வாக் காப்பவர்,
சேர்வார் மகா இன்பம்.
நீதிபதி, அருள்வார்,
என்றும் நீங்காச்செயம்.
"ஞாயத்தீர்ப்பில் வா" என்பார்.
யாவர் நிற்பார் அன்று?
அவர்சத்தம் கேட்டு, யார்
சொல்வார் "வாறேன்" என்று.

௩௱௩௰௫ம் கீதம். P. M.

"Behold he cometh with clouds and every eye shall see him."

க. பாவிக்காய் மரித்த யேசு
வானத்திலிறங்குவார்.
கோடி தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்.
அல்லேலூயா
கர்த்தர் பூமி ஆளுவார்.

உ. பயங்கர மகிமையில்
அவரை எல்லோர் பார்ப்பார்:
துன்புறுத்து சிலுவையில்
அவரைக் கொன்றோர் காண்பார்.
அழுகையில்,
அன்றவரை அறிவார்.

ங. அவர் தேகம் பட்ட காயம்
இன்னங் காணப்பட்டது.
நம்புவர் மகிழ்ச்சியாயும்,
நோக்குவார் அப்பொழுது.
அவர் காயம்
தரும், நித்திய இரட்சிப்பு.

ச. உம்மை நித்திய ஆசனத்தில்
எல்லார் வணங்கச் செய்யும்.
ராச்சியத்தைப்பூலோகத்தில்
ஆண்டுகொள்ளும் என்றைக்கும்.

ஆதி கர்த்தா!
சீக்கிரம் இறங்கி வாரும்.

௩௱௩௯ம் கீதம். L. M.

"The trumpet shall sound and the dead shall be raised."

க. வந்தார் அதிபதி வந்தார்!
தூதர் எக்காளம் ஊதுவார்.
மேகமின்னி முழங்குது.
பத்தருக்கிப்போ நல்லது.

உ. இயேசு சர்வ வல்லவர்,
ராச கிரீடம் தரித்தவர்.
தம்மகிமையிலே வந்தார்,
பாருமென்று தூதர் சொல்வார்.

௩. சிங்காசனத்தின் மேல் வீற்று
இராச்சியம் வாங்குவார். அவர்க்கு
எல்லாரும் இணங்கி வீழ்வார்.
ஆண்டவரே! வாழும், என்பர்.

௪. விண் மண்ணெல்லாம் ஆர்ப்பரித்து
மகிழுங்கள். எங்கள் யேசு
சொந்தத்தைச் சுதந்தரிப்பார்
என்றும் ஆளுகை செய்குவார்.

௩௱௪௰ம் கீதம். C. M.

"Every word shall be brought unto judgment."

க. மகா பெரிய ஆண்டவர்
சனங்கள் யாவருக்கும்:

நிறைந்த நீதி செய்பவர்
இறங்கும் நாட் பிறக்கும்.
அப்போது மா பிரஸதாபமாய்,
நம்மையும் மாற்றுஞ் சோதியாய்,
மின்போலத் தோன்றுவாரோ.

௨. இலக்கமற்ற தூதர்கள்
அவர்க்குக் கீழ்மையாக,
பலத்த சத்த தாரைகள்
உடையவர்களாக,
முழக்கஞ் செய்யப், பூமியும்
விஸ்தாரமான வானமும்
அதிர்ந்து வெந்துபோதும்.

௩. அத்தூதரின் எக்காளங்கள்
எத்திக்கிலு முழங்கும்.
அந்நோம் மாந்தரின் திரள்
உயிரடைந்தெழும்பும்.
ஓர் பக்கத்திற் சன்மார்க்கரும்
ஓர்பக்கத்திற்றுன்மார்க்கரும்
வணக்கமாய் நிற்பார்கள்.

௪. அப்போதவர்கள் பூமியில்
நடந்துவந்த யாவும்,
அவர்கள் தங்கள் நெஞ்சத்தில்
நினைத்திருந்த யாவும்,
ஆண்டவர் கையால் வெளியாம்.

அததற்கு ஏற்றதாம்,
பலனைத்தந்தருள்வார்.

௫. சன்மார்க்கர் மோட்சமார்க்கத்தில்
நடந்ததால் மகிழ்ந்து,
சிறப்படைந்து போகையில்;
துன்மார்க்கத்தார் அதிர்ந்து,
பல்லைக் கடித்துச், சாபத்தை
அடைந்து, சன்னிதானத்தை
விட்டோடி மாளுவார்.

௬. அதிப்படி இருப்பதால்,
என் ஆத்துமாவே! நில்லு:
மா பயங்காமானதால்,
இப்போதே புத்திகொள்ளு:
அங்கென்ன போக்குச்சொல்லுவாய்?
எங்கே நீ ஓடிப்போவாய்?
இங்கே, கத்தாவைப்பற்று.

௭. இகத்திலே துன்மார்க்கத்தை
சந்தோஷமாகவிட்டு,
அன்புள்ள யேசுக்கிறிஸ்துவை
நம்பிக்கையாய்த் தரித்து,
துணைப்பட்டு, இவ்வண்ணமாய்
அவரவரில் மகிழ்ச்சியாய்,
அவர்முன்பாக நிற்பாய்.

௩௱௩௮ கீதம். P. M.

The same.

௧. யாரையும் ஞாயந்தீர்ப்பாராய்
கத்தாவின் மைந்தனை
அதிபதி பிரஸ்தாபமாய்,
இறங்கும் பயமான
நாள்வரும்போது; தீயினுல்
எல்லாங் கரைந்துபோவதால்,
நகைப்பதரிதாகும்.

௨. எக்காளத்தை நற்றூதர்கள்
எத்திக்கும் ஊதுவார்கள்.
சடிதியாயிறந்தோர்கள்
யாருமெழும்புவார்கள்.
உயிரோடிருந்தோர்களும்
ஓர் நிமிஷத்திற் கூடவும்,
அழியாருபமாவார்.

௩. எல்லாருஞ் சிந்தை செய்கையும்
வெளிப்படுவதற்கு,
இரண்டு புத்தகங்களும்
திறந்தவாவர்க்கு
நடந்ததற்குத் தக்கதாய்,
பலன் அனந்த காலமாய்
கொடுக்கப்பட்டிருக்கும்.

௩௱௬௩ம் கீதம். L. M.

"The door was shut."

க. ஆ! ஐயையோ! என் நெஞ்சமே!
விண் வாசல் பூட்டப்பட்டதே.
மறுதலித்தாய் யேசுவை
ஐயோ! ஐயோ! மா சோதனை.

உ. இனிச் சகாயமில்லையே!
எரிந்தெரிந்து தீயிலே
நானே பட்டாலுஞ் சகிப்பேன்.
என் உறவர்கள் வந்ததேன்?

௩. நீதான்நீதானே ஒவ்வொன்றய்
சொல்வார்களே, மகா கசப்பாய்.
விரோதம் பகை கோபமும்
சாதித்துக்கொள்வார், என்றைக்கும்.

௪. என் தோழனே! என் தோழனே!
பசாசோடும் இத்தீயிலே
நான் விழுவதறிந்தையோ?
ஏன் சொல்லவில்லை? ஐயையோ!

௫. அறிந்தாயே! அறிந்தாயே!
என் நேசனல்ல, அல்லவே!
ஆ! துரோகி! துரோகி! என்று மாய்
சாபங்கொண்டேன், உன் வழியாய்.

௬. அண்ணா! அண்ணா! நான் உன்னையே
நேசித்து, நம்பிக்கொண்டேனே.

பசாசு! பேய்! தீ! இந்த நோ
எந்நோமும் முடியாதோ?

௭. முடியாதே, ஐயோ! ஐயோ:
சபிக்கப்பட்டோம் அல்லவோ?
சிற்றின்ப விஷயாகவே,
இந்தாத்துமாவை விற்றேமே.

௮. பிதா மாதாக்கள் பிள்ளையும்
கூடப்பிறந்த எல்லோரும்
ஒருவரோடொருவராய்,
குற்றஞ்சொல்வார்கள், கோபமாய்.

௯. ஆ! பாவி! கேள், ஏன் கெடுவாய்!
உன் இனஞ் சனங் கோடிதாய்,
நாகத்தீயிற் படுவார்:
அறிந்த நீ, திகைத்துப் பார்.

௩௱௩௰௭ கீதம். C. M.

"*The Paradise of God.*"

௧. அழிவில்லாச் சுத்தர் வாழும்,
பேரின்ப தேசத்தே,
கேடில்லாத ஒளி இன்பம்,
என்றென்றுந் தோற்றுமே.

௨. வாடாப் புஷ்பம் கண் மலர்ந்து
நிற்கும், ஒழிவின்றி.

பவநதிகடந்தன்று
  சேர்வோம், புண்யபூமி.

௩. இஸரேலர் கானான் சேர்ந்தாற் போல்,
  யோர்தானோத்தண்டை,
சாநதீ வெள்ளத்துக்கப்பால்,
  சேர்வோம், இன்பசோலை.

௪. மானிடர் இக்கடல் கண்டு,
  பயம் அடைந்தோடி,
கரையேறல் அரிதென்று
  சொல்வார், திகைத்தஞ்சி.

௫. மருள் செய்யுங் காலமேகம்
  போன்ற மனோ சிந்தை
நீங்கினாலல்லாமற், கானானும்
  நாம் நாடுந் தேசத்தை.

௬. மோசே ஏறி நின்ற இடம்
  ஏறிச் சுற்றிப் பார்க்கில்,
யோர்தானேப்ப அரும் வெள்ளம்
  கண்டும், வாழ்வோம் சாவில்.

௩௱௪௰௯ கீதம்.   C. M.

The Saints glorified.

௧. மோட்சம் சேர்ந்த சுத்தர் முழ்தும்
  பேரின்பானந்தத்தை
ஏறிப்பார்த்துக்கொள்ளத்தாரும்,
  விஸ்வாசச் சிறகை.

௨. இங்கே பிலாபர் முன்பு,
கண்ணீர்விட்டு வேண்டி,
பாவம் ஐயம் அச்சத்தோடு
துக்கித்தார், போராடி.

௩. "ஆனால் வென்றீர்" என்று கேட்க
"ஆட்டுக்குட்டிமூலம்,
வெற்றிபெற்றுவாழ்வோம்" என
சொல்லும், செய சங்கம்.

௫. யேசு சென்ற மார்க்கம் கண்டு,
அவான்பேவும் சுத்தர்,
மனுரூபம், தேவைச்சார்ந்து,
சாந்தம் பெற்று, வாழ்வர்.

௬. மார்க்கங் காட்டுஞ் சேனாபதி,
போற்றப்படத்தகும்.
இதே வழியென்று சுட்டி,
மேகச்சாட்சி சொல்லும்.

௩௱௩௪. ௨ம் கீதம். 7 & 6.

The same.

௧. நெஞ்சமே!விழித்திரு:
பாத்தைத் தேடி வா.
கெட்டழிந்து போவது
பேரின்பந்தருமா?
வெள்ளி, பூமி, சந்திரன்,
சூரியனும் அழிய,

நெஞ்சமே! களிப்புடன்
பரத்தில் நீ பற.

௨. நீர் ஆழத்தை, தீ ஆதித்தற்
சேரும் இயல்பாய்,
சிட்டியாரும் பரத்திற்
கத்தாவைப் பணிவாய்,
தேடல்போல், ஆ! நெஞ்சமே!
மீட்பரை நீ தேடினல்,
முத்தியாதும், உனக்கே
கத்தாவின் அருளால்.

௩. தூதரோடிராசாவாய்
இயேசு வருகில்,
உன்னைப் புதுச் சிட்டியாய்
சேர்ப்பாரோ பரத்தில்.
துன்பம், துக்கம், பாவமும்
விட்டொழிந்து போவதே:
சுத்தம், செல்வம், மோட்சமும்
உன் சொந்தமாதமே.

நாசகம் கீதம். L. M.

The same.

க. பிதாவின் வலப்பக்கமாய்,
குமாரன் வீற்றிருக்கிறர்:
பரத்தின் சேனை ஓசையாய்,
மா ஆரம்பத்தோடே துதிப்பார்.

உ. தூதர்கள் சுத்தர் யாவரும்,
மா கோடா கோடி லக்கமாய்,
சிங்காசனத்தைச் சுற்றிலும்
வணங்குவார்கள், பணிவாய்.

௩. கத்தாவே! நானும் மோட்சத்தில்
சேர்ந்தும்மைக்கண்டு, களிப்பேன்:
எப்போதும் வந்து சோதியில்
என்றைக்கும் உம்மைத்துதிப்பேன்.

௪. அச்சோதி சாயல் கீதமும்
அடைந்திருந்து பாடுவேன்:
பேரின்ப வாழ்விலென்றைக்கும்
களிப்புடன் வணங்குவேன்.

௫. நான் சஞ்சரிக்கும் லோகத்தில்
தியானம் ஆசை இதுவே.
பின்வந்தும்மோட்சத்தில்
இருக்கச்செய்யும், யேசுவே!

௩௱௬௯ கீதம். 7's.

"*What are these arrayed in white robes?*"

௧. வெண்வஸ்திரந்தரித்து,
சுடர் ஒளியுள்ளவர்கள்
தெய்வங் கிட்டிப் பூரித்து,
உயர்வாநேரோவர்கள்?
சிலுவையையெடுத்து,
யேசுவினிமித்தமே

சண்டைபண்ணிப் போறுத்து
நின்றோர், இவர்கள்தானே.

௨. மா துன்பத்திலிருந்து
வந்து, விசுவாசத்தால்
தேவநீதி அணிந்து,
சுத்தமானோராதலால்;
ஒழியாமற் கர்த்தனை
கிட்டிநின்று, சேவிப்பார்.
கர்த்தர் பார்த்துச், சுத்தனை
சேர்ந்து, ஆசீர்வதிப்பார்.

௩. இப்போ செயங் கொண்டோராய்,
இனிச் சோதிக்கப்பட்டார்.
தீமை விலகினோராய்,
பசி தாகம் அறியார்.
மத்தியான உஷடணத்தால்,
இனித் தோய்ந்துபோகார்.
நித்ய சௌக்யம் பகலால்
என்றும் ஆநந்தமாவார்.

௪. தேவ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷித்து,
சீவ மாக்கனியும்
சீவ நீரும் அளித்து,
துக்கம் துன்பம் அழித்து,
குறை நிறைவேற்றுவார்:
கண்ணீரையுந் துடைத்து,
அன்பினாலே ரோப்புவார்.

எட்டாம் பிரிவு.

கலம்பக கீதம்.

௩௱௨௰ரும் கீதம். L. M.

Morning Hymn.

க. என்னெஞ்சமே! நீ எழும்பு.
உன் கடன் தீர்த்து நடந்து,
மந்தம் நீங்கி விரைவோடே,
நின் பலிதானம் செய்கவே.

உ. சாவகாசம் இனியில்லை.
நிறைவேற்றும், சென்ற குறை:
தெய்வ சித்தப்படி செய்து,
தீர்ப்புநாளை நோக்கிக்கொள்ளு.

௩. மனோவாக்குக் காயம் நோக்கி,
பார்ப்பார் தெய்வ சர்வஞானி.
ஆதலால், உன் மனச்சாட்சி
காப்பதற்குத் தேடு புத்தி.

ச. ஒழியாமல் தெய்வ ஸ்துதி,
செய்வார் தூதர். நீயும் கூடி,
நெஞ்சமே! உற்சாகத்தோடு,
நித்ய ராசாவினைப்போற்று.

ரு. சர்வ தயா பராபரர்,
பிதா, சுதன், ஆவி, இவர்:

மண் விண் எங்கும் இவர் நாமம்,
போற்றக்கடவாரோ, என்றும்.

௩௱௯௧ம் கீதம். 7's & 6's.

The same.

க. நிற்பந்தத்தை அன்பாக,
நீர் போன ராவிலே
விலக்கினதற்காக,
துதியேன். கத்தரே!
ஆ! இந்த நாள் வரைக்கும்
நான் செய்த தீமைக்கும்,
எல்லாப் பிழைகளுக்கும்,
மன்னிப்பை அருளும்.

உ. மகா பொல்லாங்கனை
பசாசு தனது
விஷமுங் கேடுமான
வினையால், எனக்கு
பொல்லாங்கு யாவும் இன்று
செய்ய, விடாதிரும்:
நான் தப்பிக்கொள்வதற்கு,
சகாயஞ் செய்திடும்.

௩. சருவத்துக்கும் வல்ல
உன்னித கத்தரே!
குறைவில்லாத நல்ல
விசாரிப்புடனே,

என் நோக்கம் நிறைவேற,
  கிருபை புரியும்:
அப்போதெல்லாம் முற்றாக
  களிப்பாய் முடியும்.

௩௱௯௰௩ கீதம். C. M.

The same.

க. கர்த்தாவே! போனாரவிலே
  என்னை ரக்ஷமாய்
தற்காத்ததாலே, உம்மையே
  நான் துதிப்பேன், அன்பாய்.

உ. இருளில் என்னை நீர் அன்பால்,
  எவ்விக்கினத்துக்கும்
விலக்கிக், காத்தீராவிட்டால்;
  பொல்லாங்கு நேரிடும்.

௩. அதற்கு நான் இஸ்தோத்திரம்
  செலுத்த நிற்கிறேன்:
என்னில் நீர் கண்ட தப்பிதம்
  மன்னிக்கக் கேட்கிறேன்.

௪. எந்நாளும் என்னைச் சத்துரு
  கெடுக்கப் பார்க்குமே.
அநேகமான கண்ணிக்கு
  நேர்போகப்பண்ணுமே.

௫. திரியேகரே! இரக்கமாய்,
  என்னைக் காப்பாற்றிடும்:

விழித்துக்கொள்ள, மா அன்பாய்
பலத்தைத் தந்திடும்.

௩௯௪ம் கீதம். 7's.

Morning Hymn for a child.

௧. பலனுதும் எனக்கும்,
பெற்றூர் சுற்றத்தாருக்கும்,
என்றுஞ் சீவன் ஈந்தோரோ,
கத்தராம். என் மனமே!

௨. சென்றுபோன ராவிலும்,
துன்பம் மோசம் யாவுக்கும்,
நீக்கிக் காத்த தேவனை
ஆத்துமாவே! நீ நினை.

௩. துஞ்சலால் நல்லறிவு
அற்றுப்போனபொழுது,
உன்னைக் காத்த சுவாமிக்கே
துதிசொல். என் மனமே!

௪. பட்சி சாலம் ஓசையாய்,
தேவனைத் துதிக்கவே,
நீயுங் கூட இன்பமாய்,
துதிசெய். என் மனமே!

௫. இன்றைக்கு நற்பாதையை
காட்டியே, உன்னடியை
காத்துக்கொள்ள, யேசுவை
வேண்டிக்கொள். என் மனமே!

௩௯௪கும் கீதம். L. M.

Evening Hymn.

க. தேவர் தந்த நன்மைக்காக,
உம்மைத் துதிசெய்வோமாக.
என் ராசாவே! என் தஞ்சமே!
சிறகால் என்னை மூடுமே.

உ. திவ்ய புத்திரன் நிமித்தம்,
என்பாவமெல்லாம் மன்னியும்,
அப்போ நான் எல்லார்க்கும் நேசன்:
துயில்கொள்வேன், தெய்வ பத்தன்.

௩. என் படுக்கை தேடுந் தன்மை
போல, நான் தேட மயானத்தை;
வாழ்வுதாழ்வில் தாங்கிக்கொள்ளும்.
சாவை நீங்க, அருள் செய்யும்.

௪. என் ஆத்துமம் உம்மைச் சார்ந்து,
சாந்தத்தோடே துயில்கொண்டு,
உம்மைச் சேவித்தற்கிங்ஙோம்,
புதுப் பெலம் அருள் செய்யும்.

௫. துயில் நீங்கும் பொழுதென்னை
காத்துப்பேணும். மனோ சிந்தை,
பிராந்தி செய்யுந் தீச் சொற்பனம்,
துஷ்ட ஆவி, இவை நீக்கும்.

டாருயிம் கீதம். 8, 7, 4.

The same.

க. நல்ல சிந்திப்பாய் விழித்து,
தெளிவாய் என் நெஞ்சமே!
தேவ அன்பையே சிந்தித்து,
தோத்திர். என்னுள்ளமே!
இந்த நாளில்
என்னிடத்திருந்தாரோ.

உ. ஆ! பிதாவே! மா அன்புள்ள
சுவாமி! நீர் என் வேலையை
வாய்க்கப்பண்ணித், துன்பமுள்ள
பாவிக்கினங்களை
நீக்கிப்போட்டீர்:
உமக்கே ஸ்தோத்திரம்!

௩. ஆ! என் கெட்ட சுபாவத்தாலே
தேவரீர் என் நெஞ்சிலே
கண்டபாவத்தை அன்பாலே
நீர் துடையும், கத்தரே!
கிறிஸ்தைக்கொண்டு,
என்னையும் ரட்சியும்.

௪. கிருபையின் சோதியான
சுவாமி! இந்த ராவிலும்
என்னில் தேவரீர் அன்பான
சோதியாய்ப் பிரகாசியும்:
என்றென்றைக்கும்
என்னைக் கைவிடாதிரும்.

ரு. எனதாவி, தேகம், ஆஸதீ,
விட்டார், சுற்றத்தாரையும்
தேவரீர் அன்பாகக்காத்து,
என் பகைஞர் யாரையும்
கேட்டினின்று
நீக்கிக், காத்திரட்சியும்,

௩௱௫௧ம் கீதம். L. M.

The same.

க. மெய்ப்பொழுதான் கிறிஸதுவே!
நீர் மங்கிப்போவதில்லையே.
எப்போதும் எங்கள் யாருக்கும்,
வெளிச்சங் காண்பித்தருளும்.

உ. பொல்லாத விக்கினங்களை
விலக்கிப்போட்டு, எங்களை
நீர் இந்த இராத்திரியிலே,
அன்பாய்க் காப்பாற்றும். கத்தரே!

௩. அடியார் தூங்கிக்கொள்ளவே,
அடியார் நெஞ்சு உம்முடனே
சஞ்சாரம்பண்ண, அதை நீர்
எழுப்பிவாக்கடவீர்.

௩௱௫௨ம் கீதம். C. M.

The same.

க. இப்போது தூங்கிக்கொள்ள, நான்
என் கண்ணை மூடுவேன்.

என் காவற்காரர் கத்தர்தான்:
　கலக்கமாயிரோன்.

உ. அகன்றுபோக, நீங்குங்கள்.
　துர் யோசனைகளே!
கத்தர் காப்பார், தன் பிள்ளைகள்
　நான் ஒப்புவித்தேனே.

௩. என் சீவன் இந்த ராவிலே
　சென்றாலும், கத்தரே!
என் ஆத்துமாவை உம்மிலே
　எடுத்துக்கொள்வீரே.

௪. உயிர் நின்றாலும், மீட்பரே!
　நான் உம்முடையவன்:
மரித்துங் கேடும் இல்லையே.
　நீர் என் பராபரன்.

௩௱௫ம் கீதம்.　　C. M.

The same.

க. இருட்டுண்டாகவே இந்நாள்
　முடிந்துபோகையில்,
இளைத்த யாவுந் தூக்கத்தால்
　படுத்துக்கொள்கையில்,

உ. கர்த்தாவே! நீர் விழிக்கிறீர்:
　உறக்கமற்றவர்:
இருட்டிலேயுந் தேவரீர்
　வெளிச்சமானவர்.

௩. கத்தாவே! என்வன மா அன்பாய்,
நீர் இந்த ராவிலும்
நினைத்து, என் தகப்பனாய்,
என் பக்கத்தில் இரும்.

௪. என்னால் உண்டான பாவத்தால்,
மனங் கலங்குமே.
ஆனாலும், கிறிஸ்தின் ரத்தத்தால்,
என் குற்றம் நீங்குமே.

௫. பாத்திலே ரட்சகர்
பிணையைச் செய்கிறார்.
மரித்துயிர்த்தெழுந்தவர்
மன்னிப்பை ஈகிறார்.

௬. ஊாக்கம் வைத்த உமக்கே,
புகழ்ச்சி நித்தமும்
செலுத்தவேண்டும். கத்தரே!
அதைத் தள்ளாதிரும்.

௩௱௭௯ ருசும் கீதம். 8's & 7's

The same.

௧. என் கண்ணிமைக்குள், கத்தாவே!
துக்கத்தாலே மூடியும்,
ஆத்துமா தன் வாஞ்சையாலே
தேவரீரைச் சார்ந்திடும்:
தூங்கினாலுமும்மிடத்தில்
ஐக்கப்பட்டிருப்பேனே:

ராவிலே விழித்திருக்கில்,
உம்மைப் பற்றிக்கொள்வேனே.

௨. ஆசீர்வாதத்தை அளித்து,
எனக்கிந்த ராவிலே
சுக நித்திரையைத் தந்து,
என்னைக் காப்பீராகவே.
என் வீட்டாரும், இனத்தாரும்,
நேசரும், பகைஞரும்,
யாரும், பாவாழ்வு பெறும்
அன்பைக்காட்டி, ரட்சியும்.

௩. அமளி, தீகில், வியாதி,
மா யுத்தத்தின் கலகும்,
வெள்ள நதி, முதல் உபாதி,
பெருவாரி, விக்கினம்,
உமதடியேனிடத்தில்
அணுக, ஒட்டாதிரும்.
காலையில் எழும்பி, உம்மில்
